

கலை இலக்கிய சமூக இதழ்

# ஆக்காட்டி

யூலை - செப் 2016 | 12

## நேர்காணல் சேனன்




## இலங்கையில் தலித்தியம் பேசுதல்

• சி.புஷ்பராணி • சுகன் • ஷோபாசக்தி • சேனன் • கருணாகரன் • யோகி • தர்மினி • ரஷ்மி • தமயந்தி • சாதனா • ஹரி ராயலட்சுமி • செந்தூரன் ஈஸ்வரநாதன் • தர்மு பிரசாத் • அனோஜன் பாலகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு கடல்கன்னிகள்

(ஏழு சிறுகதைகள்)



5€

கடல் ஒரு உயிரி. வளர்வதும், அழிவதும், மீண்டும் பிறப்பதுமென பிறரறியாமல் தனக்குள்ளேயே வாழ்தலை நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. கடலை வெறும் உப்பு நீராகவும், உணவுத்தேவையை நிறைவேற்றி வைக்கும் ஒரு உபரியாகவும் நினைவுகளில் கொண்டிருப்போருக்கு, அந்த உயிரி உருவாக்கி, வாழவைத்துக்கொண்டிருக்கும் ஒரு சமூகத்தையும் புரிந்துவிட முடியாது.

ஏழு கடல் கன்னிகள் கடலும் கடல்சார்ந்த கதைகளின் தொகுப்பு. யுத்தம் விரட்டிய கடலை உயிரெனச் சுமந்தலையும் மாந்தர்களின் கதை. முப்பதுவருட யுத்தம் கொன்றுபோட்ட நேசத்தையும் சகோதரத்துவத்தையும் மீண்டும் பிரகடனப்படுத்தும் கதை. பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்ட கதைகளாக இருந்தாலும், அவை வெளிப்படுத்துகின்ற ஏக்கம், அங்கலாய்ப்பு இன்னும் எங்கள் மண்ணில் உருவாகிவிட வில்லை என்ற பேராதங்கம் ஒவ்வொரு கதைகளின் இறுதியிலும் வாசகர்களுக்கு உருவாக்கி விடுகிறது.

1985ல் இலங்கைக் கடற்படையால் கொல்லப்பட்ட ஒன்பது தமிழக மீனவர்களின் கொலைக்கும் விசாரணை கேட்கும் சமர்ப்பணக்குறிப்புடன் வெளியாகி இருக்கும் இந்தத் தொகுப்பு சமகாலத்தில் வெளியாகிய தொகுப்புகளில் வேறுபட்டு நிற்பதுடன் காத்திரமான தொகுப்பாகவும் தன்னை வெளிப்படுத்தி இருக்கிறது.

**சிறுகதைத் தொகுப்பு வேண்டுவோர் பின்வரும் இலக்கங்களில் தொடர்பு கொள்ளுங்கள்**

பிரான்ஸ் - தர்மு பிரசாத் **+33 6 52 33 75 84** | இலங்கை - அனோஜன் **+94 77 072 8343**

நோர்வே - தமயந்தி **+47 917 35 547**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்காட்டி

காலாண்டிதழ்
இதழ் - 12 | யூலை - செப்ரெம்பர் | 2016

**கவிதை**

64. வண்ணத்துப்பூச்சிகளை வேட்டையாடுதல் ------------------------------ தமயந்தி

**ஓவியங்கள்** ------------------------------ ரஷ்மி

**நேர்காணல்கள்**

15. சமத்துவம் என்பது அதிகாரங்களையும் வாய்ப்புகளையும் சமமாகப் பகிர்ந்துகொள்வதே ------------ ஷோபாசக்தி
26. விமர்சனங்கள் உட்பட அனைத்து எழுத்துகளும் ஏதோ ஒரு வகை அரசியல் சார்ந்தது தான் ----------- சேனன்

**கட்டுரைகள்**

07. நான் வெள்ளாளன், பிராமணன், பள்ளிக்கூடம் போற பெடியன் ------------------ ஹரி ராசலட்சுமி
13. முரண்வெளியை முன்வைத்து ------------------------------ சுகன்
23. பெண்கள் ஏன் காமத்தைப் பேசவும் எழுதவும் தயங்குகிறார்கள்? ------------------------------ யோகி
45. மதிப்பீடுகளின் வீழ்ச்சி : ஈழத்து இலக்கிய விமர்சனப்போக்குகள் ------------ அனோஜன் பாலகிருஷ்ணன்
79. பெண்ணுடல் அவமானத்திற்குரியதா? ------------------------------ தர்மினி

**புத்தக மதிப்பீடுகள் / விமர்சனங்கள்**

18. பார்த்தீனியம் – பேரழிவின் பிறழ் சாட்சியம் ------------------------------ தர்மு பிரசாத்
59. அரசியலை எழுதுவதற்காக ஏன் கவிதையைப் பயன்படுத்த வேண்டும்? ------------------ கருணாகரன்
75. எழுதி எழுதித் தீராப்பக்கங்கள் ------------------------------ சி.புஷ்பராணி

**கதைகள்**

49. தொலைந்துபோன சிறிய அளவிலான கறுப்பு நிற பையின் ------------------------------ சாதனா
65. வெள்ளிக்கிழமை இறுதி விருந்து ------------------------------ செந்தூரன் ஈஸ்வரநாதன்
82. பித்தளைத் தீர்வுகள் ------------------------------ தர்மு பிரசாத்

ஆக்காட்டி

காலாண்டிதழ்
இதழ் - 12 | யூலை - செப்ரெம்பர் | 2016

தொகுப்பும் வடிவமைப்பும்
தர்மு பிரசாத்
reysath@gmaim.com

உதவி
தர்மினி
nitharmi@gmail.com
சாதனா
mesathana@gmail.com

தொடர்புகளுக்கு பிரான்ஸ் - +33 6 52 33 75 84 | aakkaddi@gmail.com
தமிழகத்தில் - 0091 9444272500 | karuppupiradhigal@gmail.com
www.facebook.com/aakkaddi
http://www.magzter.com/FR/akkaddi/Aakkaddi/Art/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தலித்தியம் பேசுதல்

*என்னுடைய அபிப்பிராயத்தில் நீங்கள் உங்கள் சமூக ஒழுங்கை மாற்றாவிட்டால் மிகக் குறைந்த அளவிலான முன்னேற்றத்தையே நீங்கள் அடைய முடியும் என்பதில் எந்த அய்யமும் இல்லை. தற்பாதுகாப்பிற்கோ இல்லை தாக்குதலுக்கோ உங்கள் சமூகத்தை நீங்கள் ஒன்றுதிரட்டவே முடியாது. சாதியின் அஸ்திவாரத்தின் மேல் நீங்கள் எதையுமே கட்டியெழுப்ப முடியாது. நீங்கள் ஒரு தேசத்தைக் கட்ட முடியாது. ஒரு அறிவியலைக் கட்ட முடியாது. சாதியின் அஸ்திவாரத்தின் மேல் நீங்கள் கட்டும் எதுவும் விரிசல் விடும்; மேலும் அது எப்போதும் முழுமையடையாது.*

அம்பேத்கர்

01

**90**களில் சோசலிஸத்தின் வீழ்ச்சி தமிழ்ச்சூழலில் புதிய போக்குகளை, சிந்தனைகளை உரையாடும் வெளியை உருவாக்கியிருந்தது. புரட்சியின்வழி அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் உள்ள போதாமைகள் குறித்து எழுந்த அறிதல் முறைகளில் பின்நவீனத்துவம் ஒரு புயலாகத் தமிழகச் சூழலில் அடித்து ஓய்ந்தது. பெருங்கதையாடல்களைக் கேள்விக்குட்படுத்தி அதிலிருந்து தலித்தியம், பெண்ணியம் உட்பட்ட விளிம்புநிலை உரையாடல்களுக்கான வெளியை அவ்வுரையாடல்கள் உருவாக்கியது. ஈழத்தில் அம்முரண் உரையாடல்களுக்கான வெளிகளற்ற இருண்ட யுத்தகாலமிருந்தது. அதன் வீழ்ச்சி ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது. திரண்டிருந்த தேசியக்கருத்துகளின் போதாமைகள் குறித்த மிகச்சிறிய வெளியின் உரையாடல்கள் பொதுவெளியில் விரிவாக நிகழ்ந்து கொண்டிருக்கும் சூழலில் ஆயுத நிழலில் தூங்கிக் கிடந்த சாதியமும் உயிர்ப்புடன் வெளிப்படுகிறது.

இலங்கைச் சூழலில் குறிப்பாக யாழில் தீண்டாமைக்கு எதிரான ஆரம்பகாலப் போராட்டங்களை முன்னெடுத்தவர்கள் காந்தியவழி வந்தவர்களும், இடதுசாரிகளுமே. அவர்களுடைய ஆரம்பகாலப் போராட்டங்கள் இறுகிக்கிடந்த யாழ்ப்பாணச் சாதி இந்துக்களின் / கிறிஸ்தவர்களின் மனநிலையில் சில உடைப்புகளைச் செய்திருக்கிறது. பாடசாலைகளில் சம கல்வி, சம ஆசனம், ஆலய நுழைவு, தேநீர்க்கடை நுழைவுப் போராட்டங்களை மிக மூர்க்கமாக வெளிப்படுத்தியதன் விளைவு இன்றைய யாழ்ப்பாணச் சாதியத்தில் சில நெகிழ்வுகளை அவதானிக்கலாம். சாதியத்தின் கூரிய நகங்கள் வெட்டப்பட்டு வழுவழுப்பாக்கப்பட்டிருக்கிறது. வேலிக் கதியால்களில் கொழுவிய பேணிகளில் தேநீர் கொடுத்தவர்கள், நாசுக்காக அடுப்படிக்குள் 'புறம்பாக' எடுத்து வைத்திருக்கும் டம்ளர்களில் நீர் / தேநீர் கொடுக்கும் அளவிற்கு முன்னேறியிருக்கிறார்கள் (?) ஆனாலும் சாதியம் கல்விச்சூழலில், அரசியல் அரங்குகளில், அதிகார அடுக்குகளில் தன் இருப்பிற்குக் கேள்விவரும் போதெல்லாம் தன் கோரமுகத்தைக் காட்டத் தயங்குவதில்லை.

இடதுசாரிகளும், காந்தியவாதிகளும் முன்னெடுத்த சாதியப் போராட்டங்களில் சாதியை உயிர்ப்புடன் வைத்திருக்கும் இந்துமதத்தைக் கேள்விக்குட்படுத்த அல்லது இந்துமதத்திலிருந்து விலகிப் போராட்டங்களை முன்னெடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் முடியவில்லை. இடதுசாரிகள் ; தலித்துகள் ஒடுக்கப்படுவதைக் கல்வி, நிலம் சார்ந்த பிரச்சனையாகப் புரிந்துகொண்டார்கள். தலித்துகள் நிலமற்ற உதிரிப்பாட்டாளிகளாகவும் இருப்பதால் இடதுசாரிகள் வர்க்கப்போராட்டத்தோடு இணைத்துப் போராட்டங்களை முன்னெடுத்தார்கள். நிலமற்ற ஏழைச் சாதி இந்துவும் சாதியின் உச்ச அதிகாரங்கள் அனைத்தையும் நுகரும் பாத்தியதையுடையவர்கள் என்பதைக் கவனத்திற் கொள்ளவில்லை.

இவையிரண்டும் பெரும்போக்குகளாக யாழில் சாதியத்திற்கு, தீண்டாமைக்கு எதிராக நிகழ்ந்த போராட்டங்கள். இவை தவிர வேறு சில போக்குகளும் சாதியத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ளன. சூரன் தலித்துகளை கல்வியின் மூலம் சாதியக் கொடுமைகளிலிருந்து வெளிவர முன்னெடுத்த தலித் பாடசாலைகளின் உருவாக்கமும், வைரமுத்து முன்னெடுத்த தமிழ்ப் பௌத்தம் நோக்கிய நகர்வுகளும் குறித்த ஒரிரு பதிவுகளே நம்மிடமிருக்கின்றன. அவற்றின் தற்கால நிலவரம் குறித்த பதிவுகள் அதிகம் எம்மிடமில்லை. வைரமுத்துவின் பௌத்த பாடசாலைகள் யாழில் உருவாகியதன் பின்னால் யாழ் சாதிமான்களின் சாதிய உளவியலை நாம் நுட்பமாகப் புரிந்து கொள்ளலாம். அதனை வெகுஜனன் (சி.கா.செந்திவேல்), இராவணா (நா. இரவீந்திரன்) தொகுத்த இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் நூலில் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

> *புத்தூரில் பெரும்சொத்துடமை பெற்ற மழவராயரின் பாடசாலையான ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை, அரசாங்கம் பாடசாலைகளைத் தேசியமயமாக்கிப் பதினைந்து ஆண்டுகளின் பின்பே ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தாறிலேயே அங்கு அனுமதி கிடைத்தது, இச்சூழலிலே புத்தூர் பௌத்த பாடசாலை உருவாக்கப்பட்டமை நியாயப்படுத்தப்பட்டது, சோமாஸ்கந்த பாடசாலையில் தாழ்த்தப்பட்ட மக்களை உடன் அனுமதித்திருக்கவேண்டும், அப்படிச் செய்திருந்தால் உடனேயே புத்தூரில் உருவாக்கப்பட்ட பௌத்த பாடசாலையை மூடியிருக்க முடியும், ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை, அதற்குப் பதிலாக அன்றைய தமிழரசுக் கட்சியின் கோப்பாய்த் தொகுதி உறுப்பினராகவிருந்த திரு.கதிரவேற்பிள்ளையால் புத்தூரில் தாழ்த்தப்பட்ட மக்களின் வேறொரு கிராமத்தில் ஸ்ரீமன் முருகன் தமிழ்ப் பாடசாலையை ஆரம்பித்து வைத்த வேடிக்கை மிக்க வேலையைத்தான் செய்யமுடிந்தது , சாதி தீண்டாமைப் பிரச்சனையில் தமிழரசுக் கட்சியின் இரட்டைவேடத்திற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். (பக்.135 திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு 2007)*

யாழின் சாதியத்தைத் தக்கவைப்பதில் பள்ளிக்கூடங்களும், கோயில்களும் பெரும் பங்காற்றும் வரலாறு மிகப்பழையது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதுகளில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சம ஆசனம் கோரிய போராட்டங்களிலிருந்து பதிவுகள் நமக்குக் கிடைக்கின்றன. அப்போதைய ஆங்கில அரசாங்கம் யோவெல் போல் அவர்களின் கோரிக்கையை ஏற்று இருபதுகளின் பிற்பகுதியில் சம இருக்கை, உணவு என்பதைச் சட்டமாக்கிய பின்னரும் கூட அதைக் கலாசாலையில் தலித்துகள் கடைப்பிடிக்க அனுமதிக்கப்படவில்லை. இரு தலித் மாணவர்களுடன் சம இருக்கையில் அமர்ந்து கல்வி கற்பதிலும் பார்க்கக் கலாசாலையைச் சில காலம் மூடிவைப்பது மேலானது எனும் நிலைப்பாட்டிற்கு வந்த சாதிமான்களின் உளவியல் இன்றுவரை நுட்பமாகப் பலதளங்களிலும் திறமாக வேலைசெய்து வருகிறது. பாடசாலைகளை எரித்தும், கலாசாலைகளை மூடியும் தலித்துகளின் கல்விகற்கும் உரிமை மறுப்பைப் பெருவிருப்போடு செய்துவந்த யாழ் இந்து/கிறிஸ்தவ மேட்டுக்குடி, சிங்களப் பேரினவாத அரசின் இனரீதியான தரப்படுத்துதலினால் தங்கள் கல்வி உரிமை பறிக்கப்படுவதாக கொதித்தெழுந்து இனப்போரை உதிரச்சகதியில் நடத்திமுடித்த முரணை நாம் எப்படிப் புரிந்து கொள்வது?

*எங்களது பள்ளிக்கூடங்கள்*
*சாதியப் பள்ளிக்கூடங்கள்,*
*சாதியைப் போற்றும் பள்ளிக்கூடங்கள்,*
*சாதியைத் தக்கவைக்கும் பள்ளிக்கூடங்கள்,*
*சாதியைப் போதிக்கும் பள்ளிக்கூடங்களே.*

ஆசிரிய, அதிபர் நியமனங்களிலிருந்து மாணவர் சேர்க்கை வரை சாதியம் கட்புலனாகாத வலிய அரணாகவே நம்முன் கிடக்கிறது. போலிப்பெருமிதங்களாலும், நாற்றமெடுக்கும் சாதிய உளவியலிலும் அழுந்திக்கிடக்கும் உயர் வேளாள, கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களின் சாதிய மனநிலை குறித்த உரையாடல்கள் நம்மிடமில்லை. கல்வியைப்போதிக்கும் பள்ளிக்கூடங்கள் பிற்போக்குத்தனங்களிலும், சாதிய மனநிலையிலும் இருண்டுகிடக்கின்றன என்பதை அவர்கள் மாணவர்களைச் செய்யும் படிநிலையாக்கங்கள் மற்றும் பிரித்து வைப்பதிலிருந்து புரிந்துகொள்ளலாம். நாம் உரையாடல்களைப் பள்ளிக்கூடங்களில் இருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. இயல்பானது, எல்லாம் சரியாக இருக்கிறது எனக் கற்பிக்கும் அனைத்தையும் கேள்விக்குட்படுத்துவதும் அதன் ஒழுங்கைக் கொட்டிக் கவிழ்க்கும் உரையாடல்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுப்பதுமே நம் முன்னுள்ள தேவை. அதற்கு நாம் அம்பேத்கர், பெரியாரிலிருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது.

02.

சாதியத்தையும் அதன் தோற்றுவாயான இந்துமதம் குறித்த பாபா சாகிப் அம்பேத்கரின் (காந்தியை மகாத்மா என்பவர்கள் அம்பேத்கரை 'வெறும்' அம்பேத்கராகக் குறிப்பிடும் உயர்சாதி மனநிலையும் ஆய்வுக்குரிய புள்ளி) ஆய்வுகள் மிக உன்னதமானவை. அவர் சாதியம் குறித்து காந்தியுடனும், இந்தியத் தேசியர்களுடனும் நிகழ்த்திய உரையாடல்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. நம் சூழலில் மறந்தும் கூட உச்சரிக்க முடியாத பெயராகவே அம்பேத்கர் இருக்கிறார். அவர் முன்வைத்த சாதிய ஆய்வுகளும், அதன் தோற்றுவாயான இந்துமதத்தை மறுதலிக்கும் போக்கும் அரிதான ஓரிரு விதிவிலக்குகளைத்தவிர நம் சூழலில் அறவே இல்லை. சைவத்தினுள் மேனிலையாக்கம் எனும் கருதுகோள்களின் அடிப்படையிலேயே கல்வி, பொருளாதாரச் சீர்திருத்தங்களாகச் சாதியப் போராட்டங்கள் நம்சூழலில் முன்னெடுக்கப்பட்டன.

நம்சூழலில் இன்னும் விரிவாக உரையாடவும், நாம் பின்செல்லவும் வேண்டிய ஆளுமைகளாகக் காந்தியும், அம்பேத்கரும், பெரியாரும் இருக்கிறார்கள். காந்தி சாதி இந்துக்கள் மத்தியிலும் அம்பேத்கர் தலித்துகள் மத்தியிலும் பெரியார் மக்களைத் திரட்டி இயக்கமாகவும் போராடியவர்கள். இன்னொரு வகையிலும் அம்பேத்கரும், காந்தியும் எமக்கு முக்கியமானவர்கள். அம்பேத்கரும் - காந்தியும் சீனர்களின் இயங்கியற் கருதுகோளான 'ஜின் - யக்'ன் நடைமுறை வடிவங்கள். இருவரும் ஒருவரை ஒருவர் நிரப்பக்கூடிய, ஒருவரை ஒருவர் செயல்படச்செய்யக்கூடிய ஒருவரை ஒருவர் விளக்கக்கூடிய இரு எதிரீடுகள்.

அம்பேத்கர் சாதியப் போராட்டங்களை முன்னெடுத்த காலத்திற் தான் காந்தியும் தேசிய விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்தார். அம்பேத்கர் சாதி இந்துக்களிடம் அதிகாரத்தைக் கைமாற்றப் போராடுவதிலும் பார்க்க ஆங்கிலேயரிடம் சில உரிமைகளையாவது சட்டரீதியாகப் பெற்றுக் கொள்ளலாம் என நம்பினார். அதனால் இந்தியத் தேசியர்களால் ஆங்கிலக் கைக்கூலி எனவும், அரசின் அடிவருடி எனவும் வசைபாடப்பட்டார். சாதி இந்துக்கள் தலித்துகளை விலங்குகளிலும் கீழானவர்களாக அவர்களின் அடிப்படை உரிமைகளைக்கூட கொடுக்க முடியாதவர்களாக இந்தக் காலத்தில் அம்பேத்கரின் ஆங்கிலேய அரசின் பக்கமான சாய்வும் புரிந்து கொள்ளத்தக்கதே. காந்தியோ முரண்பாடுகள் மண்டிக்கிடக்கும் சமூகம் பொது எதிரிக்காக ஆயுதம் தரித்தால் அவ்வாயுதத்தினால் தம் உள்முரண்பாடுகளை களையவே பயன்படுத்துவார்கள் என்பதனை நம்பினார். அதுதான் ஈழப் போராட்டத்திலும் நடந்து முடிந்திருக்கிறது. சாதியாகவும், மதமாகவும், பிரதேசமாகவும் இன்னோரென்ன வழிகளில் பிளவுண்டு கிடக்கும் நம் ஆயுதப்போராட்டத்தில் எத்தனை முறை உள்முரண்பாடுகளைக் களைய ஆயுதங்கள் கருவிகளாக்கப்பட்டன. அவை தேசியத்தின் பெயரால் இன்றுவரை விதந்தோறும் வரலாறு தானே நம் முன் கிடக்கிறது. தலித்தியத்தைத் தேசியத்திற்கு எதிரிடையாக முன் முன்வைப்பவர்களும் அம்பேத்கர், காந்தியை விரிவாக வாசிக்க வேண்டும்.

**அம்பேத்கர் சிந்தனைப்பகிர்வு** நிகழ்வை இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினர் பிரான்ஸில் கடந்த யூலை மாதம் ஏற்பாடு செய்திருந்தனர். ஒரு முழுநாள் நிகழ்வில் சமூகப்போராளிகள் உட்பட தலித்தியம் மற்றும் அம்பேத்கர் சிந்தனைகள் குறித்துப் பல விவாதங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பொதுக் கிணற்றில் நீர் அள்ளவும் வீதியில் மேல் துண்டு, சட்டை போட்டுச் செல்லும் உரிமைகளுக்காக எவ்வளவு போராட்டங்களைச் செய்ய வேண்டியிருந்தது. சாதிய மனோநிலையின் சிறு நெகிழ்ச்சிக்காக எவ்வளவு உயிர்களைப் பலியிடவேண்டியிருந்தது. இவ்வரலாறுகள் இன்னுமின்னும் விரிவாகப் பதிவு செய்யப்பட வேண்டியவை. அவசியமானவை. இக்கருத்தரங்குகளை இன்னும் விரிவாகவும் பல தளங்களிலும் இலங்கையிலும் **இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினர்** விரிவாகச் செய்யவேண்டும். அப்போதுதான் நம் சூழலிலும் அம்பேத்கர், பெரியார் குறித்த உரையாடலுக்கான காத்திரமான வெளி உருவாக்கப்படும்.

அடுத்து வரும் ஆக்காட்டிகளில் பல முரண் தரப்புகளையும் ஒன்றிணைத்து தலித்தியம் குறித்த உரையாடல்களையும், கூட்டுக் கட்டுரைகளையும் தொகுக்க இருக்கின்றோம். முதல் நிகழ்வாக வரும் மாதம் ஃபிரான்ஸில் ஒரு கலந்துரையாடலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் உரையாடப்படுபவை, விவாதிக்கப்படுபவை அடுத்துவரும் ஆக்காட்டியில் தொகுத்து வெளியிடப்படும்.

**உசாத்துணை நூல்கள் :**

சாதியை அழித்தொழித்தல் - டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்

தீண்டாமைக் கொடுமைகளும் தீ மூண்ட நாட்களும் - யோகரட்ணம்

இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்- வெகுஜனன் இராவணா

ஒரு பனஞ்சோலைக் கிராமத்தின் எழுச்சி - என்.கே. ரகுநாதன்

காந்தியும் தமிழ்ச்சனாதனிகளும் - அ.மார்க்ஸ்

வட அல்வை முருகேசனார் பவளவிழா மலர்

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் வெள்ளாளன், பிராமணன், பள்ளிக்கூடம் போற பெடியன்

முன் பள்ளி வகுப்பில் கல்வி கற்க நான் அனுமதிக்கப் பட்டிருக்கவில்லை. எந்தப் பஞ்சமர்களுடனும் நான் சேர்ந்து விடக்கூடாதென்ற முன்னெச்சரிக்கையாலும் வேறு சில குடும்பப் பொருளாதார சூழ்நிலைகளாலும் அம்மா என்னை அங்கு சேர்க்கவில்லை. பனங்கிழங்குகளைக் கிண்டியபடி வேர்க்க விறுவிறுக்க அவள் சொல்லித்தந்த ஆனா ஆவன்னா தான் எனது முன்பள்ளிப் பாடங்கள். அம்மாவிடம் தன்னைக் கைவிட்டுச் சென்ற அய்யனுக்கெதிராக (அப்பாவுக்கு) என்னை வளர்த்து ஓர் பிராமணனாக-பத்ததி (சமஸ்கிருதத்திலும் குருகுலக் கல்வியிலும் உயர்தகுதி பெற்ற பிரம்மஸ்ரீ பிராமணர்கள் மாத்திரம் சொல்லக்கூடிய பிரார்த்தனை) வாசிக்கிற பிராமணனாக-எடுத்துவிட வேண்டுமென்ற வெறி இருந்தது. அப்போதெல்லாம் அம்மா எனக்கு முன்னுதாரணங்களாகக் கூறியது கோப்பாய் சிவம் என்கிற ஒரு பிராமணரின் புத்தகங்கள், இலங்கை வானொலியில் கடமையாற்றிக் கொண்டிருந்த ஹரிஹரஷர்மாவின் குரல் என்பவற்றைத்தான்.

பனங்கொட்டைகளைப் பொறுக்கிக் கடகத்திலிட்டபடி, புகையும் அடுப்பை ஊதியபடி, இடியப்பம் பிழிந்தபடி இவர்களைப் பற்றிய உயர்வான புனைவுகளை அம்மா சொல்லிக் கொண்டிருப்பாள். காயத்ரி மந்திரத்தைச் சொல்லிமுடித்த மாலைப் போதொன்றில் அவள் கூறினாள்; 'நாளைக்கு உனக்குப் பள்ளிக்கூடம். ரயில்வேப் பொடியள், நளச்சிணியள் (எங்கேயோ இருந்து இடம்பெயர்ந்து வந்த பஞ்சமர்கள், கைவிடப்பட்ட பாழடைந்த ரயில்வே குவார்ட்டர்ஸ்களில் தஞ்சமடைந்திருந்தனர். அவர்களது பாவனைக்குக் கோவில் கிணறு மறுக்கப்பட்ட பின்னர் அசுத்தமான ரயில்வே கிணற்று நீரை அவர்கள் பருகினர்) எல்லாம் வருவாங்கள். அவங்கள் ஆரோடயேனும் சேந்தாயெண்டு கதை வந்துது. அம்மா உனக்கு இல்லை சரியோ, நீ கோமதி மாமின்ர பொடியனோட மாத்திரம் சேர். சாப்பிடேக்க சாப்பாட்டுப் பெட்டிமுடியால மறைச்சு வைச்சுத் தான் சாப்பிட வேணும்-நீ பிராமணன்! ஏதாவது திருகுதாளம் பண்ணினாய், எனக்கு வந்து சொல்ல ஆக்கள் இருக்கினம் சரியே'

பாடசாலையில் முதல்நாள் எனக்கு நன்றாகவே ஞாபகம் இருக்கிறது-நான் பயப்பிட்டுக் கொண்டிருக்கவில்லை. எல்லா ஆசிரியர்களும் நான் அப்பாவைப் போலவே இருப்பதாய் அம்மாவிடம் கூற அவள் 'கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேணுமோ' எனக் கேட்டுக் கொண்டிருந்தாள். அம்மாவும் மூன்று நான்கு வெள்ளாளப் பெண்மணிகளும் நின்று கொண்டிருந்தனர், பெஞ்ச் அழுக்கானது என என்னையோ அல்லது அவர்களது பிள்ளைகளையோ அப்பக்கம் அண்டவிடாது பார்த்துக் கொண்டிருந்தாள் அம்மா. பெத்தா அதில் தான் உட்கார்ந்திருந்தாள். அவள் வீ.சீயில் துப்புரவு வேலை செய்பவள். அவர்கள் கதைத்துக் கொண்டிருந்தார்கள்; 'பெத்தான்ர பிள்ளையும் பள்ளிக்கூடத்தில சேருதே! கடவுளே கலிகாலம்'. பெத்தாவை நான் பார்த்தேன் - கறுப்பு. 'எவனுக்கோ ஈணப்போறாள், வயித்தப் பார்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்தார்கள். ஊத்தை பெஞ்சில் அமர்ந்திருந்த பெத்தா ஒருமுறைதானும் இப்பக்கம் திரும்பிப் பார்த்தாளில்லை. அளவுக்கதிகமாக நீலம் போடப்பட்டு ஊத்தைகள் வடிவாக எடுபடாமல் இருந்த சீருடையைப் பெத்தாவின் மகன் அணிந்திருந்தான். அவன் என்னைப் போல, சப்பாத்து அணிந்திருக்கவில்லை. கால்களை அடிக்கடி சொறிந்த படி மூக்கில் புல்லாக்குப் போல தொங்கும் சளியைத் தாயின் சீலைத்தலைப்பில் துடைத்தபடி நின்றிருந்தான். அருவருப்பாய் இருந்தது. அம்மா எல்லாப் படிவ நிரப்பல்களும் முடித்து என்னைக்கொண்டு போய் வகுப்பில் விடும் போது நான்கு பளபளப்பான மாணவர்களை அறிமுகப் படுத்தினாள். என்னைப் போல மிகு வெண்ணிறச் சேட்டையும் மடிப்புக் குலையாத காற்சட்டையையும் அவர்கள் அணிந்திருத்தனர். இருவருடைய அப்பாக்கள் வெளிநாட்டில் இருந்தனர். அவர்கள் அழகான புத்தகப் பைகளை வடிவான பொம்மைக்குட்டித் தண்ணீர்ப் போத்தல்களை வைத்திருந்தனர். நான் வட்ட வடிவிலான சாப்பாட்டுப் பெட்டி ஒன்றை வைத்திருந்தேன். எனது பளபளப்பான வெள்ளாள நண்பர்களும் விதவிதமான வடிவச் சாப்பாட்டுப் பெட்டிகளை வைத்திருந்தனர். பஞ்சமர்கள் பெரும்பாலும் சாப்பாடு கொண்டுவருவதில்லை. அப்படியே ஓரிருவர் கொண்டுவந்தாலும் ரீச்சரிடம் வாழையிலைக்கும் பூவரசம் இலைக்கும் பேச்சு வ வாங்குவார்கள். (அவர்கள் பூவரசம் இலைகளை வெகுநுட்பமாக உதயன் பேப்பரில் விரித்து அதன் மேல் புட்டையோ பாணையோ வைத்துப் பார்சல் கட்டிக் கொண்டுவருவார்கள். ரீச்சர் வகுப்பறைச் சுத்தம் பற்றிப் பெரிதும் அக்கறை கொண்டிருந்தவர். ஆதலால் அவருக்கு வாழையிலைகள், பூவரசம் இலைகள் வீசப்பட்டு அவற்றுக்குக் காக்கைகள் வட்டமிடுவது குறித்துப் பெரும் அதிருப்தி இருந்தது) நாங்கள் (வெள்ளாள மாணவர்களையும் என்னையும்) முன்வாங்கில் இருந்தோம். பெண்பிள்ளைகளுக்காக ஒதுக்கப் பட்ட மறுபிரிவின் முன்வாங்கில் சுஹாசினி, யசோதரா, நிர்மலா போன்றோர் அமர்ந்திருக்கப் பின்வாங்குகளில் றபீக்கா, அன்னமேரி,சுவர்ணா, குயின்ஸி போன்றோர் அமர்ந்திருந்தனர். முன்வாங்கு பின்வாங்கு ஒழுங்கு ஆசிரியர்களால் மிகக்கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டது. கிறிஸ்தவம் படிப்பவர்கள் மாமர நிழலுக்குப் போய்விட வேண்டும். கிறிஸ்தவ ஆசிரியையின் தலையில் காகம் எச்சமிட்ட சம்பவம் பாடசாலை முழுதும் தெரியவந்த பின்னரும் கூட. பவளம் ரீச்சரைக் கோயிலில் சந்திக்கும் நேரமெல்லாம் அம்மா என்னைப் பற்றி விசாரிப்பாள். 'என்ன பவளம், பின்வாங்குப் பெடி பெட்டையளோட ஆள் கொண்டாட்டமே?'

பின்வாங்குப் பெடியள் கதைத்துக் கொண்டிருப் பதற்காக, குழப்படிகளுக்காக ரீச்சர்களிடம் அடிவாங்கியபடியே இருந்தார்கள். எங்களுக்கு அடியே விழுவதில்லை. ஏனெனில் நாங்கள் குழப்படி விடுவதில்லை. ஏனெனில் நாங்கள் முன்வாங்கில் இருந்தோம். அவர்கள் பிழைகள் வாங்கியபடியே இருந்தார்கள். ஏனெனில் அவர்கள் பின்வாங்கில் இருந்தார்கள். நாங்கள் சரிகளையே அதிகம் வாங்கவும் விரும்பவும் செய்தோம். ஏனெனில் நாங்கள் முன்வாங்கில் இருந்தோம். ஏனெனில் நாங்கள் இந்து உயர்வேளாள குலத்தினராகவும் பிராமணர்களாகவும் இருந்தோம்.

என்னைக் கள்ளப் பிராமணி என அழைக்கும் பழக்கத்தைப் பின்வாங்கு மாணவர்கள் கொண்டிருந்தனர். காரணம் இல்லாமலில்லை. அவர்கள் பக்கம் நியாயம் இருந்தது. அவர்கள் அடி வாங்கும் போதெல்லாம் நானும் என் வெள்ளாள நண்பர்களும் மிக மோசமாகப் பகிடி (பகிடியை விட வேறு ஏதாவது மோசமான வார்த்தைகளிருப்பின் அதை இவ்விடத்தில் ஒட்டி வாசிக்கவும்) செய்வோம். அய்ந்தாம் ஆறாம் ஆண்டுகளில் படிக்கும் போது இக்கிண்டல்கள் அதிகமும் பாலியல் சார்ந்தவையாக இருந்தன. 'பனைமரத்தில ஏறியிருந்த உன்ர கொப்பன்ர குcensored / 'உன்ர கொம்மா ஆமை றைச்சி திண்டிட்டு ஆமிக்காரனோட படுக்கிற வேcensored' என்ற வகையான கிண்டல்கள். அவர்களால் எங்களை -முக்கியமாக நோஞ்சானான என்னை- அடித்து நொறுக்கி விட முடியும். ஆனால் தவறுதலாய் கூட அவர்கள் என்மீது தொட்டதில்லை. வெள்ளாளச் சிறுவன் ஒருவனது பொன்மூக்கை இடைவேளையின் போது அவர்கள் உடைத்த சம்பவம் இன்றும் என் நினைவிலிருக்கிறது. இராணுவத்தினருடன் பஞ் சமர்களின் தாய்மாரை இணைத்துப் பேசியதாலேயே அது நடந்தது. ஆசிரியரிடம் அந்தப் பனையேறிச் சிறுவனின் நியாயங்கள் எடுபடவேயில்லை. 'திருப்பிக் கதையாத' ஆசிரியர் திருப்பித் திருப்பி அவனுக்குக் கூறிக்கொண்டிருந்தார். முதலில் அவனது விரல் மொளியைப் பதம் பாத்த வாத்தி பின்னர் மேசைக்குக் கீழாய் அவனைக் குனியச் செய்து பின்புறமாய் விளாசினான் - அவனிடமிருந்து எந்த அழுகையொலியும் வராதது வாத்தியின் கோபத்தை மேலும் கூட்டிக்கொண்டிருந்தது. பெண்பிள்ளைகள் பேசாமல் இருந்தார்கள். ஆனால் நானும் எனது முன்வாங்கு நண்பர்களும் வாத்தியின் கிண்டல்கள் ஒவ்வொன்றுக்கும் உரக்கச் சிரித்துக் கொண்டிருந்தோம். தன்னுடைய பாடம் முழுதும் குறித்த மாணவனை முட்டுக்காலில் நிற்கும் படி வாத்தி கூறினான். நான் அவன் பக்கம் ஒருமுறை பார்த்து நைக்காட்டினேன். அந்தக் கண்களை வாழ்நாள் பூராவும் நான் மறக்கமுடியாது. நீர் தளும்பி அழுகையை அடக்கும் கண்ணும் துடித்துக் கொண்டிருக்கும் சொண்டும்.

மறுநாள் இடைவேளையின் போது அவனை வீட்டிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துச் செல்ல உறவினர்கள் வந்திருப்பதாய் ஆசிரியரொருவர் அழைத்துச் சென்றார். அவனது தாயார் அவனைப் பாடசாலைக்கு அனுப்பி வைத்து விட்டு மண்ணெண்ணெய் ஊற்றித் தன்னைத் தானே எரித்துக் கொண்டதாய் பள்ளிக் கூடத்தில் பேசிக் கொண்டார்கள். பிறகு ஒருபோதும் நான் அவனைக் கண்டதில்லை.

⋆⋆⋆

2001 இடப்பெயர்வு என்னை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் சேரும்படி செய்தது. அம்மாவுக்கு வேதக்காரப் பள்ளிக்கூடம் என்பதில் பல அதிருப்திகள் இருந்தன தான் என்றாலும் வேறுவழியிருக்கவில்லை. ஆங்கிலம் கற்க மிக ஏதுவான இடம் எனவும் பஞ்சமர்கள் அதிகம் படிப்பது வட்டு சென்றல் போன்ற பள்ளிக்கூடங்களில் தான் எனவும் இங்கு அதிகம் கல்வி கற்பது கிறிஸ்தவ வெள்ளாளர்கள் தான் என்பதையும் உறுதிப்படுத்திய பின்னரே அரைகுறை மனதுடன் அம்மா அங்கு படிக்க அனுப்பினாள்.

'What was your school?'

'Palai Central College, Sir'

'Temporary Admission, No?'

'yes sir'

'What is your name?'

'My name is Hariharasharma sir'

'ஓ! அய்யராக்களா?'

'ஓம் சேர்'

'அய்யா, அப்ப சொல்லுங்கோ, பூணூல் போட்டாச்சே' வகுப்பறையில் சலசலப்பு ஏற்பட்டது. ஆசிரியர் டஸ்டரை கமில்ரனை நோக்கி வீசினார். 'டேய் கமில்ரன், நாயே.. எந்த நேரம் பார் கதை. கொப்பரும் கொம்மாவும் என்ன கத்திக் கொண்டே ஓcensored. வகுப்பறை சிரித்தது. எனக்கு உண்மையிலேயே விளங்கவில்லை. எனது முகக்குறியிலிருந்து அதைப் புரிந்து கொண்ட வாத்தி 'அய்யாவுக்கு விளங்காதுதான்' என்றான். பிறகும் 'அய்யா' எண்டான். எழுந்து நின்றேன். 'இருங்கோய்யா, இருந்து பதில் சொல்லுங்கோ' 'பூணூல் போட்டாச்சே'

'ம்ஹூம்'

'ஏனய்யா? ஏழு வயசில போடவேணுமெண்டு சொல்லுவினம்?'

'பதினேழு வயசிலயும் போடலாம் சேர். இனித்தான் போடோணும்' (பொய் சொன்னேன். உண்மையிலேயே 'அய்யா' அங்கீகாரம் எனக்குப் பிடித்திருந்தது. அதைக் குலைக்க நான் விரும்பவில்லை. உண்மையில் அப்பா-அம்மா கலப்பு மணம் குறித்த இரு சமூகங்களின் அங்கீகாரத்தினின்றும் என்னைப் புறந்தள்ளி-யிருந்தது. வெள்ளாளர்களும் ஒருவித வேற்றுமை உணர்வுடனேயே என்னை ஏற்றுக் கொண்டனர். பிராமணர்கள் என்னை அங்கீகரிக்கவேயில்லை. அப்பா; அம்மாவைக் கைவிட்ட போது, அவரைப் பிரமச்சாரி என்று அக்கினிசாட்சி கூறி, மறு கல்யாணம் பண்ணிவைக்கத் தயாராயிருந்த பிராமணிகள் எனக்குப் பூணூல் போட்டுவிடத் தயாராயிருக்கவில்லை.)

⋆⋆⋆

அம்மா யாழ்ப்பாணக் கல்லூரியில் எனது இருப்புக் குறித்து மிகவும் அதிருப்தியடைந்திருந்தாள். அவளது அதிருப்தி என்னைக் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு மாற்றியது. யாழ்ப்பாண இந்துக்கல்லூரிக்கு 'நன்கொடை' கொடுக்குமளவுக்கு பணவசதி இருக்கவில்லை. அடுத்தபடி, கொக்குவில் இந்துக் கல்லூரி அம்மாவைப் பொறுத்தவரை நல்ல தெரிவாக இருந்தது. மஞ்சவனப்பதி கோயில் - இரண்டு கட்டடத் தொகுதிகளுக்கு நடுவில் இன்னொரு முருகன் கோயில் - நல்ல சாதிப் பெடியள் படிக்கிற இடம் என அப் பாடசாலை குறித்து அலட்டிக் கொள்ள நிறைய விடயங்கள் இருந்தன. எனது ஆங்கிலம், நடை, உடை பாவனைகள் கொக்குவில் இந்துவில் என்னைச் சுற்றி ஒரு உயர்ந்த பிம்பத்தைக் கட்டமைக்க உதவின. திருநீறு பூசிக்கொண்டு போகவேண்டிய கட்டாயம் இருந்தது. தினந்தினம் பிரார்த்தனைக் கூட்டங்களில் தேவாரம் பாடிக் கொண்டிருந்தேன். பிரேயரில் கிறிஸ்தவ மாணவர்கள் எங்களது ஒன்றுகூடல் மண்டபத்தின் மூலையில் வந்து நிற்கும்படி விதிக்கப் பட்டிருந்தார்கள். சமயப் பாடத்தின் போது அவர்கள் லைபிறறிக்கு அனுப்பப் படுவார்கள்.

தமிழ்த்தினப் போட்டிகள் என்றால் எனக்கும் ஏனைய இந்து மாணவர்களுக்கும் சரியான வாசிதான். தலைப்புகள் எல்லாம் சமய இலக்கியங்கள் சார்ந்தே கொடுக்கப் பட்டிருக்கும். விவாதமென்றால் அது மணிமேகலையா? கண்ணகியா? சீதையா? கண்ணகியா? என்ற வட்டத்துள்ளேயே சுழலும். எப்பவாவது, தொழிநுட்ப முன்னேற்றம் நம் சமூகத்துக்கு நல்லதைப் பண்ணுகிறதா? இல்லையா? தொனியில் ஏதாவது தருவார்கள். அதற்குக் கூட திருக்குறளில் இருந்தும் அங்கிருந்தும் இங்கிருந்துமாய் மேற்கோள் காட்டி வென்றுவிட முடியும். தமிழ்த்தினப் போட்டியென்றால் இந்துக் கல்லூரிகளின் கும்மாளம் சொல்லிமாளாது. ஆங்கில தினப் போட்டிகளின் போது கூட யாழ் இந்துவும் வேம்படியும் கொக்குவில் இந்துவும் எப்படியோ பல முதலாமிடங்களைச் சுவீகரித்து விடுகின்றன. ஏனெனில் ஆங்கில தினப் போட்டிகளில் விவிலியம் சார்ந்த எந்தக் கட்டுரைகளும் கோரப் படுவதில்லை.

மிகக் கஷ்டமான உடற்செயற்பாடுகளைக் கோரிநிற்கும் ஒப்படைகளுக்காக நான் கோகுலனை வைத்திருந்தேன். சரியான விதத்தில் சேர்கிட்டுகளைப் பொருத்தி மின்னோட்டத் தொகுதி தயாரிப்பது. மோட்டாரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கும் விளையாட்டுச் சுழலி செய்வது போன்ற விஞ் ஞானப்பாட ஒப்படைகளுக்கும் அவனை நம்பியிருக்க வேண்டிய காலம் வந்து விட்டதால் அவனை வீட்டு வரவேற்பறையினுள் அனுமதிக்க வேண்டிய அவலம் அம்மாவுக்கு வந்தது. மஞ்சள் தண்ணி கரைத்து ரெடியாய் இருக்கும் மாலைப்போதுகளில் அவன் வருவான். அவன் என்னிடம் ஆங்கிலம் கற்றுக்கொள்வதாக இருந்தது. அம்மா ஏதோ பெருமையில் அதற்கு ஒத்துக்கொண்டிருந்தாள். அதுவே ஒவ்வொருநாளும் அவனது வருகைக்கு வித்திட்டது. அம்மா மூக்குப்பேணிகள் இல்லாது போய்விட்டமைக்கு மிகவும் வருத்தப்பட்டாள்.

கோகுலனுக்கான ரம்ளர் சமயலறையின் மூலையில் கிடக்கும். பளையில் இருந்தபோது அம்மா இரண்டு மூக்குப்பேணிகளை வைத்திருந்தாள். அவற்றிலொன்று வேலிப்பூவரசம் கெட்டில் கவிழ்க்கப்பட்டிருக்கும். அது பனம்பாத்தி கிண்ட வரும் பனையேறிக் குடியைச் சேர்ந்த முதியவளுக்கானது. மற்றையது மாதத்தில் மூன்று நாட்கள் தான் பாவிப்பதற்கு.

***

உயர் தரத்தில் எனது பாடத்தேர்வு (ஆங்கில இலக்கியம்) சார்ந்த காரணங்களால் யாழ்.மத்திய கல்லூரிக்கு மாறவேண்டி வந்தது. ஏகப்பட்ட பஞ் சமர்கள் கற்கும் (வெள்ளாளப் பாஷையில் ‘காவாலிப் பள்ளிக்கூடம்‘), ஒரு பஞ்சமரே அதிபராய் இருக்கும் பாடசாலை என்பதில் அம்மாவுக்கு படு எரிச்சல் இருந்தது. எனது பாடங்களை வழங்கக் கூடிய யாழ் இந்து அம்மாவுக்குவிருப்பமான ஒன்றாக இருந்த போதும் அதன் டொனேஷன் தொகை அப்பக்கமும் தலை வைக்க விடவில்லை.

நான் சேர்ந்த வருடத்தில் அதிபராய் இருந்து பின்னர் கொலையுண்ட அதிபர் இராசதுரை ஒரு பஞ்சமர். பல முற்போக்கான நடவடிக்கைகள் அவரால் பாடசாலையினுள் செய்யப் பட்டிருந்தன. முஸ்லிம் மாணவர்கள் மிகக்குறைந்த அளவிலேயே படித்த போதும் காலைப் பிரார்த்தனையில் அவர்களது பிரார்த்தனையும் இடம்பெறும். இஸ்லாமியப் பிரார்த்தனை, ஒளிவிழா, நவராத்திரி எனச் சகல மதங்களுக்கும் அங்கீகாரம் வழங்கப் பட்டிருந்தது. மிகுந்த கண்டிப்புடைய வன்முறையாளரான அவர் என்னை ஒருபோதும் ‘நீ’ போட்டுக் கதைத்ததில்லை. (அவரால் கதைக்க முடிந்ததில்லை என்பது மேலும் பொருத்தமானது) என்னை அவர் ஆங்கில யூனியனுக்குத் தலைவராகப் பிரேரித்த போது ‘அய்யாவோட ஸ்கில்ஸ் வந்து மார்வெலஸ். ஹி டிஸர்வ்ஸ் திஸ்’ என்றார். எனது ஆங்கிலமும் சாதியும் அவரது அணுகுமுறைக்குக் காரணமாயிருக்கலாம் என்பது எனது ஊகம்.

‘சர்மா, முந்தி எந்தப்பள்ளிக்கூடம்? ஏன் இஞ்ச வந்தனீங்கள்? இங்கிலிஷ்க்கு என்ன றிசல்ஸ். தமிழ் வாசிக்கிறது போல உங்களுக்கு இங்கிலிஷ் விளங்கும் என்ன?’ இது தான் மாணவர்கள் என்னை எதிர்கொண்ட விதம். ஓ.எல் இல் கணிதத்துக்கு விசேடசித்தி வைத்துக் கொண்டு கலைப்பிரி-விற்கு வந்தது வேறு அவர்களிடம் விநோதமான மதிப்புணர்வைத் தோற்றுவித்திருந்தது. எனக்கு இதெல்லாம் வேடிக்கையாக இருக்கும். ‘மச்சான் அந்தச் சரக்கு செம கட்டையடா... கோழி’ அது இதென்று கதைத்துக் கொண்டிருப்பவர்கள் என்னைக் கண்டதும் நிறுத்திக் கொள்வார்கள். நானே என்னைச் சுற்றிக் கட்டமைத்துக் கொண்ட இந்த ஒளிவளையம் மீது குற்ற உணர்வுடன் கூடிய அதீத பிரியம் இருந்ததைக் கட்டாயம் ஒத்துக்கொள்ள வேண்டும். மாணவர்களிடம் என்னைக் குறித்து ஆயிரம் கேள்விகள் இருந்தன. புறனிலையாளனாய் நின்று என்னையும் மாணவர்களையும் விளையாட்டாய் அவதானித்துப் பதிந்து கொண்டிருந்தேன் டயரியில். ‘இரவில எத்தினை மணிகாணப் படிக்கிறனீர்?’ போன்ற கேள்விகளே அவர்கள் என்னிடம் கேட்க முடிந்த கேள்விகள். எனது உள் புதைந்த ஆளுமை காரணமாயும் குறைந்தளவிலான பாடசாலைப் பிரசன்னம் காரணமாயும் அவர்களுடன் நெருங்கித் தொடர்புற முடிந்ததில்லை. பாடசாலைக்குச் சமூகமளிக்கும் நாட்களிலும் எதையாவது எழுதிக்கொண்டிருப்பேன். நான் ட்ரிப்பிள் எக்ஸ் பார்க்கிற ஆளா இல்லையா, வயதுக்கு வந்தவனா வராதவனா என்பதெல்லாம் அவர்களது முக்கியமான இடைவேளை அலசல்கள். சாடைமாடையாக மாத்திரமே அவர்கள் என்னைக் கிளறியதுண்டு. ஒருதடவை செல்போனில் பதிவுசெய்யப்பட்ட நீலப்படத் துண்டுகளைப் பின்வாங்கில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். நான் வாசித்துக் கொண்டிருந்தேன். ஒருத்தன் ‘என்ன ஐயா, எப்ப ஆம்பிளையாகிறது?’ என்று கத்தினான். நான் மையமாகச் சிரித்து விட்டு வாசிப்பது போன்ற பாவனையைத் தொடர்ந்தேன். அன்று விட்டுவிட்டார்கள். முன்திட்டமிடப்பட்ட அணுகல்களை அவர்கள் என்னிடம் நிகழ்த்தியதுண்டு. எனக்கு இவையெல்லாம் ஆர்வமிக்க விளையாட்டொன்றின் அங்கங்களாகத் தோன்றியபடியால் புதிர்மிக்க ஒருவனாய் என்னைக் கட்டமைத்த படியிருந்தேன். எனது உள்வாங்கல்களின் படி அம்மாணவர்கள் என்னை அணுகமுடிந்ததில்லை என்பதே முடிவாய் இருக்கிறது.

நான் கடந்துவந்த எல்லா ஆசிரியர்களுக்குமே எனது கதைக்கும் தொனி மீதான மோகம் இருந்து வந்திருப்பதை நான் உள்ளுணர்ந்திருக்கிறேன், இவற்றுள் ஸ, ஹ, ஷ, ஜ உச்சரிப்புகள் அளித்த பங்கு முக்கியமானது. (எல்லோராலும் தினேஸ் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படும் ஒருவனை நான் தினேஷ் என்பேன்) பள்ளிக்கூடத்துக்குச் சாப்பாடு கொண்டுவரும் மாணவர்கள் மிகச் சொற்பமானவர்களே. அவர்களிலும் மாமிச உணவு கொண்டுவருவோர் யாரும் கிடையாது. பொரித்த முட்டை போன்ற காலை உப உணவுகள் எப்போதாவது வருவது வழக்கம். எனக்கு மூன்று கதிரைகள் தள்ளி முட்டைப்பொரியல் பார்சலைப் விரித்து வைத்திருந்த மாணவன், ஆசிரியை ஒருவரால் பின் வரிசையில் சென்று சாப்பிடும் படி விரட்டப்பட்டான். என்னுடன் வேறு சில விடயங்களை அலசியபடியிருந்த ஆசிரியை விடயம் மாறி, தான் சுனாமியின் பின்னர் மீன் சாப்பிடுவதை விட்டுவிட்டதாயும் இறைச்சி சாப்பிடுபவர்களைத் தனக்குப் பிடிப்பதில்லையென்றும் பிள்ளைகளுக்காக முட்டை சமைப்பதாகவும் அதுவும் பாம் முட்டையே கொடுப்பதாகவும் கூறத் தொடங்கினார். இதையெல்லாம் கூறும் போது ஒருவிதமான சங்கடம் அவருக்கிருந்தது. மீண்டும் வெள்ளைக்காரர்கள் இப்போதெல்லாம் மரக்கறிகளை அதிகம் விரும்பும் போக்கு அதிகரித்து வருவதாக கூறி மரக்கறி உணவுப்பழக்கத்தின் நன்மைகளை வகுப்பிலிருந்த பிறருக்கு கூறத் தொடங்கினார். எனக்கு இதெல்லாம் மூன்று கதிரைகள் தள்ளி இருந்த முட்டைப் பொரியலுக்கான பிராயச்சித்தமாகவே தோன்றிற்று.

நாடக வகுப்புகள் மிகச் சுவாரசியமானவை. 1947க்குப் பிற்பட்ட தமிழ் நாட்டு அரங்கச் செயற்பாடுகளை என்முன்னிலையில் கற்பிக்கும் போதெல்லாம் ஆசிரியரிடம் ஒருவித அசௌகரியம் தொற்றிக் கொள்ளும். ஆரிய பார்ப்பனீயத்துக்கெதிராகத் திராவிட உணர்வுகள் வெடித்துக் கிளர்ந்த வரலாறு என் முன்னிலையில் கற்பிப்பதற்கு அவருக்குப் பல மனத்தடைகள் இருந்தன. சிறிதாய் சிரித்தபடி ஆரம்பிப்பார் 'சர்மா... குறைநினைக்கக் கூடாது'. அரசியல் கற்கும் போதுகூட ஆசிரியர்களிடம் இதை நான் உணர்ந்திருக்கிறேன். பாரதிய ஜனதாவை, ஆர்.எஸ்.எஸ்-இனை விமர்சிக்க நேரும் போதெல்லாம் அவர்கள் என்னைப் பார்த்துச் சமாளிப்புப் புன்னகை சிந்தத் தவறுவதில்லை. என்னை நோக்கி அவர்கள் கூறும் சமாதானப் பிற்குறிப்பு கீழ்க்கண்டவாறு அமைந்திருக்கும்: 'எவ்வளவுதான் பார்ப்பனீயம் கொடூரமானதாய் இருந்தாலும் அது இந்தியாவின் சமூகக்கட்டுமானங்களை முன்னேற்றியிருக்கிறது' புரிந்து கொண்டதாய் புன்னகைப்பேன். அவர்கள் தொடர்வார்கள் 'அதேபோல முற்போக்குச் சிந்தனை கொண்ட நம்பூதிரிபாடு ஒரு பிராமணர் தானே'. இந்தச் சமாதானங்களை எனக்கு வழங்கிவிட வேண்டும் எனத் துடிக்கும் ஒரு மனதில் ஊறிப்போயுள்ள பார்ப்பனீய அரசியலை வடிவமைத்தது எதுவாய் இருக்கக் கூடும்?

## உயர் இந்து வேளாள சமூக அமைப்புக் கட்டுமானங்களும் சிதறடிப்புக்கான முன்மொழிவும்

சிவில் சமூக வடிவமைப்பு என்பதில் சமூக நிறுவனங்களுக்கு ஓர் முக்கிய பங்கு உண்டு. தமிழ் சமூக உருவாக்கத்தில், அதனுடைய தன்மைகளைத் தீர்மானிப்பதில் அதிகளவு செல்வாக்குச் செலுத்துபவை கல்வி நிறுவனங்களே என்பது கண்கூடு.

யாழ்ப்பாணத்துக் கல்வி நிறுவனங்கள் பெரிதும் இந்து-சைவ-வெள்ளாள நியமங்களால் / கிறிஸ்தவ வெள்ளாள மேட்டுக்குடி நியமங்களால் கட்டியமைக்கப் பட்டவையே. யாழ்ப்பாணத்துப் பாடசாலைகளில் ஓரிரு அரிதான விதிவிலக்குகளைத் தவிர இந்து ஆதீனம் X கிறிஸ்தவ மிஷனரி என இரு பிரிவுகளுக்குள் அடக்கிவிட முடியும். இந்த இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று குறைவில்லாத வகையில் வெள்ளாள நலன் பேணும் மேட்டுக்குடிச் சமூக அமைப்பை வடிவமைப்புச் செய்கின்ற கருவிகள் தாம். மாணவர்களை இளநிலையில் சாதகமாகத் தகவமைத்துக் கொள்ளும் இச்செயற்பாடு இன்று வரை உக்கிரமாக எதிர்க்கப்படவில்லை.

மாணவர்களிடையேயான ஒழுக்கச் சீர்குலைவுகளை சீர்செய்யும் முயற்சியின் முதற்படியாக ஹார்ட்லிக்கல்லூரியின் தரம் ஆறு மாணவர்கள் தமது ஆசிரியர்களை (உபாத்தியாயர்களை என்பது மிகப்பொருத்தம்) வீழ்ந்து வணங்கும் படி கட்டாயப்படுத்தப் பட்டார்கள். இதை யாழ். தினக்குரல் செய்தியாக வெளியிட்டது.

ஓ.எல் பரீட்சைக்காலம், மின்சாரம் சீரின்மை, எதுவந்தாலும் விடாப்பிடியாகக் கோவில்கள் அதிகாலை ஐந்து மணிக்கே சினிமா பாணி மெட்டிலமைந்த ஆபாசப்பாடல்களை ஒலிபரப்புவதால் உற்சாகமாகச் சுயபுணர்வில் ஈடுபடமுடிகிறதேயன்றி படிக்கமுடிகிறதில்லை. அதிகார அலுவலகங்களின் ஆசியுடன்தான் இது நடக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவேனும் உரிய அலுவலகங்களுடன் தொடர்புற முடிவதில்லை. அலுவலர் ஆட்சியின் சீரழிவு அனைத்து இடங்களிலும் தலைவிரித்தாடுகிறது. கோவில்களில் சென்று தட்டிக்கேட்கவும் நாதியில்லை. வெள்ளாளர்கள் வீடு பூந்து அடிப்பதற்காக சிறந்த தலித்துகளை வைத்திருக்கிறார்கள்.

இந்தச் சமூகத்தகவமைப்பின் வலுமிக்க கருவியாகப் பாடசாலை விளங்குகிறது. சொல்லின் செல்வர்களும் செஞ்சொற்செல்வர்களும் மணிக்கணக்கில் நடாத்தும் அறுவைகளைக் கேட்கவேண்டியிருக்கிறது - வாய்மூடியபடி மூத்திரம் வரும் எங்கள் குறிகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிசைந்தபடி. ஆணாதிக்க வெள்ளாளப் பிற்போக்கு அவர்கள் வாயிலிருந்து வெளிவருவதைக் கண்டும் மூக்கைப் பொத்தமுடியாதபடி நிற்பான் ஒழுக்காற்றுச் சட்டம்பி. எழுந்து செல்லமுடியாதபடிக்கு மண்டபவாயிலில் ஆமிக்காரன் போல நிற்பான் இந்து மாமன்ற வாத்தி. சமீப காலமாகப் பெருகிவரும் இத்தகைய அதிருப்திகளைச் சமாளிக்கும் பொருட்டுச் சில இந்துக்கல்லூரிகள் சுண்டல் விநியோகிக்கின்றன. ஒன்றிரண்டு பாடசாலைகளில் தான் இந்த ஏற்பாடு மற்றையவற்றில் எல்லாம் ஒத்துழையாமைக்கான துன்புறுத்தல்களே தண்டனை. பாதிரிகளும் மேட்டுக்குடி எலைட் அசடுகளும் நளினம் கலந்து உளறும் அபத்தங்களையும் அவர்களது வெறுப்பூட்டக்கூடிய போலியான மனிதாபிமான நல்லெண்ணத்தையும் காது வலிக்கக் கேட்டுக்கொண்டிருப்பதற்கு லஞ்சமாகக் கேக்துண்டங்கள், பிஸ்கட்டுகள், குளிர்பானம் தருகிறார்கள். 'பாடசாலைகளினூடு நிறுவப்படும் சாதியம்' தொடர்பான கட்டுரை சுட்டுவது போலவே மேற்கூறியது மிஷனரிப்பாடசாலைகளின் தந்திரமான நுண்ணிய செயற்திட்டங்களின் ஒரு பகுதியே.

இவ்வாறான தந்திரங்கள் மூலம் / ஒடுக்குமுறை மூலம் கல்லூரிகளில் புறநிலையாளர்களது தோன்றுகைக்கான சாத்தியங்கள் பெருமளவிற்கு இழிவளவாக்கப்பட்டுவிடுகின்றன. கெட்டிக்காரத் தனமாய் புறநிலையாளர்களது உருவாக்கம் தவிர்க்கப்பட்டு விடுகிறது.

தமிழ்த்தினப் போட்டிகளைப் போல இந்துத்துவத்துக்கு வேறு சிறந்த எடுத்துக்காட்டு இருக்குமா என்பது தெரியவில்லை. தமிழ்த்தினப் போட்டிக்கான விவாதத் தலைப்புகளாகக் கடந்த 5/6 வருடங்கள் கொடுக்கப்பட்டு வரும் தலைப்புகளின் பட்டியலை ஒருமுறை பார்வையிட்டால் போதும். இந்து மேலாதிக்கம் தெளிவாக விளங்கி விடும். விவாதத் தலைப்புகள் கிறிஸ்தவ மாணவர்களுக்குப் பெரிதும் பொருத்தமற்றவை. பெரும்பாலும் சைவ/இந்து புராணீகங்கள் நிகழ்வுகள் சார்ந்துமே இவை அமைகின்றன. விவிலியத்திலிருந்தோ குர்-ஆனில் இருந்தோ போட்டிகளுக்கான தலைப்புகள் தேர்ந்தெடுக்கப் படுவதில்லை. தரம் 8/9களில் அறிமுகப்படுத்தப் படும் பாலியல் கல்வி (சுகாதாரமும் உடற்கல்வியும் பாடம்) பல பள்ளிக்கூடங்களில் நடாத்தப்படுவதில்லை. இங்கு இந்துத்துவமும் மேட்டுக்குடித்தனமும் moral police ஆக தம்மைக் காட்டிக்கொள்கின்றன. சுயபுணர்வு குறித்த இழிவுணர்வு, அது சார்ந்த பிரச்சனைகள் என மாணவர்கள் உளவியல் நெருக்கடிகளுக்கு ஆளாகுவதையும் உளவளத்துணையாளர்களை நாடி அவதியுறும் போக்கும் அதிகரித்து வருவது கண்கூடு. Save the children போன்ற மிழநிளிக்களும் சரி, DCPC போன்ற அரச ஏற்பாடுகளாக இருந்தாலும் சரி இரு அணிப் பாடசாலைகளின் காவலர்களும் 'நோ என்றி' பலகையுடன் இருக்கிறார்கள். கருத்தரங்குகளுக்கான அனுமதி கிடையாது. துண்டுப்பிரசுர விநியோகங்கள் மட்டுப்படுத்தப் பட்ட அளவில் அனுமதிக்கப் படுகின்றன. பல தவிர்க்க முடியாத காரணங்களினால் இடம்பெறும் கருத்தரங்குகளில் எழுந்து கேள்வி கேட்கும் மாணவன் ஒழுக்காற்றுச் சபையின் கடூரமான விசாரணைக்கு ஆளாக வேண்டி வரும். அரங்கச் செயற்பாட்டாளர்கள் இக்கல்லூரி நிர்வாகிகள் பற்றிய பல சுவாரசியமான கதைகளைக் கொண்டுவருவார்கள். அதையெல்லாம் இங்கு எழுதினால், இக்குறிப்பு ஒரு நகைச்சுவை நாவலாக மாறிவிடக்கூடும்

எமது கவனப் படுத்தல் பூரணமான ஒன்று அல்ல. நீண்ட விரிவான கள ஆய்வைக் கோரி நிற்கும் ஆய்வொன்றுக்கான முன்மொழிபாகவே பாடசாலைகளினூடு சாதியம் பற்றிய தோழர்களது அனுபவப்பகிர்வுகள், கட்டுரைகள், குறிப்புகள் முரண்வெளியில் பதிவேற்றப்படுகின்றன. யாழ்ப்பாணப் பாடசாலைகள் செய்துவரும் சமூக வடிவமைப்பு மிக நுண்ணிய தளத்தில் ஆய்வு செய்யப்பட வேண்டிய விடயம்.

மத நீக்கம் செய்யப்பட்ட பிள்ளைநேயப் பாடசாலைகளுக்கான முனைப்புகளுக்கு எதிராக அறம், வன்முறை நீக்கத்துக்கான மதப் போதனை கட்டுப்பாடும் ஒழுக்கமும் போன்ற வேடப்பெயர்களில் மீள் வலிதாக்கம் செய்யப்படும் பிற்போக்குத் தனங்கள் வலுப்பெறத் தொடங்கியுள்ள நிலையில் திறந்த கதையாடலுக்கான முனைப்புகளைத் தூண்டுதலின் அவசியத்தை நாம் உள்ளுணர்ந்தோம். எரிகின்ற பிரச்சினைகளை மாத்திரம் கவனப் படுத்துகிற ஊடகங்கள் நாளைக்கு எரியப் போகும் பிரச்சினைகள் குறித்துக் கவனஞ் செலுத்தத் தயாராயிருப்பதில்லை. இந்த நிலையில் சாதியம் பற்றிய தனது மின்தொகுப்பை வெளியிடுகிறது முரண்வெளி.

மேலதிக வாசிப்புப் பிரதிகள்:
'யாழ்ப்பாணத்துச் சாதியம் ; காலனித்துவ சமரசம்'
மு.நித்தியானந்தன்
பக்.40-47, கறுப்பு (தொகுப்பு - சுகனும் ஷோபாசக்தியும்)

'Schooling in Jaffna' - S.R.H.Hoole
in, 'The Exile Returned : The self-portrait of the tamil vellaahlahs of jaffna'
Aruvi publishers Colombo

□□□□

ஹரி ராசலட்சுமி, 2005 'டிசம்பரில்' எழுதிய இக் கட்டுரை முரண்வெளியில் வெளியாகி இருந்தது. நாம் தொடர்ந்து உரையாடவிருக்கும் **இலங்கையில் தலித்தியம் பேசுதல்** எனும் தொனியிலமைந்த கூட்டுக் கட்டுரைகளின் தொடக்கமாக இக்கட்டுரையைக் கொண்டு உரையாடும் நோக்கில் இங்கு இதனை மீள்பிரசுரம் செய்திருக்கிறோம்.

- ஆ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• சுகன்

# முரண்வெளியை முன்வைத்து

**சா**தி அடையாளத்தை இழப்பது எப்படித் தற்கொலைக்குச் சமமானதென்று ஹரிஹரஷர்மாவின் நான் ஒரு வெள்ளாளன்/பிராமணன் கட்டுரை ஈட்டுறுதி காட்டிவிட்டுப் போயிருக்கிறது.

தமிழ்ச்சமூகம் எப்படிச் சாதியச் சமூகமாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்றும் ஜேர்மனிய நாசிகளின் இன அழிப்புப் பொறிமுறை யாழ்ப்பாண சாதி ஒடுக்குமுறையுடன் ஒப்புநோக்கும்போது கால் தூசிக்குச் சமமானதென்றும் சொல்லிச் செல்கிறது. ஒரு துயரத்தை இன்னொரு துயருடன் ஒப்பிட்டுச் 'சீர்தூக்கிப் பார்ப்பது' சிக்கலானதுதானெனினும் இதைவிட வேறு எப்படிச் சாதியக் கொடூரத்தைச் சொல்லிவிடமுடியும். அனுபவித்துப் பார்த்தாற்தான் அதன் அழற்சி தெரியும். சாதிய அடிமைத்தனத்திற்குள் வாழ்ந்து பார்த்தாற்தான் அதன் வலி தெரியும்.

சில வருடங்களிற்கு முன் ஒருநண்பர் எனக்கு அறிமுகமானார்.

உங்களுக்கு என்ன பேர்' என்றேன்.

'சர்மா' என்றார்.

'இல்லை, உங்களுக்கு என்ன பேர்' என்றேன்.

'சர்மா' என்றார்.

'இல்லை, எங்களை மாதிரிப் பேர்' என்றேன். ஏதோ குற்ற உணர்ச்சியிலும் கொலைக் குற்றத்திலும் சம்பந்தப்பட்ட பெயர் மாதிரி, அருவருக்கத்தக்க, வெறுத்தொதுக்கப்பட்ட பெயர் மாதிரித் தயங்கித் தயங்கி மெதுவாகச் சொன்னார்; தேவகாந்தன். ஐரோப்பாவில் பல ஐயர்களும் சர்மாக்களும் இருக்கிறார்கள். நாசிகள் இன்றும் இருக்கிறார்கள் தானெனினும் அவர்கள் தங்களை நாசிகள் என்று அடையாளப்படுத்துவதை விரும்புவதில்லை. ஆனால் அவர்கள் விரும்புகிறார்கள். அம்பேத்கர் சொன்னார்: உலகிலேயே கொடுமையான ஒடுக்குமுறை சாதி ஒடுக்குமுறைதானென்று. அவர்களிற்குத்தான் தெரிகிறது மேற்சாதி அடையாளத்தை இழப்பது எவ்வளவு கொடூரமான சூழலிற்குட் தம்மைத் தள்ளிவிடுமென்று. மேற்சாதிய அடுக்கின் உச்சியில் இருப்பவர்கள், அதிகாரம் செய்பவர்களிற்குத்தான் தெரியும் அதன் வசதிவாய்ப்புகள், சலுகைகள், பவிசுகள், கௌரவங்கள், புனிதங்கள், சுதந்திரம், அதிகாரம் தரும் சந்தோசம் எல்லாவற்றையும் உயர்சாதி அடையாளம் தந்துவிடும், தலைமுறை தலைமுறையாகத் தந்துவிடும், பிறக்குமுன்னே உத்தரவாதப்படுத்தப்பட்டுவிடும். துபேயின் ஆய்வுகள் சமூகத்திற் பிராமணர்க்கு உரிய இடம் எதுவென்று விஸ்தாரமாகவே ஆழ அகலங்களுடன் அணுகுகிறது. கடவுளிற்கும் அரசனிற்கும் இடையில் தம்மை அவர்கள் நிறுவிக்கொள்கிறார்கள். அரசனிற்கும் மேலே கடவுளிற்கு நிகராக.

ஹரிஹரஷர்மாவின் கட்டுரையும் யாழ்ப்பாணத்தில் பிராமணர்களின் இடம் கடவுளிற்கு நிகராக நிறுத்தப்பட்டிருப்பதை அனுபவபூர்வமாகச் சொல்கிறது. ஆனால் இதுவரை வாய்மொழி, செவிவழிச் செய்தியாக இலங்கையில் பிராமணர்கள் தலித்துகளிலும் கேவலமாக, தீண்டத்தகாதோராக வறுமையில் வாழ்கிறார்கள், உழல்கிறார்கள், யாழ்ப்பாணத்தில் பிராமணர்கள் தலித்துகளிற்குச் சமம் என்ற மேற்சாதிப் பரப்புரையைப் புரட்டிப்போட்டிருப்பதில் மிகவும் மிகவும்முக்கியமான ஆய்வும் அவதானமும்.எந்த வெள்ளாளர்களிற்கும் பிராமணர்களிற்கும் இதுவரை இந்நோக்குநிலை சாத்தியமானதில்லை.

'கள்ளர், மறவர், காடர், அகம்படியார் மெல்ல..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல.. வந்து வேளாளராயினரே!' பள்ளத்தமிழர், போன்ற மேற்சாதிஆய்வு உளவியலிலிருந்து பேராசிரியர் சிவத்தம்பியே விடுபடாதபோது ஏனையோரை என் சொல்ல! பிராமணர்களும் வெள்ளாளர்களும் வறுமையிலிருந்தால் ஐயையோ! ஐயையோ! என்று உலகத்தைக் கூட்டி ஒப்பாரிவைக்கும் அறிவுப்புலத்தினர் தலித்துகள் வறுமையிலிருந்தால் அது அவர்கள் இயல்பு என்று விட்டுவிடுகிறார்கள். அன்றேல் அபத்தமாக ஓரிரு சிறுகதை, கவிதை எழுதுவார்கள். 'கஞ்சிக்கு வழியிலார் அதன் காரணமும் என்னதென்று அறிகிலார்' என்பதைப்போல. கொஞ்சம் காசுவந்தால் புதுப்பணக்காறர் என நையாண்டிவேறு செய்வார்கள்.

தற்போதைய சூழல்நெகிழ்ச்சியில் தலித்துகளின் பொருளாதார நிலையில் அதையொட்டி ஏற்படும் புதிய அவமானங்களைத் தோழர். தெணியானின் **'வெளியில் எல்லாம் பேசலாம்'**, **'தீண்டத்தகாதவன்'**ஆகிய சிறுகதைகளைப் படித்தாவது புரிந்துகொள்ளவேண்டும். ஆனால் ஹரிஹரஷர்மாவின் ஆய்வு வறுமைகூட வெள்ளாளர்களிற்கும் பிராமணர்களிற்கும் மேலதிக கௌரவத்தைத் தந்துவிடுவதை, சிலநாட் பொருளாதாரக் கஸ்ரங்கள் அவர்கள் சாதி அடக்குதலுக்கு மேலதிக ஆயுதமாக மாற்றப்படுவதைத் துல்லியப்படுத்துகிறது. அரிவரிப் பள்ளிக்கூடத்திலிருந்து அரசியற் தலைமைகள்வரை மேற்சாதிய அதிகாரத்தைக் காப்பாற்றுவதிற் குறியாக இயங்கிக்கொண்டிருக்கும் தமிழ்ச்சூழலிற் கல்விநிறுவனங்களின் சாதிமுகத்தை நோக்கி மீண்டும் மீண்டும் காறித்துப்பவேண்டியிருக்கிறது.

கல்வியின் மூலமாக மட்டுமே மேற்சாதியதிகாரத்தைத் தகர்த்தெறியமுடியுமென்று தலித் அரசியல் முன்மொழிகிறது. 'தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி வளர்ச்சி' என்று ஓர் ஆய்வு முன்னர் வெளிவந்தது 1945ல் தலித்துகளிற்குக் கல்வியில் விசேடசலுகை / உரிமை வழங்கவேண்டுமென்பது பிரதான அரசியற் கோரிக்கையாகவே அன்று இருந்தது. அறுபது வருடங்கள் கழிந்தும் நிலைமையில் எந்த மாற்றமும் ஏற்படுவதை விரும்பாத தன்மையையே சூழ்நிலைக்கேற்றவாறு நாடகமாடும் வெள்ளாளர்கள் விரும்புவதையே மேற்படி ஆய்வும் சுட்டுகிறது.

யாழ்ப்பணத்தின் எல்லாக் கல்லூரிகளிலும் நிலைமை இவ்வாறுதானிருக்கிறது. தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் சில தலித் மாணவர்கள் படித்தார்கள். முன்னாலுள்ள கோவிலுள் திருவிழாவிற்கு மாணவர்களை அழைத்துச் செல்வது வழக்கம். தலித் மாணவர்களை பாடசாலையிற் கோவிலிற்குப் பஞ்சாமிர்தம் செய்யச்சொல்லி இருத்திவிட்டு ஏனையோரை கோவிலிற்குள் அழைத்துச் சென்றதாக அக்கல்லூரி மாணவர் என்னிடம் வேதனையோடு கூறினார்.

பேராசிரியர் பத்மமனோகரன் படிக்கும்போது தனது வகுப்பில் செல்லன் எண்ற மாணவரை நளக்குட்டி என்று மாணவர்களுடன் சேரவிடாது தனியே இருத்தி வைத்துப் படிப்பித்ததாகக் கூறினார். ஒரு சில தலித் மாணவர்களைக் கல்லூரிகள் அனுமதிப்பது தம்மை உயர் வெள்ளாளர்களென்று ஒப்பு நோக்கிக் கௌரவம் காக்கவும் சாதிவெறி வன்முறையாட்டத்தை நிகழ்த்தவுமே தவிர வேறெதற்குமல்ல.

சுப்பிரமணியம், அலெக்ஸாண்டர் போன்ற பெரும் கல்வியியல் அறிவர்களை யாழ்ப்பாண சாதியச் சமூகம் தன்னருகில் இன்னும் வர அனுமதிக்காதநிலையே காணப்படுகிறது. இவர்கள் திறமைகளைச் சிங்களச் சமூகம் மிகவும் மதித்துப் போற்றிக் கௌரவப்படுத்துகிறது. ஒருவரை என்ன சாதி என்று எப்போதும் நினைக்க விரும்பாத அற்புதமான சமூகமது. பௌத்தத்தின் பெருங் கருணையும் தர்மமும் அது.

சிங்கள சமூகத்தில் சாதியம் குறித்துப் பல தமிழ் அறிஞர்களும் முயன்று பார்த்தார்கள்தானெனினும் சட்டியில் இருந்தாற்தானே அகப்பையில் வருவதற்கு. சாதியைத் தவிர வேறொன்றில்லை, என்னும்படியாக இருக்கிற யாழ்ப்பாண சமூகத்தில் சாதியைக் குறித்துப் பேசாமற் சிங்கள சமூகத்தில் சாதியம் குறித்த கவன ஈர்ப்பு சிரிப்பிற்கிடமானதும் அயோக்கியத்தனமானதும்.

யாழ் பல்கலைக் கழகத்தில் சாதியம் பல இடங்களிற் பேசப்பட்டவொன்று. இது போலவே மருத்துவ மனைகள்,கோவில்கள், அரசியற் கட்சிகள், கச்சேரிகள், என்றவாறாக ஒவ்வொரு அதிகார அலகுகளிலும் சாதியம் குறித்த ஆய்வுகளும் எதிர்ப்புகளும் பதிவுபண்ணப்பட வேண்டியது இன்று முக்கியமானது. முரண்வெளி இதற்குக் களமாகமுடியும்.

□□□□

---


2005 'டிசம்பரில்' முரண்வெளி இணைய தளத்தில் வெளியாகிய 'நான் வெள்ளாளன், பிராமணன், பள்ளிக்கூடம் போற பெடியன்' என்ற கட்டுரைக்கு சுகன் சத்தியக்கடதாசியில் இந்தப் பதிவை எழுதியிருந்தார். பத்து வருடங்கள் முன்னர் எழுதப்பட்டு இணையச்சூழலில் அதிகம் உரையாடப்பட்ட கட்டுரைகள் இவை. இவற்றின் காலப் பெறுமதி கருதியும் நாம் தொடர்ந்து உரையாடவிருக்கும் 'இலங்கையில் தலித்தியம் பேசுதல்' எனும் தொனியிலமைந்த கூட்டுக் கட்டுரைகளின் தொடக்கமாகவும் இக்கட்டுரைகளைக் கொண்டு உரையாடும் நோக்கில் இதனை இங்கே மீள்பிரசுரம் செய்திருக்கிறோம்.

- ஆ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• ஷோபாசக்தி




# "சமத்துவம் என்பது எல்லோரும் சமத்துவமாக மதிக்கப்படுவது அல்ல. அதிகாரங்களையும் வாய்ப்புகளையும் எல்லோரும் சமமாகப் பகிர்ந்துகொள்வதே"

**ஆக்காட்டி : இலங்கையில் தலித் என்ற சொல்லைப் பயன்படுத்துவதில் உள்ள பிரச்சினை தான் என்ன? இடதுசாரிகள், இலக்கியச் செயற்பாட்டாளர்கள் பலருக்கு அதிலொரு ஒவ்வாமை இருக்கிறதே?**

**ஷோபாசக்தி :** நீண்ட காலத்திற்கு முன்பே பல தளங்களிலும் பலராலும் பதில் சொல்லித் தீர்க்கப்பட்ட கேள்வியிது. எனினும் இன்னொருமுறை பதிலளித்துவிடலாம். தலித் அரசியல் மீதுள்ள அவர்களது ஒவ்வாமையே 'தலித்' என்ற சொல்லை வெறுமனே பிடித்துக்கொண்டு அவர்கள், சொல் ஆராய்ச்சியில் இறங்கக் காரணமாயிருக்கிறது.

தலித் என்ற வார்த்தை தமிழ் வார்த்தையல்ல என்பதால் அதனை ஏற்க முடியாது என்ற வாதம் அறிவு நாணயமற்றது. தமிழ் மொழியில் பல்லாயிரக்கணக்கான பிறமொழி வார்த்தைகள் கலந்துள்ளன. குறிப்பாக அரசியலிலும் அறிவியலிலும் பிற மொழிகளோடு கொள்வினை கொடுப்பினையைத் தமிழ் மொழி செய்தே வந்திருக்கிறது. தேசம், சோசலிஸம், மார்க்ஸிசம், ஜனநாயகம், இந்து, முஸ்லீம், துவக்கு, சூரியதேவன் என்று எண்ணிறைந்த பிறமொழி வார்த்தைகளை தமிழ் மொழிக்குள் உள்வாங்கிக்கொண்டவர்களுக்குத் தலித் என்ற சொல்லின் மீது மட்டும் சிறப்பான ஒவ்வாமை ஏன் ஏற்படுகிறது? அதிகமேன்? சாதி, பஞ்சமர் போன்ற வார்த்தைகளும் கூட தமிழில்லையே. அவை வடமொழி வார்த்தைகள்தானே.

ஒடுக்கப்பட்ட சாதியினரைக் குறிக்கப் 'பஞ்சமர்' என்ற சொல் வழக்கத்திலிருக்கும்போது அதை மறுத்து 'தலித்' என்ற சொல் ஏன் முன்னிறுத்தப்படுகிறது என்ற எளிமையான கேள்வி மறுபடியும் மறுபடியும் எழுப்பப்படுகிறது. பஞ்சமர் என்பது ஈழத்தில் ஒடுக்கப்பட்ட சாதிகளான பள்ளர், பறையர், நளவர், வண்ணார், அம்பட்டர் ஆகிய அய்ந்து சாதிகளையும் குறிப்பதற்கான சொல் என்றொரு தவறான புரிதல் பலரிடமுண்டு. கே. டானியல் போன்றவர்கள் கூட இந்த அய்ந்து சாதிகளையும் குறிக்கும் சொல்லே பஞ்சமர் என்று (பஞ்ச பூதங்கள், பஞ்ச பாண்டவர் என்பதைப்போல) பல தடவைகள் பேசியும் எழுதியுமிருக்கிறார்கள். ஆனால் இந்தப் புரிதல் சரியற்றது.

வர்ணாசிரம நெறிகளின்படி பார்ப்பனர்கள், ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் எனப்படும் நான்கு வர்ணத்தினரும் முறையே பிரம்மனின் தலை, மார்பு, தொடை, பாதம் ஆகிய பகுதிகளிலிருந்து தோன்றியவர்களாம். இந்த நான்கு வர்ணங்களிற்கும் புறத்தே தள்ளி வைக்கப்பட்ட மக்கள் பிரம்மனிடமிருந்து தோன்றவில்லையாம். எனவே பிரம்மனிடமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றாதவர்கள் அ- வர்ணர்கள் அல்லது அய்ந்தாவது வர்ணத்தவர்கள் என்று குறிப்பிடப்பட்டார்கள். இந்த அய்ந்தாவது வர்ணக் கோட்பாட்டிலிருந்துதான் ‘பஞ்சமர்’ என்ற இழிவுச்சொல் உருவாக்கப்பட்டது. காந்தியார் பிரம்மனிடமிருந்து தோன்றாத இந்த மக்கள் பெருமாளிடமிருந்து தோன்றியவர்கள் என்றொரு சொல்லாடலைக் கண்டு பிடித்து பெருமாளின் மக்கள் எனும் பொருள்பட ‘அரிஜனங்கள்’ என்று பெயரிட்டு அழைத்தார். பஞ்சமர் என்றாலும் சரி அரிஜனங்கள் என்றாலும் சரி அவை வர்ணாசிரமக் கோட்பாட்டின் அடிப்படையில் அந்தக் கோட்பாடை ஏற்றுக்கொள்வதால் உருவாக்கப்பட்ட இழிவு தரும் சொற்கள். சாதிப் படிமுறையின் அடித்தளமான வர்ணாசிரமக் கோட்பாடையே ஏற்றுக்கொள்ளாதவர்களால் எப்படி இந்த இழிசொற்களைப் பொறுத்துக்கொள்ள முடியும்? ஈழத்தில் யோவேல் போல், ஜேக்கப் காந்தி போன்றவர்கள் 1940களிலேயே ‘பஞ்சமர்’ என்ற சொல்லை நிராகரித்து ‘சிறுபான்மைத் தமிழர்கள்’ என்ற அடையாளத்தையே முன்னிறுத்தினார்கள். அவர்கள் கட்டியெழுப்பிய சாதியொழிப்பு அமைப்பிற்கு ‘சிறுபான்மைத் தமிழர் மகாசபை’ என்றுதான் பெயர். ஆனால் இன்று இந்தப் பெயர் நியாயம்தானா? வெள்ளாளர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து அள்ளுகொள்ளையாகப் புலம்பெயர்ந்து விட்டதால் உண்மையில் ஈழத்தில் இன்று வெள்ளாளர்கள்தான் சிறுபான்மைத் தமிழர்கள். தவிரவும் சிறுபான்மைத் தமிழர்கள் என்ற சொல்லாடல் தமிழர்களிற்குள் சிறுபான்மையாகவிருக்கும் எந்தச் சாதியையும் எந்த மதத்தையும் எந்தப் பிரதேசத்தவரையும் கூடக் குறித்துக்காட்டக்கூடியதல்லவா? அந்தச் சொல்லை விடுத்து தலித் என்று மிகப் பெரும் அரசியல் அடையாளத்தால் தீண்டப்படாத சாதிகளை குறித்துக்காட்டுவதால் யாருக்கு என்ன கேடு வரப்போகிறது.

பஞ்சமர் - அரிஜனங்கள் என்ற பெயர்கள் சாதியத்தை உருவாக்கிய ஆதிக்க சாதியினராலும் இந்து மதத்தாலும் தலித் மக்களுக்கு வழங்கப்பட்ட பெயர்களே தவிர தலித் மக்கள் தாங்களே தேடிக்கொண்ட பெயர்கள் கிடையாது. எனவே அந்த இழிவுச் சொற்களை மறுத்து நொறுக்கப்பட்ட மக்கள் என்ற பொருள்கொண்ட ‘தலித்’ என்ற சொல்லை மகாராட்டிரத்தில் தலித் சிந்தனையாளர்கள் முன்னிறுத்தினார்கள். அண்ணல் அம்பேத்கர் தலித் என்ற சொல்லை முன்னிறுத்தியதை ஆய்வாளர் முரளி சண்முகவேலனும் காந்தியார் கூட தலித் என்ற சொல்லை உபயோகப்படுத்தியதை அ.மார்க்ஸும் சுட்டிக்காட்டியிருப்பதையும் இங்கு குறிப்பிடலாம். உலகம் முழுவதுமுள்ள தாழ்த்தப்பட்ட மக்களை ஒன்றிணைக்கும் மற்றும் அடையாளப்படுத்தும் சொல்லாகத் தலித் என்ற சொல் இன்று உருவாகியுள்ளது. பல்வேறு சாதிய அடையாளங்களுக்குள் தள்ளிவிடப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களை உட்சாதிப் பிரிவுகளைக் கடந்து ஒன்றிணைக்கும் அடையாளமாகவும் தலித் என்ற அடையாளம் திகழ்கிறது.

தலித்தியம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிந்தனையென்று பழிப்புக் காட்டுபவர்களைப் பார்த்து வருத்தமுற மட்டுமே முடியும். வடபுலத்தில் சாதியொழிப்பு உரையாடல்களையும் செயற்பாடுகளையும் தொடக்கி வைத்த யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் இந்தியாவிலிருந்து காந்தியச் சிந்தனைகளைப் பெற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் காந்தியாரையும் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து கூட்டங்களை நடத்தினார்கள். பின்பு சாதியொழிப்புக் களங்களில் வலுவாக நின்று போராடிய இடதுசாரிகள் மார்க்சியத்தை அய்ரோப்பாவிலிருந்தும் மாவோயிசத்தை சீனாவிலிருந்தும் பெற்றுக்கொண்டார்களா இல்லையா? கட்சிக்கே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியென்றுதானே பெயர்! தமிழ்த் தேசியவாதிகளும் விடுதலைப் போராளிகளும் தேசியவாதச் சிந்தனைகளை எங்கே சுன்னாகத்திலா கண்டுபிடித்தார்கள். அவையும் மேற்கத்தியச் சிந்தனைகளே. ஈழத்தில் கெரில்லா போர் சிந்தனைகள் லத்தீன் அமெரிக்காவிலிருந்தும் வியட்நாமிலிருந்தும் பெறப்பட்டவை. இதற்காக இவையெல்லாம் இறக்குமதிச் சிந்தனைகள் என நாம் நிராகரிக்க முடியுமா?

கார்ல் மார்க்ஸையும் லெனினையும் சே குவேராவையும் சார்த்ரையும் நோம் சாம்ஸ்கியையும் ஏற்றுக்கொண்டு அம்பேத்கரையும் பெரியாரையும் இறக்குமதிச் சிந்தனைகள் எனக் கூறுபவர்களின் யோக்கியம் என்ன என்பதைத் தோழர்கள் சிந்திக்க வேண்டும்.

ஈழத்தின் மிக மூத்த படைப்பாளியும் சாதிய ஒழிப்புப் போராளியும் மல்லிகை ஆசிரியருமான தோழர் டொமினிக் ஜீவா தனது சுயசரிதையான ‘எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்’ நூலில் எழுதிய சத்திய வாக்கு கீழ்வருமாறு:

> *‘தலித் என்ற சொல் மிக மிக வலிமை வாய்ந்தது, ஆழமானது, அர்த்த புஸ்டி வாய்க்கப்பெற்றது. இந்தச்சொல் ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட, பஞ்சப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சகல மக்கள் பகுதியினரையும் உள்ளடக்கிய சொல்லாக, இலக்கியம் அங்கீகரித்த சொல்லாக, இது புழக்கத்தில் வந்துவிட்டது. இந்தத் தலித் என்ற சொல்லின் விரிவும் வீரியமும் மராட்டியத்திலும் கன்னடத்திலும் ஆந்திரத்திலும் பரவலாகவும், தமிழகத்தில் சிறப்பாகவும் இன்று உணரப்பட்டு வருகிறது. இதன் உள்ளடக்கக் கருத்து பலராலும் புரிந்துகொள்ளக் கூடியதாக வியாபித்து நிலைத்துவிட்டது. அந்தச் சொல்லின் வலிமை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என்னையும் ஆட்கொண்ட காரணத்தினாலேயே நான் எனது சுயசரிதையை நூலாக எழுதி வெளியிட முன்வந்தேன். நாங்களும் மனுசங்கடா! தலித் இயக்கம் கற்றுத் தந்த மூல மந்திரம் இது!'*

**ஆக்காட்டி : தேசியம் ஒரு கற்பிதமென்றால், தலித் என்ற சொல்லின் பின்னால் உள்ள திரள்வும் கற்பிதம்தானா?**

**ஷோபாசக்தி :** தேசியம் ஒரு கற்பிதம் எனக் கூறுவதின் பொருள் தேசியம் எக்காலத்திலும் பிற்போக்குப் பாத்திரத்தையே வகித்தது என்பதோ அல்லது தேசியம் என்பது ஒரு வெற்று மாயை என்பதோ அல்ல. தேசியம் மக்களது இயல்பான நிலையான உணர்வு அல்ல. அது கற்பிதங்களால் உருவாக்கப்படுகிற உணர்வு.

அதுபோலவே வர்ணாசிரமும் இந்து மதமும் கற்பிதம் செய்யப்பட்டு தலித்துகள் வெளியில் தீண்டப்படாதோர்களாய் பல நூற்றாண்டுகளாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளார்கள். அதற்கு எதிராகத் தலித் அரசியல் என்ற கற்பிதம் கட்டமைக்கப்படுகிறது. எப்போது சாதியம் என்ற கற்பிதம் அழிவுறுகிறதோ அப்போதே தலித் அரசியல் என்ற கற்பிதமும் தானாகவே அழிந்துவிடும்.

**ஆக்காட்டி : நண்பர்கள் தலித்தியம் குறித்த உரையாடலில், இப்போது இலங்கையில் குறிப்பாக யாழில் சாதியப் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் அவற்றை விட இன்னும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் பல இருக்கின்றன என்கிறார்கள். இவ்வுரையாடல்களை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

**ஷோபாசக்தி :** பாருங்கள், ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு பிரச்சினை . நாம் வாழும் பிரான்ஸ் நாட்டில் வெள்ளைக்காரனுக்கு வேலையில்லாப் பிரச்சினை. கறுப்பர்களிற்கு நிறப்பிரச்சினை. சிரியர்களிற்கு அகதிப்பிரச்சினை. பெண்களிற்கு ஆணாதிக்கத்தால் பிரச்சினை. சூழலியலாளனுக்கு பூமி வெப்பமேறுதல் பிரச்சினை. இதில் எது முதன்மையான பிரச்சினை என்பது அவரவர் தன்நிலையையும் அரசியல் - சமூகப் புரிதலையும் பொறுத்தது.

தமிழ்ச் சமூகத்தின் மீது வெளியிலிருந்து ஏவப்படும் இனவாதம் போன்றதல்ல சாதி. தமிழ்ச் சமூகத்தின் உள்ளார்ந்த குறைபாடுகளான சீதனம், வறுமை, கல்வியின்மை போன்ற சமூகக் குறைபாடுமல்ல சாதி. தமிழர்களுடைய கலாசார - பண்பாட்டு வாழ்வியல் முறையாகச் சாதியும் சாதி உருவாக்கிய சடங்குகளும் அமைந்துள்ளன.

ஒரு தமிழன் தன்னுடைய அன்றாட வாழ்வில் தொழிலில் சடங்குகளில் கல்யாணத்தில் சாவில் தன்னை முதலில் சாதியாகத்தான் உணர்கிறான் என்பதுதானே உண்மை. தன்னைச் சாதியாக உணரும் மனதால் எந்த விடுதலையையும் எந்த ஈடேற்றத்தையும் அடையவே முடியாது. அதனால்தான் எல்லா விடுதலைகளிற்கும் சாதிய விடுதலையே முன் நிபந்தனை என்கிறோம்.

பெருந் தேசிய இனவாதத்தால் நெருக்கடிகளைச் சந்தித்துக்கொண்டிருக்கும் ஈழத் தமிழ்ச் சமூகத்தில், பின் யுத்த காலத்தில் சாதியப் படிநிலைகளும் ஒதுக்கல்களும் ஒடுக்குமுறைகளும் எவ்வாறிருக்கின்றன எனத் துல்லியமான ஆய்வுகள் இப்போது தரவுகளுடன் புள்ளிவிபரங்களுடனும் சாட்சியங்களுடன் திரட்டப்பட வேண்டும். அரசியல் அதிகாரத்தில் தமிழர்கள் பெற்றுள்ள பங்கில் தலித்துகளிற்கான பங்கு என்ன? நீதித் துறையிலும் அதிகாரிகள் மட்டத்திலும் எத்தனை தலித்துகள் இருக்கிறார்கள்? கத்தோலிக்கரில் ஒரு தலித் ஆயராவது இதுவரையுண்டா? வெள்ளாளச் சாதியைத் தவிர்த்து யாழ் பல்கலைக் கழகத்திற்கு இதுவரை வேறொரு துணைவேந்தருண்டா? தமிழ் ஊடகங்களில் எத்தனை தலித்துகளது கைகளிலுள்ளன? அரசியற் கட்சிகளின் தலைமையில் எத்தனை தலித்துகள் உள்ளனர்? தொழில் முனைவோரில் எத்தனை தலித்துகள் உள்ளனர் என்றெல்லாம் கேள்விகளைக் கேட்டுப்பாருங்கள். சாதி ஒழிந்துவிட்டது, சாதிப் பிரச்சினை முதன்மையானது அல்ல என்ற குரல்களின் வலுவின்மையை உணர்ந்துவிடுவீர்கள்.

ஈழத் தமிழ்ச் சமூகத்தில் எல்லாச் சாதிகளும் எல்லாநிலைகளிலும் சமமாகத்தானிருக்கின்றனவா? கலந்துண்கிறார்கள், அங்கங்கே கலப்பு மணங்கள் நடைபெறுகின்றன என்பதெல்லாம் சமத்துவமின்மையைப் பூசி மறைக்கப் பயன்படும் நோஞ்சான் வாதங்கள். ஒரு சமூகமே சாதிய மனநிலையாலும் கலாசாரத்தாலும் ஏற்றத்தாழ்வுகளாலும் பீடிக்கப்பட்டுக் கிடப்பது முதன்மைப் பிரச்சினையில்லையா? சாதியால் கீழிறக்கப்பட்டவர்களிற்கு இது வாழ்வியல் இழிவென்றால் சாதியால் மேல்நிலையாக்கம் பெற்றவருக்கும் இது வாழ்வியல் இழிவுதான். ஒரு இழிவான சமூகத்தில் வாழப்பெற்ற எல்லோருக்குமே இழிவுதான். இது முதன்மைப் பிரச்சினையா இல்லையா?

சமத்துவம் என்பது எல்லோரும் சமத்துவமாக மதிக்கப்படுவது அல்ல. அதிகாரங்களையும் வாய்ப்புகளையும் எல்லோரும் சமமாகப் பகிர்ந்துகொள்வதையே சமத்துவம் என்பார்கள்.

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• தர்மு பிரசாத்

விமர்சனம்

# பார்த்தீனியம் - பேரழிவின் பிறழ் சாட்சியம்

"வரலாற்று நாவல்கள் அன்றாட நிகழ்வுகளை மிகைப்படுத்திய, புனைவுத்தன்மையுடன் தரும் புதினம் அல்ல. அவை உண்மையான வரலாறை மேலும் புரிந்து கொள்வதையே சாத்தியமாக்குகின்றன"

*உம்பர்தோ எகோ*

'தமிழ்நதியின் பார்த்தீனியம் : பேரழிவின் மானுட சாட்சியம்'

*யமுனா ராஜேந்திரன்*

'சற்றேறக் குறைய ஈழத்தின் எல்லா நாவல்களையும் வாசித்திருக்கிறேன். ஆனால் அதில் எழுதுபவரின் அரசியலையும் சேர்த்தேதான் உள்வாங்கிக் கொள்ள முடிந்திருக்கிறது. வாசகனைப் பொறுத்தமட்டில் சிலசமயம் அவனுக்கொவ்வாத அரசியல் அஜீரணத்தையும் ஏற்படுத்தக்கூடும். பார்த்தீனியத்தில் தமிழ்நதி வைப்பது உள்ளீடாக எந்த அரசியலையும் அல்ல. உள்ளது உள்ளபடி உண்மையை.'

*பால நந்தகுமார் ( மலைச்சொல் பதிப்பகம்)*

'தமிழ்நதியால் எழுதப்பட்ட நமது அரசியல் -சமுகவாழ்வு -போராட்டஞ்சார்ந்த வரலாற்றுக் குறிப்புகள் மிக அழுத்தமானவொரு ஆவணமாகவும் ;வரலாற்று விளக்கமாகவும் காலத்தால் அழி-யாதிருக்கும்.'

*Sri Rangan Vijayaratnam*

தமிழ்நதியும் தனது நாவலைக் காத்திரமான வரலாற்றுத் தகவல்களுடன் எழுதிய ஆவணமாக முன்வைக்கிறார். ஒரு வரலாற்று நாவலைப் புனைவாக முன்வைக்காமல் ஆவணமாக முன்வைப்பதில் உள்ள சிக்கல்களையும், அதற்கான இந்நாவலில் இருக்கும் போதாமைகளையும் சுட்டிக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

1

வரலாறைப் புனைவினூடு மீளுருவாக்கம் செய்யும் போது அதில் திட்டமிட்ட விடுபடல்கள், பன்முகமான வரலாற்றுப் பார்வையின்மை, போராட்ட வரலாறு குறித்த ஆழமான புரிதலின்மை போன்றன புனைவின் இயங்குவெளியைச் சிதைத்துவிடுகின்றன. அப்படியான நாவல்களால் ஒரு தரப்பு நியாயப்பாட்டை மட்டுமே பேச முடியும். அவற்றில் உள்ளீடற்ற மீயுணர்வுகளின் வடிகாலாக எஞ்சிவிடும் சொற்களே மிகுந்திருக்கும். போராட்டத்தின் உறுதிக்கட்டுமானமும், சிடுக்குகளும் மண்டிய காலகட்டத்தை மீட்டுருவாக்கும் போது அதன் தொடரி நிகழ்வுகளையும், அந்-நிகழ்வுகளின் படிப்பினைகளையும் விமர்சனபூர்வ அணுகுமுறைகளையும் உள்வாங்கி, அவற்றின் ஊடுபாவும் கதைகளை வரலாறில் வைத்துப் புனையப்படும் நாவல்களிலேதான் பன்முகமான வாசிப்பு, எழுத்திற்கான வெளி உருவாக்கப்படும்.

எண்பதுகள் ஈழப்போராட்டத்தின் கூர் முனைக்காலம். அதில்தான் ஊருப்பட்ட போராட்ட இயக்கங்களின் உருவாக்கமும், புலிகளின் பின்னாலான மக்களின் திரள்வும் அபரிதமாக நிகழ்ந்தன. இலங்கை-இந்திய ஒப்பந்தம் சாத்தியமானது. அக்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இந்திய அமைதிப்படை இலங்கை வந்தது. இந்திய அமைதிப்படையின் வன்புணர்வுகள் - பிரம்படிப்படுகொலை - பெரியாஸ்பத்திரிக் கொலைகள் உட்பட்ட இன்னோரன்ன கொலைகளை ஈழநிலத்தில் நிகழ்த்தியிருந்தது. சமாதானத்தின் தேவதூதர்களாக இந்திய இராணுவத்தினரை நம்பி மகிழ்ச்சி பொங்க வரவேற்ற தமிழ் மக்கள், அவர்களை ஆக்கிரமிப்பாளர்களாக உள்வாங்கி எதிர்வினையாற்ற நிர்ப்பந்திக்கப்பட்ட காலமது. சிறுவர்களையும் இளைஞர்களையும் ஏற்றிச் சென்று ஆயுதங்களைத் திணித்த தமிழ்த்தேசிய ராணுவத்தின் அழுத்தங்கள் மிகுந்த காலம். ( அதே வரலாறு முள்ளிவாய்க்காலில் திரும்புவதற்கான கால இடைவெளி 20 வருடங்களே) பார்த்தீனியம் நாவலும் இந்தக் கூர்முனைக் காலத்தினைப் பேச விழைகிறது. அதிலும் குறிப்பாக, இந்திய இராணுவம் ஈழநிலத்தில் நடத்திய இராணுவ வன்முறையை அந்நாவல் அம்பலப்படுத்துவதாகக் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

எண்பதுகளின் கொந்தளிப்பின் கீழ், ஈழ நிலத்தின் எதிர்கால விசைகளைத் தீர்மானித்த பல நிகழ்வுகளுள் அன்று நிகழ்ந்த இரு பெருந்நிகழ்வுகள் இன்றுவரை முக்கியதாக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றன.

1.திலீபனின் மரணம்.

2.இந்தியாவிற்கு எதிரான தமிழ் மக்களின் மனநிலை மாற்றம்.

நாவலில் வசந்தன் என்கின்ற பரணியின் (விடுதலைப்புலி) வாழ்வும் வானதியின் (யாழ். பல்கலைக்கழக மாணவி) வாழ்வும் நிகழ்ந்த காலத்தில் யாழ் நிலைமைகள் எப்படிக் கொந்தளிப்பின் கீழ் நொதித்துக்கொண்டிருந்தன என்பதை நாவலின் எந்த வரியிலும் நாம் உணர்ந்து கொள்ள முடிவதில்லை. நாவலில் இதுவரை காலமும் இந்திய - இலங்கைத் தமிழர்களின் பொதுமனநிலையில் புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எப், இந்திய அமைதிப்படை மற்றும் இலங்கை இராணுவம் குறித்து எப்படியான கற்பிதங்கள் செய்யப்பட்டிருக்கின்றனவோ அவற்றை ஒத்து ஊதும், சரி எனத் தர்க்கிக்கும், ஆரத்தழுவி உச்சிமோரும் மேம்போக்கான மனநிலைதான் உருவாக்கப்படுகிறது. நாவல் போராட்டத்தின் உட்சிடுக்குகளை விமர்சனபூர்வமாகவோ, அவற்றின் எதிர் நியாயப்பாடுகளைச் சமநிலையில் வைத்து உரையாடுவதையோ விரும்பாத பிரதியாகத் தன்னளவில் சுருங்கிவிடுகிறது. ஆதிரையில், முற்போக்குத் தமிழ்த்தேசியக் கற்பிதத்தினுள் இழுத்துவரப்பட்ட கதைமாந்தர்களின் ஊடாட்டம் பார்த்தீனியத்தில், அவற்றிற்கான நியாயப்பாட்டை வலிந்து திணிக்க புலிகளின் பொற்காலத்திற்குத் திரும்பிச் செல்கிறது. அங்கே இன முரண்பாட்டுக் குவியல்களினுள்




**பார்த்தீனியம்**
தமிழ்நதி
ஏப்ரல் 2016
நற்றிணை பதிப்பகம்

துரோகிகளைப் பட்டியலிடுதலே தன்முனைப்புப் பெறுகிறது. கொஞ்சமே கொஞ்சமாகப் பதிவாகும் போராளிகளின் வாழ்வின் சில மகிழ்ச்சித் தருணங்களில் கூட நியாயங்களை முன்நிறுத்தி அநியாயங்களை மறைத்துவிடும் முனைப்பே மேலோங்குகிறது. கருப்பு - வெள்ளையாகப் பதிவாகும் நாவலின் பாத்திரங்களிற்கு நாவலில் பெரிதான எந்த உருமாற்றமும் நிகழ்வதில்லை (விதிவிலக்கு வானதி). நல்லவர் - கெட்டவர், தியாகி துரோகி, ஆமி - இயக்கம் போன்ற மிக மேலோட்டமான ஒருமைகளைக் கட்டமைப்பதிலே முனைப்புக் காட்டுகிறது.

இந்நாவலில் சாதிகளின் வெளி சுருங்கிய சிடுக்குகள் அற்ற தன்நிறைவான எல்லைக் கிராமம் ஒன்றில் 83 கலவரம் பெருவெடிப்பாக நிகழ்த்தப்படுகிறது. அதன் பின்னரான நிகழ்வுகளில் கலவரத்தின் கரிய நிழல் பேரிருப்பாக இருந்து கொண்டிருக்கிறது. வானதியின் அப்பாவின் வேலை இழப்பு அதனால் அவளின் தாய் தனபாக்கியம் வேலைக்குச் செல்ல வேண்டிய அவலமும்(?), கரையானுக்கு மகளைக் கட்டி வைக்க நினைக்கும் போலி முற்போக்குமாக நாவல் வலிந்து புனையப்படுகிறது. இது சாதியத்தை வெறும் பொருளாதார இருப்பாகப் புரிந்து கொள்ளும் மனநிலை என்றால், பின்னால் வரும் சீலனின் உருவாக்கம் சாதியத்தின் இயங்குதலையும், அதன் நுண் ஒடுக்குதலையும் ஒற்றைப்படையாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிக்கொண்டதன் எளிய வெளிப்பாடு. அதிகாரம் - ஆயுதம் - சாதி ஒடுக்கல் - பழிவாங்கல் எனும் கருப்பு-வெள்ளையாக அது பதிவாகிறது. அதில் வலிந்து இழுத்துச் சென்ற சிறுவனின் அக உலகம் பதிவாவதற்குப் பதில் சாதிப் பழிவாங்கலாக மீந்துவிடுகிறது. அல்லது சாதித் தடிப்பு மிக்க தாயின் மன மாற்றம் மாதகலில் அறிமுகமாகும் தலித் குடுப்த்துடன் தங்குதல் குறித்தும் நாவல் கவனம் கொள்வதில்லை.

எண்பதுகளின் இறுதியில் திலீபனின் சாவு, போராட்டத்தின் குமிழ்முனையாக எழுந்தடங்கியது. திலீபனின் அஹிம்சைப்போராட்டம் நல்லூரில் ஆரம்பிக்கச் சில நாட்கள் முன்னர்வரை அவர் வன்முறையை நம்பிய அமைப்பின் பிரதிநிதி. அவர் சுந்தரம் கொலையின் இரத்தம்படிந்த கைகளை நல்லூர்க் கோயில் கேணியில் அலம்பிவிட்டு கோல்சரையும் துப்பாக்கியையும் உதறிவிட்டு உண்ணாவிரத மேடைக்கு வந்திருந்தார். திலீபனின் சாவு திட்டமிடப்பட்ட அபத்த நாடகத்தின் முடிவுபோல இருந்தது. உடலை ஆயுதமாக்கிய காந்தி அல்லது இந்தியா அஹிம்சையாளன் திலீபனிடம் வீழ்ந்து விட்டதான பிம்பங்கள் நடுநிலையர்களையும், புலிகளின் மூர்க்கமான ஒற்றைப் படையான ஆயுதப் போராட்ட மறுப்பர்களையும் புலிகள் பின்னால் திரட்டிய அவலமும் நிகழ வழிகோலியது(பார்க்க - முறிந்தபனை ப.305). காந்தியையும், அவர் தனது உடலை ஆயுதமாக்கிப் போராடிய அஹிம்சைப் போராட்டத்தையும் விளங்கிக் கொள்வதிலுள்ள அரசியல் முதிர்ச்சியின்மையின் வெளிப்பாடாகத் திலீபனின் முடிவுரை உணர்ச்சிமிகு கவிதைகளால் எழுதப்பட்டது. எந்த அய்ந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து திலீபனின் சாவு நிகழ்ந்ததோ அதற்கு அடுத்து வந்த ஒப்பந்தத்தில் அந்தக் கோரிக்கைகள் குறித்து எந்தவிதக் கரிசனைகளும் காட்டப்படவில்லை என்பதிலிருந்து அந்த வலிந்து திணித்த மரணத்தின் தன்மையைப் புரிந்து கொள்ள முடியும். புலிகளிற்குத் தேவையாயிருந்தது இந்தியாவிற்கு எதிரான மக்களின் திரள்வு மாத்திரமே. இந்தியாவிற்கு எதிராக நிகழ்த்தப்பட்ட திலீபனின் சாவு நாடகத்தின் பன்னிரண்டு நாட்களிலும் மக்கள் மனங்களில் இந்தியவிற்கு எதிரான மனநிலை திலீபனின் தியாகத்தின் திருவுருக் கொண்டு ஆழமாகக் கீறப்பட்டது.



♦ ராஜனி திராணகம

நாவலில் மிக முக்கியமாகப் பேசியிருக்க வேண்டிய புள்ளிகள் இவை. பின்னால் வரும் இந்திய அமைதிப்படையின் அட்டூழியங்களும், அவற்றிற்கு எதிரான மக்கள் மனநிலையும் முரண்பட்ட புள்ளி திலீபனின் மரணம். அதனை ஒற்றைச் செய்தியாய் கடந்துவிடுகிறது நாவல். மக்களின் மனமாற்றம் நிகழ்ந்த சூழல் எதார்த்தங்களையும் நாவல் பேச முற்படவில்லை. நாவல் முழுவதும் தமிழீழக் கனவிற்கு வித்துடலான புலிகளின் புனிதபிம்பங்களை லட்சியவாதப் பாசங்கில் பிரசங்கிக்கிறது. இதன் உச்சமாக, பின்நாட்களில் மாத்தையாவிற்கு புலிகளால்/ பிரபாகரனால் வழங்கப்படவிருந்த மரணதண்டனையை நியாயப்படுத்தும் போக்கையும் தான் இயங்கும் அச்சிறிய வெளிக்குள் கச்சிதமாகக் குறித்து வைக்கிறது. பிற இயக்கங்களின் கொலைகளை அவர்களின் நேரடியான பெயர்ச்சுட்டலில் அம்பலபடுத்துவதாகப் பாவனை செய்யும் நாவல் தன்னளவில் தான் வெளிப்படுத்தும் எளிய அரசியற் கருத்துருவாக்கங்களில் அம்பலப்பட்டுப் போகிறது. தன் தமையனைக் கொன்ற புலிகளின் பாதையை ஏற்றுக் கொள்ளும் மனநிலைக்குத் தனஞ் சயனைக் கொண்டுவருவதில் உள்ள எத்தனிப்பு அதன் பின்னால் உள்ள வன்முறையின், கீழ்மையின் மயிர் நுனிகளைக்கூட வெளிக்கொணருவதில் முனைப்புக்காட்டுவதில்லை.



♦ தமிழ்நதி

□□□□

**நாவல் இயங்கும் வெளியையும், காலத்தையும் சரியாக உள்வாங்காத அதன் நுண் அடுக்குகளை உரையாடாத வெற்றுப்பிரதியாக ஆகிவிடும் அபாயம் அதன் சூழல், சம்பவ விபரிப்புகளில் நிகழ்கிறது.**


□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலில் நிகழும் விடுபடல்கள் எதிர்த்தரப்பு நியாயங்களை மருந்திற்கும் அனுமதிக்காத புலிகளின் கருத்துருவாக்க நீட்சியான சம்பவங்களாய் விரவிக்கிடக்கின்றன. விஜிதரன் கொலையில் எந்த ஒளிவு மறைவுகளும் அக்காலப்பகுதியில் யாருக்கும் இருந்ததில்லை. விஜிதரனை விடுதலை செய்யக் கோரி நடந்த உண்ணாவிரதத்தின் மாயவிரல்களின் சுட்டுதல் உண்மையில் யாரைநோக்கியது என்பதை எல்லோருமே நன்கு அறிந்தே இருந்தனர். அதை வெறும் ஊகம் என்று கடந்து விடுவதில் நாவல் கட்டமைக்க விழையும் கனவின் பலவீனம் தெரிந்துவிடுகிறது. அதைத் தொடர்ந்து நிகழ்ந்த உண்ணாவிரதத்தில் பங்கு பற்றிய விமலேஸ்வரனின் கொலை, இரயாகரனின் கடத்தல், ராஜனி திராணகமவின் கொலை குறித்த எந்தக் கரிசனையும் நாவலில் இல்லை. ஒரு நாவலில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பது தமிழ்நதியின் தெரிவு ஆனால் அதன் மூலம் அவர் கட்டமைக்க வரும் கருத்துருவாக்கங்களின் பின்னால் உள்ள அறங்கள் குறித்த தெளிவுபடுத்தல்களுக்காகவே இவ்விடுபடல்களைக் குறித்துக்காட்ட வேண்டியிருக்கின்றது. இவை நாவலில் வானதி (தமிழ்நதி) படித்த பல்லைக்கழகச் சூழலிற் பெரிதும் பேசப்பட்ட கொலை/கடத்தல்கள். நாவலின் முக்கிய பல சம்பவங்களைச் செவிவழிச் செய்திகளாக அறிந்து கொள்ளும் வானதிக்கு இச்செய்திகள் கிடைக்காமலிருந்ததன் அரசியல் தான் நாவலை ஆவணமாக முன்வைக்க முடியாமைக்கான பலவீனப்புள்ளிகள். ஆவரங்காலில் வன்புணர்வு செய்யப்பட்ட பெண்ணைத் திருநெல்வேலியிருந்து அக்கறை கொள்ளும் நாவலால் விமலேஸ்வரன் கொலையைக் கண்டுகொள்ள முடியவில்லை.

நாவல் இயங்கும் வெளியையும், காலத்தையும் சரியாக உள்வாங்காத அதன் நுண் அடுக்குகளை உரையாடாத வெற்றுப்பிரதியாக ஆகிவிடும் அபாயம் அதன் சூழல், சம்பவ விபரிப்புகளில் நிகழ்கிறது. நாவலில் அதன் கதைசொல்லி வானதியா. பரணியா என்ற தெளிவின்மை. அடிக்கடி தமிழ்நதியும் தன் உரத்த குரலினூடு பல கருத்துகளை உலாத்த விடுகிறார். அவை யாருக்கோவான பதில்களாய் அர்த்தமற்ற இருப்புகளாக நாவலின் முடிவுவரை மிதந்தபடியிருக்கின்றன. வன்முறையின் கோரத்தினைக் கண்ணீர் உகுக்கும் கதைகளாக மக்களின் அவலம் தேடி ஓடும் கதை சொல்லி அதே மக்களிடமிருந்தே புலிகளின் நியாயப்பாட்டை வெற்று வார்த்தைகளில் தன் குரலில் பதிவுசெய்கிறார். நாவல் முழுவதும் வானதி, பரணி என்கின்ற இருவரைச் சுற்றி நிகழ்ந்தாலும் அவர்களிற்கு அந்த விசச்சூழலிலிருந்து எந்த ஈறுகளும் வந்துவிடுவதில்லை, பரணிக்கு ஒரு சிறு காயம், வானதிக்கு முலைதடவல் அவ்வளவுதான் அவர்களுக்கு நிகழ்வதும் அவர்கள் எதிர்கொள்ளும் எண்பதுகளின் யதார்த்தமும். மிகுதி எல்லாம்



♦ திலீபன்

தமிழ்நதியின் உரத்த குரலில் பதிவுசெய்யப்படும், பழகிப்போன அதே ஒப்பிப்புகள். அவை வெறும் செய்திகளாக, தகவல்களாக நம்மைக் கடந்து சென்றுவிடுகின்றன. அச்செய்திகளை, கதைகளை, சம்பவங்களை நாவலாகத் திரட்ட முடியவில்லை. நாவல், தான் பேசவிழைந்த காலத்தையும் சூழல் எதார்த்தத்தையும் உள்வாங்காத பிரதியாக முடிந்தும் விடுகிறது.

நாவல் பேசும் அரசியலையும் தாண்டி இலக்கியத்தில் அதன் இடம் என்னவாக இருக்கிறது? நாவலின் மொழியும், சொல்முறையும் மிகப் பழையது. அதில் பன்முகமான வசிப்பிற்கான இடம் துப்புரவாக இல்லை. நேர்கோட்டுக் கதை சொல்லும் முறையில் சில சம்பவங்களை நினைவுகளில் பின்னோக்கி இழுக்கும் உத்தி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. முக்கிய பல சம்பவங்கள் கதை சொல்லியின் குரலில் பதிவாகி வானதிக்கும், பரணிக்கும் வெறும் செய்திகளாகவே வருவது போல எம்மையும் கடந்து சென்றுவிடுகின்றன. சொல் முறையிலும் காலத்தை உள்வாங்காத பிரதியாகவே இருக்கிறது. பரணி - வானதி - தனஞ்சயன் என்ற மூவரினூடு மிகச் சிடுக்கான நீண்ட காலத்தைப் பேச முனைந்த நாவல் அதைத் தன்னளவில் ஆழமாகப் பதிவு செய்யமுடியாத நாவலாகிவிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. விமர்சனங்களும் தமிழ்ச் சூழலும்..

தமிழ்நதியின் பார்த்தீனியத்தை வரலாற்று ஆவணமாக, மானுட சாட்சியமாக முன்வைப்பவர்கள் ஒரு முறை முறிந்த பனையை வாசித்துப்பார்க்கலாம் அதில் பிரம்படிப்படுகொலை, யாழ் பெரியாஸ்பத்திரிப் படுகொலை, இந்திய அமைதிப்படையால் வன்புணர்வு செய்யப்பட்ட பெண்களின் வாக்குமூலங்கள் நிணமும் சதையுமாகப் பதிவாகியிருக்கின்றன. முறிந்த பனையில் ஆவணமாகத் தொகுக்கப்பட்டிருப்பதன் சிறுபகுதி கூட பார்த்தீனிய நாவலில் புனைவாகப் பதிவாகவில்லை. அது பேசுவதெல்லாம் புலிகளின் ஒற்றைப் படையான விதந்தோதும் வரலாறுதான்.

யமுனா ராஜேந்திரன் பார்த்தீனியத்தைப் பேரழிவின் மானுட சாட்சியமாக முன்வைக்கிறார் (பார்க்க 'தடம்' ஜூன் 2016) ஈழப்போராட்ட இந்திய ஆக்கிரமிப்பு எனும் புள்ளியையே அவர் இங்கு மையப்படுத்துகின்றார். வழமையான அவரின் சட்டகங்களோடு சில முன்வைப்புகளைச் செய்கிறார். இந்தியாவிலிருந்து வந்த ஈழப்போர் குறித்த படைப்புகளைப் பேசிவிட்டு பார்த்தீனியத்தினுள் வருகிறார். பார்த்தீனியம் ஈழத்தின் ஆன்மாவை எங்கு பிரதிபலிக்கவில்லை என்பதை அவரால் புரிந்துகொள்ளவே முடியவில்லை, இந்தியப்படைப்பாளிகளுக்கு கிடைக்காத ஈழப் போர், சூழல் எதார்த்தம் சார்ந்த புரிதல் தமிழ்நதிக்கு இருந்தும் அவர் வலிந்து திணித்த போலி முற்போக்குடனும், திட்டமிட்ட விடுபடலுடன் முன்வைக்கப்பட்ட நாவலை பேரழிவின் மானுட சாட்சியமாக யமுனா ராஜேந்திரன் பரிந்துரைப்பது தான் அவரின் ஈழம்சார்ந்த, ஈழப்போராட்டம் குறித்த அடிப்படைப்புரிதலையே கேள்விக் குள்ளாகுகிறது. பின்நவீனத்துவத்தை வரலாற்றுப் பின்னணியில் வைத்துப் பார்ப்பதாகச் சொல்லும் அவருக்கு ஈழவரலாறு குறித்த அடிப்படைப்புரிதல் இல்லாததன் வெளிப்பாடே இதனைப் பேரழிவின் மானுட சாட்சியமாக முன்வைக்கிறது. ஆனால் நாவல் ஒருபக்க விதந்தோதும் வரலாறை மட்டுமே பேசுகிறது.

இதனைத் துயரத்தின், ஆற்றாமையின், இந்தியாவின் கயமையின் வெளிப்பாடக முன்வைப்பவர்கள் எல்லாம் போராட்டத்தின் எளிய சில உண்மைகளைக் கூட அல்லது ஈழப்போரின் குரூர எதார்த்தத்தின் சிறு துளியைக் கூட எதிர்கொள்ளத் திராணியற்ற போலியானவர்கள். அவர்கள் இந்நாவலின் பின்னரான இருபத்தியாறு வருடங்களையும் கண்மூடிக் கடந்துவிட்டவர்கள். அவர்கள் தம் பொது மனநிலையின் சுய அரிப்பை, பச்சாத்தாபத்தை அடித்தளமில்லாத இப்படியான போலிப்படைப்புகளில் பொருத்திக் குற்றவுணர்வின் கண்களைத் தவிர்த்து விடுவது போல் பாசாங்கு செய்பவர்கள். தமிழ்நதி புலிகளின் பொற்காலத்தினுள் புனைவினுள் மீண்டும்




சென்று உருவாக்கும் கதைகளின் மூலம் அவர் மீண்டும். மீண்டும் நிகழ்த்திக் காட்டுவது போருக்கான நியாயப்பாட்டைத்தான். எழுத்தாளர் தமிழ்நதி குறித்த தமிழினியின் கருத்தே அவர் வலிந்து திணிக்க முனைந்த நாவலின் கட்டுமானமுமாகும். அதை எதுவிதக் கேள்விகளுமில்லாமல் விதந்தோதுபவர்களும் வேண்டிநிற்பது அதைத்தான்.

> அவர்(தமிழ்நதி) ஆதரவாளர்; நான் புலி. ஆனால் இப்போது இல்லை. நாளாந்தம் மாறிச்செல்லும் அனைத்தையும் அரசியலையும் கூட அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை இதற்கான காரணம் ஒருவிதமான கருத்துப் பிடிவாதமே தவிர புத்திஜீவித்தனம் அல்ல என்பது எனது கருத்து. யதார்த்தம் களத்தின் வழியாகப் புரிந்துகொண்ட யதார்த்தம். போர் அவர்களுக்கு எப்போதும் தேவை, ஒரு கிறிக்கெட் போட்டியின் ருசி. அதன் நேரடி வலியை அனுபவித்தவனுக்கு போர் எப்போதும் எங்கேயும் தேவையற்றது.
>
> தமிழினி

இத்தகைய படைப்புகளிற்கு இவ்வித விமர்சனம், வரலாற்றுப் பிரக்ஞைகளும் இன்றிக் கிடைக்கும் கவனிப்புகள் தான் நம் கால மதிப்பீடுகளின் வீழ்ச்சியைச் சுட்டி நிற்கின்றன. இவற்றை உதறி மேலெழுந்துவரும் அடுத்த தலைமுறைப்படைப்புகளில் பிரபாகரனிற்குச் சூரியதேவன் என்றோ, புலிகளிற்கு புனிதபிம்பங்களோ இருக்கப்போவதில்லை. அவர்களின் புனிதவுருக்கள் சிதைக்கப்பட்டும், கோர முகமூடிகள் கிழிக்கப்பட்டும் வரலாறின் முன் நிறுத்தப்படுவார்கள். அப்படைப்புகளில் தம் இனத்தின் நியாயமான போராட்டத்தை மிகத் தவறான வழியில் எடுத்துச் சென்றவர்களுக்கான பாத்திரம் மட்டுமே வழங்கப்பட்டிருக்கும்.

□□□□




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• யோகி

கட்டுரை

# பெண்கள் ஏன் காமத்தைப் பேசவும் எழுதவும் தயங்குகிறார்கள்?



பெண்கள் ஏன் காமம் பேசத் தயங்குகிறார்கள்? இந்தக் கேள்வியை நானே என்னைக் கேட்டுக் கொண்ட போது, ஒரு சராசரி பெண்ணாக அதற்கான பதில்கள் இவைதான் எனக் கூறிக்கொண்டேன்.

★ காமம் பற்றிப் பேசும் பெண் நிச்சயம் நடத்தை கெட்டவளாகத்தான் இருப்பாள்.
★ அவளுக்குப் பல ஆண்களுடன் தொடர்பு இருக்கலாம்.
★ வளர்ப்பு சரியில்லாதவள்.
★ பிஞ்சியிலேயே பழுத்திருக்கலாம்.
★ பலரோடு உடலுறவுக் கொண்டவளாக இருக்கலாம்.
★ காமம் பற்றிப் பேசும் பெண்களைச் சமூகம் தவறாக நினைக்கும்.
★ ஆண்கள் தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பர்.
★ ஆண்கள் தவறான கண்ணோட்டத்தில் அணுக நேரலாம்.
★ சர்ச்சையில் சிக்க நேரிடும்.
★ மரபு மீறியவளாகக் கருதப்படுவாள்.
★ பெயர் கெட்டு விடும்.
★ அது குடும்பத்தில் உள்ளவர்களையும் பாதிக்கும்.
★ இன்னும் இன்னும்

அப்படியென்றால், இதுவரை பெண்கள் காமம் பற்றிப் பேசியதே இல்லையா? பேசியதே இல்லை என்று யாருமே சொல்ல முடியாது என்று தமிழ் இலக்கியம் படித்திருக்கும் அனைவரும் அறிவர். உடலின் வேட்கையையும் காமத்தின் தாகத்தையும் சங்க இலக்கியங்களில் பெண் புலவர்கள் பாடியதைக் காட்டிலும், அதனையடுத்து அத்தனை துணிவாகவும் வெளிப்படையாகவும் 20-ஆம் நூற்றாண்டுப் பெண்கள் வரை பாடியதும் எழுதியதும் குறைவு என்றே கூறலாம்.

சங்க காலத்தில் பெண் புலவர்கள் ஆக்கி வைத்திருக்கும் அந்தக் காமப் பெட்டகங்களைத் திறக்கும்போது, எவ்வித நெருடலுமின்றி, தயக்கமின்றி, சிலாகித்துப் புசிக்க யாரும் தயங்குவதில்லை. கூச்சப்படுவதுமில்லை. அதைப் பெண்களேகூட ஆய்வுக்கு உட்படுத்தும் போது, பிசுறு தவறாமல் பாடவும் அதைச் சிலாகிக்கவும் செய்கிறார்கள். பல நாள் பட்டினி கிடந்தவள் உணவுக்காக ஏங்குவதைப் போலப் பலவருடங்கள் அல்லது பல நாட்கள் உற்றவனின் வருகைக்காகக் காமப்பசியோடு தகித்துக் கிடந்தவளின் நிலை என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைச் சங்கப் பாடல்கள் பதிவு செய்திருக்கின்றன. தலைவனுக்காகத் தலைவியும் தலைவிக்காகத் தலைவனும் பாடும்படியான பலபாடல்களில் காமத்திற்குப் பிரதான இடமுண்டு.

தற்போதைய சூழலில் காமத்தைப் பற்றிப் பேசுவது மட்டுமல்ல உறவின் இயக்கங்களைப் பேசக்கூட ஆண்கள் தயங்குவதும் கூச்சப்படுவதுமில்லை. அதை முகநூலில் நிலைத்தகவலாகப் பதிவிடுவதும், அதைக்குறித்து விவாதங்கள் செய்வதும், கிண்டலோடும் கேலியோடும் விஷயங்களைப் பகிர்ந்துகொள்வதும் கண்ணுறும்போது அவர்கள் உலகில் அவர்கள் மட்டுமே இருப்பதைப் போன்று தோன்றும். அதே தகவலை ஒரு பெண் வெளிப்படையாகத் தெரியப்படுத்த முனைகிறார் என்றால் அவரின் கேரக்டரிலிருந்து அது விவாதத்திற்கு உட்படுத்தப்படும்.

காமத்தைப் பொறுத்தவரை காமச் சூத்திரங்களை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானதாக வைத்தாலும் அதை ஆணின் மூலமாகவே பெண்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும் அல்லது ஆண் இவ்விஷயத்தில் ஆள்பவனாகவும் பெண் அதை ஏற்பவளாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறான். இது இந்தியச் சூழலில் தொடர்ந்து நிலைநிறுத்தவும் பட்டுள்ளது.

'கடல் அன்ன காமம் உழந்தும்'
(குறள் 1137)

என்று வள்ளுவர் சொல்கிறார். ஆணுக்கும் - பெண்ணுக்கு ஒரே மாதிரிதான் உழந்தும் என்பதைக்
'காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடலல்லது இல்லை வலி'
(குறல் 1131)

என்று மற்றொரு குறளில் தெளிவுபடுத்துகிறார்.

ஆனால், ஒரு பெண் தன் துணையிடத்திலும் அவளின் தேவையையும் ஆசையையும் காமத்தின் ஐயப்பாட்டையும் தீர்த்துக்கொள்கிறாளா என்ற கேள்வியை வைத்தால் அங்கு மௌனமே மிஞ்சுகிறது. உடல் ரீதியில் தன்தேவையைப் பெறுவது இரண்டாமிடத்தில் வைத்து அது குறித்து அவள் மனம் திறந்து பேசுகிறாளா? அல்லது தன் தேவைக்காகத் திருவாய் மலர்கிறாளா? என்ற கேள்வியை முதலில் வைப்போம், இந்த இடத்தில் ஒரு பெண்ணாவது தேர்வாளா என்றும் தெரியாது. காமம் பேசுதல் இந்திய அல்லது தமிழ்ப் பெண்களிடையே ஒரு நெருடலான விடயமாகவே ஆகிவிட்டது.

ஓர் ஆண் தன் காமத் தேவையை வெளிப்படையாகக் கேட்டு, ஒரு பெண்ணை அணுகுகிறான். ஆனால், ஓர் ஆணிடம் பெண், தன் உடற் தேவையை, தனது உடல் மொழியில் அல்லது பார்வையால் கூடத் தெரியப்படுத்தத் தயங்குவதற்கு என்ன காரணம்? திருமண ஜாதகத்தில் யோனிப் பொருத்தம் பார்க்கும் இந்தியச் சமுதாயம், என்றாவது பெண்ணின் உடற் தேவையின் சராசரி ஆசைக்காகச் சிந்தித்திருக்கிறதா?

தனது நியாயமான ஆசையை வெளிப்படுத்துவது வழி தனது குடும்ப வாழ்கையில் சிக்கல் ஏற்படும் என ஒரு பெண் யோசிக்கத் தொடங்கும்போது அந்த ஆசையைத் தியாகம் செய்யவே அவள் விரும்புகிறாள்.

அப்படியே, காமத்தைக் குறித்து அவள் வெளிப்படையாகப் பேசத் தொடங்கும்போது அதை ஆண்கள் எப்படிச் சீரணிப்பார்கள் என்ற ஆராய்ச்சிக்குப் போவதற்கு முன்னர், சக பெண்களுக்குள் காமம் குறித்தான உரையாடல்கள் எப்படி நடக்கிறது? அல்லது காமத்தைக் குறித்துப் பெண்கள் பேசிக்கொள்கிறார்களா? காமம் குறித்துப் பெண்களின் புரிதல் எப்படி உள்ளது உள்ளிட்ட கேள்விகளை அடுக்கும்போது, அங்கே தன் தோழிகளினாலே அவள் விமர்சனத்திற்கு உள்ளாகும் சிக்கலும் தோன்றுகிறது. சக தோழிமார்களே அவதூறுகள் அவள்மீது கட்டவிழ்க்கிறார்கள் என்பது நிதர்சன உண்மையாகும்.

'முத்தன்ன வெண் முறுவல்

□□□□

**முதலிரவு மற்றும் பாலியல் வன்முறை காட்சிகளிலும் உடலுறவு குறித்தான இச்சையைத் தெளிவாகவே காட்டிவிடு கின்றனர்.**

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செவ்வாயும் முலையும்*
*அழகழிந்தேன் நான்*
*புணர்வதோர் ஆசையினால்*
*என் கொங்கை கிளர்ந்தது'*

(அபிராமி அந்தாதி)


என ஆண்டாள் பாடலில் வரும், பெண்ணிற்கான காம இச்சையை இந்தக் காலத்துப் பெண்களால் பதிவு செய்ய ஏன் முடியவில்லை? 'அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த' என்பார்கள்.

காமத்தைப் பற்றி ஓரளவுக்குத் தெரிந்திருந்தாலும், தனக்கு எதுவும் தெரியாது எனப் பெண்கள் பொய் சொல்வதற்கான காரணம் என்னவாக இருக்கும்? கணினி யுகத்திலும், ரெட்டை அர்த்தங்கள் கொண்ட சினிமா வசனத்திலும், முதலிரவு மற்றும் பாலியல் வன்முறைக் காட்சிகளிலும் உடலுறவு குறித்தான இச்சையைத் தெளிவாகவே காட்டிவிடுகின்றனர். பதின்ம வயதுப் பிள்ளைகளுக்கே உடலுறவு குறித்த விஷயங்கள் தெரியும்போது சில பெண்கள் ஒன்றுமே தெரியாது என நடிப்பதைக் கண்டுபிடிக்க முடியாத அறிவிலியாகவா ஆண் இருக்கிறான்? ஆனால், அதைத்தான் அவன் விரும்புகிறான் என்பது என் வரையில் நகைப்பான ஒரு விஷயமாகவே இருக்கிறது.

ஆணுக்கும் பெண்ணுக்கும் கிளர்த்துதலுக்கு அப்பால் காமம் மனம் சார்ந்த விஷயமாக அமைகிறது. ஆனால், ஒரு எல்லைக் கோட்டுக்குள் வலிய தன்னை இருத்தி வைத்துக் கொள்வதுதான் பெண்ணின் மனநிலையாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. காமத்தைக் குறித்துப் பேசியவர்களில் ஓஷோ முக்கியமானவராகக் கருதப்படுகிறார். காரணம் ஓஷோ உடலை விடுதலை செய்யச்சொல்கிறார். காமத்தினால் உடல் வருந்தக் கூடாது என்பதை ஓஷோ வலுவாகப் பேசுகிறார்.

பேசவே படாத காமம் வன்மமாக மாறிவிடும் ஐயம் இருக்கிறது. இது எல்லாம் பெண்களுக்குத் தெரிந்திருந்தாலும் அவள் அதைப் பேசத் தவிர்க்கத்தான் செய்கிறாள். தங்களுக்குள்ளாகவே ஓர் அணையைப் போட்டு, முழுக்காமத்தையும் பார்க்காமலே மடிந்தும் போய் விடுகின்றனர்.

அண்மையில் காமம் சார்ந்த சில கவிதைகளைக் கவிதைச் சிற்றிதழ் ஒன்றுக்கு நான் வழங்கியிருந்தேன். அதை வாசித்த நண்பர் ஒருவர், நீங்கள் எப்படி அம்மாதிரியான கவிதைகளை எழுதலாம்? அதன் நோக்கம் என்ன? எல்லோரும் எழுதுகிறார்கள் என்பதற்காகத்தான் நீங்கள் எழுதுகிறீர்களா? பிறரால் கவனிக்கப்பட வேண்டும் என்பதற்காக எழுதுகிறீர்களா? எனக் கேள்விகளை எழுப்பினார். ஒரு பெண்ணுக்குச் சமுதாயத்தில் பிரச்சினை ஏற்படுகிறது, அவள் அதைத் தைரியமுடன் பேசுவதற்கு முன்வருகிறாள். ஒரு பெண்ணுக்குப் பசிக்கிறது;



சாப்பிடுகிறாள். காதல் வயப்படும் ஒருபெண் அதைக் குறித்து அதே காதலோடு பகிர்கிறாள். குழந்தையைக் கருவுறுவதிலிருந்து, பெற்றுக்கொள்வது வரை அத்தனையையும் தயக்கமே இல்லாமல் தெரிவிக்கிறாள். அவள் மலடியாக இருந்தாலும் அந்த வலியையும் பேசுகிறாள். இயற்கையைக் கொண்டாடுகிறாள். முரண்படுகிறாள். இவை எல்லாவற்றையும் போலத்தானே காமமும். ஏன் அதைப் பேசக்கூடாது என நண்பனிடம் கேட்டேன்.

'மகுடிக்கு மயங்கும்
பாம்பென
ஆட்டி வைக்கிறது காமம்'

(படிகம், ஜூன் 2016)

நீங்கள் இப்படி எழுதியிருக்கும் இந்தக் கவிதை மாதிரியான உணர்வுதான் உங்களுக்கு ஏற்படுகிறதா? என்று தொடர்ந்து அந்த நண்பர் கேள்வியை எழுப்பும் போது, அவர் என் மீது வைக்கும் பார்வையை நான் உணராமல் இல்லை. எனக்குப் பசிக்கும்போது சாப்பிட்டால் பசி மயக்கம் வராது. பசியோடு இரண்டு நாள் பட்டினி கிடந்து, பிறகு சாப்பிட்டால் மயக்கம்தான் வரும். அப்படித்தான் காமமும் என்றேன்.


பெண்கள் காமம் குறித்துப் பேசுவதையே தயக்கத்தோடு பார்த்தால், அவள் அதிலிருந்து வெளியே வந்து எப்படி யோசிப்பாள்? ஒரு இரண்டாம் தரப் பார்வை தம்மீது விழும் என்ற மனத்தடையே அவளைக் காமம் குறித்துப்பேசவிடாமல் செய்துவிடுகிறது.

*கன்றும் உண்ணாது கலத்தினும் படாது*
*நல் ஆன் தீம் பால் நிலத்து உக்கா அங்கு*
*எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது*
*பசலை உணீஇயர் வேண்டும்*
*திதலை அல்குல் என் மாமைக் கவினே*

(குறுந்தொகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



◆ சேனன்

# விமர்சனங்கள் உட்பட அனைத்து எழுத்துகளும் ஏதோ ஒரு வகை அரசியல் சார்ந்தது தான்.

**தொ**ண்ணூறுகளில் பாரிஸில் **'அம்மா', 'எக்ஸில்'** இதழ்களில் கலகக்குரலாக ஒலித்தவர் சேனன். அவ்விதழ்களில் விளிம்புநிலை உரையாடல்கள் தனித்துவமான சிறுகதைகள் மற்றும் கவிதைகளையும் எழுதியவர். 'அம்மா'வில் கதைகளையும் மொழிபெயர்த்துள்ளார்.

இவரின் சிறுகதைகள் மையம் சிதைக்கப்பட்டவையாகவும், கட்டமைக்கப்பட்ட திருவுருக்களைக் கவிழ்ப்பதாகவும் இருப்பவை. அதிக விவரணைகளற்ற நேரடியான மொழியில் கதைசொல்லும் அக்கதைகள் சொல் முறையினாற் தனித்துவமானவை. வழமையான தொடக்கம் - நடு - முடிவு என்ற தமிழ்க் கதைகளின் சட்டகங்களிற்குள் அடங்கிவிட முடியாதவை. இந்தக் கதை சொல்லல் முறையிலிருந்து விலகித் துண்டுப்பிரசுரத்திற்கு அணுக்கமான மொழியில் அண்மையில் இவர் எழுதிய 'லண்டன்கார்' நாவல் இலங்கைச் சூழலில் அதிகம் கவனிப்பிற்குள்ளாகியது.

லண்டன் கலவரமும் அதன் விளிம்புநிலைப் பங்காளர்களான உதிரிப்பாட்டாளிகள், புலம் பெயர்ந்த கருப்பர்கள், தற்பாலின விருப்பாளர்கள் என்பவர்கள் பற்றிப் பொதுமனநிலை கவனத்திற் கொள்ளாத கதையாடல்களை, 'லண்டன்காரர்' நாவலிற் கவனப்படுத்தியிருக்கிறார். தற்போது பிரித்தானியாவில் சோசலிஸ்ட் கட்சியின் உறுப்பினராகத் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் ,பேரணிகள், கருத்தரங்குகள் மற்றும் உரையாடல்கள் எனத் தீவிரமாக தொழிலாளர்களது உரிமைக்காகச் செயற்பட்டு வருகிறார். ஆயினும், இலக்கியமே தனக்கு உவப்பான அடையாளமெனத் தொடர்ந்தும் சிறுபத்திரிகைகள், இணையத்தளங்களில் எழுதிக் கொண்டிருக்கிறார். ஆங்கிலத்தில் அரசியற் கட்டுரைகளை எழுதும் சேனன் HISTORY OF RESISTANCE என்ற இலங்கை அரசியல் வரலாறு தொடர்பான நூலையும் எழுதியுள்ளார்.**'கொலை மறைக்கும் அரசியல்'**, **'இனத்துவேசத்தின் எழுச்சி'** ஆகிய கட்டுரைத்தொகுப்புகளையும் **'லண்டன்காரர்'** என்ற நாவலையும் தமிழில் தந்திருக்கிறார். இவரைப் பாரீஸ் நகரில் கடந்த மார்ச் மாத மாலைப்பொழுதொன்றில் சந்தித்தோம். அவருடனான உரையாடல்கள் எதையும் தயக்கமின்றிக் கேள்விகேட்கவும் எது பற்றியும் பேசவும் நமக்கான இடத்தைத் தந்தது. அதன் தொடர்ச்சியாக ஆக்காட்டி குழுவினர் மின்னஞ்சல் வழியாகவும் தொலைபேசி ஊடாகவும் இந்நீள் உரையாடலைத் தொகுத்திருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாங்கள் இதிலிருந்தே ஆரம்பிக்கலாம் என்றிருக்கின்றோம். நீங்கள் ஏன் ஒரு நாவல் எழுதக்கூடாது?**

இந்தக் கேள்வியைத்தான் நானும் கனகாலமாகக் கேட்டுக்கொண்டு திரிகிறேன். நாவல் என்றால் என்ன? என்பது பற்றிக் குழம்பிக்கொண்டிருக்கும் மனநிலையில் இருந்து கொண்டு நாவல் எழுதுவது எப்படி? இதனாற்தான் குறுநாவல் என்று எழுத வெளிக்கிட்டுப் படுதோல்வி அடைந்திருக்கிறேன்.

நீங்கள் இக்கேள்வியைப் ‘பொடி வைச்சுக்' கேட்கின்றீர்கள் என்று தெரிகிறது. ‘ஒரு வடைக்கும், தேத்தண்ணிக்குமாக இப்பிடியான கேள்விகளைத் தாங்க வேண்டிய அவசியமில்லை' எனத் திட்டித் தூரவிலத்தும், கவித்துவ மனப்பக்குவம் எனக்கு இன்னும் வயப்படவில்லை.

தற்போது நாவல் என்ற பெயரில் இன்னுமொரு முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். வெறும் குப்பை வேலை செய்துகொண்டிருக்கிறேன் என்று கிட்டத்தட்ட ஒரு நூறு பக்கங்களைத் தாண்டிய பிறகுதான் தெரிந்தது. இது தவிர இன்னும் இரண்டு நாவல்களுக்கான வேலைகள் அரைகுறையில் மூலை முடுக்குகளில் காய்ந்து கொண்டு கிடக்கிறது. எனக்கு நாவல் எழுதத் தெரியாமல் இருப்பதற்கு நான் என்னைக் குறைசொல்லிக்கொண்டு கழிவிரக்கப்படத் தயாரில்லை. அதற்கு நீங்களும் பொறுப்பு. தமிழில் எழுதிக்கொண்டிருப்பவர்கள் காரணம்.

தமிழில் ‘நாவல்' செய்துகொண்டிருப்பவர்களில் மிகப் பெரும்பான்மையானவர்களைப் படிக்க முடியவில்லை. தமிழ் இலக்கியம் படிப்பதை வருசத்துக்கு வருசம் குறைத்துக்கொண்டே செல்கிறேன். படித்தவைகளை மறப்பதற்குத் தினமும் காலை நாலு மணியில் இருந்து நாலரை வரை தியானம் செய்து வருகிறேன். அப்படியாவது ‘நாவல்' எழுதும் கலை கைவருகிறதா என்று பார்ப்போம்.

**‘லண்டன்காரர்' நாவல் முயற்சி படுதோல்வி என்கிறீர்கள். அப்படியானால் நல்ல நாவல் எப்படி இருக்க வேண்டும்?**

லண்டன்காரர் நாவல் படுதோல்வி என்று சொல்வதால் எனக்கு ‘நல்ல நாவல் என்றால் என்ன?' எனத் தெரிந்திருக்கும் என்ற அவசியமில்லை. மிஞ்சி மிஞ்சிப்போனால் ஒரு நாற்பது பக்கம் தேறலாம் என்றார் ஒரு பிரபல எழுத்தாளர். சில விசயங்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றது அவ்வளவுதான் என்றார் இன்னொருவர். வெறும் பிரச்சார நெடி வீசுகிறது என மூக்கைப் பொத்திப் பிடித்தபடி சிலர் விமர்சித்திருந்தனர். உயர் இலக்கியம் எதிர்பார்த்தோர் மத்தியில் ஏற்பட்ட இந்தத் தொய்வுதான் தோல்வி




**லண்டன்காரர்**
சேனன்
2015
கட்டுமரம் பதிப்பகம்

எனச் சொல்ல வைக்கிறது. ‘லண்டன் தமிழ் மக்கள் பற்றிய பைம்பலை' எதிர்பார்த்தவர்களையும் இந்த நாவல் ஏமாற்றி விட்டது.

இலக்கியத்துக்கு அப்பாற்பட்ட குறுகிய வட்டங்களும் இருக்கின்றன. அப்படி ஒரு இன்னுமொரு சின்ன வட்டத்தை நோக்கித்தான் இந்த நாவல் மொழி பேசியது. விளிம்பில் இருக்கும் உயிர்நிலையில் இருந்து எழுதுவது அந்த உயிர்கள் படிப்பதற்கு அப்பாலான அழகியல் நோக்கி நகரக்கூடாது என எதிர்பார்த்தேன். அவர்களின் வாழ்வைக் கைப்பற்றி, பின்பு அதை அழகுபடுத்திப் பண்டமயப்படுத்தும் முறையில் இருந்து தப்பவேண்டும் என்ற உள்ளுணர்வில் இருந்து விடுபடமுடியாத வேதனையாகத்தான் வெட்டுதல் கொட்டுதலுடன் மாதங்கள் கழிந்தது. இங்கு வெற்றி தோல்வி என்பதில்லை. ரசித்தார்கள். புத்தகத்துக்குத் தூர நின்ற பலர் படித்தார்கள் என்பதில் நிம்மதிப் பெருமூச்சை விட்டுக்கொள்கிறேன். அவ்வளவுதான்.

இந்த அவதானங்கள் பயன்பாடு சார்ந்து நிகழ்கிறது. நுகர்வுத்தளத்தில் இருந்து பேசப்படுகிறது. தவிர ஆக்கமுறையின் அறுதியான அவதானங்கள் அல்ல. தோல்வி வெற்றி என்பதை வரையறுத்து வெற்றிகர நாவலுக்கான சூத்திரத்தைக் கண்டறிந்துவிட முடியாது. பதிப்புக்குப் பிறகு வருகிற விசயங்களை ஆசிரியர் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது உண்மை. ஆனால் அவற்றைப் பொருட்டாக எடுத்து மட்டும் ஆக்க முறையைத் தீர்மானித்துக்கொள்ள முடியாது. தொடர்ந்து தோல்வி பெற்ற ஆக்கங்களைப் படைத்துக்கொண்டிருந்தவர் காஃப்கா. அது போல் பல உதாரணங்கள் உண்டு. எழுத்தாளரின் தோல்விக்கும் படைப்பின் தோல்விக்கும் வித்தியாசமுண்டு. என்னைப் பொறுத்தவரையில் இலக்கிய வட்டத்துக்குள் ‘லண்டன்காரர்' படுதோல்வியடைந்துள்ளது. ஃபௌஸர், வாசன், சாரு நிவேதிதா போன்றோர் பாராட்டி எழுதியிருந்தாலும் அவை தனித்து நிற்கும் விமர்சனங்களாக மட்டுமே ஒதுங்கி நிற்பதாகப் படுகிறது. இலக்கியப் பிரக்ஞை இந்த நாவலை ஏற்றுக்கொள்ளவில்லை என்றே கருதுகிறேன்.

நான் எப்படி இந்த நாவலைப் பார்க்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையோ அல்லது மேற்சொன்ன வேறு வட்டம் என்பது பற்றியோ தற்போது பேச விருப்பப்படவில்லை. அதற்குச் சற்றுக் காலம் கழியட்டும். நேரம் சில பல வெளிகளுக்கு இடம் கொடுக்கட்டும். அதன் பிறகு பேசுவோம்.

**சேனன், லண்டன்காரர், இடதுசாரிய அரசியற் செயற் பாட்டாளர் இவற்றைக் கடந்து ஒரு இலக்கியவாதியாக உங்களை எப்படி அடையாளப்படுத்துவது?**

அடையாளப்படுவதில் எப்பொழுதும் ஒரு அதிகார அரசியல் உண்டு. அனைத்து அதிகாரங்களையும் ஒடுக்குமுறைகளையும் எதிர்க்கும் அடையாளமற்ற ஒன்றின் தேடுதலை -இருத்தலை விரும்புவதாக இருப்பது கடினமான வேலைதான்.

வேண்டுமானால் சோசலிஸ்ட் என்று சொல்லிக்கொள்ளுங்கள். 'நான் யார்?' என்ற ஆதிக்கேள்விக்கு எந்தப் பதிலுமில்லை. 'இடதுசாரிய அரசியற் செயற்பாட்டாளர்' என்பது அடையாளமல்ல. அது அனைவரிடமும் அடிவாங்கும் தொழில். தங்களைத் தாங்களே சாட்டையால் அடித்துப் பாலின்பம் காண்பவர்கள் போன்றதொரு மனநிலையாகத்தான் அது தமிழ் இலக்கியச் சமூகத்தில் இருக்கிறது. இதுகளை வெளியில சொல்லிக்காட்டி இலக்கியத்துக்குள் மிஞ்சி இருக்கும் உறவுகளையும் அறுத்துப்போடும் வேலையைப் பார்க்கிறீர்கள். பரவாயில்லை.

**வருங்காலத்து ஈழத்து எழுத்தாளர்கள் ஒரு நாவல் எப்படி எழுதக்கூடாது என்பதை அறிய இது போன்ற நாவல்களைப் படிக்கவேண்டும் என்று லக்ஷ்மி சரவணகுமாரின் கானகன் நாவலைக் குறிப்பிட்டு இருந்தீர்கள். கானகனுக்கு இவ்வருடம் யுவபுரஸ்கார் விருது கிடைத்திருக்கிறதே?**

விருது பெற்றால் என்ன? விருதுக்குப் பாராட்டிய விழாவில் மிஸ்கினில் இருந்து எஸ்.ரா, சாரு ஈறாகப் பேசித்தள்ளியிருக்கிறார்கள். பல விமர்சனங்கள் வந்திருக்கின்றன. இதை எதிர்பார்த்தும்தான் மேற்சொன்ன விமர்சனம் வைக்கப்பட்டது. சொல்லப்பட்ட விசயத்தின் ஒரு பகுதி இதோ 'கண்ட கண்ட பாட்டுக்குப் புத்தகங்கள் தூக்கி எறியப் படுவதும் பப்பாவில் ஏற்றிப் பூசிக்கப்படுவதும் நிகழ்வதற்குப் பின்னால் ஒரு 'சொறி'யும் அரசியல் இயங்குகிறது. சொறிமுறை மற்றும் சொறிதல் அளவுகள் ஆகியன வைத்து இலக்கியங்களின் பலம் - பலவீனம் பேசப்படுகிறது. சொறிமுறை அரசியலை ஊக்குவிக்கும் பிதாவாக சாருநிவேதிதா ஒரு அவதாரம் எடுத்தியங்குகிறார். விற்பனையையும் விலாசம் காட்டுதலையும் முன்வைத்து இன்று சில 'கூட்டுக் குடும்பங்கள்' கலைக்கொலை செய்து வருகின்றன. இதுதான் கலை என இங்கு ஒரு வரைவிலக்கணம் வைப்பதற்கு ஒரு துணிவும் எமக்கில்லை. பிறகு ஆயிரத்தெட்டு ஆங்கிலப் பெயர்களுடன் சாரு நமக்குப் பொல்லெடுத்துக் கொண்டு வந்துவிடுவார்.'

கானகனுக்கும் - விருதுக்கும் தொடர்பு இருப்பதை அதன் ஆசிரியரே ஏற்றுக்கொண்டிருக்கிறார். அவசர அவசரமாகப் பக்கங்கள் நிரப்பியதை அவரே சொல்லியிருக்கிறார். இதைத்தான் அப்பவே சுட்டிக்காட்டினேன். ஆட்டன்பரா டாக்குமென்ரிகளைப் பார்த்து நீங்களும் எழுதுங்கள். உங்களுக்கும் விருதுகள் கிடைக்கும். இது ஒரு வகை ஆய்வு முயற்சி. நாவல் முயற்சி அல்ல என்பது தனிப்பட்ட கருத்து. பிரமைகளை ஏற்படுத்தி வருங்கால எழுத்தாளர்களை இத்தகைய சில்லறை உத்திகளுக்குள் முடக்கிவிடக்கூடாது.

**லண்டன்காரருக்கு முந்திய உங்கள் கதைகளிலிருக்கும் உங்கள் துடுக்கான அல்லது பாசாங்கற்ற மொழியிலிருந்து, லண்டன்காரரில் பயன்படுத்திய நேரடியான உரையாடும் பிரச்சாரத் தொனியிலமைந்த மொழியாக**

□□□□

**மொழி மாறிக்கொண்டே இருக்கும் ஒன்று. மொழியின் பிடியில் இருந்து கருத்தை விடுவிக்க முடியாத நிலையில் இருந்து ஆடம்பரமாக எழுதும் முறையை விட்டொழிக்க வேண்டும் என எதிர்பார்ப்பதன் விளைவு அது.**

□□□□





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாற்றமடைந்ததன் வித்தியாசத்தை உணரமுடிகிறது. ஏன் தங்களது மொழி அவ்வாறானது?**

மொழி மாறிக்கொண்டே இருக்கும் ஒன்று. மொழியின் பிடியில் இருந்து கருத்தை விடுவிக்க முடியாத நிலையில் இருந்து ஆடம்பரமாக எழுதும் முறையை விட்டொழிக்க வேண்டும் என எதிர்பார்ப்பதன் விளைவு அது. கவிதை எழுதுதல் - கவித்துவமாக எழுதுதல் - சிறுகதையை ஒரு கவிதா உணர்வுடன் நகர்த்துதல் என்ற ஆசைகள் முன்பிருந்தன. முன்பு வடிவத்தில் இருந்து உள்ளடக்கத்தை அணுகும் முறையிருந்தது. தற்போது உள்ளடக்கத்தில் இருந்து வடிவம் தோன்றவேண்டும் என விருப்பமாயிருக்கிறது. இது ஒரு பெருஞ்சவால். பெரும்பாலான எழுத்தாளர்கள் தங்களுக்கு 'தாமாக' வருவதை எழுதுகிறார்கள். எல்லா எழுத்தாளர்களுக்கும் உள்ளுக்குள் ஒரு எழுத்தாணி இருக்கிறது என்றும் அது நீரோட்டமாக எழுத்தியக்கத்தின்போது மட்டும் இயங்குகிறது என்றும் - இதை எல்லா நல்ல எழுத்தாளர்களும் அறிவர் என்றும் ட்ரொட்ஸ்கி எழுதியிருப்பார். அதில் ஒரு உண்மையுண்டு. ஒரு காலத்தில் எழுத்தாளர்கள் எழுத்தை வர வைப்பதற்காக மரங்களையும் மலைசார் இடங்களையும் தேடித்திரிந்தார்கள். லஹரியில் எழுதுவதாக சு.ரா ஒருமுறை சொல்லியிருக்கிறார். எழுதத் தொடங்கிய காலத்தில் இருந்து இந்தக் கேள்வி நம்மைப் புடைத்தெடுத்துக்கொண்டே இருந்திருக்கிறது.

இது பற்றிய புரிதலில் தவறுகள் நிகழ வாய்ப்புண்டு. தமது உணர்வு நிலையில் இருந்து கடுதாசிக்கு வந்தவுடன் படைப்பு நிகழ்வு முடிந்துவிட்டது எனச் சில எழுத்தாளர்கள் கருதுவதற்கு இது உதவுகிறது. இந்தக் கருத்து நிலையால் எழுதுபவர்கள் தங்களைத் தாங்களே உயர்த்திக்கொள்கிறார்கள். எனது உணர்வும் -அவதானங்களும் - அதைப் பதியும் மொழியும் தனித்துவமானது என எழுத்தாளர் எண்ண இது உதவுகிறது. அத்தகைய தனித்துவ உன்னதத்தை அனைவராலும் அடைய முடியாது என்றும் - இது ஒரு தனிப்பட்ட திறன் என்றும் ஏற்றுக்கொண்ட நிலையை இது கோருகிறது. இவ்வாறு புனித ஆன்மா கடுதாசியில் கசிவது படைப்பின் முடிவாகிறது. இதனால் தாம் எழுதிய ஒவ்வொரு வசனங்களும் அனைவரது வாசிப்புகளுக்கும் உகந்தவை எனச் சில எழுத்தாளர்கள் நம்புகிறார்கள்.

படைப்பு மனநிலையில் மட்டுமின்றி வாசிப்பு மனநிலையிலும் மேற்கண்ட போக்குண்டு. இதனாற்தான் எழுத்தாளர்களுக்கு 'வாசகர் வட்டங்கள்' உருவாகின்றன. உலரும் வசனங்களை அதே 'லஹரியில்' வாசிக்கக் காத்திருப்போர் இருக்கிறார்கள். ஆன்மாக்களின் இசையைப் பகிர்தலும் அதை நுகர்தலும் என்ற ஒரு வகை ஆன்மீகத்தனமான படைப்பியக்கமாக இது இருக்கிறது.

நீண்ட கதை அல்லது நாவல் என்ற வடிவம் மேற்சொன்ன முறையைக் கேள்விகேட்பதாக இருக்கிறது. அகத்துக்குள் இருக்கும் பதிவுகளால் மட்டுமான புத்தகமாக அது வெளிவரக்கூடாது என நினைக்கிறேன். புறத்தோடு உறவாடும் எழுத்தின் அவசியம் இருக்கிறது. வெறும் ஆய்வுத் தளமாக இன்றிப் புறநிலை அனுபவத் தளங்களும் தேவை. டவுன் அன்ட் அவுட் இன் பாரிஸ் அன்ட் லண்டன் என்ற ஜோர்ஜ் ஓர்வலின் புத்தகத்தைப் படிப்பவர்கள் அந்தப் புத்தகம் எழுத அவர் என்ன செய்தார் என்றும் படிக்க வேண்டும். தனது கதாபாத்திரங்களின் நிலையில் இருந்து எழுத அவர் முயன்று எடுத்துக்கொண்ட வாழ்க்கை முறை அவரது எழுத்துகளில் வடிவதை அவதானிக்கலாம். ஒரு கதாபாத்திரத்தை உருவாக்க அந்தக் கதாபாத்திரமாக வாழ்தல் என்ற முறையைச் சில நடிகர்கள் நடைமுறைப்படுத்தி வருவது அறிவீர்கள். அத்தகைய படைப்பு முறை தன்னிலையைப் பொதுமைப்படுத்திப் படைப்பைப் புறத்தில் முன்னிலைப்படுத்துகிறது. இதனால் உள்ளடக்கம் அதற்கேற்ற வடிவங்களைக் கோரி நிற்கிறது. எமது அகத்துக்கும் புறத்துக்குமான யுத்தமாகப் படைப்பு வடிய வேண்டும்.

நுணுக்கமான தளங்களை நோக்கி எழுத்தாளரை இதுதான் நகர்த்த முடியும். சுய விமர்சனமும் சுய செம்மைப்படுத்தலும் செய்யாமல் நிகழும் படைப்புகள் பற்றி நமக்குப் பல சந்தேகங்கள் உண்டு. இத்தகைய வெட்டுதல் கொட்டுதல்கள்தான்



♦ சேனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மொழியில் மாற்றத்தைக் கொண்டுவருகின்றன. ஆனால் இது நிரந்தரமல்ல. லண்டன்காரர் இந்த மொழியில் இருப்பதால் அடுத்து வரும் நாவலும் அத்தகைய மொழியில் இருக்கும் என எதிர்பார்ப்பது தவறு. அடுத்ததாக நான் வேலை செய்து கொண்டிருப்பது யுத்தம் பற்றிய கதை. அதை உரையாடும் மொழியில் எழுத முடியாது. அதன் உள்ளடக்கம் மொழியை வேறு வேறு தளங்களுக்கு நகர்த்தக் கோருகிறது. கோபமும் குழப்பங்களுமற்ற வசனங்களுக்குள்ளால் யாராவது யுத்ததை விளக்க முடியுமா? நடைபெற்ற போரில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஒருவருடன் சில காலத்தின் முன்பு பேசினேன். விசயத்தை அறிவதற்குள் சீவன் போய்விட்டது. தலையில் செல் விழுந்தவரின் - மார்பில் தோட்டா துளைத்தவரின் இரத்தக்களறிகள் பக்கம் நின்று எழுத விரும்புகிறேன். இருப்பினும் நான் அவர்கள் இல்லை. என் யுத்தமறுப்புக் கோபமும் அந்த அரசியலும்தான் அவர்களை என் தசைகளில் இணைக்கிறது. அதைவிட்டுவிட்டு எப்படி எழுத முடியும்? எனக்கென ஒரு கற்பனை உண்டு என்றால் - அதில் குருதி வழியவேண்டும் என எதிர்பார்க்கிறேன். ஆக அந்த மொழி நிச்சயமாக லண்டன்காரர் மொழியில் இருக்கப்போவதில்லை. அதன் சாத்தியமில்லை. ஒவ்வொரு புத்தகத்துக்கும் அதன் உள்ளடக்கத்திற்கேற்ப மொழி மாறிக்கொண்டேதான் இருக்கவேண்டும். தற்போது யுத்தத்தின் மொழியைத் தேடிக்கொண்டிருக்கிறேன். பின்பு அந்த மொழியை வெட்டிக் கொத்தித்தான் பேச இருக்கும் வாசகர் வட்டத்தை (கற்பனையில்) உருவாக்க வேண்டியிருக்கிறது.

யுத்தத்தில் இருந்து தப்பி வந்த குணா கவியழகன் சொல்லும் வேட்கையில் எழுதும் மொழி வேறு. அந்த மொழிக்குப் பின்னால் நியாயமும் - வெளிப்படையும் இருப்பதைப் பார்க்க முடிகிறது. இலக்கியக்காரர்களின் ஆக்கினைகளால் உருவாகும் வேட்கையும் குழப்பங்களும்கூட அங்கு தோன்றத் தொடங்கியுள்ளன. சொல்வதற்கான சூத்திரத்தைத் தேடுவதை விட்டு விட்டு அவரால் சொல்ல முடியும். அது நம் போன்றவர்களுக்குச் சாத்தியமில்லை. ஷோபாசக்தி, சயந்தன், தமிழ்நதி ஆகியோரும் யுத்தம் பற்றி எழுதியிருக்கிறார்கள். இவர்கள் யுத்தம் தள்ளியிருந்தும் அதற்கு நெருக்கமாக நின்றே எழுதியிருக்கிறார்கள். இவர்களது ஆன்மா யுத்தத்தோடு உறவாடிக்கொண்டுதான் இருக்கிறது. அதனால் இந்த நாவல்களிலும் இதயத்து வெகுளித்தனத்தைப் பார்க்கலாம். நேர்மையான எழுத்துகள் அவை. ஜெயமோகனும் யுத்தம் பற்றி எழுதியிருக்கிறார். அதில் எத்தகைய ஆன்மாவின் உறவுமுறையையும் நீங்கள் பார்க்க முடியாது. அத்தகைய உள்ளகத்துப் புலம்பல் கழுநீர் நுகர்தலை மறுத்தல் செய்யவேண்டும்.

**ஆசிரியரின்மரணம்என்றரோலான்பார்த்தின்கோட்பாட்டின் ஊடாக இலக்கியவாதிகள் தங்களை விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களாக கருதிக்கொள்கிறார்கள் என்கிறீர்கள். ஆனால் ஒரு பிரதி மீதான வாசிப்பு பல தளங்களில் நிகழும் சாத்தியத்தினை எப்படி நிராகரிப்பீர்கள் ? படைப்பானது முடிந்தமுடிவாக இருக்கவேண்டும் என்கிறீர்களா ?**

நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. ஆசிரியரைக் கொல்வதால் அகத்துக்கும் புறத்துக்குமான யுத்தத்தை நாம் சுருக்கி அறிந்துவிடலாம் எனக் கனவுகாண்பது தவறு. வாசித்தலும் புரிதலும் காலத்துக்கு காலம் மாறிக்கொண்டுதான் இருக்கப்போகின்றன. அந்த இயக்கம் ஆசிரியரைச் சாகடித்துச் செல்கிறது என்ற பிரமையை உருவாக்கலாம். புரிதலுக்கு ஆசிரியன் அவசியமில்லை என்று ரோலன் பார்த் போன்றவர்கள் வாதிடலாம். அது ஒரு பாதி உண்மை மட்டுமே. நீண்ட கால நீரோட்டத்தைத் தாண்டி நிற்கும் ஆதி இலக்கியங்களை எடுத்துக்கொள்ளுங்கள். எகிப்திய பிரமிட் சுவர்க் கதைகளின் ஆசிரியர்கள் யார்? கிரேக்கத்து இலக்கியங்கள் பல ஆசிரியரைக் காலத்தில் இழந்துவிட்டன. இவை பற்றிய எமது புரிதல்கள் முற்றிலும் புதியவை. எழுதப்பட்ட காலத்தின் புரிதல் நோக்கில் இருந்து மாறுபட்டவை. இருப்பினும் அந்த ஆசிரியர்களைத் தேடுவதையும் இணைத்துத்தான் இன்றைய புரிதல்களும் நகர்கிறது. ஆதி ஆசிரிய இறப்பு கால நீரோட்டத்தால் நிகழ்ந்ததல்ல. மாறாக சமூகப் பக்குவப்படுத்தலின் போதாமையினால் நிகழ்ந்தது. ஆசிரியர் வாழும் சமூக வளர்ச்சிக் கால கட்டம் அவரது இலக்கிய இயங்கு தளத்தைத் தீர்மானிக்கிறது. ஆக்கத்துக்கும் சமூகத்துக்குமான தொடர்பு இருக்கும்வரை ஆசிரியர் சாவது சாத்தியமில்லை. அதேநேரம் வாசிப்பவர் கற்பனை செய்துகொள்ளும் ஆசிரியர் வேறு வேறான வடிவங்களை எடுக்கிறார். ஒரு படைப்புக்கு பல்வேறு விதமான மொழிபெயர்ப்புகள் சாத்தியம்.

நான் முன்பு எழுதியதைப் புதிய வாசகனாகவே படிக்க முடிகிறது. பழைய-எழுதிய மனநிலையில் இருந்து அதை வாசிக்க முடியவில்லை. அதற்கான சாத்தியம் இல்லை. எழுதிய ஆசிரியனுக்கே இது சாத்தியமில்லாத போது வாசகர்களுக்கு எப்படிச்சாத்தியப்படும்? ஆசிரியரும் வாசகரும் தொடர் மாற்றத்துக்குள்ளாகிக்கொண்டே இருக்கிறார்கள். அதே போல் ஆக்கங்களும் மாற்றத்துக்குள்ளாகிக்கொண்டே இருக்கின்றன. சொற்களும் படிமங்களும் கால நீரோட்டத்தில் புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



□□□□

**ஒடுக்குதல் மீறி எழும் இரைச்சல்களுக்கு மேலால் தனது ஆறு உறுப்புகளையும் வைத்து அடக்கி எழுதுபவர்களின் எழுத்துகள் கசப்பும் வெறுப்பும் தருவதாக இருக்கின்றன. அவற்றைப் படிக்கும் பக்குவமும் தியானமும் வாய்க்கவில்லை.**

□□□□



அர்த்தங்களை எடுத்துக்கொள்கின்றன. இந்த அர்த்தத்தில் எக்காலத்துக்குமான இலக்கியம் என்பதன் சாத்தியம் பொய்யாவதைப் பார்க்கலாம். 1925ம் ஆண்டு சேர்கேய் ஐசன்ஸ்டெயின் இயக்கத்தில் உருவான படத்தை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். பாட்டில்சிப் பொட்டெம்கின் என்ற அந்தத் திரைப்படம் வெளிவந்த பொழுது கலை உலகம் ஒரு குலுங்கு குலுங்கியது. உலகின் தலைசிறந்த படம் அது எனப் பல திரைப்பட வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள். ஆனால் அப்படத்தை இன்று பார்க்கும் மாணவர் ஒருவருக்கு அத்தகைய மாபெரும் பிரமிப்பு இருக்கப்போவதில்லை. அதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. கலை சமூகமயப்படுவது அதில் முக்கிய காரணமாயிருக்கிறது. படங்களில் பல்வேறு உத்திகள் மீண்டும் மீண்டும் உபயோகிக்கப்பட்டு இன்று அவை சாதாரணமாகி விட்டன. சமூகத்தால் கவிழ்க்கப்பட்டு விடுகின்றன பல சிறந்த கலைகள். காலம் ஊர்ந்து ஊர்ந்து அப்படத்தின் நுணுக்கங்களைப் பொதுமைப்படுத்திவிட்டது.

அதனால் பிரமிப்புத் தன்மை குலைந்துவிட்டது. வரலாற்று ரீதியான பார்வைகள் மட்டும் படத்தை இன்றும் உயர்த்தி வைத்திருக்கின்றன. இத்தனைக்கும் அப்படம் ஒரு பிரச்சாரப் படமாக அக்காலத்தில் பார்க்கப்பட்டது என்பதையும் நாம் இங்கு கவனத்திற்கொள்ள வேண்டும். மீள்பிரதி செய்யப்படும் உத்திகளை உருவாக்குவோர் மீது சமூகக் கவர்ச்சி ஏற்படுகிறது அதனாலும்தான் அவர்கள் அழிகிறார்கள். இதிலிருந்து தப்பும் அதே வேளை ரசிக்கப்படும் படைப்பை உருவாக்குவது எவ்வாறு? அத்தகைய சூத்திரத்தை வாலாயப்படுத்துபவருக்கு சாவும் இல்லை! வாழ்வும் இல்லை!

இயங்கு தளத்தில் வைத்துத்தான் கலையைப் புரிவது நகர்கிறது. ஆக்கமும் அவ்வாறுதான் நகரவேண்டும் எனக் கருதுகிறேன். இங்குதான் ரோலன் பார்த்தின் போதாமையை நாம் உணர்கிறோம். தோல்வியில் இருந்து பிறக்கின்றன அவரது பல கருத்துகள். கலையை அறியும் சாத்தியம் இருக்கு என்று நகர்பவர்கள் அனைவரும் தோல்வியில் வந்து நிற்பதும் அதை நியாயப்படுத்த அறிதலைச் சுருக்கி நிறுவ முற்படுதலும் அடிக்கடி நிகழ்வதுதான். படைப்பை இயங்குதளத்துக்கு நகர்த்துவது பற்றித்தான் அழுத்திப் பேச விரும்புகிறேன். அதுதான் ஆசிரியரை நுணுக்கமான தளங்களை நோக்கி நகர்த்துகிறது. இங்குதான் உள்ளடக்கம் முதன்மைபெறுவது நிகழ்கிறது. முழுமையான புரிதல்கள் - முழுமையான படைப்புகள் ஆகியவற்றின் சாத்தியங்கள் இங்கு இல்லாமற் போய்விடுகின்றன.

***நேர்மையான எழுத்துகள்- என்ற ஒரு சொல்லாடலைக் குறிப்பிட்டீர்கள். யாருக்கு நேர்மையான எழுத்துகள்? இன்றைய ஈழத்தவர் எழுத்துகள் பல தமிழ்நாட்டின் வாசகர்களைத் திருப்திப்படுத்தவும், போரின் முடிவோடு ஈழத்தவர்களின் மனங்களில் உருவாகிய ஏக்கத்தை வியாபார மற்றும் புகழினை நோக்கி உருவாகியவையாகவும் தானே இருக்கின்றன?***

உங்கள் கேள்வியில் கொப்பளிக்கும் கோபத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. அந்தக் கோபத்தை நானும் பகிர்ந்துகொள்ள அனுமதியுங்கள். எந்தக் குறிப்பிட்ட புத்தகத்தையும் வக்காலத்து வாங்கும் நோக்கில் நான் "நேர்மை" பற்றிப் பேசவில்லை. தயவுசெய்து அதை ஒழுக்கத்தின் அர்த்தத்திலும் புரிந்துகொள்ள வேண்டாம். பிரணவம் என்ற மூல எழுத்தின் முதன்மை அடையும் எழுத்து -ஆன்ம சுத்தி எழுத்து என்பதாக சித்தர்காலத்தில் பேசித் திரிந்த வகைப் பேச்சில்லை இது. அத்தகைய பேச்சுத்தான் இன்று அடிப்படை நேர்மை அற்ற பேச்சாக எழுத்தாக இருக்கிறது. நேர்மை சமூகம் சார்ந்து நிறுவப்படும் சொல். பிரணவ இசைக்குப் பின்னால் முடக்கப்பட்ட சத்தங்கள் இன்று மேலெழத் தொடங்கியுள்ளன. ஏதோ ஒரு வகையில் அந்த ஒடுக்கப்பட்ட குரல்களின் பக்கங்களில் நிற்க எத்தனிக்கும் எழுத்தாளர்களை நேர்மையானவர்கள் எனச் சொல்ல விரும்புகிறேன்.

ஒடுக்குதல்மீறிஎழும்இரைச்சல்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலால் தனது ஆறு உறுப்புகளையும் வைத்து அடக்கி எழுதுபவர்களின் எழுத்துகள் கசப்பும் வெறுப்பும் தருவதாக இருக்கின்றன. அவற்றைப் படிக்கும் பக்குவமும் தியானமும் வாய்க்கவில்லை. சாகித்திய முனி சனாதனிகளின் ஆச்சாரியங்கள் அவர்களின் ஆறு உறுப்புகளையும் தாண்டிப் போவதில்லை. நீட்சே குறிப்பிட்ட சுயஊம்பல்களாகச் சுருங்கி நிற்கும் அவை எங்களுக்குமான பண்டங்களாகத் தரப்படுகிறது. அந்தப் பிரசாதங்களுக்குப் பின்னால் அவர்களின் சுத்த சைவ சுயநலங்கள் மட்டுமே தெரிகின்றன. சாகிற காலத்தில் சங்கரா போடும் இவர்கள் இலக்கியத் 'தீர்ப்புகள்' வழங்கி, பிரணவத்தை நிறுவ முயல்வது எவ்வகையில் நேர்மையானது?

இந்தப் பிற்போக்குவாதிகளின் எதிர்த் திசையில் பல எழுத்தாளர்கள் நிற்கிறார்கள். அவர்களின் 'எழுத்துத் திறமை' பற்றி நீங்கள் வரையறுக்கலாம். ஆனால் அவர்கள் நிற்கும் திசையில் நேர்மை இருக்கிறது. அதை அவதானிக்கச் சொல்லிக் கேட்டுக்கொள்கிறேன். அந்த எழுத்தாளர்களுடன் அல்லது அவர்கள் எழுதியவற்றுடன் முழு உடன்பாட்டைக் கோரும் கோரிக்கையல்ல இது. மாறாக அவர்கள் நிற்கும் நிலத்தின் கால நியாயத்தையும் நாம் அவதானிக்க வேண்டும். இந்தச் சில எழுத்தாளர்களின் போதாமைக்குப் பின்னாலும் 'நேர்மையான' கோபம் ஒன்றுண்டு. இது ஒரு வகைப் பக்கச் சார்பு வாதமே. பக்கச் சார்பின்றிய பார்வை சாத்தியமில்லை. வறுமையை விற்றல் - யுத்தத்தின் கொடுமைகளை விற்றல் என இலாப நோக்கில் ஏராளமான நடவடிக்கைகள் நிகழ்கின்றன என்பது உண்மையே. ஆனால் எல்லா எழுத்தாளர்களையும் எல்லாப் படைப்புகளையும் அப்படிப் பார்க்க முடியாதுதானே.

**புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்ற வகையீட்டினை எப்படி எதிர்கொள்கிறீர்கள் ?**

முதன்முதலாக வெளிநாட்டில் இலக்கியக் கூட்டங்களுக்குச் செல்லத் தொடங்கியபோது கேட்ட முதற் கேள்விகளில் இதுவும் ஒன்று. இன்று வரை பதில் கிடைக்கவில்லை. எனக்கும் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லை. எல்லோரும் பயன்படுத்துகிறார்கள் என்பதால் அச்சொற்களை நானும் பயன்படுத்தியிருக்கிறேனே தவிர அதன் முழு அர்த்தம் அறிந்த பயன்படுத்தல் அல்ல அது.

பொதுவாக ஈழத்தில் இருந்து அகதியாக ஓடிவந்து பல மேற்கு நாடுகளில் இருப்பவர்கள் எழுதுவதைதான் இதுவரை காலமும் புலம்பெயர் இலக்கியங்கள் என்று வரையறுத்து வந்திருக்கிறார்கள் என்பதைக் கவனிக்கலாம். மலேசியா, ஆபிரிக்கா பக்கங்களுக்கு புலம்பெயர்ந்து சென்று எழுதியவர்கள் ஏன் இதற்குள் வரவில்லை? அல்லது புலம் பெயர்ந்தோர் இலக்கியம் என்று பொதுவாகச் சொல்லிக்கொண்டு மற்றைய மொழிகளை மொழிபெயர்ப்புகளை ஏன் உள்வாங்க முடியவில்லை? வேற்றிடத்தில் இருந்து கொண்டு ஈழத்தை நினைத்துக்கொள்ளும் நனவிடை தோய்தல்களாக ஏன் கதைப்பரப்புகள் பல சுருங்கிக் கிடக்கின்றன? வெளிநாட்டவர்கள் - நாம் என்ற பிரிதலை வைத்து 'நம்மவர்கள்' கதைகளாக தரப்படுபவை எவ்வாறு 'புலம் பெயர்ந்த' என்று பொதுமைப்படுத்த முடியும்? ஏன் இன்னும் 'புலம் பெயர்ந்தோர்' இலக்கியத்துக்குள் ஆழமாகப் புகவில்லை? இப்படி ஆயிரமாயிரம் கேள்விகள் தான் இருக்கின்றன. அதில் நீங்கள் கேட்கும் கேள்வியும் ஒன்று. இக்கேள்விக்கு இப்போதைக்கு விடை கிடைக்கும் எனவும் நாம் எதிர்பார்க்க முடியாது. வெளிநாட்டில் இருந்து தமிழில் எழுதும் கடைசித் தலைமுறை பற்றிய கேள்வியாகவும் இது இருக்கிறது. அகதி வருகை ஓய இலக்கிய மையம் மீண்டும் ஈழம், தமிழ்நாடு என்று மாறிவிடும். இதன்பிறகு பல்மொழியில் வரும் இலக்கியங்களை எப்படிப் பார்க்கப் போகிறோம்? மியாவை புலம்பெயர் பாடகி என்று ஏற்றுக்கொண்டிருக்கிறோமா? அத்தகைய அடையாளங்களை அக்கலைஞர்கள் ஏற்கத் தயாரா? இனிவரும் வரலாறுதான் இதற்கான விடைகளை அவிழ்க்கும். ஆனால் அகதியாகத் தப்பி ஓடி வாழ்ந்தோரின் எழுத்துகள் என்ற ஒரு வகையறை ஒரு குறிப்பிட்ட காலத்தில் உருவாகிய எழுத்துகள் - தொடர்ந்து தமிழ் இலக்கியத்தின் பகுதியாக இருந்துகொண்டுதானிருக்கும்.

**புலம்பெயர்ந்தவர்களால் எழுதப்படும் படைப்புகளில் புலம்பெயர்திணைகள் வலுவாக முன்வைக்கப் படாமைக்குக் காரணங்கள் என்னவாக இருக்கக் கூடும்?**

இது ஒரு முக்கியமான கேள்வி. ஆய்வுக்குரிய கேள்வி. யுத்தத்தாலும் மற்றும் சமூக பொருளாதாரக் காரணங்களுக்காகவும் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் பல பொதுப் பண்புகளை அவதானிக்கலாம். நினைவுகளைப் பேணுதல் முதற்கொண்டு பல பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலோங்கியிருப்பதை அவதானிக்கலாம். இதன் ஒரு பகுதியாகவும்தான் நீங்கள் குறிப்பிடும் புலத்து திணைகளில் இலக்கியம் புகவில்லை எனத் தோன்றுகின்றது. தவிர தாண்டிவிட முடியாத கலாசார மற்றும் மொழி இடைவெளி போன்ற காரணங்களும் உண்டு. இவற்றுக்கு அப்பால் பின்தங்கிய நிலையில் இருக்கும் அரசியற் பிரக்ஞையும் முக்கிய காரணமாக இருக்கிறது.

பிரான்சில் 'ஸோன் பப்பியே' என்ற விசா அற்றவர்களின் அமைப்பு ஒன்றுண்டு. எத்தனை புலம்பெயர்ந்தவர்கள் அத்தகைய அமைப்பில் பங்கு பற்றியிருக்கிறார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசா அற்ற வாழ்வின் கொடுமை பிரெஞ்சு நீரோட்டத்தில் இணையவில்லை. துவேசத்துக்கு எதிரான போராட்டங்களில் தமிழ் பேசுவோர் பங்களிப்பு இருக்கிறதா? இத்தகைய உரையாடலின்றி எவ்வாறு இலக்கிய உள்வாங்கல்கள் நிகழும்? இத்தளத்தில் உரையாடலின்றி மேலோட்டமான பயணக் கட்டுரைகள் போன்ற எழுத்துகள்தான் சாத்தியம்.

இதே சமயம் - மேலிருந்து கீழான ஒரு வித மேலோட்டக் கலப்புத் திணிக்கப்படுகிறது. பாரிஸ் பல்கலாசார மையம் என்றும் அங்கு அனைத்து இனத்தவர்களும் ஒன்றுகூடி வாழ்கிறார்கள் என்றும் பேசப்படுவது உங்களுக்குத் தெரிந்ததே. கலப்பு புனிதப்படுத்தி பேசப்படுவது மேலிருந்து கீழாகத் திணிக்கப்படுகிறது. பல்கலாசாரம் காத்தல் என்ற பெயரில் வெவ்வேறுக் கலாசாரக் குழுக்கள் தனித்து, தனித்து வாழும் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர். பல்கலாச்சாரம் என்பது பிற்போக்குத்தனமான அதிகாரக் கொள்கை. கலாச்சாரக் குழுக்கள் தனித் தீவுகளாக இருப்பதை கட்டிக்காப்பதன் மூலம் குழுக்களுக்கிடையில் அமைதி காக்கலாம் என்ற நோக்கம் இதன் பின்னணியில் இருக்கிறது. அரசுக்கெதிரான போராட்ட இணைப்புகளைத் தவிர்த்து அமைதி காக்க இது உதவுகிறது. ஆசியர், ஆபிரிக்கர், அரேபியர் என மக்கள் பிரிந்து பிரிந்து வாழ்கின்றனர். அந்தப் பிரிவுகளுக்குள்ளும் பல்வேறு தனித்தீவுப் பிரிவினைகள் உண்டு. பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தமக்கெனப் பிரதேசங்களைப் பிரித்து வைத்து ஒதுங்கி வாழ்கின்றனர் மக்கள்.

இவ்வாறான நடவடிக்கைகளால் இந்தக் கலாசாரக் குழுக்களுக்குள் இருந்து எழும் தலைமை அல்லது முக்கிய ஆளுமைகள் மட்டும் அரசுடனும் அடுத்த கலாசாரங்களுடனும் உறவாடுகின்றன. அதுவும் போராட்டங்களைச் சாந்தப்படுத்தவும், லாப நோக்குக்காகவும் நிகழ்கிறது. ஆக உரையாடல் மேலிருந்து கீழாக அறிமுகமாகிறது. தமது தலைமைகளையும் - தாமாகத் தெரிவித்துக்கொண்ட ஆளுமைகளையும் எதிர்க்கும் பொது மக்கள் மேலிருந்து அறிமுகமாகும் உறவுகளையும் எதிர்க்க நிர்பந்திக்கப்படுகின்றனர். அது ஒட்ட முடியாத உறவு. கனத்த கோர்ட்டுகளைக் காவிக்கொண்டு ஆதரவுப் பிச்சை எடுக்கும் கனவான்களால் அறிமுகமாகும் பிரெஞ்சுக் கலாசாரம் எப்படி ஒட்டும்? அடித்தளத்தில் உறவின்றி எப்படிப் புலம்பெயர்ந்த திணை எமக்குள் புகும்?

இந்தக் பல்கலாசார அடக்குமுறை உடைக்கப்படவேண்டும். இதனால் எந்தக் கலாசாரத்துக்கும் லாபமில்லை. கலாசார உறவு ஏற்படுவதால் உங்கள் கலாசார அடையாளங்கள் அழிந்துவிடும். அதனால் தனித்தனியே தீவுகளாக வாழுங்கள் என்று சொல்வது மிகப்பெரும் கலாசார வன்முறை. அதே நேரத்தில் ஜேர்மனியில் சில இடங்களில் நிகழ்வது போல் வலிந்து கலப்புத் திணிக்கப்படுவதும் வன்முறையே. வெளிநாட்டவர் கலந்து ஜேர்மனியராகத் திரிபடைய வேண்டும் என இந்த மக்கள் நாடெங்கும் பிரித்து விதைக்கப்படுவது மகா தவறு. அதுவும் ஒரு வகை பல்கலாசார திட்டமிடலே. இங்கிலாந்தில் பல்கலாசார திட்டமிடல் நிறுவன மயப்படுத்தப்பட்டு இயங்குகிறது. ஒவ்வொரு கலாசாரக் குழுக்களுக்கும் தலைமைகளை உருவாக்கி அதை அரசு சார்பில் கட்டுப்படுத்த அரசே பணம் பொருள் வழங்குகிறது. இந்தக் கலாசார "தலைமை" அமைப்புகள் அரசு சார்பில் மக்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் பாடுபடுகின்றனர். மக்கள் அவர்களைப் புறக்கணிக்க முன்வந்தாலும் அவர்களை அரசும், அரச கலாசார மையங்களும் தூக்கித் தூக்கி நிறுத்துகின்றன. பிரான்சில் இவ்வளவுக்கு நிறுவனமயப்படாததினால் அரசின் வங்குரோத்து மக்களுக்கு ஓரளவு தெரியும். சபாலிங்கம் தனது குடும்பத்துக்கு முன்னால் சுடப்பட்ட சம்பவம் ஏனைய சூட்டுச் சம்பவங்கள் போல் விசாரிக்கப்படாததற்குக் காரணமும் இதுதான்.

இது தகர்க்கப்படவேண்டுமானால் மக்கள் தமது உறவுகளைக் கீழிருந்து மேல் நிமிர்த்த வேண்டும். கலாசார அடையாளங்கள் உட்பட அனைத்துவித சுய காத்தலும் தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கை அல்ல. மாறாகப் பாதுகாத்தலுக்கான அனைத்து அசைவுகளினதும் இணைவே சிதைவுகளில் இருந்து தனித்துவங்களைக் காக்க வல்லது. குறைந்த பட்சம் இலக்கியவாதிகளாவது அந்த நீரோட்டத்தில் இணையவேண்டும். அரசியல் மற்றும் இலக்கியப் பத்திரிகைகள் இதற்கான முன் முயற்சியைச் செய்ய வேண்டும். ஃபிரான்சிலிருந்து வரும் பத்திரிகை அங்கு நடக்கும் கொடும் கொலைகள் - துவேசங்களைக் கண்டும்காணாமல் வரமுடியாது. இத்தகைய உரையாடல்தான் இலக்கியப் பரப்பை விரிக்கும்.

**புலம்பெயர்ந்தவர்களது இலக்கியம் தமிழகத்து இலக்கிய வாதிகளுக்கும் எழுத்துகளுக்கும் சவாலாக இருக்கும் நிலையை அடையமுடியுமா அல்லது அடைந்து விட்டதா?**

இது யார் பெரிது என்ற போட்டி சம்பந்தப்பட்ட விசயமில்லை. நீங்கள் அந்த அர்த்தத்தில் கேட்கவில்லை என்றே நினைக்கிறேன். இலக்கியத்தில் எத்தகைய அரசியல்-கலாசாரம் மேலோங்கி நிற்கிறது என்பது சம்பந்தப்பட்ட விசயமிது. இந்த அர்த்தத்தில் பார்த்தால் தமிழகத்தில் பக்கங்கள் நிரப்பும் அவதி வியாதியொன்று அனைத்து எழுத்தாளர்களையும் பிடித்துப் பேயாட்டம் ஆட்டிக்கொண்டிருக்கிறது. ஒரு புத்தகம் வந்திருக்கு என ஒரு எழுத்தாளர் சொன்னால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை பக்கத்தில் வந்திருக்கு என்ற கேள்விதான் முதற்கேள்வியாக வருகிறது. இந்தப் புதினத்தை விளங்கிக்கொள்வது கடினம். குறிப்பாகப் புதிய எழுத்தாளர்கள் சிறு குறிப்புகள் எழுதிப் பழகித்தான் எழுத்தாளர்கள் ஆகிறார்கள். எந்தப் பாடசாலைகளும் பெரும் கட்டுரைகள், கதைகள் எழுதப் பழக்குவதில்லை. ருவிட்டரில் அல்லது ஃபேஸ்புக்கில் குறிப்பு எழுதும் மனப்பான்மை மேலோங்கியிருப்பவர்கள் மத்தியில் பக்கங்களை நிரப்புவது கடினமாக இருக்கிறது. இதே சமயம் வாசிப்பவர்கள் கனத்த புத்தகங்களை வாசிக்கும் பழக்கமும் குறைந்துவிட்டது. சிறு புத்தகங்களையே விரும்பி வாங்கிப் படிக்கும் பழக்கம் அதிகரித்து வருகிறது. எழுத்துகளை வாசகர்கள் முழுமையாகப் படிக்க வைப்பது என்பது எழுதுபவர்களுக்குப் பெரும் சவாலாகவே இருந்து வருகிறது. இந்நிலையில் இலக்கிய விலாசம் காட்ட எனக் கனத்த பக்கங்களுடன் புத்தகங்கள் விடக் கட்டாயப்பட்டிருப்பதாக பல எழுத்தாளர்கள் உணர்கிறார்கள். இந்தப் போக்கு எல்லா மொழிகளிலும் இருக்கும் பிரச்சினை. அறுபதாயிரம் சொற்களுக்கு குறைந்த கதையை எந்த ஆங்கிலப் பதிப்பகமும் நாவல் என்ற பெயரில் வெளியிடாது. பதிப்பகங்கள் பிரித்து, மேய்ந்து, வெட்டிக்கொத்தி நாவல் வெளிவருவதற்குள் மாசக் கணக்காகிவிடும். தமிழ்ப் பதிப்புலகம் ஒரு ஆழக்கிணறு மாதிரி. தப்பித் தவறிச் சாதாரண எழுத்தாளர்கள் தாங்கள் எழுதியவைகளை அதற்குள் போட்டுவிட்டால் அவ்வளவுதான். அதுக்குப் பிறகு இருட்டுத்தான். என்ன நடக்குது? ஏது நடக்குது? என்ற விபரமற்று நிர்க்கதியாக நிற்கவேண்டியதுதான். சமூக வலைத்தளங்களில் குறிப்புகளை எழுதுவதோடு குதூகலப்பட்டுக்கொள்ள வேண்டியதுதான். சிறு பத்திரிகைச் சூழல் மாறிவிட்டது. பெரும் பதிப்பகங்கள் தமிழ் இலக்கியத்தைக் கைப்பற்றிவிட்டன அல்லது இலக்கியம் சார்ந்த பதிப்பகங்கள் பெரும் பதிப்பகங்களாக மாறிவிட்டன எனச் சொல்லலாம். இதனால் எழுத்து - வாசிப்பு மனநிலைகளும் மாறிக்கொண்டிருக்கின்றன. புத்தகத் திருவிழாக்களும் இந்த வியாபார ஊக்குவிப்பைப் பலப்படுத்துகின்றன. விற்பனையை நோக்கித் திரும்பி நிற்கும் எழுத்து தனது பண்புகளை மாற்றிக்கொண்டு செல்வதைப் பார்க்கலாம். எழுத்தாளர்கள் சுய விளம்பரம் மற்றும் புத்தக ஊக்குவிப்புகளைச் செய்வதற்குக் கடுமையான அழுத்தத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இதைத் திறம்படச் செய்பவர் யார் என்பது நல்ல எழுத்து எது நடைமுறை அழகியல் எது என்பவற்றைத் தீர்மானிக்கின்றன.

வியாபார எழுத்துகள் எல்லாக் காலங்களிலும் இருந்தவைதான். ஆனால் இன்று தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கும் மாற்றம் புதியது. இலக்கிய சூப்பர் ஸ்டார்கள் இது தான் இலக்கியம் என்று உலா வருவதும், சினிமா சூப்பர் ஸ்டார்கள் அவர்கள் புத்தக வெளியீட்டில் பங்குகொள்ளுவதும் தற்போதுதான் நடக்கத் தொடங்கியிருக்கிறது. இது எவ்வாறு லாப நோக்கோடு சம்மந்தப் பட்டதாக இருக்கிறது என்றும் - எவ்வாறு சந்தை நுழைந்துள்ளது என்பதையும் அவதானிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். உள்ளடக்கத்தில் ஏற்பட்டுவரும் மாற்றத்தை இந்த அடிப்படையில் இருந்தும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. சாரு நிவேதிதாவின் எழுத்தை விகடனுக்கு முன், விகடனுக்குப் பின் எனப் பிரித்துப் பார்த்தால் சில உண்மைகள் புலனாகும். வாசிக்க வைக்க வேண்டும் என்ற அவா ஒரு எழுத்தாளனை எங்கெல்லாம் தள்ளும் எனப் பார்க்கலாம். வாசக ஆதரவின்மை சாரு போன்ற 'கலகக்காரனை புரவலர்களை நாட வைத்துள்ளது' என ஒரு எழுத்தாளர் சுட்டிக்காட்டியிருந்தார். நல்லி குப்புசாமி செட்டியாரின் காலில் அவரை விழ வைத்துவிட்டார்கள் எனவும் - சொந்தக் காசில் புத்தகம் போட வைத்து விட்டார்கள் எனவும் பலர் நொந்து கொண்டது நினைவிருக்கும். ஆனால் இது வாசிப்பவரின் பிரச்சினை அல்ல.



**வியாபார எழுத்துகள் எல்லாக் காலங்களிலும் இருந்தவைதான். ஆனால் இன்று தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கும் மாற்றம் புதியது. இலக்கிய சூப்பர் ஸ்டார்கள் இது தான் இலக்கியம் என்று உலா வருவதும், சினிமா சூப்பர் ஸ்டார்கள் அவர்கள் புத்தக வெளியீட்டில் பங்குகொள்ளுவதும் தற்போதுதான் நடக்கத் தொடங்கியிருக்கிறது.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகச் சந்தை சார்ந்த பிரச்சினை. பொதுவாக எல்லா மொழிகளிலும் இலக்கியக்காரர் எதிர்கொள்ளும் பொதுப் பிரச்சினை.

தமிழகம் சந்தைக்கு வந்துவிட்ட அளவுக்கு ஈழம் வரவில்லை. இந்த அடிப்படையில் இருந்துதான் சில வித்தியாசங்களும் பிறக்கின்றன. சந்தையை முதன்மைப்படுத்தாத தேடல் இங்கு இன்னும் இருக்கிறது. சில ஈழத்து எழுத்தாளர்கள் படுக்கும்போது தமிழ்நாட்டுப் பக்கம்தான் தலை வைத்துப் படுக்கிறார்கள். ஒரு தமிழ்நாட்டு எழுத்தாளர் தன்னைப் பற்றிச் சொன்னதை மிகுந்த அலங்காரங்களோடு சொல்லிக் குதூகலித்திருந்தார் ஒரு எழுத்தாளர். அந்தப் போக்கு தமிழ்நாட்டு தோய்வு இவர்களின் உள்ளடக்கத்துக்குக் கொண்டு வந்து சேர்த்து விடுகிறது. தமிழ்நாட்டுச் சந்தைக்கு - இலக்கியத் தோய்வுக்கும் ஒரு உறவு உண்டு.

இது தவிர எழுத்தாளர் அனுபவங்கள் -மற்றும் கலாசாரத் தாக்கம் பற்றியும் நாம் கவனிக்க வேண்டும். தமிழ்நாட்டில் அங்கிருக்கும் எழுத்தாளர்கள் கரித்துண்டு நாவல் சூத்திரத்தைத் தாண்டிச் செல்ல மறுத்து வருவதற்கு ஒரு காரணம் உண்டு. ஒடுக்கப்பட்டு கடை நிலையில் வைக்கப்பட்டிருப்பவர்களின் போராட்டங்கள் அரசியற் தளத்தில் அவ்வப்போது எழுந்து கொண்டிருந்தாலும்கூட குறிப்பிடத்தக்க முறையில் அதிகாரத்தின் அடிமட்டம் அசைக்கப்படவில்லை. இலக்கியத்துக்குள் மாற்று இலக்கியங்கள் அனுமதிக்கப்படுவது என்பது ஒரு விசயம் - ஆதிக்கம் செலுத்துவது என்பது மறு விசயம். பிராமணியச் சொற்களுடன்-ஆணாதிக்கப் பார்வையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் பல ரஷ்யப் புத்தகங்களை இன்றும் கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள் எழுத்தாளர்கள். அவர்கள் ஆங்கிலத்தில் படித்துக் கொண்டாடவில்லை தமிழில் படித்துத்தான் கொண்டாடுகிறார்கள் என்பதைக் கவனிக்க. அந்த அதிகாரத்தின் அழகியல்தான் இன்னும் கோலோச்சுகிறது. யுத்தத்தால் நொறுக்கப்பட்ட அகதியாகத் துரத்தப்பட்ட அழகியல் மாற்று எழுத்தை தொடர்ந்து தேடுவதில் இருந்து இது மாறுபட்டது. ஒரு சில தமிழகத்து எழுத்தாளர்கள்தான் இந்த அந்தரத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள். அவர்களை மையமாக வைத்த இலக்கியக் கதையாடல் இல்லை.

இத்தகைய புள்ளிகளின் அடிப்படைகளில் இருந்துதான் பிரித்துப் பார்த்தலையும் சேர்த்துப் பார்த்தலையும் நாம் செய்யவேண்டியிருக்கிறது. தமிழகத்தில் புதிதாக எழுதத் தொடங்கியிருக்கும் எழுத்தாளர்கள் தம்மைச் சுற்றிக் கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் இலக்கிய ஆச்சிரமங்களை உடைக்க வேண்டும். இல்லையேல், அவர்களும் அந்தச் சூறாவளிக்குள் இழுபட்டு நாசமாய் போய்விடும் ஆபத்திருக்கிறது. அந்த எதிர்ப்பு எழுத்தாளர்களுக்குமாகச் சேர்த்துத்தான் நாம் ஈழத்து எழுத்துகள் சிலதைத் தூக்கிப் பிடிக்க வேண்டியிருக்கிறது.

**புத்தகச்சந்தை வாசிப்பைப் பரவலாக்கியிருக்கிறது என்கிறார்கள் அல்லது அச்சு இணைய ஊடகங்களின் பெருக்கம் எழுத்தாளர்களின் தேவையை அதிகரித்துள்ளது போன்ற சூழல் தீவிர இலக்கியச் செயற்பாட்டிற்கு எதிரானது என்கிறீர்களா?**

நாம் புத்தகக் கண்காட்சிகளுக்கு எதிரியல்ல. புத்தக உற்பத்தியில் இருக்கும் முரணையே சுட்டிக் காட்டுகிறோம். லாபத்தை முன்னிலைப்படுத்திய உற்பத்தி படைப்பைப் பண்டமாக மட்டுமே பார்க்கிறது. இருப்பினும் 'பிரபலமாகும்' தகுதியுடைய உள்ளடக்கம் இலாபத்தை உறுதியளிக்கும். ஆனால் அத்தகைய உள்ளடக்கத்தை இலாபத்தால் மட்டும் ஊக்குவிக்க முடியாது. சந்தையால் உந்தப்பட்ட குப்பைகளுக்குள் இரத்தினத்தைக் கண்டுபிடியுங்கள் என வாசகர்களை ஏவி விடும் திருவிழாக்களாகக் கண்காட்சிகள் குறுகிப் போய்விடுவதை எதிர்க்க வேண்டியுள்ளது. படைப்பு விலையில் இருந்து விடுதலையடைய வேண்டும்.

அதை நோக்கி நகரும் எழுத்தாளர்கள் பல சுயதியாகங்களைச் செய்யவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்குகிறது மேற்கண்ட முரண் நிலை. சந்தையின்றிப் படைத்தலும், நுகர்தலும் வளரும் சாத்தியமற்ற அதே சமயம் சந்தை படைத்தலையும், நுகர்தலையும் குறுக்குகிறது என்ற முரண் நிலை பற்றியே நாம் இங்கு பேசுகிறோம்.

**1990 களின் பிற்பகுதியில் பாரிஸில் நண்பர்களுடன் இலக்கிய-அரசியல் கலகக் குரலாக ஒலித்தீர்கள் என்பதை அப்போதைய உங்களது எழுத்துகளைப் படிக்கும் போது தோன்றுகிறது. இப்போது அந்தக் கலகச் செயற்பாடுகளை எப்படி மதிப்பிடுகின்றீர்கள்? இலக்கியத்தில் அவற்றின் இடம் என்னவாக இருக்கிறது ?**

கலகம் செய்யாமல் எழுத முடியாதிருக்கும் நிலைதான் அக்காலத்திலும், இக்காலத்திலும் இருக்கிறது. சுய தடைகள் - கலாசாரம் சார்ந்த தடைகள் போன்ற பல்வேறு தடைகளைத் திணித்த பிறகுதான் கலை செய்யலாம் என்ற நிலை உடைய வேண்டும். அதற்கு கலகம் தேவை. அப்பா-அம்மா, சொந்தக்காரர்கள் மற்றும் சமூகம் என்ன சொல்லும் என்றெல்லாம் சிந்தித்து எழுதுபவர் எழுதாமல் இருந்து விடுவதே மேல். இந்தச் சொல்லை எழுதலாம் - அந்தச் சொல்லை எழுத முடியாது எனச் சிந்திப்பின், மொழியின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைகளைத் தொட முடியாது. அதற்கும் கலகம் வேண்டும். ஓரினச் சேர்க்கை என்பது முதலாளித்துவ சதி என எழுதப்பட்டுக்கொண்டிருந்ததை கேள்வி கேட்காத சூழ்நிலையில் - சாதியம் புலம்பெயர்ந்த தேசங்களில் தமிழர்களால் பார்க்கப்படுவதில்லை என்பதை சொல்லிக்கொண்டிருப்பதிலும் அர்த்தமிருக்கிறது எனப் பேசப்பட்ட காலத்தில் - அனைத்து மதிப்பையும் மறுக்கும் கதைகள் பிரசுரத்துக்கு தகுதியில்லை என்று சொல்லப்பட்ட காலத்தில் - எழுத்துக்கு வரும் ஒரு ஆள் எப்படிக் கலகம் செய்யாமல் இருக்க முடியும்? ஒருவன் ஒருத்திக்கு- காதல் புனிதம் என்றெல்லாம் எழுதும் ஆசை இருந்திருந்தால் வைரமுத்து மாதிரி கோடம்பாக்கத்தைச் சுத்தி, சுத்தி வந்திருப்போம். அப்படியான பிற்போக்கு ஆசை ஒரு காலத்திலும் இருந்ததில்லை. அதனாற்தான் கலகத்துக்குத் தள்ளப்பட்டோம். தனிமைப்பட்டு வாட ஆசைப்படும் வித்தியாசமான வியாதி அது.

இலக்கியத்துக்கு என்று ஒரு தனி வாழ்தல் இல்லை. எழுத்தாளரும், அவரைச் சுற்றிய சமூகமும் அற்ற எழுத்து என்ற ஒன்றில்லை. தொட முடியாத திசைகளைத் தொட அவாப்படுவோர் அதை மறுக்கும் அனைத்து மதில்களிலும் முட்டித்தான் ஆகவேண்டும். தொடுவதற்கு வசதியானவைகளைத் தள்ளி வைத்தும் இயங்கவேண்டியிருக்கிறது. இவ்வாறு புடம் போடப்படாத சொற்கள் நமக்குத் தேவையில்லை என்று தனிப்பட்ட எண்ணங்கள் இன்றும் உண்டு. வருகுதா?இல்லையா? என்பது வேறு விசயம். ஆனால் அத்தகைய உடைந்த இலக்கியத்தை வருவிக்கப்படும் பாடுகளிவை. நீங்களும் சேர்ந்து கொள்ளுங்கள். கலகம் செய்வது எழுத்தாளர்களுக்கு அழகு!

**ஆனால் இப்போது காத்திரமான விமர்சனங்களைப் பெரிதாகக் காணமுடியவில்லையே? பரஸ்பரம் பாராட்டிக் கொள்வதில்தானே முனைப்போடு இருக்கிறார்கள்? வரும் ஓரிரு விமர்சனங்களும் அரசியல்சார்ந்ததாகவே இருக்கிறது? இது நம் மதிப்பீடுகளின் வீழ்ச்சியா? அங்கீகாரங்களிற்கான அலைச்சலா?**

விமர்சனங்கள் உட்பட அனைத்து எழுத்துகளும் ஏதோ ஒரு வகை அரசியல் சார்ந்தது தான். ஆய்வுகளை முன்வைத்து ஊக்குவிக்கவேண்டிய பல்கலைக்கழகங்கள் தனிமைப்பட்டு நிற்கின்றன. ஒவ்வொரு வருடமும் எத்தனையோ டாக்டர் பட்டங்கள் வழங்கப்படுகிறன்றன. எத்தனையோ விமர்சனங்களும் ஆய்வுகளும் பல்கலைக் கழகச் சுவர்களுக்குள் நடைபெறுவதாக சொல்லப்படுகிறது. ஆய்வுகளுக்கும், விமர்சனங்களுக்கும் குறைவில்லை. ஆனால் இந்த அக்கடமியாவுக்கும், ஆக்க இலக்கியத்துக்கும் தொடர்புகள் இல்லை. பல்கலைக்கழகப் பிதா மக்கள் இதைத் திட்டமிட்டு அறுத்துக்கொண்டு இருக்கிறார்களோ எனச் சந்தேகப்படும் அளவுக்கு சுத்த சுயநலனுடன் இயங்குகிறார்கள். ஒரு வகையில் முதலாளித்துவம் இங்கு இன்னும் முழுமையாகப் புகவில்லை எனச் சொல்லத் தோன்றுகின்றது. நிலப் பிரபுத்துவ உறவு முறைபோன்ற மாமன்-மச்சான் உறவு முறையில் நகரும் இந்த நிலைப்பாடு தோய்வு உணர்வை ஏற்படுத்துகிறது. அங்கீகாரங்களின் அலைச்சல் - கல்விசார் விருப்பு எனப் பல காரணங்களை நீங்கள் அடுக்க முடியும்.

இலக்கியம் சார்ந்த இயங்குதளங்கள் உருவாகி இதை உடைக்க முடியும். சிறு பத்திரிகைகள் இந்த வரலாற்றுக் கடமையை நிறைவேற்றி வந்திருக்கின்றன. ஆக்காட்டியும் அதைச் செய்ய வேண்டும்.

**முன்னர் இலக்கியத்தில் தீவிரமாக இயங்கிய நீங்கள் இப்போது முழு நேர அரசியற் செயற்பாட்டாளர். இலக்கியவாதிக்கு நேரடியான அரசியற் செயற்பாடு அவசியமானதா?**

எம்மைச்சுற்றி நடப்பவற்றை உன்னிப்பாகப் பார்ப்பது அவசியமானது. அந்தப் பார்வை உங்களை அரசியல் மயப்படுத்துகிறது. ஏற்றத் தாழ்வுகளையும் மனிதக் கொடுமைகளையும் எழுதுவது மட்டும்தான் என் வேலை எனப் பல எழுத்தாளர்கள் ஒதுங்கி விடுகிறார்கள். 'அந்த' மக்களுக்கு தாம் ஒரு 'குரலாக' மட்டும் இருந்து விடுகிறோம் என்கிறார்கள். இந்தப் போக்கைப் பல்வேறு சமூகக் காரணங்கள் தீர்மானிக்கின்றன. அதை ஒற்றைப் பரிமாணப் பார்வையில் நாம் பார்க்க முடியாது. அதே சமயம் யாரும் இந்த முரண் நிலைக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. சமூகம் இயங்கும் விதம் பற்றி அறிதலை நகர்த்துபவர்கள் தாமும் செயற்பாட்டின் பகுதியாக இருக்கமுடியுமே தவிர அதைத் தனிமைப்படுத்த, எழுத்தும் ஒரு 'செயற்பாடுதான்' என்று பேச முடியாது. எல்லா எழுத்தாளர்களும் ஏதோ ஒரு வரலாற்றுப் போக்கின் - ஏதோ ஒரு வர்க்கப் போரின் பகுதிகளாகத்தான் இருக்கிறார்கள். சிலர் தாம் எப்பக்கம் நிற்கிறோம் என்பதைப் பிரக்ஞையுடன் தெரிவு செய்துகொள்கிறார்கள். சிலர் காற்றின் போக்கில் இழுபடுகிறார்கள்.

கட்சி ரீதியான செயற்பாடு பற்றி இங்கு பேசவில்லை. தாம் அரசியற் செயற்பாட்டாளர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பல எழுத்தாளர்கள் இருப்பதை நீங்கள் அவதானிக்கலாம். ஈழத்து எழுத்தாளர்கள் மத்தியில் இது அதிகமாக இருப்பதற்குக் காரணம் யுத்தம். யுத்தம் வரலாற்றுப் போக்குகளையும் - பிரக்ஞையையும் செறிவடையச் செய்யவல்லது. அரசியல் சார்ந்த இலக்கியம் எழுதாத ஒரு ஈழத்து எழுத்தாளரை நீங்கள் காட்ட முடியாது. யுத்தம் பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாவல்கள் வெளிவந்து கொண்டிருப்பது விபத்தல்ல. விரும்பியோ, விரும்பாமலோ எழுத்தாளர்கள் அரசியலுக்கு இழுக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். அரசியல் நீக்கம் செய்யப்பட்ட நிலை ரூ அல்லது நடுநிலை என்ற எதுவும் கிடையாது. அப்படி எதுவும் இருந்தால் சொல்லித்தாருங்கள். நாம் எந்தப் பக்கம் நிற்கிறோம் என்ற முடிவை பிரக்ஞா பூர்வ முடிவாகச் சிலர் எடுக்கிறார்கள். அதையே நானும் செய்வதால் அது சரி என நினைக்கிறேன். இதன் தொடர்ச்சிதான் அமைப்புச் சார்ந்த செயற்பாடும் - முழு நேர அரசியற் செயற்பாடும்.

அமைப்பு மயப்படுவது மூளையை மந்தப்படுத்திவிடும் என்று விசர்த்தனமாகக் கதைக்கிறார்கள் சிலர். தங்கள் மூளையை அகல விரித்து வைத்துக்கொண்டா அதைப் பேசுகிறார்கள்? எல்லா விதத்திலும் தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டு கலாசாரத்தின் ஆயிரத்தெட்டுக் கட்டுப்பாடுகளுக்கு அடிமைகளாக இருந்து கொண்டு சுய தடைகளைச் செய்து கொண்டு வாழும் இவர்களிற் பலர் அமைப்பு மயப்படுவதை மந்தைக்கூட்ட நடவடிக்கையாகப் பார்ப்பது நகைப்புக்கிடமானது. அதுவும் ஒரு அரசியல்தான். ஒடுக்குதலுக்கு எதிரான அமைப்பு மயப்படுதல் என்பது முழுச் சுதந்திரத்துக்கான அவாவில் இருந்து பிறப்பது என்பதை இவர்கள் அறிதல் வேண்டும். கட்டுக்கடங்காத மனம் தான் சோசலிஸக் கட்சியை நோக்கி நகர்த்துகிறது. அந்த வேலையை உருப்படியாகச் செய்வதானால் முழு உழைப்பையும் வழங்க வேண்டும் என்ற நோக்கில்தான் முழு நேர அரசியலில் ஈடுபடவேண்டியதாயிற்று. இதை எல்லோரும் செய்யவேண்டிய அவசியம் என்று சொல்லவில்லை. ஆனால் அது நோக்கிய நகர்வு எப்படி நிகழ்கிறது என்பதைச் சொல்கின்றேன்.

வரலாற்று ஓட்டத்தில் தன்னை வைத்துக்கொள்ளும் எந்தக் கலைஞரும் தப்ப முடியாத அசைவுகளில் இதுவும் ஒன்று. வலதுசாரிய அதிகாரச் சக்திகள் மீது கவர்ச்சி கொண்டு தங்களைத் தாங்களே தணிக்கை செய்து அதிகாரத்தின் அங்கீகாரத்துக்காக இரகசியமாக ஏங்கும் எழுத்துகள் எதுவும் கால ஓட்டத்தில் நின்று பிடிப்பதில்லை என்ற உண்மையை எழுதுபவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். அரசியற் செயற்பாட்டில் இருந்தால் எழுத முடியாது என்ற அச்சத்தை அவர்கள் துடைத்தெறிய வேண்டும். அரசியற் செயற்பாடு எழுத்தைச் செம்மைப்படுத்த வல்லது. இலக்கியவாதிக்கு அரசியற் செயற்பாடு அத்தியாவசியமானது என்று கூடச் சொல்லலாம். முழு நேர அரசியல் தேவையில்லை. ஆனால் அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலை என்ற பாவனையும் தேவையில்லை. உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசியல் ஊடுருவாத இலக்கியம் என்று ஒன்று இருக்கிறதா?

செயற்பாடு என்பது அறிதல். நல்ல கலைஞருக்கு மந்த நிலை சாத்தியமில்லை. சமுக ஓட்டத்தில் சரிவது தவறில்லை. ஓடிக்கொண்டு எழுதுவதுதான் எழுத்து. இவ்வாறு திட்டவட்டமாகச் சொல்வது சிலருக்கு ஆச்சரியமானதாக இருக்கலாம். அது இலக்கியமில்லையா? இது இலக்கியமில்லையா? எனப் பல உதாரணங்களைக் காட்டலாம். இங்கு சொல்லப்படும் கருத்து விரித்துப் பேசப்படாமல் முழு விளக்கத்தை நோக்கி நகர்தல் சிரமம். இது பற்றிய விவாதம் வேண்டும்.

**ஆனால் நம் சூழலில் அமைப்பாகிச் செயற்படும் போக்கு குறைந்துள்ளதே? இது மக்கள் உதிரிகளாக்கப்பட்டதன் விளைவா? அல்லது அதற்கான தேவை இப்போது இல்லையா?**

எங்கே குறைந்துள்ளது. நாற்பதுபேர் இருக்கும் இடத்திலும் நாலு அமைப்பிருக்கும் நிலைதான் இருக்கிறது. இலக்கியச் சந்திப்பு என்று இயங்குவதும் அமைப்பு சார் செயற்பாடுதான். ஏதோ ஒரு அமைப்புச் சார்ந்துதான் பெரும்பான்மையானவர்கள் இயங்குகிறார்கள். இது ஒருவகையில் அரசியற் பிரக்ஞை அதிகரித்த நிலையைச் சுட்டி நிற்கிறது. ஒரு இடது சாரிய அல்லது சோசலிச அமைப்பு என்பது வேறு விடயம். பொதுவாக மக்கள் மத்தியில் இத்தகைய அமைப்புக்கு எதிரான போக்கு இருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. வரலாற்றுக் காரணங்கள் அதில் முதன்மையானவை. சோசலிஸம் என்ற பெயரில் நிகழ்ந்த சனநாயக மறுப்புகளும், கொலைகளும், ஏமாற்றுக்களும் சோசலிஸ்டுகளின் தலையில் கனத்துக்கொண்டிருக்கும் வரலாற்றுச் சுமைகள். இன்றும் என்ன நடக்கிறது எனப் பாருங்கள். சோசலிஸ்ட் என்ற பெயரில் பழைய லங்கா சம சமாஜ கட்சியும், கம்யூனிஸக் கட்சியும் மகிந்த ராஜபக்ஷவைத் திரும்பவும் அதிகாரத்தில் இருத்தப் படாத பாடுபட்டு வருகின்றன. தன்னைச் சோசலிஸ்ட் என்றும் ட்ரொட்ஸ்கிஸ்ட் என்றும் சொல்லிக்கொள்ளும் வாசுதேவ நாணயக்கார படும்பாட்டைப் பாருங்கள். மார்க்ஸியவாதிகள் எனத் தம்மைச் சொல்லிக்கொள்ளும் ஜே.வி.பி யினர் எவ்வாறு இனவாதம் குளிர்காயும் இடமாக இருக்கிறார்கள் என்றும் பார்க்கலாம். இப்படியிருக்கும் நிலையில் இந்த அமைப்புகளை நோக்கி மக்கள் எப்படிப்போக முடியும்? இது தவிர பல்வேறு கம்யூனிசக் கட்சிகள், சனநாயகம் மறுத்த கட்சி முறையைக் காலங்காலமாகக் கடைப்பிடித்து வந்திருக்கின்றன. இன்றும் அவ்வாறே. இக்கட்சிகளுக்குள் சனநாயகம் இருந்ததில்லை. சனநாயக மத்தியத்துவம் என்ற பெயரில் இவர்கள் அதிகாரத்தைப் பாதுகாத்து வந்திருக்கின்றனர். இதுவும் ஒரு பெரும் பலவீனம். 1989ம் ஆண்டு ஸ்டாலினிய சரிவின் பின்பு ஏற்பட்ட முதலாளித்துவத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிக் கொண்டாட்டக் களிப்பு கடுமையான பிரச்சாரத்தைச் சமூகத்துக்குள் விதைத்துள்ளது. இன்றைய பொருளாதார நெருக்கடி நிலைதான் மீண்டும் சமூகம் சார்ந்த அமைப்புகள் பற்றிய கேள்விகளை எழுப்பியுள்ளது.

இந்த ஆரம்ப காலத்தில் அமைப்புகள் அற்ற திரட்சியைத்தான் மக்கள் முதலில் நாடி நிற்கின்றனர். கிரேக்கத்தில் 'சிறிசா' ஒரு கூட்டமைப்பாக உருவாக்கப்பட்டது. அதேபோல் 'ஸ்பானிய இன்டிக்னாடா' இயக்கம் தெரு இயக்கமாகவும், அமைப்புகள் மற்ற மக்கள் சனநாயக இயக்கமாகவும் முன்னிறுத்தப்பட்டது. ஃபிரான்சில் நடக்கும் நுயி டெபு - இரவின் எழுச்சி நிகழ்வுகளிலும் இந்தப் பண்பைக் காணலாம். இதைத்தான் தெரு ஒழுங்கமைக்கும் என்று தத்துவமாக்க முயன்றிருந்தனர் பழைய சின்டிகலிஸ்டுகள். ஆனால் இதன் தொடர்ச்சி எப்படி நகருகிறது என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். ஒரு கட்சியாகி இறுகிய சீரமைப்பின் தொடர்ச்சியாகவே சிறிசா கிரேக்கத்தில் ஆட்சியைப் பிடித்தது. இன்டிக்னாடா இயக்கம் பொடிமஸ் அமைப்பாகியது. தற்போது ஃபிரெஞ்சு சனாதிபதியைவிட மக்கள் மத்தியில் அதிக பிரபலமானவராக இருக்கிறார் மெலன்சோன். போர்த்துக்கலில் பலம்பெறும் இடதுசாரிய ஒன்றியம் - இங்கிலாந்து முமன்ரம் என அடுக்கிக்கொண்டே போகலாம். தானாக இயங்குவோம் என்ற ஒவ்வொரு முனைப்பும் எவ்வாறு அமைப்பு மயப்படுகிறது என்பதை வரலாறு முழுக்க நாம் பார்க்கலாம்.

மக்கள், அமைப்பு மயப்படாமல் அரசியல் எதிர்ப்பு முனைப்பு குவிவது சாத்தியமில்லாமல் இருக்கிறது என்ற அடிப்படைக் கேள்வியைக் கேட்டு நாம் சிந்திக்கவேண்டும். தோமஸ் கோப்சின் லெவியாத்தானில் இருந்து பல சிந்தனையாளர்கள் இந்தப் போக்கு பற்றி ஆராய்ந்திருக்கின்றார்கள். தனிமனித அரசியல் என்று எதுவும் கிடையாது. அரசியல் என்பது ஏதோ ஒரு அடிப்படையில் பலர் கூட்டாக இணைவதாகவும் இருக்கிறது. இதுதான் அமைப்பாகிறது. அதே சமயம் இவ்வாறு அமைப்பாகும் குழுச் சுதந்திரத்தை இழக்கக்கூடாது என அதற்கு எதிரான விதிகளையும் உள்வாங்கவேண்டும் என இடதுசாரிகள் வாதிடுகிறார்கள். அமைப்பு மயப்படும் அதே சமயம் தனிமனிதக் கருத்துச் சுதந்திரங்களின் - வெவ்வேறு அரசியற் கேள்விகளின் சுதந்திரங்களின் உரிமைகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இதே வேளையில் தாம் இணைவதற்குக் காரணமான புள்ளியை அடையும் நோக்கிலும் அமைப்பு திட்டவட்டமாக நகரவேண்டியிருக்கு. இந்தச் சிக்கலைச் சனநாயக மத்தியத்துவம் என்ற பெயரில் ஒழுங்குபடுத்த முயற்சித்தார் லெனின். கையைத் தூக்கும் குறுகிய சனநாயக வடிவத்துக்கு அப்பால் பங்குபற்றும் சனநாயக முறைகளையும் விவாதங்கள் உரையாடல்கள் மூலம் கொள்கை நகர்த்தும் முறையையும் - முன்னோக்கைத் தயாரிப்பதன் மூலம் மாற்றங்களுக்கு ஏற்ப கட்சியின் திசைகள் ஒவ்வொருபொழுதும் புதுப்பிக்கும் தன்மை பற்றியும் இன்று பல இடதுசாரிய கட்சிகள் சிந்தித்துச் செயற்படுகின்றன. ஒரு சொட்டு சனநாயகத்தையும் தமது உறுப்பினர்களுக்கு வழங்காத முதலாளித்துவ கட்சிகள் இடதுசாரிகள் மத்தியில் இருக்கும் சனநாயகப் பாரம்பரியம் பற்றிப் பேச அனுமதிப்பதில்லை. அதனால் இதுபற்றி மக்கள் மத்தியில் விளக்கங்கள் இல்லை. சனநாயக மறுப்பு முதலாளித்துவக் கட்சிகளில் இணைவதோ அல்லது அவற்றுக்கு வாக்களிப்பதோ கேள்விக்கு அப்பாற்பட்ட சமூகச் செயற்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக பொது அறிவாகக் கருதப்படுகிறது. அதே சமயம் முதலாளித்துவ ஒழுங்குமுறையைக் கேள்வி கேட்கும் அமைப்புப் பற்றிப் பேச்சு எழும்பொழுது கொடிய பிரச்சாரங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இந்தப் பிரச்சாரங்களை அவர்களின் ஊடகங்கள் செவ்வனே செய்கின்றன. முழுக்க முழுக்க முதலாளித்துவக் குப்பைகள் கொட்டப்படும்பொழுது வெறுமனே ஏற்றுக் கொள்ளும் மனம் - இடதுசாரியக் கருத்துகள்

□□□□

**முதலாளித்துவ அமைப்புக்கு அப்பால் இனி வேறு வகை அமைப்பு கிடையாது என்ற அர்த்தத்தில் வரலாறின் முடிவை அறிவித்த இதே புகாயாமா இன்று முதலாளித்துவத்தின் போதாமைகள் பலதை ஏற்றுக் கொள்ளக் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார்.**

□□□□





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்படும்பொழுது மட்டும் அதை ஏன் பிரச்சாரம் எனப் பார்க்கிறது?

சமூகத்துக்குள் இருக்கும் இந்தப் பிரக்ஞை போதாமைதான் இடதுசாரிய அமைப்புகளின் வளர்ச்சியை மட்டுப்படுத்துகிறது. போராட்டத் தருணங்கள் உண்மைகளை உடைத்துக்காட்டி இந்த அமைப்புகளை வளர்த்தெடுக்கின்றன. சேவைகளுக்கு எதிரான போராட்டங்கள் தான் 'ஜெரமி கோர்பின்' என்ற இடதுசாரியை இங்கிலாந்தில் எதிர்க்கட்சி ஆக்கியது. ஆக அமைப்புச் சார்ந்த கேள்வி வெறுமனே அகம் சார்ந்த கேள்வி மட்டுமல்ல. பல்வேறு புறநிலைக் காரணிகளின் தாக்கத்துக்கு தொடர்ந்து உள்ளாக்கப்படும் சமூகத்தின் அசைவு சார்ந்த கேள்வியாகவும் அது இருக்கிறது.

***வரலாற்றில் மார்க்ஸியத்தின் பணி முடிந்துவிட்டது. தற்போது தாராளமயப்படுத்தப்பட்ட முதலாளித்துவ ஜனநாயகம் தோன்றி இருக்கிறது. இதன் விளைவாக இனி உலகளாவிய ஜனநாயகமும் சுதந்திரச்சந்தையும் போன்று இது ஒரு நற்செய்தி என்கிறாரே பிரான்சிஸ் புகாயாமா?***

'ஆம் நான் சொன்னது கொஞ்சம் மிகைப்படுத்தப்பட்ட கருத்தே' என 61 வயதில் 2004ம் ஆண்டில் புகாயாமா ஏற்றுக்கொண்டிருக்கிறார். 'வரலாற்றின் முடிவும் கடைசி மனிதனும்' என்ற அவரது புத்தகம் மில்லியன் கணக்கில் அள்ளிக் கொட்டியிருந்தது. எங்கே அந்தக் காசு? புத்தகம் வாங்கிய அனைத்து வாசகருக்கும் அவர் பணத்தைத் திருப்பிக்கொடுக்கவேண்டும்.

சில மனிதர்களின் பெயரைக் கேட்டால் மூக்கின்மேல் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிடுகிறது. பிரான்சிஸ் புகாயாமா என்ற பெயரும் அதில் ஒன்று. சுயநலம்-சுயலாபம் என்பதற்கு அப்பால் இவரது சிந்தனை சென்ற வரலாறு இல்லை. ஸ்டாலினிய சோவியத் ரஷ்யாவின் சரிவு 1989களில் ஆரம்பித்த பொழுது அங்கிருந்து மாபெரும் வளங்களைச் சூறையாடப் பல கழுகுகள் பறந்து கட்டி ஓடின. அவர்களின் ஈவிரக்கமற்ற நடைமுறைகளை நியாயப்படுத்த எழுந்த பொருளாதாரக் கருத்துகளின் பிதாமக்கள் சிலர் அனைத்து முதலாளித்துவ ஊடகங்களிலும் கடுமையாக ஊக்குவிக்கப்பட்டனர். ஒரு இரவில் பில்லியனர்கள் உருவாகிக் கொண்டிருந்த நிலைமை சோவியத்தின் சரிவு ஆகியன சந்தைப் பொருளாதாரத்தை முதன்மைப்படுத்தியவர்களின் பலத்தைக் கூட்டியது. 'நாம் வென்றுவிட்டோம்' என வோல் ஸ்றீற் ஜேர்னல் அறிவித்துக்கொண்டது. முதலாளித்துவ வெற்றிப்பெருமிதம் ஒரு பக்கம் சூறையாலை முடுக்கிவிட்டது. மறுபக்கம் முற்போக்காளர் மீது தத்துவார்த்த முற்றுகை நிகழ்த்தப்பட்டது. லாபம் என்ற ஒரே ஒரு காரணத்துக்காக இதைச் செய்த

## தமிழில் மட்டும் படிக்கும் ஒருவர் மார்க்ஸியத்தை அறிந்துகொள்வதோ அல்லது சோசலிஸம் என்றால் என்ன என்பது பற்றிய விஞ்ஞானபூர்வ விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதோ சாத்தியமில்லை.

பிற்போக்குவாதிகளில் ஒருவர்தான் புக்காயாமா. நியோகொன்சர்வேட்டிவ் என அழைக்கபட்ட அதி வலதுசாரிய குழுவின் சார்பிலேயே இவரது பிரச்சாரங்கள் ஆரம்பித்தன. அவர்களுக்காகப் பேசுகிறார் என்ற ஒரே காரணத்துக்காகத்தான் இவர் உலகளவில் தூக்கி நிறுத்தப்பட்டார்.

நயோமி கிலைனின் 'ஷொக் டொக்ரின்' (அதிர்ச்சி. தத்துவம் / வைத்தியம்) என்ற புத்தகத்தைத் தயவு செய்து படியுங்கள். அனைவரும் கட்டாயம் படிக்கவேண்டிய புத்தகமது. புத்தகம் முடிவதற்குள் உங்கள் மனம் கனத்து வெடித்துவிடும் அபாயம் உள்ளது. நியோகொன்களின் கேவலத்தின் குறுக்கு வெட்டு முகத்தைக் காட்ட முயன்றிருப்பார் நயோமி கிலைன்.


சனநாயகம் என்ற பெயரில் பினாத்திக்கொண்டு திரிந்த புகாயாமா ஏன் சர்வாதிகாரி கடாபியின் ஆலோசகராக இருந்தார்? எதற்காகப் பெரும் பெரும் வியாபாரங்களிடம் இருந்து பணம் பெற்றார் என்றெல்லாம் இவர்களைப் பார்த்து நாம் கேட்டுவிட முடியாது. இவர்கள் சுரண்டுவதும் பொய்களால் அதை மறைப்பதும் தமது பிறப்புரிமைபோல் நடந்துகொள்கிறார்கள்.

இந்த லட்சணத்தில் இந்தப் பிசாசு மார்க்ஸியத்துக்கு அடி போடுகிறது. இன்னொரு விதத்தில் இது மார்க்ஸியத்தின் வெற்றி. முதலாளித்துவம் இருக்கும் வரையும் தன்னை யாரும் மறந்துவிட முடியாது என மார்க்ஸ் தெனாவட்டாகப் பேசியது இதை அறிந்துதான் போலும். வரலாறு பற்றிய பழைய பார்வையைக் கேள்வி கேட்டவர்களில் முதன்மையானவர் மார்க்ஸ். தத்துவத்தின் வரலாற்றை முடித்து வைத்து அதைச் செயலுடன் இணைத்தவர் மார்க்ஸ். அதன் தொடர்ச்சியாகப் பல்வேறு கருத்துகளை வளர்த்தெடுத்த பெரி ஆண்டர்சன் போன்றவர்கள் இருக்கிறார்கள். இவற்றை வெட்டி ஒட்டித் தனது கெட்டிக்காரத்தனத்தைக் காட்டிக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைந்தவர் புகாயாமா. அவரது அசல் கருத்து அமெரிக்கச் என்று ஒன்றிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.



◆ அமிர்தலிங்கம்

முதலாளித்துவ அமைப்புக்கு அப்பால் இனி வேறு வகை அமைப்பு கிடையாது என்ற அர்த்தத்தில் வரலாறின் முடிவை அறிவித்த இதே புகாயாமா இன்று முதலாளித்துவத்தின் போதாமைகள் பலதை ஏற்றுக்கொள்ளக் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார். வரலாறு அந்தப் பணியை நிறைவேற்றியிருப்பது ஒருவித முரண்நகை தான். முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடி இன்று பல்வேறு முதலாளித்துவ நிறுவனங்களின் உள்ளசைவுகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது. இன்று அதிகம் விற்பனையாகும் பொருளாதாரம் சார் புத்தகங்கள் எவை? தோமஸ் பிக்கட்டியின் புதிய புத்தகத்துடன் பழைய ஆடாம் சிமித், கார்ல் மார்க்ஸ், கயாக், கெயின்ஸ் ஆகியோர் போட்டியிடுகின்றனர். பொருளாதார நெருக்கடியை விளங்கிக்கொள்ள இவர்களிடம் திரும்பிச் செல்லப் பணிக்கப்பட்டிருக்கிறோம். மீண்டும் மார்க்சியத்தை படிப்பிக்கும் பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்து என இங்கிலாந்து பல்கலைக்கழகமொன்றில் மாணவர்கள் போராட்டம் செய்யும் அளவுக்கு நிலைமை வளர்ந்துள்ளது.

உலகின் முதன்மை முதலாளித்துவ நாடுகளாகக் கருதப்படும் இங்கிலாந்திலும் ,அமெரிக்காவிலும் நிகழ்ந்திருக்கும் மாற்றத்தைப் பாருங்கள். வர்க்க அடிப்படையில் சமூகம் பிழந்து கிடப்பதை இங்கிலாந்தில் அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. வறிய மக்கள் சார் கொள்கைகள் முன்னெடுக்க இருப்பதாக பாசாங்கு காட்ட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார் வலதுசாரியக் கட்சித் தலைவரான தற்போதைய பிரதமர். முதலாளிகளைத் தாக்கி இந்தளவுக்குப் பேசிய வரலாறு கன்ஸர்வேட்டிவ் கட்சிக்கு முன்பு இருந்ததில்லை. வலப்பக்கம் இருந்து நடுப்பக்கம் நோக்கி அவர்கள் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் எனச் சில வலதுசாரியக் கருத்தாளர்கள் கவலைப்படும் அளவில் இருக்கிறது நிலவரம். நான் ஒரு சோசலிஸ்ட் - முதலாளித்துவத்துக்கு எதிரானவன் என்று பகிரங்கமாகச் சொல்லும் ஜெரமி கோர்பின் எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிறார். அவரது பதவியைப் பறிக்கப் போட்டியிடும் ஓவன் சிமித், தான் சோசலிஸப் புரட்சிக்கு ஆதரவானவன் எனப் புலம்பும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். கோர்பினை விட தான் அதி தீவிர இடதுசாரி எனக்காட்டிப் பதவியைப் பிடிக்க முயற்சிக்கிறாரவர். அமெரிக்காவில் வரலாறு காணாத அளவு பெருங் கூட்டம், தன்னைச் சோசலிஸ்ட் எனப் பகிரங்கமாக அழைக்கும் பெர்னி சான்டர்சுக்குத் திரளுகிறது. அவரின் ஆதரவை முதன்மைப்படுத்தி டெமொகிராட் கட்சியை காப்பாற்றி வைத்திருக்க முயற்சிகள் செய்கிறார் கிளாரி கிளின்டன். அடுத்த சனாதிபதியாகுவார் எனச் சொல்லப்படும் அவர் சராசரி ஊதிய உயர்வு, பெரும் வங்கிகளைக் கட்டுப்படுத்தல் என்பது பற்றிப் பேசக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார். அவரை எதிர்த்துப் போட்டியிடும் அதி வலதுசாரியான பில்லியனர் டொனால்ட் டிரம்பின் மொழியைக் கவனித்துப் பாருங்கள். தான் அதிகாரச் சக்திகளுக்கு எதிரானவன் என்கிறார் அந்த பில்லியனர்.

எங்கே நியோ கொன்கள்? மார்க்சியத்தின் காலம் முடிந்து விட்டது என்று அறிவித்துக்கொண்டவர்கள் எந்த குகைக்குள் ஒழிந்துக் கிடக்கிறீர்கள். முடிந்தால், வெளியில் வந்து மக்களைத் திரட்டிக் காட்டுங்கள்.

நியோ கொன்கள் இன்று எதிர்கொண்டுள்ள நிலவரத்தைப் பழைய கார்டியன் ஊடகவியலாளரும் தற்போது ஜெரமி கோர்பினின் ஆலோசகராகவும் இருக்கும் சேமஸ் மிலின் அழகாகச் சுருக்கிக் கூறியிருப்பார். - 'வரலாற்றின் பழிவாங்கல்'.

***முற்போக்கை நோக்கிச் சரியாத தமிழ்தேசியத்திற்கு எதிர்காலம் இல்லை என்கின்றீர்கள். நாம் எழுதுகளிலேயே முற்போக்கான சோசலிஸத் தமிழீழத்தை நோக்கித்தானே ஆரம்பித்தோம்?***

பலருக்குச் சினமூட்டக்கூடிய கருத்தாக இருப்பினும் சில விசயங்களைத் தெட்டத் தெளிவாக வெளிப்படையாகப் பேசியாக வேண்டியிருக்கிறது. தமிழில் மட்டும் படிக்கும் ஒருவர் மார்க்ஸியத்தை அறிந்துகொள்வதோ அல்லது சோசலிஸம் என்றால் என்ன என்பது பற்றிய விஞ்ஞானபூர்வ விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதோ சாத்தியமில்லை. ஏராளமான பிழைகளோடு இருக்கும் மொழி பெயர்ப்புகள் - தங்கள் தங்கள் புரிதலுக்கு ஏற்ப விளங்கிக்கொண்ட அரை குறை விளக்கங்கள் என்பவை தான் மலிந்து கிடக்கின்றன. கடுமையான உரையாடல்களுக்கு உட்படாத மொழி பெயர்ப்புகள் நிகழும்போது இப்பிரச்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகிறது. ஆங்கிலத்தில் இருக்கும் மார்க்ஸிய மொழி பெயர்ப்புகள் பல உரையாடல்கள் - ஆய்வுகளுக்கு உட்பட்டுத் திருத்தப்பட்டவையாக இருக்கின்றன. அப்படியிருந்தும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. தமிழில் இது பற்றி எந்த உரையாடல்களும் நிகழ்வதில்லை. இந்தப் போதாமை இடது சாரிய மொழியையே சீரழித்துள்ளது. மொழிபெயர்ப்பு மொழியில் எழுதுவது இடதுசாரிய மொழியாக இருக்கிறது. சில கறாரான ஸ்டாலினிஸ்டுகள் எவ்வாறு ஆணாதிக்க மொழியில் எழுதுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

இடதுசாரிகள் மத்தியில் இவ்வளவு பிரச்சினை இருக்கும் பொழுது அமிர்தலிங்கம் சோசலிஸத்தைத் தெரிந்து ஏற்றுக்கொண்டவர் எனப் பார்ப்பது பெரிய பிழை. இளசுகளைத் தங்கள் தேர்தல் வேலைகளுக்காக வளைத்துப்போட வட்டுக்கோட்டையில் சோசலிஸம் என்ற சொல்லை மூக்கைப் பொத்திக்கொண்டு உச்சரித்தற்காக அவர்கள்மேல் அநாவசியப் பழியைப்போடாதீர்கள். இதெல்லாம் அந்தக் காலத்தில் யோசிச்சது யாரப்பா என அவரே பின்பு கனடாவில் பேட்டி வழங்கியிருக்கிறார். கூட்டணி முற்போக்குப் பக்கம் கொஞ்சம் தலை சாய்ந்திருந்தாலே போதும், வரலாறு வேறுவிதமாக இருந்திருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்

இயக்கங்கள் கட்டத்தொடங்கிய பலருக்கு ஆரம்பகாலத்தில் சோசலிஸம் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய உரையாடக்கூடிய வாய்ப்புகள் அதிகமிருக்கவில்லை. அவசர, அவசரமாக ஆயுதம் தூக்க வைக்கப்பட்டு விட்டார்கள். இந்தியத் தலையீடும், வரலாற்று நிகழ்வுகளும் அரசியல் வளர்ச்சியை முடக்கி விட்டன. இலங்கையும் இன்றுவரை சோசலிஸக் குடியரசு என்றுதான் அழைக்கப்படுகிறது. அதன் ஒருவித எதிர்வினையாகத்தான் சோசலிசத் தமிமீழமும் பேசப்பட்டது. இவற்றுக்கு முறைப்படியான அர்த்தங்கள் எதுவும் கிடையாது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முற்போக்கான பல இளைஞர்களை உள்வாங்கியது. தமது வேலைத்திட்டம் பற்றி ஒரு புத்தகம்கூட இவர்கள் வெளியிட்டார்கள். புளட் இயக்கம் கூட சோசலிஸம் பற்றிய வகுப்புகளுக்கு இளைஞர்களை அனுப்பியது. புலிகள் இயக்கத்தினர் உலக இளையோரை நோக்கிய வேண்டுகோள்கள் வைத்துச் சிறு 'சோசலிஸ' அறிக்கையையும் வெளி-யிட்டார்கள். கியூபா, ரஷ்யா ஆகிய நாடுகளில் இருந்த நிலவரங்கள் மற்றும் பனி யுத்தம் நடந்த காலகட்டம் ஆகிய வரலாற்றுக் கட்டத்தில் வைத்து இந்நிகழ்வுகளைப் பார்க்கவேண்டும். வரலாற்று விசையால் உந்தப்பட்ட இச்செயல்கள் நிகழ்ந்தபோதும் சோசலிஸம் சம்மந்தமாக என்ன புரிதல் இருந்தது? அரசியற் பலவீனம் எவ்வளவு ஆழமாக இருந்தது என்று. அக்காலத்தில் வெளியான வேலைத்திட்டம் மற்றும் ஏனைய வெளியீடுகளை இன்று படிப்பவர்களுக்குத் தெரியும். அக்காலத்து இடதுசாரியத் தலைமைகளிடம் இருந்த பலவீனங்களும் இந்த போக்குகளில் வடிந்து செல்வதைப் பார்க்கலாம். இதுதான் இளைஞர்களைக் குறுகிய பார்வை நோக்கியும் குறுக்கு வழிப் போராட்டம் நோக்கியும் நகர்த்தியது.

சோஸலிசத் திட்டமிடலுடன் தெளிந்த பிரக்ஞையுடன் இயங்கின என எந்த ஒரு அமைப்பையும் குறிப்பிட்டு விட முடியாது. அதே சமயம் இயக்கங்களில் இணைந்துகொண்டிருந்த பல இளையோர்கள் முற்போக்குச் சிந்தனை உள்ளவர்களாக இருந்தனர். அந்தச் சக்தி, விரயம் செய்யப்பட்டு விட்டது. ஆயுதம் தாங்குவது முதன்மைப்பட்டு ஆளுக்காள் அடிபடத் தொடங்கியது அரசியற் செயற்பாட்டு வளர்ச்சியைத் தடுத்து முடக்கிவிட்டது.

ஆயுதமயப்படுத்தல் பற்றிய எந்தத் தெளிவுமற்ற சண்முகதாசன் போன்றோர் ஆயுதம் தாங்கிச் சுடுவதை ஒரு முற்போக்கு நடவடிக்கையாகப் பாராட்டிய நிலைதான் ஏற்பட்டது. ஜே.வி.பி யின் ஆயுதம் தாங்கிய எழுச்சியை எதிர்த்தவர்கள் தமிழ் இளையோரின் எழுச்சிகளை முற்போக்காகப் பார்த்தனர்.

இருப்பினும் இந்த ஆரம்பகாலத்து நடைமுறைகள், இயக்கங்கள் முழுமையான பிற்போக்கை நோக்கித் தாவுவதை ஓரளவு தடை செய்தன என்பது உண்மையே. அவர்கள் தீவிர மேற்குலக முதலாளித்துவ ஆதரவுச் சக்திகளாக இயங்கவில்லை. மேற்குலகின் சேவைக்காக அவர்கள் இயங்கவில்லை. அல்லது இந்திய அரசு எதிர்பார்த்தது போல் அவர்களின் கைக்கூலிகளாகவும் இயங்கவில்லை. தீவிரவாதத் தாக்குதல்களை மக்கள் மத்தியில் செய்வதை மட்டும் முதன்மைப்படுத்தி இயங்கவில்லை. ஆனால் இதற்காக முற்போக்குக் கருத்துகள் உள்வாங்கப்பட்டு அவற்றை மையமாகக் கொண்டே போராட்டத் திட்டமிடல் நடந்தது என நாம் முடிவுக்கு வருவது தவறு. போராட்டத்துக்கிருந்த பெரும் பலவீனமாக இது தொடர்ந்து இருந்து கொண்டேயிருந்தது.

புலிகள் இயக்கத்துக்குள் இருந்த அரசியற் போராளிகள் பலர் லெனின் போன்ற முற்போக்கு எழுத்தாளர்களின் எழுத்துகளைப் படிக்கப் வைக்கப்பட்டனர். அது மட்டுமின்றி மேற்கத்தேய அரசு- பிராந்திய நிலவரங்கள் எனச் சிறு பாடங்களும் எடுக்கப்பட்டன. ஜே.வி.பி எப்படி நாலு பாடங்களுக்குள் தமது உறுப்பினர்களின் அறிவை முடக்கினரோ அவ்வாறுதான் இந்தப் பாடங்களும் முழுமையான அறிதல் நோக்கி இளையோரை நகர்த்தவில்லை.

முற்போக்கான போராட்டத் திட்டமிடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. முற்போக்கு அம்சங்களை அங்கும், இங்கும் நீங்கள் சுட்டிக் காட்டலாம். ஆனால் அவை விதிவிலக்குகளாக எஞ்சி நின்றவையாகத்தான் பார்க்க முடியும்.

ஆனால் இன்றிருக்கும் நிலவரம் மிகக் கேவலமான திசையில் நகர்கிறது. எவ்வளவு முற்போக்குச் சாயம் பூசினாலும் தேசியம் என்பது எப்போதும் பிற்போக்கானதே என்று நீங்கள் கூறலாம். இன்று தேசியம் பேசுபவர்கள் அக்கூற்றுக்கு அர்த்தம் கொடுப்பவர்களாக இருக்கிறார்கள். மிகப் பிற்போக்கான அரசியலுடன் இணைந்துகொண்டு அதனை மக்கள் மத்தியில் வலுப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை நாம் அவதானிக்கலாம். அமெரிக்கா எங்களின் மனித உரிமைக்காகப் பாடுபடுகிறது என மக்கள் மத்தியில் எந்த இயக்கமும் முன்பு பிரச்சாரித்தது கிடையாது. இந்தியாவின் நட்புக்காகச் சம்பூர் மக்கள் சாவது சரி என்ற நிலைப்பாட்டை முன்பு யாராவது எடுத்திருப்பார்களா? மிக மோசமான வலதுசாரிய மரபுவாதக் கட்சித் தலைவர் டேவிட் கமரோன் போன்றவர்களை 'எங்கள் தலைவன்' எனப் பிரச்சாரிப்பது முன்பு சாத்தியப்பட்டிருக்க முடியுமா? இத்தகைய வலதுசாரியம் பலப்பட்டு வருகிறது. தமிழ் பேசும் மக்கள் இயற்கையிலேயே மரபுவாதிகள் என வாதிக்கப்படுவதையும் நாம் பார்க்கிறோம்.

யுத்தம் முடிந்து இயல்பு திரும்பிய நிலையில் இத்தகைய வலதுசாரிப் போக்குகள் தங்கள் தலையைத் தூக்குவதும் - தங்கள் ஆதிக்கத்தை மீண்டும் நிறுவ முயல்வதும் தவிர்க்க முடியாததே. ஆனால் நாம், போராட்டச் சக்திகளை அவர்கள் பிடியில் இருந்து விடுவிக்க விரும்புகிறோம். அவர்கள் சார்ந்து நின்று 'போராட்டம்' என்ற சொல்லை உச்சரிப்பதன் போலிப் பித்தலாட்டத்தை வெளிச்சப்படுத்த விரும்புகிறோம். இதனாற்தான் தேசியவாதிகளை இரண்டாகப் பிரித்து அணுகும் திட்டமிட்ட அணுகுமுறையை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. குறைந்த பட்சம் இடதுசாரியத் தேசியம் என்ற ஒன்றை நோக்கிப் போராட்டக் கதையாடல் திரும்பவேண்டும் என எதிர்பார்க்கிறோம். அயர்லாந்து-குர்திஸ்தான் ஆகிய பகுதிகளில் இருக்கும் நிலவரம் போல் இடது சார்ந்து தேசியத்துக்குள் நுழைவது போராட்டம் சார்ந்த செயற்பாடுகளை தொடர்ந்து நிலைநாட்ட அத்தியாவசியமாக இருக்கிறது. ஆனால் அத்துடன் திருப்திப்பட்டுக்கொள்ளும் நோக்கு நமக்கில்லை. சரியான முற்போக்குத் திட்டமிடல் என்பது தேசிய உரிமை உட்பட அனைத்துச் சனநாயக உரிமைகளையும் வென்றெடுக்கும் திட்டமிடல் என்பது அதையும் தாண்டி நகர வேண்டும் என்ற தெளிவு எமக்குண்டு. ஆனால் மக்களை அத்திசை நோக்கித் திருப்பும் ஆரம்பகட்ட நடவடிக்கையாக அனைத்துத் தேசியவாதிகளையும் நோக்கி நாம் வைக்கும் கோரிக்கை தான் மேற்சொன்ன முற்போக்குத் தேசியம் நோக்கித் திரும்பச் சொல்லிக் கேட்கும் கோரிக்கை. போராட்டம் பற்றிப் பேசுபவர்கள் இத்திசையில் திரும்பாவிட்டால் பிற்போக்கின் கை ஓங்கிப் போராட்டக் கதையாடலை முடக்கும் என்ற உண்மையை மக்களுக்குச் சொல்லுகிறோம். போலிகளின் பிடியில் இருந்து மக்களை விடுவிக்கும் முதல் முயற்சி இது.

***இலக்கியத்தை அளக்க முடியாது என்கின்றீர்கள். ஆனால் இலக்கியம் ஒருபக்கச் சார்பானவர்களால் ஒரு விதமாகவும், மறுபக்கச் சார்பான வர்களால் இன்னொரு விதமாகவும் அளக்கப்படுகிறதே***

அளக்க முடியாது. ஆனால் அளந்து பார்க்கிறார்கள். அளக்க முடியாத பிரச்சினையால் வெவ்வேறு அளவுகோல்களைப் பயன்படுத்துகிறார்கள். இது ஒரு சிக்கலான கேள்வி. ஏனெனில் அளவுகோலற்ற பார்வை என்று இலக்கியத்தைப் புனிதப்படுத்தும் கருத்து நிலைக்கு நாம் சென்றுவிடக்கூடாது. நாம் சொல்வது வேறு அர்த்தத்தில். இலக்கியம் என்பது அகம் சார்ந்த விசயமாகவும் இருக்கிறது. இரவு கறுப்பு ஆட்டுக்குட்டி என்றும் -அதன்

□□□□

**ஈழத்து இலக்கியத்தை வடக்கைச் சேர்ந்த எழுத்தாளர்கள்தான் இதுவரை ஆக்கிரமித்து வந்திருக்கிறார்கள். இந்நிலை மாறத் தொடங்கி விட்டது. கிழக்கில் இருந்தும் மலையகத்தில் இருந்தும் எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் எழுத்துகள் மொழியின் தளத்தை விரித்துக் கொண்டிருக் கின்றன.**

□□□□





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்து அறுந்த கதை பற்றியும் கவிஞர் மு.நாவாஸ் எழுதுகிறார். இரவு கறுப்பென்பது பொது அறிவு. பள்ளிவாசலில் பாங்கொலி கேட்கும்போது அறுபடும் ஆடு என்பது நிறத்தையும் நிகழ்வையும் இணைக்கிறது. இது சாத்தியப்படுவதற்கு ஆடறுப்பது பற்றிய பொது அறிவும் தேவை. 'கறுப்பு என்பது பொது அறிவு ஆடறுப்பது அவ்வாறல்ல. அதனால் கவிதைப் புரிதல் நிலை அனைவராலும் அறியப்படாதபடி குறுக்கப்படுகிறது' என ஒருவர் வாதிடலாம் - அளவிடலாம். இதில் ஒரு போதாமை இருப்பது உங்களுக்குப் புரிகிறதா?

பொது அறிவின் மேல் இடித்துத்தான் தான் சொல்லவரும் அகோரத்தின் படிமத்தைச் செதுக்குகிறார் கவிஞர். குறுக்குதல் இன்றி அரூபமயமாக்கல் இன்றி இது சாத்தியமில்லை. சமூகம் சார்ந்த இந்தப் பொது அறிவுக்கும் - நீதி, நியாயம் கேட்கும் படிமத்துக்கும் - தனிமனித அகத்துக்கும் இருக்கும் தொடர்பைப் படிமத்தின் கூர்மை மங்க வைத்துவிடுகிறது. அந்த மங்கலில் - படிமத்தில் நாம் மயங்கிவிடுகிறோம். அந்த மயக்கத்தில்தான் அளந்து பார்த்துவிடலாம் என்ற கொலை வெறி பிறக்கிறது. நிறம் என்பது அகவயப்பட்டது. மனிதரல்லாத மிருகங்கள் நிறத்தைப் பார்ப்பது வேறுவிதம் என்பது அறிவோம். இருப்பினும் ஒரு புறவய யதார்த்தம் நிறம் என்ற பாவனையில் இலக்கியம் நகர்கிறது. மொழி இயக்கத்தின் இருப்பு - நிறைய அரூப நிகழ்வுகளை உள்வாங்கி அவற்றை யதார்த்தமாக ஏற்றுக்கொள்வதாகவே நகர்கிறது. அதனாற்தான் இது என்றைக்கும் இறந்தகாலத்திலேயே நிகழ்கிறது. அன்றேல் இத்தகைய அரூபமாக்கல் சாத்தியமில்லை.

உங்கள் வீடுகளில் இருக்கும் அகராதிக்குள் நீங்கள் அறியா ஆயிரம் சொற்கள் இருக்கலாம். ஆனால் அகராதிக்கு அண்டங்களின் நுணுக்கங்களை அறிந்துகொள்ள முடியாது. சொற்களின் அர்த்தங்கள் புறவய உண்மைகளாக அன்றி வாழ்தல் சாத்தியமில்லை. சொற்கள் என்பது ஒரு வகை இயக்கம். ஒரு வகை விசை. ஒரு வகை இசை. ஒரு வகை விஞ்ஞானம். அந்த வகை அகவயத்து உணர்தலைப் புறநிலை நிஜமாக்க உதவுவதாக இருக்கிறது. சொற்களின் இணைவுகள் தேவை தோன்றி ஓசை மயப்படுகின்றன. அந்தச் சொல்லிசைப்பாட்டுக்குள் இருக்கும் நுணுக்கங்களை நாம் அளப்பது மாபெரும் விஞ் ஞானம். வெற்று அழகியற் கருத்துநிலைகள் - சிறு அளவுகோல்கள் அளக்கப் போதுமானதல்ல. ஆகையால் நாம் திணிக்கிறோம். அளப்பது என்பது எம் அறிவுக்கெட்டிய திணிப்பாக இருக்கிறது. அளப்பதும் ஒருவகை அரூபமாக்கும் செயற்பாடே. ஆனால் அது சாத்தியமில்லை. இருப்பினும் அது நிகழ்கிறது.

ஒவ்வொரு அளவுகோலிலும் எழுத்தாளரின் அகநிலை இருத்தலும் வெளியாகிறது. அவரது சமூக இருத்தலும் வெளிப்படுகிறது. இந்த இழுக்கும் நூலில் இருந்து தப்பித் தனியே நின்று பார்க்க முடியாது. இதனாற்தான் இலக்கியம் தெரிவு செய்யப்பட்ட சமூக நிலைப்பாட்டில் இருந்து பிரக்ஞையுடன் எழ வேண்டுமென அவதிப்படுகிறோம். பொதுப்படைப் படைப்பு சாத்தியமில்லை. அது இன்றி இரவின் கழுத்தறுக்கும் படிமம் சாத்தியமில்லை. மேற்படிப் படிமத்துடன் பார்க்கும் போது தொண்டையிற் கனக்கும் எச்சிலுக்கும் வெறுமனே 'இரவின் கழுத்தறுப்பு' என்று சொல்லும்போது எழும் ஊறலுக்கும் நிறைய வித்தியாசமுண்டு. இந்தத் தனிப்பட்ட அறிதல் அற்றவர் - பொதுமையைப் பற்றிக் கவலையற்று எழுதுபவர்தான் சிறந்த இலக்கியவாதியாகப் பார்க்கப்படுகிறார் அளக்கப்படுகிறார். பொதுவாகப் போற்றப்படவும் செய்கிறார். இந்த முரண்நிலையைக் கவனியுங்கள்.

இந்த அறிதல்களுடன்தான் அளப்பதன் சாத்தியமின்மை பற்றி நாம் சிந்திக்கவேண்டியிருக்கிறது. எழுத்தைச் சிறு குழுக்கள் நோக்கி நகர்த்த வேண்டியிருக்கிறது. 'நாவல்' எழுதுபவர் ஒரு பத்து அல்லது இருபது பேருக்கு மட்டுமே எழுத முடியும். உலகம் படிக்கட்டும். நினைத்தபடி அளக்கட்டும். அது பற்றிய அக்கறையில் எழுத முடியாது. குறி வைக்கப்பட்ட ஒரு இருபது பேருக்கு எழுத்தைக் கொடுப்பதுதான் ஆசிரியரின் நோக்காக இருக்கமுடியும் என்ற சிந்தனை நமக்குள் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கிறது. இருபதே பெருந்தொகை இலக்கம். அதுவும் ஒரு உரையாடல்தான். ஐம்பது பேர் இருக்கும் ஒரு இலக்கியச் சந்திப்பில் உரையாடலைச் சாத்தியமாக்குவது எவ்வளவு சிக்கல் என்பதை அறிகிறோம். அப்படியிருக்க ஆறு பில்லியன் மக்களுடன் உரையாடலைச் சாத்தியப்படுத்துவது பற்றிக் கனவு காண்பது தவறல்லவா? எழுத்து உரையாடலை அரூபமாக்கி இறந்த காலத்தில் வைப்பதால் அது சாத்தியம் என்று போலியான கருத்தை நமக்கு நாமே சொல்லி ஆறிக்கொள்கிறோம். இதிலிருந்து விடுபடவேண்டும். அது இன்றி பன்முகப்பட்ட அழகியல்களை அனுபவிக்கும் ஆற்றல் இழந்துவிடுகிறோம்.

**முன் முடிவுகளை வைத்துக் கொண்டு விமர்சனங்களை வைக்கும் இந்த அளவீடுகள் தட்டையாகத் தமிழ்த்தேசிய ஆதரவு - எதிர்ப்பு என ஆகி வருவதைப்பற்றி என்ன சொல்வீர்கள்?**

'புலி எதிர்ப்பு மையம்' சார்ந்து இயங்குபவர்களின் அதிகாரம்தான் இலக்கிய உலகத்துக்குள் அதிகமாக இருக்கிறது. ஒரு காலத்தில் இவர்களின் இருத்தல்களுக்கு முற்போக்குக் காரணங்கள் இருந்தன. இன்று அப்படி எதுவுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் தங்கள் இருத்தலை நிறுவுவதற்காக மட்டும் பேய்விரட்டிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் குருட்டுப் பார்வையில் பல இலக்கியங்கள் பதுக்கப்பட்டு வந்திருக்கிறது. இதற்கு எதிராகக் கடுமையான போக்கை நாம் முன்னெடுக்கவேண்டியிருக்கிறது.

இதே சமயம் இலக்கியம் பற்றிய ஈடுபாடு கடும் புலி ஆதரவு சக்திகள் மத்தியில் மிகக் குறைவாகவே இருக்கிறது. புலிகளைப் பற்றி ஒரு வசனம் அங்க, இங்க பிழையாக எழுதிவிட்டால் அதை முற்றாக எதிர்க்கும் போக்கு இன்றும் தொடர்கிறது. ஃபிரான்சிஸ் ஹரிசன் மற்றும் கலம் மக்ரே போன்றோர் கூடக் கடும் தாக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். தமிழில் எழுதுபவர்கள் சிலர் இந்தச் சூறாவளி தங்களை நோக்கித் திரும்பக்கூடாது என்ற பயத்தோடு எழுதுகிறார்கள். இது தவறு. நியாயமான சொற்களை எழுதுபவர்களுக்கு எந்தப் பயமும் இருக்கக்கூடாது. யாருடைய ஆதரவையும் நம்பி என் எழுத்தில்லை என்ற ஒருவித 'தெனாவட்டுப்' போக்கு தமிழ் எழுத்தாளர்கள் மத்தியில் வளர்த்தெடுக்கப்பட்டால் தான் இந்த எதிர்த் திசையில் வீசும் காற்றிலிருந்து தப்ப முடியும். இந்த அலைக்குள் அடிபட்டுத் தாண்டிவிடுவோம் என்ற பயத்துடன் எந்த எழுத்தாளரும் எழுத்து நீச்சல் போட வரக்கூடாது. தங்கள் எழுத்தில் நம்பிக்கையுடன் அவர்கள் எழுத முன்வரவேண்டும்.

இந்தப் போக்குத்தான் தட்டையான பார்வைகளை உடைக்கும். எந்தச் சமரசமும் இன்றி மக்கள் பக்கம் நிற்கும் எமக்கு எந்தப் பயமும் இல்லை. நாம் செய்யும் கடும் வேலையை அவர்கள் பார்வைக்கு வைத்துக்கொண்டுதான் எமது கருத்தை முன்வைக்கிறோம். அதனால் கருத்தை வைப்பதில் எமக்கு எந்தத் தயக்கமும் இல்லை. இதை இனிவரும் எழுத்தாளர்கள்தான் செய்ய முடியும். ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் இலக்கியச் சந்திப்பு சார்ந்த கலைஞர்கள் பிளவுகளின் கூட்டாக ஒற்றைப் பார்வைகளுடன் நீண்ட காலமாக இயங்கி விட்டார்கள். இந்தப் போக்குகள் முற்றாக மாறும் என்ற நம்பிக்கை இல்லை. அதனால் விமர்சனங்களும் அப்படித் தட்டையாகத்தான் இருக்கப் போகின்றன. அத்தகைய போக்குக்கும் ஒரு வரலாற்று இடமிருக்கு என அந்த வரலாற்றுக் கட்டத்தில் வைத்து விமர்சனங்களைப் பார்த்துக்கொண்டு நகரவேண்டியதுதான். வேறு வழியில்லை.

இதைப் படித்ததும் கோபப்படாது சிந்திக்கவேண்டும் எனப் புலி எதிர்ப்பு மையவாதிகளைக் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் அடிமனங்களில் கிடக்கும் நியாயத்தைத் தெண்டி எடுங்கள். தெனாவட்டுப் போக்குகளைக் கைவிடுங்கள். உங்களுக்காகவும்தான் உங்களை நோக்கி இந்தக் கோரிக்கையை வைக்கிறோம். தனிப்பட்ட முறையில் மாற்றங்கள் நிகழும் என்ற நம்பிக்கை இல்லை - இருப்பினும் இக்கோரிக்கை பொதுவாக வைக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. ஏனெனில், இலக்கியம் மட்டுமல்ல அரசியலும் இவர்களைப் பின்னுக்கு விட்டு விட்டு நகர்ந்துகொண்டிருக்கிறது. அந்த வட்டங்களில் இருந்து ஏராளமானவர்கள் விலத்தி வந்துவிட்டார்கள். ஆகையால் இது பற்றி அதிகம் கவலைப்பட்டுக்கொள்வதற்கு ஒன்றுமில்லை.

**நவீன ஈழத்துச் இலக்கியச் செயற்பாடுகளில் நம்பிக்கைக்குரிய போக்காக எவற்றை அடையாளம் காண்கிறீர்கள்?**

இது பற்றிப் பொதுப்படையாகப் பேசவே விரும்புகிறேன். ஈழத்து இலக்கியத்தை வடக்கைச் சேர்ந்த எழுத்தாளர்கள்தான் இதுவரை ஆக்கிரமித்து வந்திருக்கிறார்கள். இந்நிலை மாறத் தொடங்கி விட்டது. கிழக்கில் இருந்தும் மலையகத்தில் இருந்தும் எழுதப்பட்டுக்கொண்டிருக்கும் எழுத்துகள் மொழியின் தளத்தை விரித்துக்கொண்டிருக்கின்றன. கிழக்கு எழுத்துகளைத் தேடித்தேடிப்படிக்கவேண்டியிருக்கிறது. பல எழுத்தாளர்கள் எந்த ஆடம்பரங்களுமற்று ஆங்காங்கே படிமங்களை எறிந்துவிட்டுச் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பெயர்களை ஞாபகம் வைத்துத் தேடித்திரிவது அவசியமில்லை. ஆனால் அவர்களின் எழுத்துகளைத் தவிர்த்து, தமிழ் வாசிக்க முடியாது என்ற நிலை உருவாகிவிட்டது. அங்கிருந்து கொதித்துக்கொண்டிருக்கும் எழுத்து வெடித்துக் கிளம்பிக்கொண்டே இருக்கிறது. இது போல்தான் மலையகத்து எழுத்தின் அசைவும் வேறு தளங்களுக்கு நகர்ந்துள்ளதைப் பார்க்கலாம். யாழ்ப்பாணத்திலிருந்து எழுதிக்கொண்டிருக்கும் குறிப்பிடத்தக்க எழுத்தாளுமைகள் இதை மீறி எழுந்து மீண்டும் வடக்கின் அதிகாரத்தை நிலைநாட்டுவது சாத்தியமில்லை. இந்தப் போக்குத்தான் நம்பிக்கை தருவதாக இருக்கிறது. இவர்கள் தமிழ்நாடு நோக்கித் திரும்பும் சலனத்தை மறுத்துச் செயற்படவேண்டும் ஈழத்து இலக்கியத்துக்குள் தோன்றியுள்ள இழுபாடுகள் சும்மா முடிவுக்கு வராது. ஒன்றிரண்டு அதிசயங்களையாவது ஏற்படுத்தித்தான் இது ஓயும்.

ஆக்காட்டியைப் போல் வரும் சிறு பத்திரிகைச் சூழலும் வளர்வதற்கான சூழ்நிலைகள் இன்று அதிகம். சிறுபத்திரிகைச் சூழல் ஒரு இயக்கமாக இயங்க வேண்டும். இலக்கிய அரசியல் முரணின் முனைப்பில் அவை நிற்கவேண்டும். சமகாலத்தின் அனைத்துக் கேள்விகளுக்கும் இப்பத்திரிகைகளின் பக்கங்கள் திறக்கப்படவேண்டும். அத்தகைய ஒரு வெறி இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது. வெறி தலைக்கேறும் என்ற நம்பிக்கையிருக்கிறது.

□□□□




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அனோஜன் பாலகிருஷ்ணன்

கட்டுரை

### மதிப்பீடுகளின் வீழ்ச்சி :

# ஈழத்து இலக்கிய விமர்சனப்போக்குகள் பற்றிய சில புரிதல்கள்



**ஆ**கஸ்ட் மாதம் வெளியாகிய தடம் மூன்றாவது இதழில் ஜெயமோகனின் நேர்காணல் குறித்தான விவாதங்களில் மிக அதிர்ச்சி தரக்கூடிய நிலைத்தகவல்கள் சிலவற்றை முகநூலில் கண்ணுற்றேன். ‘தமிழக இலக்கியவாதிகள் போனால் போகட்டும் என்று ஷோபாசக்தி, அ.முத்துலிங்கம் என்று ஓரிருவரை அங்கீகரித்தவர்கள், இன்று சயந்தன், குணா கவியழகன், யோ. கர்ணன், தமிழ்நதி என்று வெளிக்கிளம்பி வரும் படைப்பாளிகளை ஓர் ஒவ்வாமையோடு பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஜெயமோகனுக்கு நன்கு தெரியும், இன்றைக்கு ஈழத்துப் படைப்பாளிகள் உருவாக்கக் கூடிய படைப்புகளை, அவை காட்டும் உலகத்தைத் தம்மால் நினைத்தும் பார்க்க முடியாது என்று. ஈழத்திலிருந்து மிகச்சிறந்த இலக்கியப் படைப்புகள் எழுதப்படுகின்றன என்றும் அதனாலே ஜெயமோகன் போன்றவர்கள் காழ்ப்புணர்ச்சியில் பிதற்றுகின்றார்கள்’ என்ற கருத்துப்பட அந்நிலைத்தகவல்கள் இருந்தன. அவற்றை எழுதியவர்கள் ஈழத்துப் படைப்பிலக்கியம் சார்ந்த கூட்டங்களையும் புத்தக அறிமுகக்கூட்டங்களையும் புலம்பெயர்ந்த நாடுகளில் நடாத்துபவர்கள். அந்நிலைத் தகவல்களைப் பார்த்தபின் அதிர்ச்சியில் மெய்மறந்து உறைந்திருந்தேன். எந்தவிதமான மதிப்பீடுகள் - திறனாய்வுகளுமின்றி அனுமானத்தில் ஒன்றை நிறுவும் ஆற்றல் எத்தகையது! இவர்கள் விரைவில் நோபல் பரிசை ஈழத்து எழுத்தாளருக்கு வாங்கிக் கொடுத்தாலும் ஆச்சரியமில்லை.

உண்மையில் ஈழத்தில் இருந்து வரும் படைப்புகளில் படைப்பாக்கம் சார்ந்த நிலைமை என்ன? தீவிரமாக ஈழத்து இலக்கியம் மட்டுமன்றி சர்வதேச இலக்கியத்தை ஓரளவுக்கு வாசித்து வருபவர்களால் ஈழத்து இலக்கியத்தின் தற்கால நிலையை இலகுவில் ஊகிக்கக்கூடும். வெறுமே அனுபவமின்றி, சொற்களாலும் கட்டுரை மொழிகளாலும் மானுட அகத்தின் நுட்பத்தையும், மானுடத்தின் நேசத்தையும் பேசாமல் வெறுமே அரசியலைப் பேசிவிட்டுச் சென்றுவிடும் தட்டையான படைப்புகளே ஈழத்தில் அதிகமாக வெளியாகின்றன. பொருட்படுத்தக்கூடிய தமிழக இலக்கியவாதிகள் தற்சமயம் பல்வேறு ஈழத்துப் படைப்புகளைத் தட்டிக்கொடுக்கின்றனர். உண்மையில் அவை படைப்பாக்கத்தின் மீதான சிறப்பால் அல்ல. அனுதாபத்தினால் ஏற்படும் கழிவிரக்கத்தினாலே அவ்வாறு தட்டிக்கொடுக்கப்படுகின்றன. முப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடம் அடிவேண்டியவர்கள் அவர்களின் வலிகளைச் சொல்லும் போது எதற்குச் சீரான விமர்சனத்தை வைக்கவேண்டும் என்று அவர்களே சமரசம் செய்துகொள்கிறார்கள். படைப்பில் இருக்கும் அழகியலையும் படைப்பாக்கத் திறனையும் பேசாமல் மேம்போக்கான சில விடயங்களையே கறாரான தமிழக இலக்கியவாதிகள் விமர்சனங்களில் தொட்டுச்செல்கின்றனர். தமிழகத்தில் இடம்பெறும் ஈழத்து எழுத்தாளர்களின் புத்தக அறிமுக-விமர்சனக் கூட்டங்களின் காணொளிப்பதிவுகளைப் பார்க்கும்போது இதுவே தோன்றுகின்றது. ஆனால், ஈழ இலக்கியம் சார்ந்த விமர்சகர்கள் அல்லது அவ்வாறு கூறிக் கொள்பவர்களில் பலர் அவ்வாறான மிகத்தட்டையான படைப்பை உலக இலக்கியம் என்றும் அதனை வாசிக்காதவர்கள் பாவிகள் என்றும் மிகைப்படுத்திவிடுகின்றனர். ஒரு நாவலை விமர்சிக்கும்போது அந்த நாவலில் இத்தனையாவது பந்தியை வாசிக்கும்போது கண்கலங்கிவிட்டேன். சில இடங்களில் அழுதேவிட்டேன், என்று உச்சிமுகர்ந்து அப்படைப்பை எழுதியவரைப் புகழுகின்றார்கள். முற்று முழுவதுமாக நாவலை வாசிக்காமல் குறிப்பிட்ட பக்கங்கள் வரை வாசித்துவிட்டு முகநூலில் அதனைப் பகிர்ந்து கண்ணீர் மல்கினேன், மிகுதிப்பக்கங்களைப் புரட்ட மிகுந்த அச்சமாக இருக்கின்றது. இப்படைப்பை எழுதியவர் ஆகச்சிறப்பானவர் என்று கருத்துகளைப் பகிர்ந்துவிடுகின்றனர்.

ஒரு புத்தகத்தை வாசித்து அழுதுவிட்டால் அது சிறந்த படைப்பா? அழுவதற்கும் கண்ணீர் சிந்துவதற்கும்தான் படைப்பா? என்னால் இதை விளங்கிக்கொள்ளவே முடிவதில்லை. ஈழத்து இலக்கியம் போர்க்காலத்தைப் பற்றி அதிகம் பேசும், அதிலிருக்கும் துன்பத்தைப் பேசவேண்டும். எது கூடுதலாக அழவைக்கின்றதோ அதுதான் சிறந்த படைப்பு என்று தான் பல புரிதல்கள் அற்ற மேம்போக்கு விமர்சகர்கள் கருதுகிறார்கள். அப்படியென்றால் தினமும் தொலைக்காட்சித் தொடர்கள் பார்த்துக் கண்ணீர் சிந்தலாமே என்ற அய்யம் எனக்கு வருவதுண்டு.

போர்க்காலத்தின் பின்னால் இருக்கும் மானுடர்களின் வலியின் வாழ்க்கையைக் கண்டடைய வேண்டும். அதைத்தான் ஒரு விமர்சகர் தனது கோணத்தில் எழுதவேண்டும். ஆனால், அவ்வாறான வாழ்க்கையைக் காட்டும் படைப்புகள் எம்மிடம் மிகக்குறைவு; விமர்சகர்கள் அறவேயில்லை எனலாம். போலிப் புகழுரையும் துதிபாடுதலும்தான் இங்கே அதிகம். இலக்கியம் என்றால் என்ன என்ற புரிதல் பலரிடமும் இல்லை. அவ்வாறானவர்கள் தொடர்ச்சியாக ஈழத்துப் படைப்புகளைத் தகுதிக்கு மீறிப் புகழ்ந்துரைக்கின்றார்கள். அவ்வாறு நம்ப வைக்கின்றார்கள். அவ்வாறு நம்ப வைக்கும்போது இலக்கியம் தெரிந்தவர்களால் சும்மா இருக்கவும் முடியாது. அவர்கள் கிளர்ந்தெழுவர். இது இப்போதுதான் அபூர்வமாக நடந்தேற ஆரம்பித்துள்ளது. அது செறிவாக நடக்க வேண்டும்.

ஈழம் குறுகிய நிலப்பரப்பைக் கொண்டது. வெவ்வேறு மாற்று அரசியலால் நிரம்பியது. ஈழத்து இலக்கியமும் அரசியலால் நிரம்பியது. தற்போதைய நிலவரப்படி அரசியல் மட்டுமே ஈழத்து இலக்கியம் என்றுகூடத் தயங்காமல் சொல்லலாம். ஒவ்வொரு அரசியற் கருத்தைக் கொண்டவர்களும் மாற்றுக் கருத்துகள் கொண்டவர்களைச் சீண்டவும் இலக்கியத்துக்குள் ஊடுருவி மாறி மாறிக் கல்லெறிகின்றார்கள். பெரும்பாலான கற்கள் வெறும் அரசியலைப் பேசும் தட்டையான கற்கள். பெரும்பாலானவை படைப்பாக்கமும் கற்பனை வளமும் அற்றவை.


இலக்கியப் படைப்புகள் என்று குவிந்திருக்கும் எண்ணற்ற குப்பைகளை நீக்கி ஆகச்சிறப்பான படைப்பு ஒன்றைக் கண்டடையும் வாசகர், அப்படைப்பில் இருக்கும் அரசியலை மட்டும் கண்டுகொள்ள மாட்டார். அதன் அனுபவத்தைக் கண்டடைவார். அந்தப்படைப்பைச் சிலாகித்து அவர் பேசினால் அப்படைப்பை எழுதியவரின் அரசியற் கருத்தை ஆதரிப்பவரில் ஒருவராகச் சிலாகிப்பவரை ஈழத்துச்

**□□□□ இவர்களின் இலக்கிய இடத்தை தெளிவாக விமர்சிக்கப் பட்டிருக்கின்றதா? எத்தனை கட்டுரைகள் விரிவாக எழுதப் பட்டிருக்கின்றன என்று நோக்கும்போது· ஏமாற்றமே எஞ்சிகின்றன. பெரும்பாலான ஈழத்து எழுத்தாளர்களின் படைப்பாகத்தைப் பற்றி சிறப்பாகக் கூர்மையாக எழுதிய மதிப்பீட்டு கட்டுரைகளை எழுதியவர்கள் தமிழக எழுத்தாளர்களாகவே இருகின்றார்கள். □□□□**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் நோக்கும். அதன் பின் அப்படைப்பை எழுதியவருக்கு எதிரான அரசியற் கருத்தைக் கொண்டவரின் படைப்பு ஒன்றைப் பாராட்டினால் குழம்பிப்போவார்கள். இவர் யார் பக்கம் என்று சந்தேகக்கண்ணோடு நோக்குவார்கள். நாற்பது வருட ஈழத்து அரசியல் இவ்வாறான சந்தேகக்கண்களைத்தான் வளர்த்துவிட்டிருக்கின்றது. படைப்பின் மீதுள்ள படைப்பாக்க நுட்பத்தைச் சிலாகித்து அதனை நோக்கி வற்றாத இன்பத்துடன் நகர்பவரை இவர்களால் புரிந்துகொள்ளவே முடிவதில்லை. இந்தக்கருத்தைப் பேசும் எழுத்தாளரை எப்படிச் சிலாகிக்க முடிகின்றது என்று படைப்பினோடு நோக்காமல் அந்த எழுத்தாளரது அரசியற் கருத்தோடு நோக்குவார்கள். ஒரு விமர்சகர் படைப்பாக்கத்தை வியந்து, அதனது அழகியலை விமர்சிக்கும்போது எழுத்தாளரின் சொந்த அரசியலைப் பொருட்படுத்தமாட்டார். படைப்பிலிருந்து அதன் அரசியலைக் கண்டடைந்து அதன்மீது வியாக்கியானம் செய்வார். இவற்றைப் புரிந்துகொள்ளும் தன்மை, அறிவார்ந்த சிந்தனைகள் பொதுவாகப் பெரும்பான்மையான ஈழத்து இலக்கியவாதிகளிடமும் வாசகர்களிடமும் குறைவு. ஒரு படைப்பை விமர்சிப்பவரது அரசியல் என்ன? இவர் யார் பக்கம்? என்று கண்டுபிடிப்பதிலே நேரத்தைச் செலவழிப்பார்கள். ஷோபாசக்தியின் பிரதி ஒன்றை நல்லவிதமாகப் பேசினால் 'சரி இவர் அந்தக் குழு' என்று முடிவெடுப்பார்கள். தீபச்செல்வனின் பிரதி ஒன்றை நல்லவிதமாகப் பேசினால் 'சரி இவர் இந்தக் குழு' என்று முடிவெடுப்பார்கள். இந்த இருவரதும் பிரதியொன்றை ஒருவர் நல்லவிதமாக அழகியல் நோக்கோடு விமர்சித்தால் சமூகம் குழம்பிப்போகும்; இறுதியில் சமநிலையடைய அழகியல் பற்றி அதிகம் பேசுகிறார் அதனால் இவர்கள் இந்தியக்கைக்கூலிகள், ஜெயமோகன் குழு என்று முடிவெடுப்பார்கள். இதுதான் அவர்களின் உச்சபட்ச இலக்கியத் திறனாய்வு.



போர்காலச் சூழல் முடிவடைந்தபின் ஓரளவுக்குப் புனைவிலக்கியங்கள் எழுதப்படுகின்றன. சமீபத்தில் தொடர்ச்சியாக எழுதுபவர்கள் வரிசையில் சயந்தன், குணா கவியழகன், ஆர்.எம். நௌஷாத், ஜே.கே, தமிழ்நதி, இளங்கோ, சித்தாந்தன், நெற்கொழுதாசன், தமயந்தி, தர்மினி, திசேரா, இராகவன், கோ.நாதன், றியாஸ்குரானா, யதார்த்தன் போன்றோர்களை வைக்கலாம். இவர்களின் பெயர்கள் பொதுவாக பொதுவெளியில் அதிகம் தெரிபவை. இன்னும் அதிகமான புதிய எழுத்தாளர்கள் வீரியம்கொண்டு எழுதிக்கொண்டு இருகின்றார்கள். இவர்களையும் சரி, இவர்களுக்கு முன்னுள்ளவர்களையும் சரி, இவர்களின் இலக்கிய இடம் தெளிவாக விமர்சிக்கப்பட்டிருக்கின்றதா? எத்தனை கட்டுரைகள் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன என்று நோக்கும்போது ஏமாற்றமே எஞ்சுகின்றது. பெரும்பாலான ஈழத்து எழுத்தாளர்களின் படைப்பாக்கத்தைப் பற்றிச் சிறப்பாகக் கூர்மையாக மதிப்பீட்டுக் கட்டுரைகளை எழுதியவர்கள் தமிழக எழுத்தாளர்களாகவே இருக்கின்றார்கள். ஈழத்தில் வெளியாகிய சிறந்த நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் என்ற பட்டியல்கள் எத்தனை உள்ளன? ஒட்டுமொத்த ஈழத்து இலக்கியத்தின் இடம் சர்வதேசத்தில் என்ன என்பது போன்ற எத்தனை ஆக்கபூர்வமான விமர்சன, மதிப்பீட்டுக் கட்டுரைகள் உள்ளன? இக்கேள்விகளுக்கான விடை மிகுந்த ஏமாற்றம் அளிக்கக்கூடியவை. எம் படைப்பை விமர்சிக்கவும் அதன் படைப்பாக்கத் தன்மையை அளவிடவும் எம்மிடம் விமர்சகர்கள் இல்லை என்பது மறைக்க முடியாத உண்மை. அதனை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். அதனால் சக புனைவிலக்கியம் எழுதும் எழுத்தாளரே விமர்சனக் கட்டுரைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதவேண்டி இருக்கின்றது. எழுதவரும்போதே சக எழுத்தாளர் , சக எழுத்தாளரை விமர்சிக்கவேண்டி இருப்பது மட்டுமல்லாது அவர்களுக்கு முந்தைய எழுத்தாளர்களையும் விமர்சிக்க வேண்டிய தேவை கண் முன்னே இருக்கின்றது. இதனைப் பலர் சகிப்புத்தன்மையற்ற ஒன்றாகவே பார்க்கின்றார்கள். ஒருவர் ஒரு படைப்பைத் தரமற்றதாக விமர்சித்தால் எழுதிய எழுத்தாளர் கோபப்படுவதில் நியாயம் கிஞ்சித்தும் இருக்க முடியாது. பொது வெளியில் ஒரு படைப்பு முன்வைக்கப்படும் போது வெவ்வேறு விமர்சனங்களை உரசிச்செல்லும். அவற்றிலிருந்து தேவையானதைப் பொறுக்கிக் கொள்ளுதலும், விடுதலும் எழுத்தாளரின் சுயவுரிமை சார்ந்தது. ஆனால், விமர்சனங்களைத் தடுக்க முனைவது முற்றிலும் முதிர்ச்சியற்ற மொண்ணைத்தனமானது. இதனை உடைத்துக்கொண்டு எழுத்தாளராகவும், விமர்சகராகவும் உருவாக வேண்டியவர்களின் தேவை ஈழத்து இலக்கியச் சூழலுக்கு இப்போது அவசியம் தேவை. எத்தனை மோசமான புத்தகங்கள் வேண்டுமானாலும் எழுதப்படலாம், வாசிக்கப்படலாம், விற்பனையில் சாதனை படைக்கலாம். அவற்றில் எந்தச் சிக்கல்களும் ஒருபோதும் இருப்பதில்லை. ஆனால், அவ்வாறான படைப்புகள் ஆகச்சிறந்த படைப்புகள் என்று வரையறுக்கப்படும்போது, எழுதப்படும்போது அதன் போலித்தன்மையை கட்டுடைக்க, சுட்டிக்காட்ட வேண்டியது சிறந்த விமர்சகர்களின் கடமையாகின்றது.

ஈழத்து எழுத்தாளர்கள் புத்தகம் அச்சிடுவது பெருந்துன்பியல் சம்பவமாகவே இருக்கின்றது. பெரும்பாலான பதிப்பகங்கள் ஈழத்து எழுத்தாளர்களிடம் இருந்து பணத்தைப் பெற்றுவிட்டு அச்சிட்டுக்கொடுக்கின்றன. அபூர்வமாகச் சில எழுத்தாளர்களின் புத்தகச் செலவைப் பதிப்பகம் ஏற்றுக்கொள்ளும். அனேகமான எழுத்தாளர்கள் புலம்பெயர்ந்தவர்கள், செழிப்பான தொகையை பதிப்பங்கள் வேண்டிவிடுகின்றன. அச்சிட்டுக்கொடுக்கப்பட்ட புத்தகங்களை எழுத்தாளரே விற்கவேண்டும். புத்தக அறிமுகக் கூட்டத்தை அவர்களே ஒழுங்கமைக்க வேண்டும். கடைகளிடமும் அவர்களே ஒப்படைக்க வேண்டும். விநியோகஸ்தர்களிடம் தங்கியிருக்கும் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் பணத்தொகையைத் திரட்ட வேண்டும். இந்த அழுத்தத்தில் படைப்பாக்கத்தையும் செய்யவேண்டும். எத்தனை இம்சைகளை ஓர் ஈழத்து எழுத்தாளர் தாங்குவார்? புத்தகம் அச்சடிக்கப்பட்ட பணத்தின் பாதித்தொகையைப் புரட்டவே நாக்கு வெளியே வந்துவிடும். இதிலிருந்து மீளும் வகையில் என்ன வகையான பொறிமுறையை அமைக்கலாம்? பணம் பெற்றுக்கொள்ளாமல் அச்சிடும் பதிப்பகங்களை எமக்காக உருவாக்குவதில் என்ன சிரமம்? நாம் இவற்றை நோக்கிச் சிந்திக்க வேண்டும்.

பெரும்பாலான ஈழத்து எழுத்தாளர்கள் தென்னிந்தியப் பதிப்பகங்களையே நாடுகின்றார்கள். முதற் காரணம் தரமான அச்சுப்பதிப்பு. மற்றையது பரந்துபட்ட வாசகர்களைத் தமிழகப்பதிப்பகங்களில் பதிப்பதால் பெறலாம் என ஈழ எழுத்தாளர்கள் நினைக்கின்றனர்; தமிழகத்தில் விநியோகம் நிகழ்வதால் அவை ஓரளவுக்கு சாத்தியம் ஆவதுண்டு. இதனாலேயே பல படைப்புகள் தென்னிந்தியப் பதிப்பகங்களை நோக்கி நகர்கின்றன.


ஈழத்தில் அச்சிடப்படும் புத்தகங்கள் விநியோகம் இன்றித் தேங்கிவிடுகின்றன. அச்சிடக்கொடுத்த தொகை தேறுவதும் இல்லை. இதற்கு இருக்கும் ஒரே வழி அச்சிடப்படும் புத்தகங்களின் சிறுதொகை புத்தகங்களைப் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடம் விற்பனைக்குக் கொடுப்பது தான். டொலர்களிலும், யூரோவிலும் விற்கும் தொகை அச்சிடக்கொடுத்த பணத்தை ஓரளவு திரும்பித்தரும். இது வணிகநோக்கத்தை முதன்மையாக்குவதில்லை. ஓரளவுக்கேனும் கைக்காசைப் போட்ட எழுத்தாளர் அடுத்த புத்தகம் எழுதுவதற்கான தென்பைக் கொடுப்பதை முதன்மையாக்கும். ஈழத்து இலக்கியம் சார்ந்த எழுத்தாளர்கள் ஒன்றிணைந்து புலம்பெயர்ந்த தேசங்கள் முழுவதுக்குமாகப் புத்தக விற்பனைக்கான வலையமைப்பை ஏற்படுத்தவேண்டும். ஒருவருக்கொருவர் புத்தகங்களை விற்றுக்கொடுப்பதையும், அறிமுகக்கூட்டங்களை நடத்துவதையும் புத்துணர்ச்சியுடன் ஆரம்பிக்க வேண்டும். சரி இப்போது பூனைக்கு முதலில் மணி கட்டுவது யார்?

ஈழம் சார்ந்த எழுத்தாளர்களுக்கு வருடாவருடம் விருதுகள் கொடுப்பதற்காக எத்தனை நிறுவனங்கள், அமைப்புகள் நம்மிடம் இருகின்றன? உண்மையில் எழுத்தாளர் ஒருவரின் ஒரு பிரதியை மட்டும் முதன்மைப்படுத்தி விருதுகள் கொடுக்காமல், குறிப்பிட்ட காலத்தில் அவர்களின் இலக்கியத்துக்கான பங்களிப்புகள் என்ன என்று நோக்கி அவர்களின் பொருளாதார நிலைகளை மேம்படுத்தும் வண்ணம் எக்கச்சக்கமான விருதுகள் உருவாக்கப்பட வேண்டும். மீண்டும் மீண்டும் கனேடியத் தமிழ் இலக்கியத்தோட்டம் என்ற ஒரு அமைப்பின் விருதுகளின் அறிவிப்பைப் பார்த்துவிட்டுச் சட்டையைக்கிழித்து உருண்டு, புரண்டு சண்டைகள் போடுவதில் அர்த்தமில்லை. நாம் அதேபோல் பல்வேறு விருதுகளை உருவாக்க வேண்டும். நிறைய மூத்த எழுத்தாளர்களைக் கௌரவப்படுத்த வேண்டும். வெறும் விருதின் பெயர்பொறித்த சின்னங்களைக் கொடுக்காமல் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பணப்பரிசுகள் கொடுக்கப்பட வேண்டும். எமது பிரதேசம் சார்ந்த பல்கலைக்கழகங்களும், கல்வி நிறுவனங்களும் இவற்றை யோசிக்க வேண்டும். அனைத்தையும் எழுத்தாளர்களே செய்துகொண்டிருக்க முடியாது. அவர்களைச் சுதந்திரமாக எழுதவிட்டு அறிவுச் சமூகம் பல்வேறு பொறுப்புகளைப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும். இவற்றில் கரிசனை கொள்ள மெல்லமெல்ல ஈழத்துத் தமிழ் இலக்கியம் தனித்து நெஞ்சை நிமிர்த்தும். அந்த மகத்தான கனவு சாத்தியமாக்கப்பட வேண்டும்!

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொலைந்துபோன சிறிய அளவிலான கறுப்பு நிற பையிள்

'மூன்றாம் உலகப் போர் ஒருவேளை அணு ஆயுதங்களை கொண்டு போரிட்டால், நான்காம் உலகப் போரானது வில் அம்புகளைக்கொண்டு போரிட வேண்டும்'

லார்ட் லூயி மவுண்ட்பேட்டன்.

'மூன்றாம் உலகப்போர் எதைக்கொண்டு போரிடுவார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நான்காம் உலகப்போரானது வெறும் குச்சிகளும் கற்களும் கொண்டு தான் போரிடப்படும்'

- ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

**க**ண்ணாடி முழுவதுமாய், படர்ந்திருந்த பனிமூட்டத்தை; நான் கைகளினால் தேய்த்துக் கண்களை அருகே கொண்டு போய்ப் பார்த்தேன். நெடு நெடுவென்று வளர்ந்திருந்த ஃபைன் மரங்களும்,ஒலிவ் மரங்களும் அந்தக் கும்மிருட்டிலும் பச்சையாகத் தெரிய, மற்றைய பகுதிகளனைத்தும் பனிக்காடாய் கிடந்தது. அந்தக்காட்சி, தாங்க முடியாத குளிரில் பூமியானது, வெள்ளை நிறப் போர்வையொன்றைத் தன் உடல் முழுவதும் போர்த்திக் கொண்டு துயில் கொள்வதைப் போல் தோன்றியது. இன்னும் சில நிமிடங்களில், முழு வேகத்துடன் சென்று கொண்டிருக்கும் இந்த ரயிலானது, வேகம் குறைக்கப்பட்டு மாஸ்கோ நகரத்தில் நிறுத்தப்படும். இராணுவத்தில் சேருவதற்காக வர்ஷாவிற்கு வந்து கொண்டிருக்கும் என்னிடம் ஒரு அழுக்குப் படிந்த சிறியளவிலான ஆடைப் பையொன்றும், அதைவிடச் சிறியளவிலான தோற்பையொன்றுமிருந்தன. என்னிடமிருந்த அந்த தோற்பையினுள் கீழ்கண்ட பொருட்கள் சிலவற்றை வைத்திருந்தேன்.

• இந்த ஆண்டின் நோட்டுப் புத்தகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அந்தப் புத்தகத்தின் நடுப் பக்கமொன்றில்) வலது பக்க ஓரத்தில் சற்றே கிழிந்திருக்கும் என் மனைவியினதும், பிள்ளையினதுமான ஒரு கறுப்பு - வெள்ளைப் புகைப்படம்.

• தாஸ்தாயோவ்ஸ்கியின் அசடன், சூதாடி, மற்றும் போரும் சமாதானமும்.

• சிறியளவிலான கறுப்பு நிற பைபிள்.

• எழுதுகோல், ஒரு முழுச் சிகரெட் பெட்டி, இன்னபிற.

• இராணுவத் தலைமையகத்திலிருந்து அனுப்பப்பட்ட பழுப்பு நிறத் தாளில் அச்சடிக்கப்பட்ட கடிதம்.

ரயிலை விட்டு வெளியே வந்ததும் குளிர் தொட்டது. எதிரிலிருந்த மனிதர்களைப் பரவியிருந்த பனிமூட்டம் மறைத்தது. நான் என் இரண்டு கைகளையும், ஒன்றோடொன்று தேய்த்தபடியே, பைகளோடு நடக்கத் தொடங்கினேன். எங்களின் பயிற்றுவிப்பாளர் திரு.இவ்வானோவிச். முதல் நாளே நானும், சக சிப்பாய்களும் இருபது கிலோ மீட்டர்கள் ஓட வேண்டியிருந்தது. மைதானமெல்லாம் இருக்கவில்லை. ஒரே காட்டுப்பாதை தான். பத்துக் கிலோ மீட்டர்கள் வந்தவுடனே விளாமிடின் வயிற்றைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டான். மற்றவர்களுக்கு ஏதும் நடந்தால் அதைப்பற்றிய சிறு லஜ்ஜையுமின்றி உங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை நீங்கள் தொடர வேண்டுமென்று எனக்கு முன்னமே அறிவுறுத்தப்பட்டிருந்தபடியால் ஒரு கணம் அவனைத் திரும்பிப் பார்த்து விட்டுத் தொடர்ந்து ஓடலானேன். விளாமிடின். உண்மையில் அவனொரு புவியியல் பட்டதாரி. தான் மனதார விரும்பியவள் வேறொருவனோடு படுத்திருந்ததை நேரே கண்டுவிட்டான். கொலை செய்யுமளவுக்கு ஆத்திரப்பட்டிருக்கின்றான். ஆனால் அவனுடைய இளகிய மனம் அவளைக் கொலைசெய்ய அவனுக்கு இடம் கொடுக்கவில்லை. செய்வதறியாது, தன்னந்தனியே தெருக்களில் அலைந்திருக்கின்றான். வீட்டுக்குப் போக மனமில்லாமல் கைவிடப்பட்ட புகையிரத நிலையமொன்றில் காலத்தைக் கழித்திருக்கின்றான். கூடிய சீக்கிரமே அவனுக்குப் பைத்தியமும் பிடித்துப் போனது. அய்ந்தரை வருடங்களாக மனநிலைக் காப்பகமொன்றில் சிகிச்சையெடுத்த அவன், இராணுவத்தில் சேருவதற்கு ஒரு மாத காலத்துக்கு முன்பு தான் காப்பகத்திலிருந்து விடுவிக்கப்பட்டான். இரண்டாம் கட்டப் பயிற்சி முடிந்து, மூன்றாம் கட்டப் பயிற்சிக்காக எங்கள் அணிக்கு கூட்டி வரப்பட்ட போதுதான் நான் முதல் முறையாக அவனைப் பார்த்தேன். எனக்கு இப்பொழுதும் நன்றாக நினைவிருக்கின்றது. அன்று அவனுக்கு அவனுடைய கன்னங்களை மறைக்குமளவிற்குத் தாடி வளர்ந்திருந்தது. கொஞ்சம் குள்ளமானவன்.

விளாமிடினை நான் மறுபடியும் குளிக்கும் அறையில் வைத்துச் சந்தித்தேன். சர்ந்தப்பம் கிடைக்கும்போது அவனுடன் நைச்சியமாகப் பழகி அவனைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள எனக்கும் ஆர்வமிருந்தது. ஆனால் நான் அதைக் காட்டிக் கொள்ளாமல் மிக நுட்பமான முறையொன்றில் அதைத் தவிர்த்தே வந்தேன். என்னைப் போலவே அவனுக்கும் என்னுடன் பழக விருப்பமிருந்திருக்க வேண்டும். எதேச்சையாக நான் அவனை பார்க்க நேரிடும்போதெல்லாம் என்னைப் பார்த்து மய்யமாகச் சிரித்து வைத்தான். பதிலுக்குச் சிரிப்புமற்ற, குரோதமுமற்ற ஒரு பார்வையை அவனுக்கு நான் வழங்கினேன்.

ஒருநாள், கழிப்பறையில் ஒரே கூட்டமாயிருந்தது. முதலில் எனக்கு எதுவுமே புரிபடவில்லை. என்ன நடந்ததென்பதை அறிவதற்காக; குழுமியிருந்த வீரர்களைக் கைகளினால் விலக்கிக் கொண்டே ஒருவித விறுவிறுப்புடன் கழிவறைக்குள் நுழைந்த நான், அங்கே பிளவுபட்டுப் போயிருந்த தலையுடன் விளாமிடின் தற்கொலை செய்து செத்துப் போயிருப்பதைக் கண்டேன். அம்மணமாகக் கால்களைப் பரப்பி சரிந்து கிடந்தான். எனக்கு

□□□□

**தான் தற்கொலை செய்து கொள்வதற்கு முதல் தன் மனைவிக்கு கொடுப்பதற்காக கடிதமெதையும் எழுதி வைத்திருந்திருக்கலாம். அதற்குத் தோதானவொரு ஆளாக நான் அவனுக்குத் தெரிந்திருக்கலாம்.**

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றிலிருந்து குமட்டிக் கொண்டு வருமாற்போல் படவே வாயைப் பொத்திக் கொண்டு கழிப்பறையை விட்டு வெளியே வந்தேன்.

அன்று முழுவதும் விளாமிடின் எதற்காகத் தற்கொலை செய்து கொண்டான் என்பது பற்றியே யோசித்துக் கொண்டிருந்தேன். அவனுக்குள்ளிருந்த மனவுளைச்சல். அதுதான் அவனைத் தற்கொலை செய்யுமளவிற்கு உந்தியிருக்க வேண்டும். கதைத்திருக்கலாம். தான் தற்கொலை செய்துகொள்வதற்கு முதல் தன் மனைவிக்குக் கொடுப்பதற்காகக் கடிதமெதையும் எழுதி வைத்திருந்திருக்கலாம். அதற்குத் தோதானவொரு ஆளாக நான் அவனுக்குத் தெரிந்திருக்கலாம். அதற்காகவே என்னுடன் பழகுவதற்கு அவன் முயன்றிருக்கலாம். சே தவறிழைத்து விட்டேன். குறைந்தது ,அவன் என்னைப் பார்த்துச் சிரித்தபோது பதிலுக்கு நானும் சிரித்திருந்திருக்கலாம்.

## இரண்டாம் கதை

விளாமிடின் செத்துப் போய் இரண்டு தினங்களின் பின் ட்ரான்ஷ்கி என்பவர் துப்பாக்கி சுடுவதற்காக என்னை அழைத்துப் போனார். அவர் என்னிடம் ஒரு நீண்ட துப்பாக்கியைக் கொடுத்திருந்தார். நான் துப்பாக்கிகளைப் பற்றி அதிகம் அறிந்திராததால் என்னிடம் கொடுக்கப்பட்ட அந்தத் துப்பாக்கி எந்த வகையைச் சேர்ந்ததென்பதை என்னால் ஊகித்து அறிய முடியாமலிருந்தது. நான் பல தடவைகள் அந்தத் துப்பாக்கியையே புரட்டிப்புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு கரிய நிறக் கரடியொன்று எங்களைக் கடந்து போனது. நான் , என்னிடம் கொடுக்கப்பட்டிருந்த அந்த நீண்ட துப்பாக்கியினால் கரடியைக் குறி பார்த்தேன்.

கரடியொன்றும் அவ்வளவு மதிப்பான உயிரல்லத் தான். மற்ற மிருகங்களைப் போன்று அதுவும் ஒரு விலங்கு. தனக்குப் பசிக்கும் போது சாப்பிடுகின்றது, விடாய்க்கும் போது தண்ணீர் குடிக்கின்றது. அதனால் இன்னொரு உயிரின் துக்கத்தில் பங்கெடுக்க முடியுமா அல்லது ஆறுதல் தான் கூற முடியுமா இல்லைத் தான். இருப்பினும் அந்தக் கரடி எனக்கு என்ன செய்தது? என்னுடைய துப்பாக்கியின் இந்த விசையை அழுத்தி விட்டால் ஒரு உக்குறுணி அளவேயான குண்டொன்று எந்தத் தடங்கலுமின்றிக் கரடியின் வயிற்றில் ஆழமாகப் புதையுண்டு போகும். சொல்லமுடியாத வலியொன்றில் கரடியானது வீறிட்டுக் கதறும். வார்த்தைகளற்ற அந்தக் குழறலில் அதனுடைய எல்லாத் துயரங்களும் காற்றில் கலந்து பின் அடங்கிப் போகும். பீறிடும் இரத்தம் கண்டு, தான் இன்னும் சில நொடிகளில் சாகப்போவதை அது உணரக்கூடும்.தன் தாயோ அல்லது தகப்பனோ தன்னைக் காப்பாற்ற வரக்கூடும் என்ற தவிப்போடு அது தன்னுடைய இறுதி மூச்சினை விடக் கூடும். எல்லாம் சரிதான்.

ஆனால் நான் எதற்காக இந்தக் கரடியைக் கொல்ல வேண்டும் .அது எப்போதாவது கோபத்தில் என்னை ஏசியிருக்கின்றதா? தன் பற்களால் என்னைக் கடித்திருக்கின்றதா? குறைந்த பட்சம் என்னை விரட்டியாவது இருக்கின்றதா? இல்லையேஞ். பின் எதற்காக? உண்மையென்னவெனில், நான் அச்சொட்டாக என்னுடைய முதலாவது சூட்டிலேயே அந்தக் கரடியின் உயிரை எடுத்தால் தான் எனக்கான எதிர்காலம் நிச்சயிக்கப்படும். நான் உயிர் வாழ்வதற்கான இன்னொரு சாத்தியம் அந்தக் கரடியின் இறப்பிலேயே தங்கியிருக்கின்றது. என்னுடைய எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போவது நானொரு படைச்சிப்பாய் என்பதிலேயே தங்கியிருக்கின்றது. ஆகவே நான் இந்தக் கரடியைக் கொல்வதற்கு எந்தவிதமான காரணங்களும் இப்போதைக்கு எனக்குத் தேவையில்லை.ஆகவே கரடியே என்னை மன்னித்து விடு! இப்போது உன்மீது எனக்கு எந்தவித முன் விரோதங்களும் இல்லையெனிலும் உன்னைக் கொன்றாகவேண்டுமென்பதே எனக்கிருக்கும் ஒரே வழி.

ஓர் உயிரின் சாவு என்பது இன்னோர் உயிரைப் பிறப்புவிக்கின்றது அல்லது அவ்வுயிரைக் காக்க உதவுகின்றது. அதாவது இந்தக் கரடியின் சாவு,என்னுடைய அடுத்த கட்டத்தினைத் தீர்மானிக்கப்போவது போல. சாவு என்பது ஒரு அகண்ட வெளி - அது ஒரு பிரபஞ்சம் அளவிற்கு மிகப் பெரியது - ஒரு புள்ளியில் தொடங்கும் உயிரின் வாழ்வு இந்த வெளிகளில் சஞ்சரித்து -மிக நிதானமாக - சஞ்சரித்துத் வெளியின் விளிம்புக் கோட்டில் முடிந்து போகின்றது.பிரபஞ்சத்தின் மாயவெளிகளில் மிதந்து வந்த இந்தக் கரடியின் உயிர், இந்தத் கணமே விளிம்பை அடைகின்றது. அப்போது இன்னோர் உயிர் பிரபஞ்ச வெளியில் - அதாவது மேற்குறிப்பிட்ட மாயவெளிகளில் கரைந்து போகும் அபாயம் கொண்ட - தான்தோன்றியாகப் புலப்பட ஆரம்பிக்கின்றது. முடிவில் அந்த உயிரின் மரணமும் கரடியின் மரணத்தைப் போலவே அல்லது அதனை விடக் கொடுமையானதாகவும் நிகழ்ந்தேறி விடுகின்றது.

என்னால் கொல்லப்படவிருக்கும் இந்தக் கரடியின் வாழ்வு இன்னும் சில கணங்களில் முடிந்து விடுமென்பது எதனடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது? கற்பனைவாதத்திலா? அல்லது யதார்த்தவாதத்திலா? கற்பனைவாதமென்பது கடவுளை அடிப்படையாகக் கொண்டது. யதார்த்தவாதமென்பது அகடவுளை அடிப்படையாகக் கொண்டது.இதில் எது உண்மை என்பது அறிஞர்களினால் கூட இந்தக் கணம் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்டறிய முடியவில்லை.

இவ்வாறு ஒரு மண்புழுக் கணக்காக நேரம் நகர்ந்து கொண்டிருக்க 'ஏன் தயங்குகிறாய்? சுடு' என்றார் ட்ரான்ஷ்கி. மேலும், என்னுடைய தயக்கத்தின் காரணத்தைப் புரிந்து கொண்டவரான அவர் தொடர்ந்து பேசலானார்.

கொலை செய்வது சிரமமேயில்லாத காரியங்களிலொன்று. அதாவது தேகத்திற்கு எந்த நோவுமில்லை. ஆனால் மனதானது நம்மைத் துன்புறுத்திக் கொண்டேயிருக்கும். இந்தக் கரடியை எடுத்துக் கொள். இந்தக் கணம் அது தன்னுடைய வாழ்வை விட்டு வெளியேறி விதிக்குள் வந்துவிட்டது. ஒரு வட்டத்தைப் போல் விதி கரடியோடு நகர்ந்து கொண்டிருக்க வட்டத்தின் மய்யத்தில் கரடி ஊசலாடுகிறது.

உன்னுடைய மகிழ்ச்சியில் இன்னொருவருக்குத் துக்கம் இருக்குமாயின் நீ அந்த மகிழ்ச்சியை ஏற்றுக்கொள்வாயா?ட்ரான்ஷ்கி இப்படிக் கேட்பதில் ஏதாவது உள்நோக்கம் இருக்குமென எனக்குப்பட்டது. அத்தோடு அவர் கேட்ட கேள்வியின் சாரமும் சரிவரப் புரிபடவில்லை. பதில் சொல்வதற்கு எத்தனிப்பது போல் பாவனை காட்டிக் கொண்டே அவர் கேட்ட கேள்வியிலுள்ள சாரத்தைப் புரிந்து கொள்ள முற்பட்டேன். எவ்வளவுதான் யோசித்தாலும் என் மண்டைக்குள் கேள்வியின் சாரம் ஏறுவதாயில்லை. என்னுடைய மகிழ்ச்சியில் இன்னொருவருக்குத் துக்கமா? அது எப்படிச் சாத்தியமாகுமென்பதைச் சற்று விபரிக்க முடியுமா?

நீ தூர தேசமொன்றிற்குப் பயணப்படுகின்றாயென வைத்துக்கொள், ஒரு குதிரை வண்டிக்காரர் உன்னை ஏற்றிப் போகச் சம்மதிக்கின்றார். வண்டிக்காரரோ பரம ஏழை,அன்றாடம் காய்ச்சி. அவருடைய வண்டியில் இருவரை ஏற்றிச் செல்லக்கூடிய வசதியிருப்பினும் அன்று நீ மட்டும்தான் அவருக்குச் சவாரியாக அமைகின்றாய். உனக்கோ வண்டியில் நான் மட்டுமே பயணிக்கப் போகிறேனென்பதில் மகிழ்ச்சி. சகபயணியின் எரிச்சலைத் தரும் கேள்வி, குழந்தைகளின் கூப்பாடு இது எதுவுமேயில்லாமல் மன நிம்மதியோடு பயணிக்கின்றாய். ஆனால் வண்டிக்காரரோ உன் ஒருவனால் கிடைக்கும் காசை வைத்துப் பசியோடிருக்கும் தன் பிள்ளைகளுக்கு எவ்வாறு நிவேதனமிடுவதென ஆழ்ந்த கவலையிலிருக்கின்றார். யோசித்துப்பார் நீ மகிழ்ச்சியாக இருப்பதற்கும், வண்டிக்காரர் துக்கப்படுவதற்கும் ஒரே காரணமே அடிப்படையாக அமைகின்றது.

இரண்டு பண்ட வியாபாரிகள். அருகருகே வியாபாரச் சாலை வைத்திருக்கின்றார்கள். ஒருவர் நல்ல பண்டத்தை விற்கின்றார். மற்றவரோ மட்டமான பண்டத்தை விற்கின்றார். நல்ல பண்டம் விற்பவரின் சாலையில் தினந்தோறும் அதிகளவில் கூட்டம் கூடுகின்றது. மட்டமான பண்டம் விற்பவரின் சாலையிலோ கூட்டமேயில்லை. நாளுக்கு ஒருவரோ இருவரோ தான். நீயொரு இரக்க மனதுக்காரன். பண்டம் வாங்கப் போகையில் மட்டமான பண்டம் விற்பவர் மீது இரக்கப்பட்டு அன்று அவரின் சாலையிலேயே பண்டத்தைக் கொள்வனவு செய்கின்றாய். உன்னால் கிடைத்த பணம் குறித்து மட்டமான பண்டத்தை விற்பவர் மகிழ்ச்சியடைகின்றார். ஆனால் உனக்கோ மட்டமான பண்டத்தைச் சாப்பிட்டு அன்று நாள் முழுவதும் வயிற்றுக்குள் உளைச்சல். கடுமையான வயிற்று வலியில் அவதிப்படுகின்றாய்.

அவர் இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்போது கரடியானது தான் போன பாதையிலிருந்து விலகி,தலை நிமிர்த்தி எதையோ கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்தது. எனக்கு அது என்னுடைய குறியிலிருந்து தப்பிவிடுமோ என்று பட்டது.சற்றைக்கெல்லாம் என்ன நினைத்ததோ கரடி தான் போன பாதையிலிருந்து திரும்பி, வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையிலேயே மீண்டும் வரலாயிற்று. எனக்கு வயிற்றில் ஏதோ பிசையுமாற்போல் படவே, ட்ரான்ஷ்கி சொன்னதுபோல் உண்மையில் கரடி தன்னுடைய கடைசி விதிக்குள் நடமாடுவது போலவே தோன்றியது. அப்படியெனில், கரடி நிச்சயமாகத் தன்னுடைய இறுதி விதிக்குள் நுழைந்து விட்டதா?. நான் என்னுடைய இந்தக் கேள்வியைக் கொஞ்சம் அழுத்தியே கேட்டேன். ஆம், நிச்சயமாக. எந்தத் தயக்கமுமில்லாமல் என்னைப் போலவே தன்னுடைய பதிலையும் அழுத்தியே சொன்னார் ட்ரான்ஸ்கி. அவரின் இந்தப் பதிலால் கொஞ்சமாக விரக்தியடைந்த நான் அவரின் திறமையில் அவரையே கவிழ்க்க எண்ணினேன்.

ஒருவேளை என்னுடைய குறி தவறிவிடுகின்றது என வைத்துக் கொள்ளுங்கள். கரடி தப்பிவிடுவதற்கான அபாயமிருக்கின்றதல்லவா? நீங்கள் குறிப்பிட்ட தன்னுடைய கடைசி விதியின் வட்டத்திலிருந்து அது வெளியேறி மறுபடியும் தன்னுடைய வாழ்வை அது வாழத் தொடங்குகின்றதல்லவா? என்னுடைய இந்தக் கேள்வியை அவர் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை போலும். ட்ரான்ஸ்கி தன்னுடைய பதிலைச் சொல்வதற்குத் தடுமாறுகின்றாரெனப்பட்டது. என்னுடைய இந்தக் கேள்வியால் ஆள் கொஞ்சம் நிலைகுலைந்து போகலாமென நான் முன்னமே எதிர்பார்த்தது தான். எனினும் நான் ட்ரான்ஸ்கியை மேலும் சங்கடப்படுத்த விரும்பாமல் துப்பாக்கியின் விசையை அழுத்தி விட்டேன்.

அன்றிரவு தூக்கத்தில், என்னால் கொல்லப்பட்ட கரடி கனவில் வந்தது. அதன் மடியில் படுத்திருந்த என்னைக் கரடியானது வாஞ்சையோடு தடவிக் கொடுத்தது. நான் மறுபடியும் மறுபடியும் என்னை மன்னித்துவிடு... என்னை மன்னித்துவிடு... என்றே கூறிக்கொண்டிருந்தேன். கரடி ஒரு புன்னகையுடன் தன்னுடைய கைகளினால் என்னுடைய தலையைக் கோதிவிட அப்படியே தூங்கிப் போனேன்.

மறுநாள், திரு.அலெக்சாந்தர் லூக்கா சென்ஹாவிடமிருந்து அழைப்பு வரவே இரண்டு மணித்தியாலங்கள் கழித்து அவரைப் பார்க்கச் சென்றேன். மனிதர் தன்னுடைய மேசையில் அமர்ந்தவாறு சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் வாவென்று கைகளால் சைகை செய்தார். நான் ஒரு மரியாதையுடன் உள்ளே நுழைந்து அவருக்கு வணக்கம் தெரிவித்தேன்.

இப்போது திரு.அலெக்சாந்தர் லூக்கா சென்ஹா பேச ஆரம்பித்தார். புதிய இளைஞனே உன்னைப் பற்றி இப்போதுதான் ட்ரான்ஷ்கி கூறிவிட்டுப் போனார். மிக அற்புதமாகச் சுடுகின்றாயாம். அது நல்லது. இராணுவ வேலையென்பது யாராலுமே எடுத்துவிடக் கூடிய ஒன்று தான். ஆனாலும், ஒரு சிலரே அதற்கு முழுத்தகுதியானவர்களாகின்றார்கள். ஒருவரின் தேக நேர்த்தியும், திறமையும் அதைத் தீர்மானிக்கின்றன. நான் அவர் என்ன சொல்கின்றாரென்பதையும், சொல்லும் விதத்தையும் கூர்ந்து கவனித்த படியிருந்தேன். பொதுவாக மனிதர் யாரையும் அவ்வளவு எளிதில் புகழ்ந்து விடக் கூடியவரல்ல. புகழ்ச்சியானது ஒரு மனிதனின் திறமையை மழுங்கடிக்கச் செய்து விடுமென்பதே அதற்குக் காரணம். நான் உலர்ந்து போயிருந்த என்னுடைய உதடுகளை நாவினால் மேவி ஈரப்படுத்திக் கொண்டு அவருக்கு பதில் சொல்ல ஆயத்தமானேன்.

நீ சுடுவதைத் தவிர வேறெதுவும் அறிந்திருக்கின்றாயா? அவர் இதைக் கேட்கும் போது அவருடைய முகமானது இறுக்கமானதாகவும், கண்கள் கூர்மையானதாகவும் இருந்தன.

உண்மையில், நான் நன்றாகச் சுடுவேனென்பது இங்கே வந்த பிறகுதான் எனக்கே தெரிந்தது. ஆனால் அவருடைய இந்த வெளிப்படையான கேள்வியில் நான் தடுமாறிப் போனதை அவருக்கு உணர்த்த விரும்பாமல் நான், என்னுடைய சிறிய வயதில் நன்றாக ஓவியம் தீட்டக் கூடியவனாகவும், என்னுடைய தாய் அந்த ஓவியங்களை விற்றுக் காசு பார்த்திருக்கின்றாளென்றும் பச்சையாகப் பொய் சொன்னேன்.

நான் அவ்வாறு சொன்னபோது என்னுடைய குரலில் சிறியளவிலான நடுக்கமும், தடுமாற்றமும் இருந்ததாகவே எனக்குத் தோன்றியது. குரலில் இருந்த நடுக்கத்தை திரு.அலெக்சாந்தர் லூக்கா சென்ஹா உணர்ந்திருக்க வேண்டும். என்ன நினைத்தாரோ தன்னுடைய அடுத்த கேள்வியைக் கீழ்க்கண்டவாறான முறையொன்றில் கேட்டார்.

உனக்கு இயேசுவில் நம்பிக்கை இருக்கின்றதா? இயேசு. இந்த உலகிலே என்னை அதிகம் பரவசமூட்டும் வார்த்தையாக அவர் இருக்கின்றார். தனித்திருக்கும் பொழுதுகளில் கண்களை மூடித் தியானிக்கும் போது நித்திய இயேசுவின் முகமும், அவரின் சாத்வீகமான குரலுமே என்னை முழுவதுமாய் ஆட்கொள்கின்றது. ஒரு இனிமையான சங்கீதத்தைக் கேட்பதுபோல், ஒரு சிறந்த ஓவியரால் தீட்டப்பட்ட விலைமதிப்பற்ற ஓவியத்தை ரசிப்பது போல், ஒதுக்கப்பட்ட கிராமமொன்றின் மய்யத்திலிருக்கும் ஆற்றுப் பகுதியில் அமர்ந்து இயற்கையை உணர்வது போல் இயேசுவானவர் என்னைத் தன்னுள் ஈர்த்துக் கொண்டேயிருக்கின்றார். தேவாலயத்தில் அமர்ந்து சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் முகத்தைப் பார்ப்பது போல் வேறெதுவும் எனக்கு அமைதியைத் தந்துவிடப் போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது ஒரு சுகம், தாயின் கர்ப்பப் பையில் இருப்பதைப் போல அது ஒரு இனிமை. இவை யாவற்றையும் அமைதியாகவும், தெளிவாகவும் திரு.அலெக்சாந்தர் லூக்கா சென்ஹாவிற்கு நான் சொன்னபோது அவருடைய கண்கள் மகிழ்ச்சியில் மின்னியதைக் கண்டேன். மனிதரும் என்னைப் போலவே இயேசுவை அதிகம் நேசித்திருக்க வேண்டும்.

இயேசு எனக்கும் மிகப் பிடித்தமான மனிதர் . அவரைப்போல் ஒரு நேரிய நல்லவனை தாஸ்தாவோஸ்கி படைக்க முயன்று தோற்றுப் போயிருக்கின்றார். தாஸ்தாவோஸ்கியின் நாவல்கள் சிலவற்றை நீ வைத்திருப்பதாக அறிந்தேன். 'அசடன்' வாசித்திருக்கின்றாயா? என்று விட்டு தன்னுடைய மேசையின் இழுப்பறையைத் திறந்து ஒரு மொத்தமான புத்தகத்தைக் கையிலெடுத்தார். சடசடவெனப் பக்கங்களைப் புரட்டியவர் குறிப்பிட்ட ஒரு பக்கத்தில் நிறுத்தி ஒரு பந்தியை வாசிக்க ஆரம்பித்தார்...

*இந்நாவலின் கருத்து எனக்கு மிகவும் பிடித்தமான பழைய கருத்து.ஆனால் அது சிக்கலானதால் நீண்ட காலமாக நான் தொடவில்லை.இப்போது அதனைத் தொட்டிருக்கிறேன் என்றால் மிகவும் மோசமான நிலையில் என்னைக் காண்பதாலேயே.நாவலின் பிரதான கருத்தாக்கம் நேரியதான நல்லவனைப் படைப்பதே. உலகத்தில் வேறெதுவும் அவ்வளவு சிரமமானதல்ல. குறிப்பாகத் தற்போதைய காலகட்டத்தில்,நேரிய நல்லவனைப் படைக்க முயன்ற எல்லா எழுத்தாளர்களும் மட்டுமல்லாது,ஐரோப்பிய எழுத்தாளர்களும் எல்லாத் தடவைகளிலும் தோற்றுப் போயினர். அது ஒரு வரம்பற்ற காரியம். நல்லது என்பது ஒரு லட்சியம். நம்முடையதும்,பண்பாடடைந்த ஐரோப்பாவினதுடையதுமான அந்த லட்சியம் இன்னும் ஈடேறவில்லை. உலகமெங்கிலும் ஒரே ஒரு நேரிய மனிதன்தான் இருக்கின்றான்.. கிறிஸ்து. கிறிஸ்தவ இலக்கியத்தில் உள்ள நல்ல வகைமாதிரிகளில் மிகவும் பூரணமானது டான் குயிக்ஸாட் ஆனால் அவன் அசட்டுத்தனமாக இருப்பதினாலேயே நல்லவனாக இருக்க முடிகின்றது. இதன் காரணமாகவே வெற்றி பெறுகின்றது. தனது மதிப்பை உணராத நல்லவன் முட்டாளாக்கப்படுகையில் கருணையுணர்வு உண்டாகின்றது. அதன் காரணமாகவே வாசகனிடம் இரக்கம் பிறக்கின்றது. இந்தக் கருணை எழுவதே நகைச்சுவையின் இரகசியம்.விக்டர் ஹியூகோவின் துயருற்றவர்கள் நாவலின் ஜீன் பால் ஜீனும் சக்திமிக்க முயற்சியே. அவனது துரதிர்ஷ்டத்தின் அளவாலும்,சமூகம் அவன் பால் காட்டும் அநீதியாலும் அவன் இரக்கத்தை உண்டு பண்ணுகிறான். எனது நாவலில் இந்த மாதிரி எதுவுமில்லை.ஒன்றுமில்லை.எங்கே அது முழுத் தோல்வியாகிவிடுமோ என்று மிகவும் அஞ்சுகின்றேன்.*

**இனிய ஆன்யா!**

நாசிகளுடனான இன்றைய யுத்தம் முடிவுக்கு வந்து இப்பொழுதுதான் நாங்கள் எங்கள் முகாமுக்குத் திரும்பியிருந்தோம்.வந்தவுடனேயே நான் இந்தக் கடிதத்தை உனக்கு எழுதுகின்றேன். வெளியே பனி கொட்டிக்கொண்டிருக்கின்றது. மைனஸ் ஏழு டிகிரி.கூடவே பலத்த காற்றும் வீசிக்கொண்டிருக்கின்றது. நான் தங்கியிருக்கும் கூடாரத்துக்கு மேலே கட்டப்பட்டிருக்கும் கொடியானது காற்றில் சடசடக்கும் ஒலியை என்னால் உணரக்கூடியதாக இருக்கின்றது. நிலைமை இப்படியே போனால் கூடாரம் சாய்ந்து போய்விடுவதற்கான அபாயமுமிருக்கின்றது. பார்ப்போம். அறுந்து விழுந்தால் அதைக் கடிதத்தின் தொடரில் உன்னிடம் தெரிவிக்கின்றேன். இன்றைய யுத்தத்தில் நாஸி அணியினருக்குப் பலத்த சேதம். உறைபனிக்குள் முக்கோண வியூகமமைத்து எங்கள் தாக்குதலை நடத்தியிருந்தோம். அதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.ஆரம்பத்திலேயே தடுமாறிப்போனார்கள். செய்வதறியாது திகைத்தார்கள்.அவர்களின் இந்தச் சூழ்நிலையை எங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்ட நாங்கள் பன்றிகளையும் நாய்களையும் காக்கைகளையும் சுடுவதைப் போல் அவர்கள் ஒவ்வொருவரையும் சுட்டு வீழ்த்தினோம். நகரெங்கும் பிசிறிய இரத்தமும் ரவைகளினால் துளையுண்ட கபாலங்களையுடைய உடல்களையும் கிடந்தன. பின்னர் அவ்வுடல்கள்

□□□□ **நாசிகளுடனான இன்றைய யுத்தம் முடிவுக்கு வந்து இப்பொழுதுதான் நாங்கள் எங்கள் முகாமுக்குத் திரும்பியிருந்தோம். வந்தவுடனேயே நான் இந்தக் கடிதத்தை உனக்கு எழுதுகின்றேன்** □□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள் கண்ணெதிரேயே கழுத்து மழிக்கப்பட்ட கழுகுகளாலும் செந்நிற இறக்கைகளையுடைய வல்லூறுகளினாலும் கொத்திக் கிழிக்கப்பட்டன. எங்கள் இராணுவத் தளபதி திரு.அலக்சாந்தர் லூக்கா சென்ஹா இந்த வெற்றியை ரஷ்யாவின் பாரம்பரிய இராணுவக் கொண்டாட்டங்களுடன் கொண்டாட விரும்பி இராணுவச் சிப்பாய்கள் ஒவ்வொருவருக்கும் சிவப்புநிற வைன் குடுவைகளையும்,அடுப்புக் கரியில் வாட்டப்பட்ட பன்றி இறைச்சிகளையும் கொடுத்தார். சிப்பாய்கள் அனைவரும் இன்று மிதமிஞ்சிய குதூகலத்துடன் காணப்பட்டனர்.அனைவரின் முகங்களிலும் வெற்றிக்களிப்பு.

இந்தக் கொண்டாட்டத்தில் பங்குபெற மாஸ்கோவிலிருந்து அக்லேயாவும் அழைக்கப்பட்டிருந்தார். இவ்வெற்றியில் அவ்வளவாக அவருக்கு உடன்பாடில்லை என்பதை நான் அவருடைய முகத்தைப் பார்த்த போதே கண்டுபிடித்திருந்தேன். யாருடனும் அவ்வளவாகப் பேசவில்லை திரு அலக்சாந்தர் லூக்கா சென்ஹாவே அவருடன் வலுக்கட்டாயமாகப் பேசிக்கொண்டிருந்தார்.இந்த வெற்றிக்காகத் தன்னுடைய வீரர்களைத் தான் எப்படித் தயார்படுத்தினாரென்றும்,தன்னுடைய முக்கோண வியூகம் பற்றியும் விளங்கப்படுத்திக் கொண்டிருந்தார். ஆனால் அக்லேயா இவை யாவற்றையும் செவிமடுத்தாரில்லை.ஒரு மரியாதைக்காக அவர் சொன்னவற்றைக் கேட்டுக் கொண்டிருப்பதாகப் பாவனை செய்தவர் திரு அலக்சாந்தர் லூக்கா சென்ஹாவிடமிருந்து பிரிந்து தனியான ஒரு இடத்துக்கு சென்றுவிடவே விரும்பினார்.

நான் இதை ஒரு நாடகம் போல் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு கட்டத்தில் அந்த நாடகம் சலிப்பை ஏற்படுத்தவே நான் எனக்காக ஒதுக்கப்பட்டிருந்த மேசைக்குச் சென்று அமைதியாக வைன் அருந்த ஆரம்பித்தேன். அப்பொழுது உன்னுடைய நினைவு வந்தது. கொண்டாட்டம் முடிந்து கூடாரத்துக்குத் திரும்பியவுடனே இந்த மகிழ்ச்சியை உன்னுடனும் பகிரவேண்டுமென்றும் தோன்றியது. அதற்கான உரைநடையை அப்பொழுதே தயார்ப்படுத்த ஆரம்பித்தேன், இருந்தாலும் அக்லேயாவின் முகமும், அவருடைய மனக்குழப்பமும் எனக்குள் அடிக்கடி வந்து போனது.அக்லேயா சாதாரணமாக அவ்வாறான ஒரு பெண் கிடையாது. அவருடைய மாசற்ற முகமும் ,வெள்ளந்தியான புன்னகையும் எவராலும் மறக்கப்பட முடியாதவொன்று. மாஸ்கோவிலேயே அனைவராலும் மதிக்கப்படும் பெண்களில் அவரும் ஒருவர். ஆறாண்டுகளுக்கு முன்னர் ரஷ்ய அதிபரினால் அவருக்குக் கேடயம் ஒன்றும் அளிக்கப்பட்டது.

நான் அக்லேயாவைப் பற்றிய நினைவுகளை அழிக்க எண்ணி வாட்டப்பட்ட பன்றி இறைச்சித் துண்டை மிகச்சிறிய கத்தியொன்றினால் வெட்டியபோது இறைச்சியிலிருந்து இரத்தமானது கசிய ஆரம்பித்தது. வெட்டிய இறைச்சித் துண்டிலிருந்து இன்னொரு சிறியளவிலான துண்டொன்றைப் பிய்த்தெடுத்து இரத்தத்துடன் தோய்த்து உண்ணலானேன். அதன் ருசியானது அற்புதமாகவிருந்தது. நான் என்னிடமிருந்த குறிப்புப் புத்தகமொன்றைக் கையிலெடுத்துக் கீழ்க்கண்டவாறு அதில் எழுத ஆரம்பித்தேன்.'உலகிலேயே அற்புதமான உணவு இரண்டு கோப்பைச் சிவப்பு வைனுடனான வாட்டப்பட்ட இறைச்சித் துண்டுகளே'

நாகோவ்

நாகோவ் மார்ச் 21 என்று தேதியிடப்பட்ட உன்னுடைய கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி. அன்று நாங்கள் வெற்றியீட்டியிருந்தோம் அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பிறகு இரண்டு வாரங்களாகச் சிப்பாய்களுக்கு வேலையே இல்லாமல் போனது. எவ்வாறாயினும் நாஸி படையினர் பயந்து பின்வாங்கிவிடக் கூடியவர்களல்ல என்பதையும் நாங்கள் உணர்ந்தேயிருந்தோம். அவர்கள் ஏதாவது ஒரு திட்டத்துக்காகக் காத்திருக்கலாம்.அல்லது அவர்களுடைய தலைவரிடமிருந்து அடுத்தகட்ட நடவடிக்கை எவ்வாறு அமையவேண்டும் என்ற குறிப்பு இன்னும் வந்து சேராமலிருக்கலாம்.சூழ்நிலை எதுவாகிலும் நாங்கள் அனைவரும் கடந்த இரண்டு வாரங்களாக உசார் நிலையோடு ஒரு கையில் துப்பாக்கியையும் மறுகையில் தொலைகாட்டியையும் ஏந்திய வண்ணமிருக்கின்றோம். எங்கள் அணிக்கு திரு அலக்சாந்தர் லூக்கா சென்ஹா போன்றவொருவர் தளபதியாயிருப்பது கூடுதல் பலம். எதிராளிகள் மீதான ஒவ்வொரு அடியையும் மிக நிதானமாகவும் அதே நேரம் மிகச் சிறப்பான திட்டத்தோடும் முன் வைத்தார். இதுவரை எங்களின் வெற்றிக்காகப் பதினான்கு திட்டங்களை அவர் செயற்படுத்தியிருந்த போதும் அதில் மூன்று மாத்திரமே தோல்வியுற்றிருந்தன. அதிலும்கடைசித் தோல்வி சற்றும் எதிர்பாராதவொன்று. எங்கள் வீரர்கள் திட்டப்படி முன்னேறிக் கொண்டிருந்தார்கள். ஆயுதங்களும் தலைமையகத்திலிருந்து வந்துகொண்டேயிருந்தன.

'எவற்றுக்கும் கணக்குச் சொல்லவேண்டிய தேவை உங்களுக்கு இல்லை. ஆயுதங்கள் தீர்ந்து போனால் சொல்லி அனுப்புங்கள் இரட்டிப்பாக அனுப்புகின்றோம்' என்று எங்கள் தளபதிக்கு அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் இவர் ஒவ்வொரு ரவைக்கும் கணக்குக் காட்டினார்.அநியாயமாக எதையும் இழந்து விடாதீர்களென்று சிப்பாய்களுக்கு வேண்டுகோளும் விடுத்திருந்தார்.

ரஷ்யாவின் புறநகரொன்றில் பிறந்தவரான எங்கள் தளபதி அலக்ஸாண்டர் லூக்கா சென்ஹா அதிகம் படித்தவரல்ல. ஆனால் அவர் கற்றுக்கொண்ட பாடங்களனைத்தும் அவரை ஒரு மேதை போலாக்கியது. அதுகுறித்து அவருக்குப் பெருமையும் உண்டு.

### மூன்றாம் கதை

இன்று முடிவு தெரிய வேண்டும் என்பதாகச் சண்டையிட்டோம். நாஜிகளின் போர் விமானங்கள் எங்கள் தலைக்கு மேலாகப் பருந்துகளைப் போல் வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்தன. எங்கள் படையின் ஒரு பிரிவு அவர்களின் விமானங்களைக் குறி வைத்துச் சுட்டுக் கொண்டிருந்தார்கள். இரண்டு பக்கமும் ஆட்கள் செத்துக் கொண்டிருந்தார்கள். உறைந்து போய்க் கிடந்த பனியில் பிசிறிய இரத்தமும் கெட்டிப்பட்டுக் கிடந்தது. நான் பிணங்களோடு பிணங்களாக என்னை மறைத்துக் கொண்டு சண்டையிட்டேன்.

ஒவ்வொரு உடலாகப் பொறுக்கியெடுத்து அவை எல்லாவற்றையும் ஓரிடத்தில் குவித்துக் கொண்டிருந்தோம். சில உடல்கள் தலையில்லாமல் முண்டங்களாயிருந்தன, சில உடல்கள் கைகளில்லாமலிருந்தன. சில உடல்கள் கால்களில்லாமலிருந்தன. இன்னும் சில தலைகள் மட்டுமே கிடந்தன. அப்போதுதான் அவனைப் பார்த்தேன். அவனுடைய கண்கள் என்னையே நேராக ஊற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன. பயங்கரமாக மூச்சு வாங்கினான். நான் அவனருகிற் சென்று இலாவகமாகத் தூக்கி மடியில் கிடத்தினேன். தாகமாய் இருக்கின்றது தண்ணீர் கொடுங்கள் என்றான். என்னுடைய தண்ணீர் நிரப்பப்பட்ட குடுவையை எடுத்து அவனுக்குத் தண்ணீர் பருக்கினேன். களைப்புத் தீர்ந்ததும் ஒருவாறாகத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவன், கண்களால் நன்றியென்றான்.

என்னுடைய ஒரு கையால் அவனது மார்பினை நீவி விட்டுக் கொண்டே மறு கையினால் என்னுடைய

□□□□

**அக்லேயா சாதாரணமாக அவ்வாறான ஒரு பெண் கிடையாது. அவருடைய மாசற்ற முகமும், வெள்ளந்தியான புன்னகையும் எவராலும் மறக்கப்பட முடியாதவொன்று.**

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சப்பாத்துக்குள் ஒழித்து வைத்திருந்த மண்ணிறக் கத்தியொன்றினை எடுத்து நேராக அவனது கழுத்தில் குத்தினேன். ஆரம்பத்தில் கத்தியின் அந்தக் கூரான முனை அவனுடைய தோலைக் கிழித்துக் கொண்டு ஸூப்பர் பிசியல் செர்விகல் பாஸ்சியாவிக்குள் இறங்கியது. இருண்டு போன கண்களால் என்னை வெறித்துக் கொண்டே கால்களைப் பலமாக நிலத்தில் உதைத்தான். அவனுடைய கைகள் என்னுடைய கைகளை உந்தித் தள்ள முயன்றன. நான் இன்னும் ஆவேசம் கொண்டவனாகக் கத்தியின் மீது என்னுடைய கையைப் பரப்பி மற்றக் கையால் கையின் மேற்புறத்தில் குத்தினேன். கத்தி இன்னும் ஆழமாக உள்ளே சென்று, க்ரோரிட் வெசலஸ்ஸில் இறங்கியது. நான் இன்னுமொரு தடவை கையினால் குத்த அந்தக் கத்தி டீப் செர்விகல் பாஸ்ஸியாவிற்குள் நுழைந்து கடைசியாக மஸ்கியூலர் ஸ்ரக்ச்சருக்குள் போய் நின்றது.

பையொன்றிலிருந்து சேமித்து வைத்திருந்த தண்ணீரானது வெளியேறுவதைப் போல இரத்தம் குபுகுபுவென்று அவனுடைய கழுத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தது. நான் இவை யாவற்றையும் முடித்து விட்டு பெர்லினின் மய்யத்திலிருந்த சிதைவுற்ற கட்டிடமொன்றுக்குள் நுழைந்தேன். கட்டிடத்தின் ஒரு பகுதியில் இன்னமும் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. சில பகுதிகள் கரிக்கட்டைகளாகவும், நொறுங்கியவையாகவும் இருந்தன. தப்பிப் பிழைத்த யாராவது ஒருவர் இதற்குள் இருக்கலாமென்பதாலும், எதிர்பாராத நேரத்தில் அவர் என் மீது தாக்குதல் நடத்தலாமென்பதாலும் என்னுடைய ஒவ்வொரு அடியையும் மிகக் கவனமாக எடுத்து வைத்தேன். அப்பொழுதுதான் அவளைப் பார்த்தேன். ஒரு வெருண்ட பூனையைப் போல் நடுங்கிக் கொண்டிருந்த அவளின் முகத்தில் பயம் அப்பிக் கிடந்தது. என்னுடைய சப்பாத்துக் கால்களிலிருந்து எழும்பிய ஒலியை அவள் கேட்டிருக்க வேண்டும். ஓடிப் போய் அறையின் மூலைக்குள் ஒழிந்து கொண்டாள். நான் மெதுவாக அவளின் அருகில் சென்று பாதங்களினால் அமர்ந்து கொண்டே அவளின் தோளைத் தட்டினேன். மேலும் நடுங்கியவளான அவள் தன் இரண்டு கைகளையும், இரண்டு மதில்களைப் போலமைத்து தன்னுடைய முகத்தை மறைத்துக் கொண்டாள். அறையில் பரவியிருந்த இருள் இருண்டு போயிருந்த அவளின் முகத்தை இன்னும் இருண்மையாக்கிக் காட்டியது.

அவளின் முகத்தைப் பார்ப்பதற்கு விருப்பம் கொண்ட நான் முகத்தை மூடியிருந்த அவளது கைகளை விலக்க எத்தனித்த போது ஒரு வேகத்தோடு என்னுடைய கைகளைத் தட்டிவிட்டவள், அதே வேகத்தோடு மறுபடியும் தன்னுடைய முகத்தை மறைத்துக் கொண்டாள். நான் திரும்பவும் என்னுடைய கைகளை அவளை நோக்கி நீட்டியபோது அவள் பயங்கரமாகக் கத்திக் கொண்டே தன்னுடைய கால்களை என்மீது எத்தினாள். அவளுடைய பாதங்களை என்னுடைய மார்பில் வாங்கிக் கொண்டே சடசடத்த அவளுடைய கைகளைப் பற்றிப் பிடித்தேன். அவள் கொஞ்சம் பலமானவள். தன்னுடைய திமிறலில் மார்பில் சொருகியிருந்த கால்களை மிக இலாவகமாக விடுவித்துக் கொண்டவள், அதே வேகத்துடன் தன்னுடைய கால்களினால் என்னுடைய முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டாள். அந்த அடியில் என்னுடைய மூக்கு உடைந்திருக்க வேண்டும். நல்ல வேளையாக அப்படி நடக்கவில்லை. இரத்தம் தான் கசிந்தது.

நான் கோபத்தில், அவளுடைய கால்களிரண்டையும் பற்றிப் பிடித்து, சரசரவென்று இழுத்தேன். கணுக்கால் வரை நீண்டிருந்த அவளின் பாவாடை இப்போது அவளின் தொடை வரை சென்றிருந்தது. அவசர அவசரமாகத் தன் ஆடைகளை ஒழுங்குபடுத்தினாள். ஒரு வேகத்தோடு அவளின் பாவாடையை இழுக்க முயன்ற போது சடாரென என் கைகளைத் தட்டி விட்டாள். அவளுடைய கண்கள் வெறுப்பைக் காறி உமிழ்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்,என்னுடைய ஒரு கையினால் அவளின் தாடையைப் பிடித்துக் கொண்டே,மற்றக் கையினால் அவளின் தலைமுடிக் கற்றையைக் கொத்தாகப் பிடித்து தூக்கினேன்.ஒரு பேயைப் போல் திமிறிய அவள்,சிவப்பேறிய கண்களுடன் கோபத்தில் என் முகத்தில் காறித் துப்பினாள். அவமானமும்,கோபமும் தலைக்கேற முஷ்டியை மடக்கி அவளின் முகத்தில் இரண்டு தடவைகள் பலமாகக் குத்தினேன். மூக்கு உடைபட்டு இரத்தம் கசிந்தது. வலியில் அலறிய அவளின் முகத்தில் மேலும் இரண்டு குத்துக் குத்தினேன். இப்போது அவளின் முகமே இரத்தக் களறியாகக் கிடந்தது. கண்களுக்குக் கீழே சற்றுக் கறுக்கத் தொடங்கியது. பற்றியிருந்த அவளின் தலைமுடிக் கற்றையிலிருந்து நான் என்னுடைய கைகளை விடுவித்துக் கொண்ட போது மயக்கத்தில் அப்படியே நிலத்தில் சரிந்தாள்.

நான் அவளைப் புணர்ந்து கொண்டிருக்கும்போது திடீரென்று அவன் தோன்றினான்.முகம் சரியாகத் தெரியவில்லை.அவனின் தேகத்தை ஒரு பிரகாசமான ஒளி சூழ்ந்திருந்தது.கூர்ந்து கவனித்தபோது என்னுடைய சாயல் இருப்பதாகப்பட்டது. நான் அப்போதும் புணர்ந்து கொண்டே இருந்தேன். அப்போது ஒரு மென்மையான குரல் -அல்லது அசரீரி - என் காதுகளை நனைக்குமாப் போல் தாவிச் சென்றது. 'மானிடனே, அதிகாரம் உன் தேகத்தில் மலைப்பாம்பினைப் போல் ஊர்ந்து கொண்டிருக்கின்றது.மமதையும்,அகங்காரமும் உன்னை மாற்றி விட்டது.உன்னுடைய தேகத் துவாரங்களிலிருந்து வியர்வைத் துளிகளைப் போல் விசமானது வெளியேறிக் கொண்டிருக்கின்றது.நீ உன்னை மறந்து விட்டாய்,உனக்குள் இன்னொருவன் குடியேறிவிட்டான்.'

நான் ஒரு வெறியோடு அவளைப் புணர்ந்து கொண்டே,அப்பாற் போ சூத்தோட்டை என்று கத்தினேன்.என்னுடைய நெற்றியிலிருந்து பிரிந்த வியர்வைத் துளியொன்று ஜேர்மனியப் பெண்ணின் முகத்தில் பட்டுத் தெறித்தது.

இப்போது அவ்வுருவம் என் பின்னால் வந்து நின்று கொண்டது. நான் மறுபடியும்,மறுபடியும் உனக்குச் சொல்லுகின்றேன்.இது கொடுமை,மகா பாதகம். உனக்கு மனைவியிருக்கின்றாள். கூடவே ஒரு குழந்தையுமிருக்கின்றது. நீ இவளைப் புணர்வது போன்றே உன் மனைவியை வேறொருவன் புணரக் கூடும்,பரிதாபத்துக்குரிய உன் குழந்தையின் அல்குல்லில் இன்னொருவன் துருப்பிடித்த கத்தியைச் சொருகக் கூடும்.

இப்படியாக அந்த உருவம் கூறிக்கொண்டிருக்க மிதமிஞ் சிய கோபத்தில் எனக்கு உடல் நடுங்குமாப் போல் படவே, தலை வரை ஏறிய ஆத்திரத்தில்,அவளின் பிறப்புறுப்பில் சொருகியிருந்த என் உறுப்பைப் படாரென்று வெளியே இழுத்தேன். கண்கள் சிவக்க நின்று கொண்டிருந்த உருவத்தை நோக்கிக் காலால் எத்தினேன்.ஒரு மாயத் துவாரத்துக்குள் நுழைந்த காம்பினைப் போல் என்னுடைய கால்கள் அந்த உருவத்துக்குள்ளேயே சென்று மறுபடியும் வெளியே வந்தது.

இரட்டிப்பாகிய ஆத்திரத்துடன், அருகிலிருந்த சிலையொன்றினைத் தூக்கி அடிக்க ஓங்கியபோது உருவம் மங்கலாகி மறைந்து போனது. இப்போது என் முழுக் கோபமும் ஜேர்மனியப் பெண்ணின் மீது திரும்ப அவளின் மீது பாய்ந்து அவள் உடல் மேல் அமர்ந்தவாறே அவளுடைய முகத்தை நோக்கிப் பல தடவைகள் சிலையால் அடித்தேன்.முதலில் அவளின் மூக்கு உடைந்தது, பின்பு அவளின் தாடை.

## கடைசிக் கதை

மூன்று வாரம் விடுப்புத் தந்திருந்தார்கள். கடிதம் கிடைத்து இரண்டாவது நாள் ஒரு ஆர்வத்தோடும், மகிழ்ச்சியோடும் பெட்டியைக் கட்டிக் கொண்டு கிளம்பினேன். முகாம் சலனமற்றுக் கிடந்தது. ஏற்கனவே நிறையச் சிப்பாய்கள் விடுப்பில் போய்விட்டிருந்தார்கள். தூரத்தில் சிலர் கூடைப்பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் என்னை அடையாளம் கண்டு இரண்டு கைகளையும் விரித்துக் காட்டி விசிலடித்தான். கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டே ரயில் நிலையம் சென்று எனக்கான ரயில் வரும் வரை காத்திருந்து, அது வந்ததும் ஏறி ஊர் வந்தேன்.

அதீதமானவொரு காதலுடன் ஆன்யா என்னை வரவேற்றாள். நான் அவளை அள்ளியெடுத்து அவளின் நெற்றியின் மய்யத்தில் முத்தமிட்டேன்.அன்றைய இரவுணவுவை மிகவும் அற்புதமாக தயாரித்திருந்தாள். நான் இரவு இரண்டு மணியளவில் எதேச்சையாக என்னுடைய தோற்பையினைக் கையிலெடுத்தேன். எப்போதும் என் கூடவேயிருக்கும் சிறிய அளவிலான கறுப்பு நிற பைபிள் தொலைந்து போயிருப்பதை உணர்ந்தேன். திடுக்கென்றாகவில்லை,தூக்கிவாரிப்போடவில்லை. மொத்தமாக இருந்த போர்வையை தேகம் முழுவதும் படர விட்டபடி கண்களை மூடினேன்.

ஆஹா...என்ன சுகம்.

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• கருணாகரன் □□□□

வெளிச்சம் என் மரணகாலம்

# அரசியலை எழுதுவதற்காக ஏன் கவிதையைப் பயன்படுத்த வேண்டும்?

□□□□

**நமக்குப் பழகிய விதத்திலேயே நெற்கொழுதாசனின் சில கவிதைகள் இருந்தாலும் சில கவிதைகள் மீறிச் செல்கின்றன. மீறிச் செல்ல எத்தனிக்கும் கவிதைகள்தான் அவருடைய அடையாளமாகும்.**


□□□□

**அ**கதிகளின் கண்ணீர் வற்றாத ஒரு பேராறுதான். அப்படியானால், இந்தக் கண்ணீர்ப்பேராற்றின் ஊற்றாக இருக்கும் அகதிகள் எப்படி உருவாகிறார்கள்? அவர்கள் எதற்காக அகதிகளாக்கப்படுகிறார்கள்? இந்தத் துயரத்துக்கும் அவலத்துக்கும் முடிவென்ன? தீர்வென்ன? என்ற பல கேள்விகள் நம்முன்னே எழுகின்றன. இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் கிடைக்குமோ இல்லையோ நிச்சயமாக இந்தக் கேள்விகள், நம்மை அரசியலில்தான் கொண்டுபோய் விடும். அந்த அரசியல் தனியே உள்ளூர் அரசியல் என்ற எல்லைக்குள் அடங்காமல் அதைக் கடந்து, சர்வதேச அரசியல் என்ற வலைப்பின்னலில் கொண்டுபோய்ச் சேர்க்கும். ஆகவே, அகதிகள் பிரச்சினை என்பதும் அகதிகளின் துயரம் என்பதும் ஒரு சர்வதேச விவகாரம்தான். அதைப்போலவே இந்தப் பிரச்சினையும் சர்வதேச மயப்பட்ட ஒரு உணர்தலாகவே உள்ளது. அண்மையில் சிரிய அகதிக் குழந்தையான அயிலானின் மரணம் உலகை உலுப்பியதையும் இதற்குக் காரணமான அரசியல், உலகவலைப்பின்னலாகப் பின்னிப் பிணைந்திருப்பதையும் நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். இப்படியான உண்மையிலும் ஒரு நிலையிலும் யதார்த்தத்திலும் விளைந்தவையே நெற்கொழுதாசனின் கவிதைகள். இதில் உள்ள பெரும்பாலான கவிதைகள் அகதி ஒருவரின் கவிதைகளாக, குரலாகவே உள்ளன. இந்தக் குரல், தான் இப்போது தஞ்சமடைந்திருக்கும் அகதித்தேசத்தில் நிலைகொள்ள முடியாமல் அந்நியமாக உணர்கிறது. தான் விட்டு வந்த நிலத்தை நினைந்துருகுகிறது. தன்னுடைய காலத்தையும் நிலையையும் எண்ணிக் கழிவிரக்கம் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலபோது இந்த நிலையிலிருந்து விடுபடுவதற்காக இந்த நிலைமேலும் தொடரக்கூடாதென இந்த நிலைக்கான காரணங்களையிட்டுக் கொதிக்கிறது - கோபம் கொள்கிறது. அந்தக் கோபம், இன்னொரு காலத்தை தனக்கு வாய்ப்பானதாக உருவாக்கும் என்று நம்பிக்கை கொள்ள வைக்கிறது. இதுதான் "வெளிச்சம் என் மரணகாலம்" என்ற கவிதைகளின் மையம் அல்லது சாராம்சம். விலகிய கவிதைகளும் உண்டு. காதல், இயற்கை மீதான பிடிப்பு என. இவை வெவ்வேறான தொனிகளைக் கொண்டவை. மொழியிலும் மொழிதலிலும். நேரடி அரசியலைக் கடக்கும்போது இலக்கியப் பிரதிகள் கொள்கின்ற கோலங்கள் வேறாகவே அமைவதுண்டு. அத்தகைய சாகசத்தன்மைகளும் அழகின் ஆழங்களும் நெற்கொழுதாசனின் பிற கவிதைகளில் உண்டு.



**வெளிச்சம் என் மரண காலம்**
*நெற்கொழுதாசன்*
கவிதைத் தொகுப்பு
கருப்புபிரதிகள்
மே 2016

புலம்பெயர்ந்த பெரும்பாலான ஈழத்தமிழர்களும் தங்கள் காலத்தையும் வாழ்க்கையையும் உணர்ந்ததைப்போலவே நெற்கொழுதாசனும் உணர்கிறார். அவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளையும் அனுபவங்களையுமே நெற்கொழுதாசனும் பெறுகிறார். அடிப்படையில் எல்லோரும் ஒரே மாதிரியான பிரச்சினைகளின் நிமித்தமாக நாட்டை விட்டு வெளியேறியவர்கள், அல்லது அப்படியான உணர்வோடு புலம்பெயர்ந்தவர்கள். தஞ்சமடைந்த நாடுகளிலும் ஏறக்குறைய ஒரேமாதிரியான பிரச்சினைகளை எதிர்கொண்டு அந்நியப்பட்டிருப்பவர்கள். ஆனாலும் அதற்குள் சமரசங்களைச் செய்து கொண்டு வாழ முற்படுகின்றவர்கள். புகுந்த நாடுகளில் குடியுரிமை கிடைத்து அந்த நாட்டின் குடிமக்களாகியபோதும் மனதில் பிறத்தியாராகவும் பிறந்த நில நினைவுகளின் பிரதிநிதிகளாகவும் அல்லாடிக் கொண்டிருப்பவர்கள். ஆகவே இந்த வகையில் ஒத்ததன்மை அல்லது பொதுத்தன்மை எல்லோரிடத்திலும் உள்ளது. இது தவிர்க்க முடியாத ஒன்றுதான். ஆனால், படைப்பில் இது எவ்வளவுக்கு ஒவ்வொருவருக்குமிடையிலான தனி அடையாளச் சாத்தியம்? ஒவ்வொருவரிடத்திலும் எந்தளவில் வெற்றியடைகிறது? என்பதுதான் இங்கே கேள்வி. அனுபவங்களும் உணர்தல்களும் எப்படிப் படைப்பாக வெற்றியடைகின்றன என்பதும்.

ஏனென்றால், நாம் ஏற்கனவே அறிந்ததை விட அறியாத ஒன்றையே படைப்புத் தரவேணும். ஏற்கனவே பலராலும் உணர்ந்து, அறிந்தவற்றை விட உணராதவற்றையே படைப்புச் சாத்தியமாக்க வேண்டும். புதிதையே வாசக மனம் அவாவும். குறைந்த பட்சம் புதிய சொல்முறையையேனும். ஏற்கனவே சொல்லப்பட்ட கதைகளைச் சொல்லப்பட்ட முறைகளில் சொல்வதால் பயனில்லை. ஊகித்தறிய முடியாத புதுமைகளையும் புதிய திசைகளையும் படைப்புக் காட்டினால் அதுவே இன்பம். அதுவே ஊக்கம். அதுவே புதிதாக்குதல் - புதிதளித்தல். இதுதான் எப்பொழுதும் படைப்பின் முன்னும் படைப்பாளியின் முன்னும் உள்ள சவால். இந்தச் சவால் இந்தச் சவாலை நெற்கொழுதாசன் எப்படி எதிர்கொள்கிறார்? அதாவது யதார்த்தத்தைப் புனைவாக்குவது. புனைவை யதார்த்தமாக்குவது என்பதில் நெற்கொழுதாசன் என்ற கவியின் திறன்கள் எப்படி வெற்றியடைகின்றன என்பது.

அநேகமான ஈழக்கவிஞர்களைப்போலவே நெற்கொழுதாசனும் நிகழ்கால அரசியலைக் கவிதைகளாக்குகிறார். 'அரசியலை எழுதுவதற்காக ஏன் கவிதையைப் பயன்படுத்த வேணும்?' என்று ஒரு நண்பர் கேட்டார். 'அதற்குத்தானே பத்திகளும் கட்டுரைகளும் ஆய்வுகளும் ஆய்வாளர்களும் இருக்கிறார்கள். எதற்காக அந்த வேலையைக் கவிஞர்கள் செய்கிறார்கள்? கவிதையில் அரசியலை எழுத விளைந்து கவிதையையும் கெடுத்து அரசியலையும் கெடுத்து தாங்களும் கெட்டுப்போக வேண்டுமா?' என்றும் கேட்டார். இந்தக் கேள்விகள் நியாயம்தான். ஆனால், அரசியலைக் கவிஞர் பார்க்கின்ற பார்வைக்கும் பிறர் பார்க்கின்ற பார்வைக்குமிடையில் வேறுபாடுகளுண்டு. வெளிப்படுத்தும் விதத்திலும் வேறுபாடுகள் இருக்கின்றன. வாழ்க்கையின் அடிப்படையிலே, அதன் உள்ளோட்டம் சார்ந்து கவிஞர்கள் அரசியலை நோக்குகிறார்கள். அதை அணுகுகிறார்கள். அவர்களுக்கு அதனுடைய வெற்றி தோல்விகள் முக்கியமல்ல. அதற்கப்பால், மனித நிலையைப் பேணுவதற்காகத் தங்கள் குரலை முன்வைக்கிறார்கள். மனித நிலையில் வீழ்ச்சியும் நெருக்கடியும் ஏற்படும்போது பதகளிக்கிறார்கள். அந்தப் பதகளிப்பு ஆற்றாமையாகச் சினமாகத் துயரமாக வெளிக்கிளம்புகிறது. வெற்றி - தோல்வி, எதிரி - ஆதரவாளர், தியாகி - துரோகி என்ற அடிப்படையில் அரசியலை நோக்கிக் கவிதை எழுதுவோர் சமகால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளோடு தினச்செய்திகளின் தன்மைக்குள் வீழ்ந்தழிந்து போகிறார்கள். நெற்கொழுதாசனின் கவிதைகள் இரண்டு நிலையிலும் ஊசாடுவதாக உள்ளன. ஆனால், பெரும்பாலானவை மனித நிலை சார்ந்தவை. என்பதால் அவர் தன்னை நிலைப்படுத்திக்கொள்வதற்கான அதிக சாத்தியங்களைக் கொண்டிருக்கிறார்.

நமக்குப் பழகிய விதத்திலேயே நெற்கொழுதாசனின் சில கவிதைகள் இருந்தாலும் சில கவிதைகள் மீறிச் செல்கின்றன. மீறிச் செல்ல எத்தனிக்கும் கவிதைகள்தான் அவருடைய அடையாளமாகும். மீறிச்செல்லத்தக்க கூறுகள் அவரிடத்தில் தாராளமாக உண்டு.

*தன்னைக் கொல்லுதல்*
*மலர் உதிர்வதுபோலவும்.*
*மை கரைவது போலவும்*
*மரம் சரிவது போலவும்*
*இருக்கலாம்.*

*தன்னைக்கொன்றவனின்*
*கடைசி நிமிடங்கள்*
*பற்றி எவரும் பேசுவதில்லை,*
*அவன் சுமந்திருந்த*
*தனிமையை எவரும்*
*உணர முயல்வதுமில்லை.*
*அவன் உருவாக்கிய*
*வெற்றிடம் குறித்தும்*
*எவரும் கவலைப்படுவதில்லை,*
*ஆனாலும்,*
*தன்னைக்கொன்றவனைத்*
*தாண்டிவிட முடிவதில்லை*
*எவராலும் வழமைபோல*

(ஒரு குற்றப்பத்திரிகை)

*மரணக் கிளர்ச்சி*
*புரிபடாப் பேரின்பம்*
*அறுந்துவிடாத ஒற்றையிழை*
*யாரறிவார்?*

*உயிர்த்தெழும் சிறகிலிருந்து*
*பெருங்கனவு*
*வானை நிறைக்க,*
*சிறுபொழுதாகிலும்*
*மறையும்*
*ஆதவப்பெருந்திடல்.*

(வேனில் கனவு)

இந்தக் கவிதைகளில் உள்ள வரிகள் உணர்த்தும் பொருளும் உணர்முறையும் அதன் வடிவமும் ஆழமானவை. மீறலுக்கான அடையாளங்கள் உண்டென்பதற்குச் சான்றுகளிவை. ஆனால், அவருக்கு இதையும் விட வேறு சில நிர்ப்பந்தங்கள் உண்டு. அல்லது விருப்பங்கள் உண்டென்று நம்புகிறேன். அவையே நெற்கொழுதாசனை வழிநடத்துகின்றன. இது நெற்கொழுதாசனுக்கு மட்டும் நேரும் பிரச்சினையோ அவலமோ அல்ல. ஈழத்தமிழ்ப்படைப்பாளி என்ற அடையாளத்தில் இயங்கும் அத்தனைபேருக்கும் உள்ள யதார்த்தம். இதன்படி புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் ஒருவரின் குரலை அடையாளப்படுத்த வேண்டும் என்ற ஒரு எழுதா நிர்ப்பந்தம் நெற்கொழுதாசனுள்ளும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பிறந்த நிலம் மீதான பற்றும் காதலும் நீங்காமல் நினைவாடிக்கொண்டேயிருக்கின்றன. அதை அவரால் புறக்கணிக்க முடியவில்லை. அந்தப் பற்றையும் வெளிப்படுத்த வேண்டும். இனவிடுதலை, இனத்தின் அடையாளம், அதன் பாதுகாப்பு, அதன் பெருமிதங்கள் மீதான கனவையும் புறக்கணிக்க முடியாது. ஈழத்தமிழர்கள் அரசியல் ரீதியாகச் சந்தித்த வன்கொடுமைகளுக்குப் பதில் சொல்ல வேணும். அதற்குக் காரணமான தரப்புகளைப் பழி-தீர்க்க வேண்டும் என்ற ஆவேசம். இதெல்லாம் நெற்கொழுவைப் படுத்திக்கொண்டிருக்கிறது. ஆகவே அதனோடிணைந்தும் இருக்க வேண்டும். இதெல்லாம் இணைந்ததுதான் புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் அடையாளமும் கடமையும் என அவருடைய உள்ளுணர்வு சொல்கிறது. அந்தக் கடமையை ஆற்ற வேண்டும் என்று அது தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டேயிருக்கிறது. இதனால் பல கவிதைகளிலும் இந்தச் சாயல் வந்து தலை நீட்டி விட்டுப் போகிறது. அல்லது உள்ளோட்டமாக உள்ளது. என்பதால் நெற்கொழுதாசனின் கவிதைகள் அந்நிய தேசத்தில் ஒட்ட மறுக்கும் வாழ்வின் தனிமைக்குரலாகவும் நீங்க மறுக்கும் தாய்மண்ணின் நினைவுக் கொடிகளாகவுமே உள்ளன எனச் சுருக்கமாகக் கூறலாம். நெற்கொழுதாசனுக்குக் குடியுரிமை

□□□□

**எவரும் எதைப்பற்றியும் பேசலாம். எத்தனை தடவையும் பேசலாம். உரக்கவும் பேசலாம். மெதுவாகவும் பேசலாம். ஆனால், அது படைப்பாக இருக்க வேண்டும்.**

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்து அவர் இன்னொரு நாட்டின் குடிமகனானாலும் இந்தத் தத்தளிப்பு நீங்கும் என்றில்லை. ஏற்கனவே குடியுரிமை கிடைத்த பல்லாயிரக் கணக்கானவர்களும் தாய்மண்ணின் தத்தளிப்போடும் புகுநிலத்தின் ஒட்டாத்தன்மையோடும்தான் உள்ளமை இதற்குச் சான்று. ஆனால், இது சரியா, உண்மையா என்ற கேள்விகளும் உண்டு. இப்படி ஒட்டா நிலத்தோடு வாழக் கடினம் என்று கருதி என்றாவது இவர்கள் பிறந்த நிலம் மீள்வரா? என்றால் நிச்சயமாகச் சொல்லலாம் இல்லை. இல்லவே இல்லை என்று. மட்டுமல்ல, இன்னும் ஊரிலும் நாட்டிலும் இருக்கும் சொந்த பந்தம் என்ற வேர்களையும் அங்கிருந்து பிடுங்கித் தங்களோடு பதியம் வைக்கவும் அதை விருட்சமாக்கவுமே முயற்சிக்கிறார்கள். ஆகவே இந்தப் புனைவும் பொய் மாயம் என்றாகிவிடும் என்பது இன்னொரு விசயம். ஆனாலும் இந்த நாடகத்தையும் நாம் காணவே வேண்டும். ஏனென்றால் இது சமூகப்பழக்கமாச்சே.

இதையே ஏனைய புலம்பெயர் படைப்பாளிகளும் சொல்லி வருகிறார்கள். அதை நெற்கொழுதாசனும் சொல்ல வேண்டுமா? அல்லது அதைத் திரும்பச் சொல்வதற்கு இன்னும் ஒரு ஆள் தேவையா? அல்லது அப்படி மற்றவர்கள் சொன்னால், அதை நெற்கொழுதாசன் சொல்ல முடியாதா? அவருக்கு அந்த உரிமை இல்லையா? அல்லது இனி எவரும் இதைப்பற்றியெல்லாம் பேசத்தேவையில்லையா? என்று கேட்கலாம். அதாவது நெற்கொழுதாசன் இந்த விடயங்களைப் பற்றிப் பேசக்கூடாதா? அவருக்கு அந்த உரிமை இல்லையா என்று.

எவரும் எதைப்பற்றியும் பேசலாம். எத்தனை தடவையும் பேசலாம். உரக்கவும் பேசலாம். மெதுவாகவும் பேசலாம். ஆனால், அது படைப்பாக இருக்க வேண்டும். கலையாகப் பரிணமிக்க வேண்டும். அப்பொழுதுதான் அதற்குப் பெறுமானமுண்டு. கவர்ச்சியுண்டு.

முதலாம் இரண்டாம் உலகப்போரை மையப்படுத்தி இன்னுந்தான் ஏராளம் படைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்தப் போர்களை மையமாகக் கொண்டு இப்பொழுதும் திரைப்படங்களை எடுக்கிறார்கள். மட்டுமல்ல, காதலும் பிரிவும் நேசமும் உறவும் போரும் அமைதியும் என்று மனித வாழ்க்கை சுழலும் அச்சாணிகளைப்பற்றி திரும்பத்திரும்பத்தானே எழுதப் படுகிறது. பாடப்படுகிறது. காவியங்களும் காட்சி ரூபங்களும் உருவாக்கப்படுகின்றன. நாம் படிக்கின்ற கவிதைகளும், கதைகளும் அல்லது பார்க்கின்ற நாடகங்கள், திரைப்படங்கள், கேட்கின்ற பாடல்கள், இசை என எல்லாமே சில வகைக்குள் அடங்கி விடுவனதான். ஆனால், இவை வெவ்வெறு விதங்களில் சொல்லப்படும்போதுதான் அது ஈர்க்கிறது. அடிப்படையாக இருக்கும் ராகங்களை வைத்துக்கொண்டு எத்தனை விதமான ஆலாபனைகளைச் செய்கிறார்கள் இசையாளர்கள். ஒவ்வொரு ஆலாபனையும் ஒவ்வொரு விதம். ஒரே ராகம், ஒரே கலைஞரால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு மாதிரி. இதுதான் விந்தையும் வியப்பும். இந்த வியப்புத்தான் படைப்பின் உயிர். இந்த உயிரைத் தன்னுடைய கையில் வைத்துக்கொண்டு வித்தையாடுகின்றவரே கலைஞர்.

நெற்கொழுதாசனுடைய கவிதைகளில் வியப்பை நோக்கிய உந்துதல் உண்டு. புதிதைப் படைத்தளிக்க வேண்டும் என்ற அவாவுகை அவற்றில் உள்ளது. ஆனால், அவருக்குள் கிளர்ந்து கொண்டிருக்கும் எண்ணவோட்டங்கள் அவரை அங்குமிங்குமாக அல்லாட வைக்கின்றன. இது தன்னுடைய வாசகர்களைக் குறித்தும் தன்னுடைய காலத்தின் அபி-ப்பிராயங்களைக்குறித்தும் அவருக்கு முன்னே தோன்றும் சலனங்கள்தான். படைப்பாளி காலப்பதிவாளராகவும் தான் சார்ந்த சமூகத்தின் உயிரோட்டத்துக்குப் பொறுப்பாளியாக இருப்பதும் அவசியம் என்று

**□□□□**

**இந்தத் தொகுப்பில் சமகால ஈழத்தமிழ் வாசகப் பரப்பின் உணர் வலைகளுக்கு ஏற்றமாதிரிச் சில கவிதைகள் உள்ளன. குறிப்பாக ஈழத்தமிழர் அரசியல் ரீதியாகச் சந்தித்த தோல்விகள் அல்லது பின்னடைவுகள் குறித்த தன்னுடைய இலக்கியப் பதிகையும் வெளிப்பாடும் என்ன?**

**□□□□**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிடுவோருண்டு. அதில் பிரச்சினையில்லை. வெறுமனே காலப்பதிவாளராக இருப்பதனால் பயனொன்றுமில்லை. அப்படியிருப்பதால் படைப்பாளிக்கு எந்த மதிப்பும் கிடையாது. அதற்குமப்பால் அவர் தன் காலத்தின் சாட்சியாக இருப்பதே அவசியம். அப்பொழுதுதான் அவர் விரும்புகிற மாதிரி அவர் சார்ந்த சமூகத்துக்கும் இந்த உலகத்துக்கும் உயிர்ப்பை உண்டாக்க முடியும். இந்த இடத்தில் தடுமாற்றங்களுக்கு அப்பால், உடனடியான கைதட்டல்களுக்கும் முகச்சுழிப்புகளுக்கும் அப்பால் நிதானம் கொள்ள வேண்டியது கவியின் பொறுப்பாகும். கவி ஆளுமை என்பது தன்னைச் சாய்வின்றி நிலைப்படுத்திக் கொள்வதிலேயே நிலைபெறும். இங்கே சாய்வென்பது நலன்களைச் சார்ந்தும் அதிகாரத்தைச் சார்ந்தும் இயங்குவதையே குறிக்கிறது. ஒற்றைப்படைத்தன்மைக்குள் கட்டுண்டு போகாமல், பல்பரிமாணத்தில் நிலைப்படுத்துவதை.

இந்தத் தொகுப்பில் சமகால ஈழத்தமிழ் வாசகப் பரப்பின் உணர்வலைகளுக்கு ஏற்றமாதிரிச் சில கவிதைகள் உள்ளன. குறிப்பாக ஈழத்தமிழர் அரசியல் ரீதியாகச் சந்தித்த தோல்விகள் அல்லது பின்னடைவுகள் குறித்த தன்னுடைய இலக்கியப் பதிகையும் வெளிப்பாடும் என்ன? என்று நெற்கொழுதாசன் சிந்திக்கிறார். இந்த மாதிரியான நிலை தனியே நெற்கொழுதாசனுக்கு மட்டும் உள்ள ஒன்றல்ல. ஏற்பட்ட ஒன்றுமல்ல. இது குறித்து இந்த உரையின் முற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தவிர்க்க முடியாமல் பெரும்பாலான ஈழத்தமிழ்ப்படைப்பாளிகள் இப்படித்தான் சிந்திக்கிறார்கள். படைப்பாளிகள் மட்டுமல்ல ஊடகத்துறை சார்ந்தோர், புத்திஜீவிகள், தமிழ்த்தரப்பிலுள்ள மதகுருக்கள், பொதுமக்களில் பெருமளவானோர் இப்படித்தான் சிந்திக்கப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். ஒடுக்கப்பட்ட இனமொன்றின் பிரதிநிதியாக இருப்பதனால் இத்தகைய ஒரு உளவியல் நிலை ஏற்பட்டிருக்கலாம். இது ஒரு பொதுநிலையாகவும் பொதுப்பண்பாகவும் ஆகிவிட்டது. இதனால் ஈழத்தமிழர்கள் நாட்டிலிருந்தாலென்ன, நாட்டை விட்டு வெளியேறினால் என்ன அவர்களுடைய எண்ணமும் சிந்தையும் அரசியலின் பாற்பட்டே உள்ளன. ஆகவே எதிலும் அவர்களுடைய அரசியல் அடையாளங்களே முதன்மையடைகின்றன. இது ஒரு வகையில் பின்னடைவே. தமிழ் அரசியல் பின்னடைந்திருப்பதைப்போலவே இலக்கியமும் பின்னடையக்கூடிய வாய்ப்பைக் கொண்டிருக்கும் அபாயம் இது.

இந்தத் தொகுதியில் அரசியற் கவிதைகளுக்கு அப்பால், காதற்கவிதைகளும் பிறவும் உள்ளன. இதில் அதிகமதிகம் தனிமையையும் பறவைகளையும் நினைந்து பாடுதல் நிகழ்கிறது. இவை தமிழ்க்கவிதைகளில் நிரம்பிக்கிடக்கும் தொடரும் சாயல். இந்தச் சாயலைக் கடக்கும்போது புதிய ஒரு திசையில் புதிய பயணத்தை நெற்கொழுதாசன் செய்வார். அதற்கான படிகளை அவர் இப்பொழுது செதுக்கிக் கொண்டிருக்கிறார். பிந்திய கவிதைகள் இதற்குச் சாட்சியங்களாகவும் நம்பிக்கையாகவும் உள்ளன. மாதிரிக்கு ஒரு கவிதை கீழே.

'தொடருந்தின் இறுதிப் பெட்டியில் ஏறிய
மூவரும்,
ஒவ்வொரு மரங்களை
ஒவ்வொரு வீடுகளை
ஒவ்வொரு பறவைகளை
ஒவ்வொரு மனிதர்களை கண்டோம்.

இருவரில் ஒருவர்
இறுதித் தரிப்பிடத்தில்
முகவரியொன்றை
என்னிடம் வினவியபின் கைகளை
குலுக்கிக்கொண்டார்.

இருவரிடமும்
வேறு வேறு விந்தையானகதைகள்இருந்தன
வேறு வேறு செய்திகள்இருந்தன
வேறு வேறு காட்சிகள் இருந்தன
வேறு வேறு உணர்ச்சிகள் இருந்தன.

மற்றையவர்
எங்களிருவரையும்
கடக்க முனைகையில் மெல்லியதாக
தலையசைத்தார்.
எதிர்பாராமல் மூவருக்கும் இடையில்
புன்னகை இருந்தது.
மீண்டும் சந்திப்போம் என்றபடி
இறுதியாக
என்னிடம்
விடைபெற்றுச் சென்றவரிடம்
இன்னும் கொஞ்சம் பேசி இருக்கலாம்'

இந்தக் கவிதையைப்பற்றி நான் சொல்லத் தேவையில்லை. நீங்கள் இதன் வேறுபடுதலைப் புரிந்து கொள்வீர்கள்.

இனி...?

இனி என்பது நாளைய முளையாகும். அந்த முளையை எதிர்கொள்ளுவதற்கான படியாக இந்தத் தொகுதி நெற்கொழுதாசனுக்கு அமைகிறது.

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணத்துப்பூச்சிகளை வேட்டையாடுதல்

ஆறுகள் பெருக்கெடுத்து நீர்கொள்ளாப் பெருங்கடல் கொந்தளித்ததுபோல்
தேவதைகளின் துக்க சமுத்திரம் மட்டில்லாததாய் போயிற்றே
துறவிகள்.
இளம், கிழத் துறவிகள்.
அவர்கள் வாழ்ந்தார்கள்.
போருக்கு முன்னும் வாழ்ந்தார்கள்
போருக்கு நடுவிலும் வாழ்ந்தார்கள்
போர் முடிந்தும் வாழ்ந்தார்கள்.
சாயம் கரைந்து வெளிறிப்போன அங்கிகளை
வெள்ளாவிப்பானையில் அவித்து அவித்து
கசங்காமல் நலுங்காமல் அணிந்து திரிந்தார்கள்.
பெருநகரங்கள், நகரங்கள், ஊர்கள், கிராமங்கள்
சேரிகள் கரையோரங்களென
எல்லா நிலத்திலும் அவர்கள்
ஆண்மை புடைக்கத் திரிந்தார்கள்.
ஆளுக்கொரு மந்திரக்கோலை
சிறிதும் பெரிதுமான அளவுகளில் கறுப்புநாடாவில் கட்டி
தத்தம் கழுத்துகளில் தொங்கப்போட்டபடி பவனி வந்தார்கள்.
கிழத் துறவிகளில் சிலரோ
தங்கள் கழுத்துகளில் தொங்கும் மந்திரக்கோலை
இடுப்புப் பட்டிகளில் சொருகிவைத்து
பூமியை அழுத்தமாக மிதித்தபடி திரிந்தார்கள்.
இன்னும் ஒருசிலரோ
மந்திரக்கோலை செங்கோலாகவே ஊன்றி நடந்தார்கள்.
சனங்களோ, இந்த மந்திரக்கோல்களின் முன்னால்
அபின் தின்றவர்களைப்போல் மயங்கிக் கிடந்தார்கள்.
ஆனால் தேவதைகளோ;
துறவிகளின் பொருட்டும்
அவர்களது மந்திரக்கோல்களின் பொருட்டும்
என்றென்றைக்கும் அச்சம் நிறைந்தவர்களாகவே இருந்தார்கள்.
போருக்கு முன்னும், போருக்கு நடுவிலும் , போர் முடிந்தும்
தேவதைகளின் அச்சம் வலுத்தனவேயல்லாமல் குறைந்தனவாய் இல்லை.
ஒவ்வொரு துறவிகளும் குறுநில மன்னர்களாகவும்,
அரசர்களாகவும், பேரரசர்களாகவும்,
மேதகு சக்கரவர்த்திகளாகவும் கொலுவோச்சியிருந்தார்கள்.
சனங்களின் வாழ்விடங்களுக்கு நடுவே
எழுந்திருந்த விரியன்பாம்புப் புற்றுகளை அவர்கள் தீண்டாதிருந்தார்கள்.
மாறாக அவற்றின் பாதுகாப்புகளை
மேலும், இன்னும் வலுப் படுத்தினார்கள்.
நஞ்சுப் புற்றுகளுக்குக் காவலாக
நீண்ட நெடும் யுத்த நெருப்பினுள்
பட்டு நொந்து கெட்டழிந்த சனங்கள் மீதே
பட்டயம் எழுதி வைத்தார்கள்.
ஆலகால விருட்சங்களை வெட்டி அக்கினியிலே போடாமல்,
அவற்றை நந்தவனம் என்றார்கள்.
சனங்களும் நம்பினார்கள்.
சமுத்திரத்தில்
பசுமை விதைந்திருந்த தாவரங்கள்
வேரறுந்து கரையொதுங்கி அழுகி நாறிக்கிடந்தன.
சனங்களுக்கு நடுவில் வாழ்ந்திருந்த தேவதைகளோ
தலைமறைவானார்கள்.
வண்ணத்துப்பூச்சிகளை வேட்டையாடும் எல்லா உரிமங்களையும்
துறவிகள் தங்கள் அங்கிப்பைகளுக்குள் கொண்டு திரிந்தார்கள்.
அச்சப்பட்ட தேவதைகள் வண்ணத்துப்பூச்சிகளின் சிறகுகளுக்குள்
தலைமறைத்து வாழ்வதை
துறவிகள் நல்லாகவே அறிந்து வைத்திருந்தார்கள்.
வண்ணத்துப் பூச்சிகள் மீதான வேட்டைகளை
இடையறாது விருப்பத்தோடும், ரசிப்போடும் செய்து வந்தார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• செந்தூரன் ஈஸ்வரநாதன்



# வெள்ளிக்கிழமை இறுதி விருந்து



அன்றைக்கு மதியம் தேவன் தாம்பரம் சானிடோரியத்தில் ரயிலில் பாய்ந்து உயிர் துறந்தார். நான் மூன்றாம் மாடியில் குடியிருந்தேன். ஆறு வீடுகளும் ஒரு சிறிய நாய்க் கூண்டும் 17 மரத் தொட்டிகளும் இருந்த சிறிய வளாகமது. பலத்த மழை பெய்கிற நேரங்களிலெல்லாம் தகரம் டம... டம ...டம.. டமவென்று வாசிக்க ஆரம்பித்துவிடும். மழை இல்லாத நேரங்களில் அந்த வளாகத் தண்ணீர்த் தொட்டியை நிரப்புவதற்கு மோட்டர் போடுகின்ற வேலையையும் நான் செய்து கொண்டிருந்தேன்.

நான் தேவனைச் சந்தித்தது அபூர்வமான பொழுதொன்றில்தான். சிறிய, எழுபது ரூபாய் விற்கும் ஒயின் பாட்டிலும் கையுமாக மனிதர் காவற்துறையிடம் மாட்டிக்கொண்டார். ‘தெவ்விடியா பையா குடித்துவிட்டுத் திருடச் செல்கிறாயா’ என்று தேவனிடம் அவர்கள் கேட்க, தேவன் என்றைக்கும் இல்லாததைப்போல் தன் முரசு பெயர்ந்த பற்களைக் காட்டி எக்காளமிட்டுச் சிரித்திருக்கிறார். போலீஸ்காரனிடம் காதில் வாங்கிக்கொண்டு சுருண்டு இடம் வலம் தெரியாமல் நாயோடு நாயாக நாய்க்கூண்டில் கிடந்தார். அந்தப் பெண் நாய் ரூஷி அவரைக் கடித்துவிடாமல் இருந்தது. அதன்பின் அவருக்கும் எங்கள் காம்பவுண்டிற்கும் தொடர்புகள் இறுக்கமாயின. அவர் அங்கிருந்தவர்களுக்குச் செல்லப்பிள்ளையாகியிருந்தார். வலியச் சென்று அவர்களுக்கு உதவினார். பெரும்பாலான நேரங்கள் மூன்று மாடிப் படிக்கட்டுகளிலும் மாறிமாறிச் சப்பாணி கட்டி அமர்ந்து கொண்டு உயர்ந்தும் தாழ்ந்தும் தெரிகிற சவப் பெட்டிகளையோ, செவ்வகங்களையோ பார்த்துக்கொண்டிருப்பார். அல்லது அவற்றின் வர்ணங்கள் பற்றி தனக்குள்ளேயே சந்தேகங்களை அவர் எழுப்பிக் கொண்டிருந்தார்.

★★★

இப்படித்தான் தேவனின் உறவு என்னைத் தொடர்ந்து துரத்திக்கொண்டிருந்தது. தேவன் சரியாக , ஒரு நாளைக்கு ஏழு அல்லது ஒன்பது தடவைகள் நான் குடியிருக்கும் பகுதிக்கு வருவார். (இதை நான் வேலையற்று ஒரு நாள் அமர்ந்து குறித்து வைத்திருந்தேன்.)


என்னைப் பார்க்கிற பொழுதுகளில் மிகுந்த ஏளனத்துடன் அவர் முகம் அசையும். ‘ நீங்கள் ஊரில எந்தப்பக்கம்?’ என்றுதான் அவர் இறுதியாக என்னிடம் பேசினார் நினைக்கிறேன். நானும் விடுவதில்லை; தமிழ் வின்னிலும் புதினத்திலும் வரும் கதைகளையும் கட்டுக்கட்டான அதிரடிச் செய்திகளையும் ஏற்கனவே கட்டப்பட்டிருப்பதுக்கு மேல் மேலும் புதிய தாளத்தோடு மேடை அமைத்துச் சொல்வேன். அவருக்கும் அதைப்போன்றவை தேவையென்பதைப்போல அந்தக் கதாநாயகச் செய்திகளை ஒன்றுவிடாமல் கேட்டுவிட்டு பெருமூச்சொன்றை எறிந்து தளர்ந்து போய் எழுந்து செல்வார். தூக்கத்திலிருந்து விழித்துச் சோம்பல் முறிக்கும் ஒரு நாயைப்போல அவரின் தோற்றம் அப்போது இருக்கும்.

நான் குடியிருக்கும் குடோன் அறையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் என்னைப் பெயர்க்க முயற்சி செய்து கொண்டிருப்பதாகத் தகவல்; அதிலும் தேவன் ஒற்றை ஆளாய் முயன்று கொண்டிருக்கிறாராம் எனக் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் என்னிடம் நேரடியாக அவர் இதைப் பற்றி எதுவும் கேட்டுக்கொண்டதில்லை. ஒருநாள் மனிதர் கைகளில் அதே ஒயின் போத்தலோடு மேலேறி வந்து கொண்டிருந்தார். ஏற்கனவே, கீழ் வீடுகளில் குடியிருந்தவர்கள் என்னை அந்த அறையைக் காலி செய்ய வைப்பதற்கான மனுக்களை வீட்டுப் பாதுகாவலருக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். சிகரெட்டுகளைப் புகைத்து அடிக் கட்டைகளை மாடியிலேயே போடுகிறேன் என்பதே அந்தப் புகார். இதில் தேவனும் மாடிக்கு சிகரெட் குடிக்கத்தான் வந்திருந்தார். 'சேர் இங்க வச்சு குடிக்காதயுங்க, ரூமுக்குள் போங்கள்' என்றேன்.



மனிதர் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் என் அறைக்குள் நுழைந்தார். வாசலில் இருந்த செடியைப் பற்றி நுழைந்ததும் விசாரித்தார். அவருக்கு மரங்கள் மேல் ஒரு பெரிய ஈடுபாடு இருந்திருக்க வேண்டும். உண்மையில் வாசலில் இருந்த மரத்தைப் பற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை. அந்த மரம் ஒரு சினிமா சூட்டிங்கிற்காக, கலைப் பிரிவில் உதவியாளாகப் பணிபுரியும் அசன் எங்கிருந்தோ எடுத்து வந்து வைத்திருந்தான். சில நாட்களில், அவன் அபூர்வமாகத் தான் அறைக்கு வருவான். விடியற்காலை ஒன்பது மணிக்கு வந்து, என்னைத் துயிலெழுப்பி, மரத்துக்கும் தண்ணி ஊற்றிக் குளிப்பாட்டுகிற ஆள் அசன். அவனிடம் கேட்டால் பொறுப்பாகப் பதிலிறுக்கக்கூடும்.

தேவன் இப்போது முன்பு நான் பார்த்ததை விடச் சற்று மெலிந்து போயிருந்தார். ஆனால் கையில் திராட்சைப் பழம் வரைந்த அதே போத்தலொன்று இருந்தது. 'தம்பி உங்களுட்ட காசெதும் கிடக்கே . . . கொஞ்சம் இருந்தால் குடுங்கோ... நான், மகன் போட்டோன தாரன் அப்பன்,' தேவன் வார்த்தைக்கு மூன்று இடங்களில் அப்பன், தம்பி, மோன் போட்டுக் கேட்டுக் கொண்டார்.

'ஏன் குடிக்கப் போறீங்களா ?'

'தம்பி காசு குடுக்கிறதெண்டால் குடும். இல்லையெண்டா, வெளிய போடா புண்டையாண்டி எண்டு சொல்லும். அத விட்டு , நான் என்ன செய்ய வேண்டாமென்று நீர் சொல்லாதையும்.'

கண்கள் உருண்டு பழுத்துச் சிவப்பேறி, நரைத்த மயிர்கள் கூச்செறிய ஒரு பூனையைப்போல் தேவன் என்முன் நின்றிருந்தார்.

வாங்கிய காசைக் கொண்டு மனிதர் மிகுந்த அழகான ஒரு தொப்பியைக் கொள்வனவு செய்திருந்தார். கையில் திராட்சைப் பழம் பொறித்த மட்டமான ஒயின் போத்தல். என்றைக்கும் விட இன்றைக்கு அவரின் புன்னகை நேசமாயிருந்தது.

'தம்பி என்ன வெளிநாட்டுக்கு போற பிளான்லயே இங்கினக்க நிக்கிறியள்?'

'இல்லை, நாடு பிடிப்பதற்காக நிற்கிறேன். சில மாதங்களில் அண்ண இந்தோனேஷியால இருந்து வந்தவுடன் போயிடுவன்.'

கிழவர் நிமிர்ந்தும் தாழ்ந்தும் என்னை முழுதாகப் பார்த்தார். கெக்கட்டமிட்டுச் சிரித்து 'அப்பனுக்கு விளையாட்டு' என்றார்.

எப்படியும் என் பேச்சை வைத்தே எந்த நாட்டுக்கு பார்சல் ஆகிறதுக்கு இப்படி நிற்கிறேன் என்பதைத் திருட்டுக் கணக்குப் போட்டு மனிதர் கண்டிருப்பார்.

'தம்பியவை ஒஸ்ரேலியாக்கு எங்கட ஆக்கள் தான் ஏற்றினம். நீர் ரெடியெண்டால் இப்பவே ரெடி'

'அப்பு, ஏற்கனவே கடல்ல 200 மிதக்குது, என்னோட சேத்து 201 ஆக மாத்திற எண்ணமா?'

'தம்பி டேய் ... ரூட் கிளியரடா, சும்மா சேட்டைக்கு கதைக்கிற ஆள் நானில்ல கண்டியோ... நம்பிக்கையான ஆக்கள். காசெல்லாம் இறங்கினப் பிறகுதான். எங்கட பொடியங்கள்தான் செய்யுறாங்கள்'

என்ற போது ஒரு ரகசியத்தைச் சொல்லிவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொனியில் அவர் பௌவியமாகக் காதில் கிசுகிசுத்தார்.

'இங்கயிருந்து முந்நூறு பெடியங்களுக்கு மேல, எல்லாம் பிரச்சினைக்குரிய பெடியன்கள், ஏத்திறவங்கள் சும்மா ஆக்களில்லை. கண்ணாடி விரியனுக்குப் பல்லுத் தீட்டுற ஆக்கள். உனக்கு போறதென்டால் சொல்லு. அத விட்டுட்டு விசர்க் கதையளக் கதைக்காத,'

'சரி வந்தவுடன் சொல்லுங்கள்' என்றபடி அங்கிருந்து தப்பித்துக் கொண்டேன்.

சரியாக மூன்றாம் நாள் (07. 06. 2012, வியாழக்கிழமை - கேரளாவில் இலங்கைத் தமிழர்கள் 127பேர் கைது - மிர்ரர் சனியன்) பத்து பேரின் படங்கள் கறுப்பு, வெள்ளையில் வெளியாகியிருந்தது. பின்பொருநாள் முழுப் போதையில் தினத்தந்தியில் அவர் படம் வந்ததாகச் சொன்னார். அதிலும் அந்தாளுக்கொரு திருப்தியிருந்தது.

தேவனுக்குப் பாடல்கள் குறித்தும் அதன் பாவங்கள் பற்றியும் கதைப்பதில் சிறிது ஆர்வம் இருந்தது. ஒரு சிறிய மங்கலான வெளிச்சத்தில், மண்டைக்குள் சாம்பல் மேகங்கள் அடர்ந்து அலைந்து கொண்டிருந்த இரவொன்றில் அவர் பாடினார். இரண்டு மூன்று சௌந்திரராஜன், ஜானகி பாட்டுக்களையும், ஒரு றேடியோ ஜாக்கியின் தோரணையுடன், இதோ... நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இளையராஜா இன்னிசை கானங்கள்!' என அறிவித்தலைச் செய்தபடி பாட ஆரம்பித்திருந்தார். இன்று கச்சேரி இளையராஜாவுடன் தான் என்பதில் தீர்மானமாகியிருந்தேன்.

எங்களுக்குள் அப்போதே ஒரு நேயர்-நிகழ்ச்சித் தொகுப்பாளர் என்ற விளையாட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. என் விருப்பப் பாடல்களை கேட்பதற்கும் எனக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. அவருக்குத் தெரியாத பாடல்களைக் கேட்டால் நான் ஜாக்கியாக மாறிவிட முடியும். நான் கேட்க ஆரம்பித்தேன். அது இளையராஜாவில் தொடங்கி சாந்தன் வரை குறுகிக்கொண்டே வந்தது.

'இந்த மண் எங்களின் சொந்த மண்' என அவர் இழுத்துப் பாடியபோது, மிக உணர்ச்சிவசப்பட்டிருந்தார். தன் கையிலிருந்த ஒயினை எடுத்துக் குடித்தார். பின் தன் சட்டைப் பையிலிருந்து சில வேர்க்கடலைகளை வாயில் போட்டுக் கொண்டார். நான் ஒரு வேடிக்கைச் சிறுமியைப் போல் அமர்ந்திருந்தேன். அவர் கண்கள் என்மேல் அலைந்தன. அவர் என் கைகளை இறுக்கிக் கொண்டு தூங்கிப் போனார். அவர் உடலிலிருந்து மெல்லிய மூச்செழும் சத்தம் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருந்தது.

★★★

எங்கள் குடியிருப்புப் பகுதி மிகுந்த பிரபலமுடையது. நீங்கள் குப்பத்திலிறங்கி கோழிக்கூடு அப்பார்ட்மென்ட் என்று கேட்டால் அந்தச் சந்தியில் இருக்கும் யாராவது உங்களை அங்கு அழைத்துச் சென்று விட்டுவிடுவார்கள். பொதுவாகவே அந்தப் பகுதியிலிருந்த நாங்கள் கள்ளன்கள், குடிகாரங்கள், வேறு மாநிலக்காரர்கள், இலங்கையர்கள் அந்தப் பகுதியில் குடியேற ஆரம்பித்ததிலிருந்துதான் அங்கிருந்த வீடுகளின் பெறுமதி பலமடங்குகளாக மாறியது (அது என்னமோ உண்மைதான்) என்றும் பொதுச் சனத்துக்கு எங்கள்மேல் ஒரு வெறுப்பிருந்தது.

தேவன் எப்போதுமே ஆச்சரியமளிக்கும் ஒரு விஷேசமான கிருமி. அவரிடம் நம்மை டக்கென ஆச்சரியப்படுத்தும் விசயங்கள் எப்போதுமே நிறைந்திருக்கும். அந்தச் சம்பவத்தின் பின் அவரைப் பல நாட்களாகவே பார்க்கவில்லை. நான் பெரும்பாலும் வீட்டிலும் இருப்பதில்லை. முக்கியமாக அவர் பேரா போடுகிற நேரங்களில் என் பதிவு மாற்றிப் பெறுவதற்காகக் காவல்நிலையங்களில் அலைந்துகொண்டிருந்தேன். மீண்டும் அவர் என்னுடன் கூடித் திரிய ஆரம்பித்தது ஒரு தற்செயலான நிகழ்வின் போதுதான்.

'தம்பி மெயின் ரோட்டுச் சந்திக்கா போறீங்கள்?' நான் திரும்பி

□□□□

**அவள் தன் கைகளை அருகில் வைத்துவிட்டு மரத்தின் கீழ் அமர்ந்திருப்பாள். அவர் கருஞ்சிவப்பு மலர்களை அள்ளிக் கொடுப்பார். அவர்கள் தங்கள் வாகனங்களில் மலைக்குப் போவார்கள்;**

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் இந்தாள் நிற்பதையே கவனித்தேன்.

'அதில பொலிசுக்காரன் நிக்கிறான்?'

சரிதான். நான் திரும்பி வந்த வழியே செல்லத் தயாரானபோது ஒரு வேதாளத்தைப்போல் தோளில் அமர்ந்து கொண்டு என்னோடு அவரின் உறவைப் புதுப்பித்துக்கொள்ள ஆரம்பித்தார்.

***

தேவன் என்கிற முரட்டுத் தேவனோடு நடந்து கொண்டிருந்தேன். ஊரில் மோட்டுத் தேவன் படு ஃபேமஸ். மோட்டுத் தேவன் நல்ல வலிமையான தேகமுடைய மனிதர். கால்களில் பழைய ரப்பர் செருப்போடு பரவிப்பாஞ்சானில் இருந்து சுதந்திரபுரச் சந்திக்குப் பெரிய தேங்காய் மூட்டையொன்றோடு வெளிக்கிட்டு, திரும்பும்போது பிளாஸ்டிக் கைப்பையில் பருப்போ, சீனியோ, எதையோ ஒன்றை எடுத்துக்கொண்டு வீடு வருபராக அவரே ஒருமுறை என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தார். அங்கிருந்து இங்கு ஒன்பது மைல்கள் இருக்கும். போக-வர என்று 18 மைல்கள் சைக்கிளிலேயே அவர் அலைந்து திரிந்து கொண்டிருந்தார்.

எங்கிருந்தாலும் சரியாக ஏழு அல்லது எட்டு மணிக்குள் வீடு வந்து சேர்ந்து விடுவாராம். எல்லாமே அவர் சொன்னதுதான். அவருக்குக் கலை வரும். சில நேரங்களில், குடித்தாலும் அவர் கலையாடுவார். அவருக்கு விதவிதமான கலைகள் எல்லாம் வரும். திடீரென கங்கை எனும் பெயரில் கலை ஆடுவார். அப்போது அவரின் குரல் சற்று இறுகி, கண்கள் இரண்டும் பூத்து எரியும் நெருப்பாய் வேட்டையாடுவதற்குத் தயாராகும் ஒரு மிருகத்தினது போல் பளபளக்குமாம்.

***

மோட்டுத் தேவன் மகாலட்சுமி திரையரங்கின் அருகில் படு பௌவியமாகப் புரோக்கரிடம் பேசி அந்த வீட்டை அமைத்திருந்தார். எப்போதும் சத்தங்கள் வந்து கொண்டிருக்கக்கூடிய அறையைப் பிடித்த போதுதான் அவருக்குத் தெரிந்தது, தன் அறைச் சாளரத்தின் வழியாக ஒற்றைக் கண்ணால் அந்தத் திரையரங்கின் ஏழு கிழிசல்களைக் கொண்ட திரையைப் பார்க்க முடியுமென்று. ஆச்சரியமாய், மேலும் கீழுமென தொடர்ந்து நான்கு காட்சிகளிலும் அவர் இரண்டு படங்களைத் திரும்பத்திரும்பப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு திரைப்படத்தில் குறிப்பிட்ட காட்சியைத் திரும்பத்திரும்பப் பார்ப்பதில் ஆர்வமாயிருந்தார்.

***

இரண்டு செவ்வகங்கள் தேவன் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. தலையைக் குனிந்தவாறே அவர் 'இல்லை' என்றார். பிடரியில் அடியொன்று விழுந்தபோது, கழுத்து விறைத்துப் போனது அவருக்கு. சுதாகரித்து எழுந்தபோது வாயில் ஊறிக்கொண்டிருந்த எச்சில் உப்புக் கரைசலைப்போல் துவர்த்து தன்னிச்சையாகவே உதடுகளில் வழிந்தது. துடைக்க முயற்சித்து, கால்கள் கீழே வைக்கவே முடியாமல் விறைத்துப்போயிருந்தன. எச்சிலை விழுங்கினார்.. உப்புச் சுவை நாக்கில் படர்ந்து தொண்டைக்கும் பரவியது. விபரீதமான எண்ணங்கள் உடலுள் ஊடுருவியது, நடுங்கிக் கீழே சாய்ந்தபோது கண்கள் வீங்கி அதீத வெப்பம் வெளியேறியது. அழுவதற்கோ சத்தமிடுதற்கோ எந்த வாய்ப்புமின்றி அவரின் குரல் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

'ஐயா'

'அந்தப் பெட்டிகளில் என்ன இருந்தன?'

'தெரியவில்லை. உண்மையிலேயே தெரியவில்லை.'

தன்னை அவர்கள் வதைப்பதற்காகவே செவ்வகப் பெட்டிகளை வைத்திருந்ததாக அவர் நினைத்துக்கொண்டிருந்தார்.

'விடு... இப்போது நீ எங்களிடம் எதையும் மறைப்பதற்கு இல்லை'

'ஆம்'

'நீ தங்குமிடம் எங்களுக்குத் தெரியும் இங்கிருக்கும் வரையும், நாங்கள் உன்னுடன்தான் இருப்போம்; புரிகிறதா?'

'புரிந்தது.'

அவுஸ்ரேலியாவுக்கு ஆள் அனுப்பியதாகத் தான் கைதுசெய்யப்படவில்லை என்பதைத் தெரிந்துகொண்டு அவர் பெருமூச்செறிந்தபோது காவல் அதிகாரி தன் கையிலிருந்த எண்ணெய்ப் பிசுபிசுப்பான மூங்கில் கொட்டானைத் தேய்த்தபடியே கூறினான்:

'நீ ஆஸ்திரேலியா செல்லும்வரை.'

***

கொச்சினிலிருந்து படகு புறப்படும்போது நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. தளத்தில் 47பேர் ஏறியிருந்தோம். பயணம் நாற்பது நிமிடங்களைக் கடந்த பிறகு தான் பாதுகாப்புப் பற்றிக் கூறமுடியும் எனவும் இது ஆபத்தானதுதான் ஆனால் எமது ஆட்கள் பார்த்துக்கொள்வார்கள் எனப் படகோட்டி காற்றில் எச்சில் தெறிக்கச் சொல்லிக் கொண்டிருந்தான். சுமாத்திராவின் ஜம்பியில் நாங்கள் பயணித்த கப்பல் எல்லையோரக் கடற்படையை நேருக்குநேர் எதிர்கொண்டபோதும் கூட அப்போதும் அவுஸ்ரேலியக் குடிமகனாகும் எண்ணம் மட்டும்தான் எனக்குள் ஓடிக்கொண்டிருந்தது. படகோட்டி மேல் தளத்தில் நின்று கத்தினான். 'எல்லாம் முடிந்தது. நாங்கள் அவனிடம் சிக்கிவிட்டோம். படகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூழ்கடித்துவிடுவார்கள். உங்களை உங்கள் நாட்டுக்கே திருப்பி அனுப்பப்போகிறார்கள்.'

கடற்படை அதிகாரிகள் எங்கள் கப்பலை அரபுரா கடற்பகுதி வரை இழுத்து வந்து அந்தப் பகுதியிலிருந்து வெளியேறுமாறு பணித்தார்கள். கூடவே இந்திய அரசுக்கும் எங்கள் படகு மற்றும் ஆட்கள் பற்றி அதிகாரபூர்வ அறிக்கையும் அளிக்கப்பட்டது. 21 நாட்கள் கழித்து நாங்கள் மீண்டும் இந்திய மண்ணில் இறங்கிய போது சிறப்பு முகாம்கள் எங்களை வரவேற்கக் காத்திருந்தன.

***

தேவனுக்குக் கொஞ்சம் மந்த புத்தி. எப்போதும் அவர் வாய் இளித்திருக்கும். அச்சத்தை உண்டாக்குகிற மனிதர்களைப் பார்த்தால்கூட அவர் வாய் மூடிக் கொள்வதில்லை. இளித்த வாயில் குத்தலாம் போலத் தோன்றும்.

தேவனின் பெஞ்சாதி அவரை வெளிநாட்டுக்குக் கடத்துவதாகக் கூலிக் காமாட்சியிடம் சபதம் செய்த ஏழாவது மாதம், அவர் தனுஷ்கோடி மேட்டில் இறங்கினார். படகோட்டி 'இளிப்பன்' எனத் தேவனுக்குப் பெயர் சூட்டினான். அவன் ஏன் சூட்டினான் என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். படகோட்டியின் கதை இன்றிரவோடு முடிந்துவிடும், அவன் படகும் மண்டையும் வெடித்துச் சிதறும், வீரகேசரி இடப்பக்க மரண அறிவித்தல் வெளியிடும்.

தேவன் மெட்ராசுக்கு வந்து இன்றுடன் 34 நாட்களாகியிருந்தன. இளிப்புத் தேவன் தன் பெயரைக் கதிரவன் மகன் ஜானுகனின் பெயரை தன் புனைபெயராக்கிக் கொண்டு, முகாமிலிருந்து தப்பித்தார். மெட்ராசுக்குப் பஸ் ஏறும்போது அவரிடம் ஏழாயிரம் ரூபாய் இருந்தது. அதுவும் இலங்கைக் காசு. கிட்டத்தட்ட 3,070 ரூபாய். முதலில் ஒரு திரையரங்கில் படம் பார்ப்பது என முடிவு செய்தே மெட்ராசுக்கு வந்து சேர்ந்தார் ஜானுகன் என்ற இளிப்பன் தேவன்.

உன் பெயர் என்ன?

தேவன்,

அவன் காவல்துறையின் அடிமட்டத்தில் வேலையிலிருப்பான் போல. அவனிடம் துப்பாக்கி கூட இல்லை. சாணிக்கலரில் அவனது ஆடை, இளிப்பன் தேவனுக்கு மீண்டும் சிரிப்பை வரவழைத்தது.


'எங்கயிருந்து வருகிறாய்?'

'அண்ண, நான் இங்க தஞ்சாவூரில இருந்து வாறன். என்ர ஐடி காட் துலைஞ்சு போட்டுது. நான் காலைல கொண்டாந்து தாரன்.'

'ஓ . . . சிலோனா?'

***

முதல் நாள் இளிப்பன் தேவன் நான்கு காவற்துறையினரிடம் படாத அடி வாங்கினார். இரண்டாம் நாள் அவருக்கு அடிகள் குறைந்திருந்தன. புதிதாக வர்ணம் பூசப்பட்டிருந்த வாங்குக்குக் கீழே அவர் இருத்தி வைக்கப்பட்டிருந்தார். தன் லோங்ஸை எடுத்துச் சுருட்டி வைத்துக் கொண்டிருந்தார். ஆனால் இவையெல்லாம் அன்றிரவு மட்டுமே நீடித்தது. பின்னேரமே உடைகளை அணிந்துகொள்ள அவர் அனுமதிக்கப்பட்டார். மூன்றாம் நாள் காலையில் காவல் கட்டடத்துக்கு அருகிலிருந்த தேநீர்க் கடையில் தேநீர் வாங்கிவர அனுப்பப்பட்டார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று கைதிகளுக்கான மதிய உணவு வாங்கவும் அவர் அனுப்பப்பட்டார்.

★★★

இளிப்பனை காவல் கட்டடத்திலிருந்து விரட்டினால் கூட அங்கிருந்து அவர் வெளியேறப் போவதில்லை என்பதைப்போல் அந்தக் கட்டடத்தையே சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருந்தார். அங்கிருந்த இடைநிலைப் போலிசுக்காரன் ஒருவன் தன் மதிய உணவை இளிப்பனோடு பகிர்ந்து கொண்டான். அந்த இடைநிலை அதிகாரிக்கு இலங்கைக்காரர்களின் சிங்களத் தமிழ் மிகுந்த இஷ்டமாம். இளிப்பன் சாந்தனுக்குக் காவல்துறைக் கட்டடமே கதியாகிப் போனது அன்றிலிருந்துதான்.

நான்கு வருடங்கள் கழித்து மீண்டும் அதே காவல்நிலையத்துக்கு இளிப்பன் அடித்துக் கைது செய்யப்பட்டு அழைத்துவரப்பட்டபோது அங்கிருந்த அயற் குற்றவாளிகள் தகவல் அட்டவணையில் இலங்கைக் குற்றவாளிகளின் எண்ணிக்கை 17ஆக உயர்ந்திருந்ததைக் கண்டார்.

★★★

'நீங்கள் எப்ப இங்க வந்தனீங்க?'
தேவன் உறுத்துப் பார்த்தார். '' உன்ன மாதிரி இல்லத் தம்பீ, நாங்கள் உண்மையா நாடு பிடிக்கத்தான் வந்தனாங்கள்'
மனிதர் கதை அளக்க ஆரம்பித்துவிட்டார் என்றே எனக்குத் தோன்றியது.
''ஐயா, முந்தினநாள் இரவு சாப்பாடு குடுக்கிற மனிசி கடைக்கு கூட்டிட்டு போகச் சொன்னவ என்று கூட்டிக்கொண்டு போனன், அப்பக்குள்ள அந்த மனிசி ஒரு கத சொல்லிச்சுது. அவ இயக்கத்துக்குச் சாப்பாடு குடுத்தவவாம், இப்பயும் இயக்கப் பொடியங்களுக்குத்தான் சாப்பாடு குடுத்துக் கொண்டு இருக்கிறாவாம்'' என்று.
''மனிசிக்கு உலக்கையால புருசன்காரன் தலையை அடிச்சதெண்டு முன்னமே ஒரு கத கேள்விப்பட்டிருந்தனான். புருசன் அடிச்ச அடியில மனிசிக்குக் கொஞ்ச காலத்துக்கும் முதல் நடந்த விசயத்தோட எல்லாத்தையும் குழப்பி எனக்குக் குழம்புக்கதை சொல்லுதெண்டு நினைச்சிட்டு 'அப்படியா, அன்ரி?' என்றேன். மனுசி கொஞ்ச நேரத்தில 'நானும் இயக்கத்தானாமெண்டு எனக்கு தெரியாமலே என்னையும் இயக்க வாகனத்தில் ஏத்தப் பாத்தது. என்ன ஐயா, இந்தியால எல்லோருமே இயக்கம்தான்.' என ஒரு பெரிய ஒரு கதையைச் சொல்லிவிட்டதைப்போல் முத்தாய்ப்புடன் நிறுத்தினேன்.
ஆனால் தேவன் என் கதையை ஒரு மிடறு குடித்துக் கழித்துவிட்டிருந்தார். காறி அருகிலிருந்து செடியில் உமிழ்ந்தார். செடி எச்சில் தண்ணீரில் சிலிர்த்து ஆடியது. அவர் சிவந்த கண்களை உருட்டி,
'நாங்கள் எண்பத்தேழில வந்தனாங்கள்?'
ஆ . . . பொதுவாகவே இலங்கையர்களுக்குக் கொஞ்சம் ஆள்மாறாட்டம் உண்டு; இந்த இழவின் இன்னொரு சாமான் தேவன்.
கிழவர் மீண்டும் தொடர்ந்தார்:
'அப்பன், மாதா கோயிலடி ஜவ்கன் மூலைல இருக்கிற ஒபீஸ் தெரியுமா?
'ஓ, அவங்கள் ஈபிஆர்எல்எப் காரங்கள்'.
'ம்ம் . . . போன கிழமை கொத்துக் கடையில ஒரு பொடியனுக்குக் கோடு போட்டவங்கள் அது தெரியுமா?'
நானும் அதைக் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் கிழவரிடம் தெரியாததைப்போல் மண்டையை ஆட்டினேன்.
'கிழிச்சது ஆரெண்டு தெரியுமா?'
'அப்பு, இப்படியொண்டு நடந்ததே தெரியாது என்கிறேன்.'
'அப்ப என்ன சாமானுக்கு நீ இதுக்குள்ள இருக்கிறாய்?'
'சரிதான்.'
கிழவர் நான் பொய் சொல்கிறேன் என்பதை ஊகித்திருந்தார்.

★★★

தேவன் எனது அறைக்கு வந்துபோக ஆரம்பித்த மூன்று மாதங்களிலேயே அறையிலிருந்து வெளியேற்றப்பட்டேன். அதற்குமேல் நகரத்தில் இருக்க வே ண்டாமென்று நானும் வெளியேறுவதற்கான தயார்ப்படுத்தல்களைச் செய்ய ஆரம்பித்தேன். தேவனுக்கும் எனக்குமான சின்னப் போக்குவரத்துக் கூட அத்துடன் நின்று போயிருந்தது. கிட்டத்தட்ட அவரை நான் மறந்தே போனேன்.

தேவனோடு பேச்சுவார்த்தையை விட்டுப் பலமாதங்கள் ஆகியிருந்தன. சில்லறை வணிகர்களில் கூட தேவனைப்போல் ஒரு மனிதனைப் பார்க்க முடியாது. எந்தச் சத்தமுமின்றி நம்முடன் தொடர்ந்து வருவார். அவரின் கைகள் மோசமான அரூப ஓவியமொன்றை வரையும். அந்தக் கோடுகளோ ஓவியமோ, அதை அவர் ஓவியம் என்றுதான் சொல்லிக்கொள்வார். என் கண்களில் தெரியும் எந்தச் சிவப்புக் கோடுகளையும் அந்தமாதிரி நேரத்தில் அவர் பார்ப்பதில்லை; இல்லை அவர் திரும்பிக்கொள்கிறார். இலாவகமாக அதை அவர் மறுதலிக்கிறார். அவர் மறுதலிக்கும்போது நான் என்னை நகர்த்த முடியாமல் திணறுவேன்.

ஒரு நல்ல பனிக்குளிர் சூழ்ந்த அதிகாலையில் அவரைப் பார்த்திருந்தேன். எதற்கு அவரும் நானும் சந்தித்துக்கொண்டோம் என்பது எப்போதைக்கும் போலப் புதிர்தான். ஆனால் அது தான் அவரைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்த இறுதித் தருணம். ஆனால் சரியாக விளக்கமுடியாத ஒரு அமைப்பு தேவன். உண்மையில் நான் அவரைக் காணாமலாவேன் என்பதை என்னால் எதிர்கொள்ள முடியாமலே இருக்கிறது.

நாங்கள் இருவரும் பல்வேறு காலத்துப் பொருட்கள் விற்கும் இதயப் பகுதிக்கு வந்து சேர்ந்தோம். பயன்பாட்டிலிருக்கும், பயன்பாட்டிலில்லாத பழைய அபூர்வமான பொருட்கலெல்லாம் அப்பகுதியில் கிடைக்கும். அவர் ஏற்கனவே பேசி வைத்ததைப்போல் கட்டடப் பகுதியின் உள் அறையொன்றுக்குச் சென்றார். நானும் வால்பிடித்துச் சென்றேன். கடிதங்கள் வைப்பதற்கான ஒரு 'மெயில் பொக்ஸ்' ஒன்றை வாங்கிக் கொண்டார். நான் அதைத் தூக்கிக்கொண்டு அவர் பின்னே நடந்துகொண்டிருந்தேன். உண்மையில் நான் கூட்டத்தில் காணாமல்போய்விடுவேனோ என்று பயந்து அவருடன் ஒட்டிக்கொண்டே நடந்தேன். அறைக்கு வந்த போது அவர் அந்தப் பெட்டியை என்னையே வைத்துக் கொள்ளச் சொல்லித் தந்தார். இறுதி வரையும் அந்த மனிதரின் நடவடிக்கைகள் எனக்குப் பிடிபட்டதில்லை. அவரிடம் எதையும் பேசாமல் படியில் இறங்கி நடந்தேன். தேவன் பின்னிருந்து கத்தினார். ஒரு நாயை விரட்டுவதுபோல் 'எங்க தொலைஞ்சு போற?'
நான் திரும்பிப் பார்க்காமலேயே இறங்கிப் போனேன்.

★★★

அவர் ஊரெல்லாம் அலைந்ததில் தன் உடைகளை மாற்றிக்கொண்டார். மிக மெல்லிய நிறங்களிலான ரகரகமான ஆடைகளுடனும் அவரின் தலை வர்ணம் ஆங்காங்கு பூசப்பட்ட தங்க நிறமுடியுடனும் என அலைந்தார். தேவன் பிரதான வீதிகளின் வழியே திரும்பி நடந்தார்; நானும் அவருடனேயே இழுபட்டு அலைந்தேன். அந்தக் கணத்தில் உடல் குளிர்ந்து அனத்தியது; பெரும்பாலும் சிறிய சந்துகளுக்குள் நாங்கள் நடந்தோம். உண்மையில் ஒழுங்கைகள் எனக்குப் பெரும் பிரச்சினையாகத்தான் இருந்தன. ஆனால் அவை பாதுகாப்பானவை என்ற எண்ணமுண்டு. சில நேரங்களில் தேவன் 'மோகினிகள் உன்னைத் தாண்டுகின்றன' என்பார். அப்போது அவர் முகத்தில் ஒருவித குழைவு தெரியும்; தன் உதடுகளை முறுவலிப்பார்; அவர் கண்கள் பரபரப்பின் வேகத்தில் அடித்துக் கொண்டிருக்கும். எப்போதுமே அவர் எதைப் பார்த்து என்ன சொல்கிறார் என்று கண்டுபிடிப்பதற்கே எனக்கு காலம் ஆகிப்போகும். ஆனால் மனிதர் எழுபது வயதில் வெளிநாடு போய் என்ன செய்யப்போகிறார் என்பது அவருக்கே வெளிச்சம். அவரிடம் கேட்டால், பாயை உருவி, 'இதெல்லாம் ஒரு பாய், நீர் இத காசு குடுத்து வேற வாங்கியிருக்கிறீர். ஐசே உம்மள அந்த வேச மகன் சுத்திக் கொண்டிருக்கிறான், நீரும் கெப்புத் தெரியாம ஆடிக்கொண்டிருக்கிறீர். இதில நான் வெளிநாடு போய் என்ன செய்யப்போறாயெண்டு நக்கல் கேள்வி... ஹே... ஹே எண்டு கதைச்சால் மட்டும் காணாது' மனிதர் வாயைத் திறப்பது பல நேரங்களில் யாரையாவது திட்டுவதற்கு மட்டும்தான் எனப் பல நேரங்களில் நினைத்திருக்கிறேன்.

தேவனைக் கோழிக்கூடு அப்பார்ட்மென்டில் சந்திப்பதற்கு முதல், சரியாக நான்கு வருடங்களுக்கு முன் ஒரு பழைய, பெரும்பாலும் சட்டவிரோதக் குழுக்கள், கள்ளப் பாஸ்போர்ட்காரரர்கள் தங்கும் பேராக் ஹோட்டலில் நாற்றமடித்து பூஞ்சண மணம் எழுந்தாடும் அறையொன்றில் அமர்ந்திருந்த அவரைப் பார்த்தேன். அப்போது நான் அவருடன்தான் ஒரே அறையில் தங்க வைக்கப்படப்போகிறேன் எனத் தெரியாது. எங்களைவிட எங்களின் முகவன் படுகாரியமாக இருந்தான். நான்கு நாட்கள் அந்தக் கிழவரும் நானும் தங்கியிருந்தோம்; முதல்நாள் அவர் கடைத் தெருவைப் பார்க்க அழைத்துச் சென்றார். அவருக்குப் பயம் எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஏஜெண்டுக்குத் தெரிந்தால் அந்த மகனே.... இந்த மகனே என்று ஏசித் தள்ளுவான். போதாக்குறைக்குச் சாதி சொல்லியும் திட்டுவான்.

கிழவர் எதற்கும் அசரான் போல் தெரிகிறது. முதலில் பெட்ரோனா கூண்டுக் கடைத்தெருத் திருப்பத்தில்

□□□□

**அவள் தன் கைகளை அருகில் வைத்துவிட்டு மரத்தின் கீழ் அமர்ந்திருப்பாள். அவர் கருஞ் சிவப்பு மலர்களை அள்ளிக் கொடுப்பார். அவர்கள் தங்கள் வாகனங்களில் மலைக்குப் போவார்கள்**

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று சுவர்களை மட்டுமே கொண்ட முக்கோணக் கட்டடத்தைத் தாண்டி நடந்தபோது, என்னுடைய வாய் ஊறிக்கொண்டே வந்தது. தேவன் தடிமனும் உயரமுமான ஒரு பெரிய கண்ணாடியில் பார்த்துத் தன் ஆடைகளைச் சரிசெய்தார்.

'டேய் பெடியா . . . கடையைப் பாத்து வச்சுக்கொள் . . . நாளைக்கு தங்கச்சி காசு போட்டோன கண்ணாடிக் கடையில கண்ணாடி வாங்கிட்டு, உந்தக் கடையிலதான் நைட் சாப்பாடு'' தேவன் கொஞ்சம் வழவழ கொளகொள தான். ''ஆனால் ஏஜெண்ட்காரன் கேட்டால் என்ன சொல்லுவீங்க?அவன் கிழிச்சுத் தொங்கவிட்டுருவான்.''

அவருக்கு இதுவெல்லாம் ஒரு பிரச்சினையே இல்லை என்பதைப்போல் என்னை முறைத்துப் பார்த்தார். நான் அந்தப் பார்வையில் திருப்தியாகிப் போயிருந்தேன். அவரின் ஆசைகள் ருசிகரமானவை. அது மிகச் சுவையான உணவாக இருந்தது. ஸ்கங் ஆப் ரோஸ்டட் மீட் என்று அவர் ஓட்டல் சிப்பந்தியிடம் கூறும்போது நான் வாயைப் பிளந்துகொண்டு அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் தமிழ்ப்பெண்ணைப்போல் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒருவர் வந்தார். அவர் தமிழும் மாலியும் கலந்து பேசினார். அவரின் தந்தை மலாய்; தாய் தமிழ். இந்தக் கொலிப்ரேசனைப் பற்றி நான் தேவனிடம்தான் சொன்னேன். மனுசன் மூன்றுநாட்கள் யோசித்து ஒரு கேள்வியைக் கேட்டார்; 'அவையவ எந்த ஆக்கள்?'

கிழவர் இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் கேட்டார். 'மகன் அந்தக் கடை உமக்கு ஞாபகம் இருக்கா?' என்றார். நான் அவருடன் செல்லக்கூடாது என்ற முடிவிலிருந்தேன். வழிவழியாக நின்று போலீஸ்காரர்களிடம் குண்டி பேர அடி வாங்க வைத்துவிடுவார் அதையும் விடத் தேவையில்லாமல் எதையாவது கேட்டுக் கொடுமைப்படுத்துவார் எனப் பயந்தேன். ஆனால், இதற்கெல்லாம் மாற்றாய் வேறு ஒரு நிகழ்வு நடந்தேறியது, அன்றைக்கு மாலையே முகவன் வந்தான். எனக்கு அன்று மாலை பயணம் ஏற்பாடாகியிருக்கிறது என்றான். எனக்கு ஏதோ படீர் என வெடித்தது போன்று இருந்தது. ஆனால் அது ஒரு மகிழ்ச்சியான தருணம். சரியாக இரவு 10 மணிக்கு விமானம் ஏற்பாடாகியிருந்தது. ஆனால் அந்தக் கள்ள ஏஜெண்ட் நான் மும்பை சென்று, அங்கிருந்து ஸ்லோவோகியா செல்வதாகப் பயண ஏற்பாடு அமைக்கப்பட்டிருக்கிறது என்று என்னை மிக வேகமாகப் பெட்டி - படுக்கையோடு இந்தியாவுக்கு அனுப்பினான்.

***

'ஒரு மதியம், பெருநகரத் தெருக்களில் தார் உருகின வாடை சுவர்களில் ஏறியிருக்கும். இந்தியத் தெருக்களில் தனியாகக் கைகளில் பெட்டிகளோடு கண்முன் தெரிகிற வசீகரம் மிக்க தெருக்களில் நிற்பதென்பது படு சாத்தியமானதே. ஆனால் நான் இராக்களில் சாகஸக் கதைகளைச் சொல்வதற்கான காரணங்கள் சிலது இருக்கின்றன மகன்.' கிட்டத்தட்ட எழுபது வயதுக்கிழவர் விடாமல் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். சரியாக இடைக்கிடையில் தனது மொபைலை எடுத்துச் சுழற்றிச்சுழற்றிப் பார்த்துக் கொண்டார். கிழவர் அங்கு தப்பித்து இந்தியாவில், கொட்டை வேகிற வெய்யிலில் மாட்டியிருக்கிறார். அவர் எப்போதும் போலப் பேசிக்கொண்டிருந்தார். அவருக்குத் தன் கதையைச் சொல்லிக் கொண்டிருக்கிற நேரங்களில் நாங்கள் சந்தித்துக் கொள்ளாத, சரியாக நாற்பத்தொன்பது மாதங்களும் இருபத்தாறு நாட்களும் அவருக்கு ஞாபகம் வந்து, 'மகன் அங்க விட்டுட்டு நீ மட்டும் அந்த நாயோட வெளிக்கிட்டுட்டாய்... என்னைத் தனிய விட்டுட்டு' அவரை நேரில் பார்ப்பதைத் தவிர்த்துக்கொண்டேன். உண்மையில் அவரிடம் மன்னிப்புக் கோரும் நிலையில் நானிருக்கவில்லை.

அந்தக் கிழவர் மேகங்களுக்கு விடை கொடுப்பதைப் போன்று மேலே பார்த்துப் பார்த்து அடிக்கடி தலையைத் திருப்பிக் கொண்டிருந்தார். 'உனக்குப் பயண ஏற்பாடுகளைப் பற்றி ஏதாவது அன்று தெரிந்திருந்ததா மகன்?'
பயண ஏற்பாட்டை முகவன் சொன்னபோது என் அருகில் அந்தக் குடிகாரக் கிழவரும் இருந்தார். அவரின் முகம் என்னைவிட அதிகமாய் அந்த ஏஜென்டைப் பார்த்து வடிந்து கொண்டிருந்தது. நான் பரவாயில்லை, சற்று ஆச்சரியப்படச் செய்தேன். இன்றும் சில சமயங்கள் ஆகலாம் என நினைத்தேன்; ஏஜெண்டும் அதைத்தான் சொல்லித் தங்க வைத்திருந்தான். அந்த ஏஜெண்ட் என்னை ஏன் நேராய் இங்கு கொண்டுவந்து வைத்திருக்க வேண்டும்? என்ற கேள்வியும், அவன் என் கண்களையோ, மூக்கையோ விற்றுவிடுவானோ என்றும் கொஞ்சம் பார்த்துத் தானிருந்தேன். ஆனால் வெளிக்காட்டிக் கொண்டிராமல் கிழவரின் பாதுகாப்பில் நான்கு நாட்கள் இருந்தது தவிர வேறு எந்தப் பாவத்தையும் சந்தை நகரத்தில் நான் செய்திருக்கவில்லை. அங்கிருந்த பெரும்பாலான நேரங்களில், காலை - மாலை எனப் பிரித்துக்கொள்ளலாம்; நான்கு இரவுகளும் இரண்டு பகல்களும் ஜன்னலில் அமர்ந்திருந்தேன். நகரம் ஜன்னலுக்குள் சிக்கியிருந்தது. அதன் அசைவுகள் ஜன்னல்களில் தெரிந்தன. அதுவல்லாத பொழுதுகளில் கிழவனின் குப்பைச் சிந்தனைகளில் உதிப்பது போல் நகரத் தெருக்களில் நடந்து கொண்டிருந்தோம். கால்கள் இடறுகிற இடங்களிலெல்லாம் விற்பனைக்கான அறிவிப்புத் தாள்கள் கைகளில் திணிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவர் சாதாரணமானவரல்ல; அவர்களைத் தாண்டித் திரும்பி நடந்தார். உயரமாய் இருக்கிற கண்ணாடிகளில் முகத்தைப் பார்த்துக்கொண்டார். தன் தாடையைத் தடவிக்கொண்டு உள்ளிருக்கும் கண்கள் பளபளக்கிற நிறச் சட்டைகளை, அல்லது புதிய சப்பாத்துகளைப் பார்த்தார். சில வர்ணங்கள்; மென் பச்சை, செரிப் பச்சை, நீலம் போன்ற மென் நிறங்களில் அந்தாளுக்கு ஈடுபாடு. அவருக்கு வண்ணங்களைப் பற்றிச் சொல்லும்போது கூடவே சேர்த்து சொல்வதற்கு காதற்கதையொன்றும் இருந்தது.

செங்கல் சுவரில் பாசி படிந்து தெருக்களின் மூலைகளில் அவர்கள் இருவரும் சந்தித்துக் கொள்வார்கள். அவள் தன் கைகளை அருகில் வைத்துவிட்டு மரத்தின் கீழ் அமர்ந்திருப்பாள். அவர் கருஞ்சிவப்பு மலர்களை அள்ளிக் கொடுப்பார். அவர்கள் தங்கள் வாகனங்களில் மலைக்குப் போவார்கள்; அவள் தன் கைகளைக் கட்டியபடி நின்றிருப்பாள். இவர் காற்சட்டைப் பைகளுக்குள் கைகளை விட்டு எங்கேயாவது பார்ப்பார். சில நேரங்களில் அவர் காதில் அவள் ஊதுவாள். கிழவனின் ரோமக் கால்கள் நிமிர்ந்து நிற்கும். அவள் சிரிப்பாள்.

கடைசியில் அந்தக் காதற்கதையை அவர் சொல்லி முடிப்பதில்லை. காதலை வேறெங்காவது நகர விட்டு இந்தாள் வேறு எதையோ உளறிக்கொண்டிருப்பார். ஆனால் கடைசியில் அந்தச் சோகமான காதற்கதையை அவர் முடிக்கமாட்டார். ஒரு முதுகெலும்பு உடைந்து போன கொடும் விலங்கு தன்னுள் உறுமிக் கொண்டிருக்கிறது என்றபடி எதையாவது கூறிவிட்டு, தன் அறைக்குக் கிளம்பிவிடுவார்.

★★★

நான் தேவனின் தகவல்களை சேகரித்துக் கொண்டிருந்தேன். அவர் ஒரு வெற்றி முகவரா, அல்லது ஊளையிட்டுத் திரிகிற, பழைய கதைகளைத் திரும்பத் திரும்பத் சொல்லுகிற ஒரு இயந்திரமா என்பது மட்டும்தான் எனக்குத் தெரிந்துகொள்ள வேண்டி இருந்தது.

மிகவும் கூலான ஒரு விசிலோடு கிழவர் நுழைந்தார். சுற்றி ஒருமுறை பார்த்தார். எனது அறை விசிறி சீரழிந்துபோய் கனகாலமாகியிருந்தது. எனக்கும் பெரிதாக அது குறித்து எந்த அக்கறையும் இருக்கவில்லை. யார் 'அது ஏன் ஓடவில்லை' எனக் கேட்டால், பொத்தாம்பொதுவாக என்னிடம் முன்தயாரிப்பான ஒரு பதில் இருந்தது. 'அது அப்படியே இருக்கட்டும்... நான் இன்னும் இருமாதங்களில் இங்கிருந்து வெளியேறிவிடுவேன்.' இதையே மூன்று வருடங்களாகத் தொடர்ந்து கூறிக்கொண்டே காலத்தைக் கடத்திக்கொண்டிருந்தேன்.

'மருமோளிண்ட கலியாணத்துக்குப் போறன்.. வாறீயா?'

எனக்கும் வேறு வேலைகளும் இருக்கவில்லை. காலையில் மிகச் சீரியஸாக காவல் நிலையம் செல்வது, பின்னேரம் மீண்டும் அங்கு போய் காவலிருப்பது எனக் கட்டடத்தையே சுற்றிக்கொண்டிருந்தேன். அதையும் விட காவல்நிலைய எடுபிடி வேலைகளும் செய்வேன். அது மூலமாகவாவது அந்தப் பதிவு என்னிடம் வந்து தொலைந்துவிடும் என நப்பாசையில் மூழ்கிக் கிடந்தேன். அன்றைக்குக் காவல்நிலையத்துக்கு விடுமுறையளிக்க முடிவு செய்தேன். கறுப்பு ஆடையொன்றோடு தேவனோடு புறப்பட்டேன். தேவன் என்னை நிறுத்தினார். தன் கையில் கிடந்த மணிக்கூட்டை என் கையில் கொழுவினார். பின்பொருநாள் முழு போதையில் தேவனுக்குச் சத்திய வாக்களித்தேன். 'அப்பா... உனக்கு நான்தான் கொள்ளி போடுவேன்'. அப்போதுகூட தேவன் தன் இருக்கையில் இருந்து எந்தவித அசைவுமின்றித் தன் தலையைச் சாய்த்து, நான் ஒரு புதிய பழக்கமில்லாத விடுகதையொன்றைச் சொல்லிவிட்டதைப்போல் கூர்ந்து என்னைப் பார்த்தார். எப்போதைக்கும் போல நானும் அவரின் முன் ஒரு சிவப்புத் தேன்குழலுக்கு ஒத்துழைக்கும் சிறுவனைப்போல் நான் நின்றேன். அப்போது பனி பெய்ய ஆரம்பிப்பதற்கான முதல் வாரம். மழை ஒய்ந்திருந்தது. எனது அறைக்கு விசாரணைக்காக மூன்று காவற்துறைக்காரர்கள் வந்திருந்தார்கள். முதலில் அவர் ஒரு ஏட்டு என நினைக்கிறேன். அவர்தான் என்னை முதல் வெளியில் அழைத்தார்.

★★★

ஏழு மாதங்களின் பிறகு காவற்பதிவு மாற்றித் தரப்பட்டபோது, நான் வேறு ஒரு தளத்திற்குப் பெயர்ந்து போயிருந்தேன். இந்த முறையும் என் பதிவு பழைய காவற்துறைப் பகுதிக்குள்ளேயே வந்தது. போனமுறை போய் வந்தபோது, ஒரு கான்ஸ்டபிளைச் சிநேகிதம் பிடித்திருந்தேன்.

அடுத்த பதிவு மூன்று கிழமைகளிலேயே என் கையில் வந்து சேர்ந்தது. சரியாக அந்தக் கான்ஸ்டபிளால் என் பதிவு மிக விரைவிலேயே கிடைத்தது. தேவன் தன் தற்கொலைக்கு முன்னான கிழமைகளில், அப்போதுதான் மழை பொழிந்து பனிப்பெய்வு ஆரம்பித்திருந்தது என்று சொன்னேனல்லவா? பெரும்பாலான இரவுகளில் நகரமே பஞ்சடைத்தது போல 'ங்கொய்' என்று கிடந்தது. அவர் தன் இறுதிக்காலத்தை முகாமில்தான் கழித்தார்.

சபைகளில் பிரசங்கப் பாடல்கள் ஒலிக்க ஆரம்பிக்கு முன்னரே, தேவன் காட்டுக்கொள்ளியிலிருந்து நான்கோ ஐந்தோ ஆமைகளை வாங்கிக்கொண்டுவருவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணாகக் கிடக்கிற செத்தைகளோ அல்லது வீட்டுக் கதியால் தடிகளையோ உடைத்து வீட்டுக்காரர்களிடம் திட்டு வாங்கிக்கொண்டே பெரிய தீக்குண்டத்தை எழுப்பி அதில் ஆமைகளைப் போடுவார். ஆமைகளை வெளியில் எடுத்து அவரிடம் எப்போதைக்கும் இருக்கும் ஒரு சிங்கம் பொறிக்கப்பட்ட கிறீஸ் கத்தியால் ஓட்டைப் பிளந்து ஆமைக் கறியை வழித்து எடுப்பார். மதியம் இரண்டு- மூன்று மணிக்குள் எல்லாம் தயார் செய்து எப்போதைக்கும் போலான அவரது ஆமைக்கறித் திருவிழா நடக்க ஆரம்பிக்கும். வெள்ளிகளில் அந்தத் திருவிழா உச்சத்தை எட்டும்போது மாலை ஆகிப்போயிருக்கும். மாலைகளில் நகரங்களுக்கு வேலைகளுக்காகச் சென்றவர்களும் பக்கத்து முகாம் அகதிகளும் வந்து சேர்ந்துகொள்வார்கள். ஜே...ஜே... எனக் கூட்டம் அலையாய் மைதானத்தில் கூடும். ஒருசிலர் கைகளையும் கால்களையும் ஆட்டி மைதானத்தில் நடந்துகொண்டிருக்கும் போட்டிக்கு வெளியில் இருந்தபடியே வழிகாட்டிக்கொண்டிருப்பார்கள். வீரர்கள் களைத்து ஓடும்போதெல்லாம் மிகக் கடுமையாகத் திட்டி அவர்கள் ஓடுவதற்கும் விளையாடுவதற்கும் உற்சாகம் வழங்கிக் கொண்டிருப்பார்கள். ஏனையவர்கள் வெளியில் இருந்தபடியே குடித்திருவிழாவைத் தங்கு தடையின்றி நடத்துவதற்கான வழிகளைப் பற்றி கடுமையாகப் பேசித் தீர்ப்பார்கள். இன்னொரு பக்கம் காவற்துறைக்காரனை அடிப்பதற்கோ அல்லது வஞ்சம் தீர்ப்பதற்கோ ஒரு கூட்டம் கூடியிருக்கும். அதில் இளைஞர்கள் மிகக் குறைவானவர்களாகவும் இடைவயதுக்காரர்கள் அதிகமாகவும் தென்படுவார்கள். இளம்பெண்கள் மைதானத்தின் ஒரு மூலையில் வீடுகள் இருக்கும் பகுதியில் மறைந்து நின்று கொள்வார்கள். அவர்களின் விருப்பத்துக்குரிய இளைஞர்கள் விளையாடினால் அவர்களின் சத்தம் ஹோ...ஹோவென ஏறி இறங்கும். விளையாட்டு முடிந்து இரு அணி வீரர்களுக்கான உணவுகள் பரிமாறும் இடங்களில் தங்கள் காதலை-விருப்பத்தை அவர்கள் பகிர்ந்துகொள்வார்கள். தேவன் அப்போதைக்கும் யாரிடமாவது வம்பளந்து கொண்டிருப்பார். போட்டி முடிந்தவுடன் அவர் கதாநாயகன் ஆகிப்போவார். வீரர்களோடு அவருக்குத் தொடர்பு எப்படி இறுக்கமானது என்பதைப் பற்றி எதுவும் எனக்குத் தெரியாது. ஆனால் அவர் அந்த வெள்ளிக்கிழமைகளை எப்போதும் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவே நான் கற்பித்துக் கொண்டேன். அவரும் அந்த மட்டகரமான வைனும் ஆமைக்கறியும் மைதானமும் வீரர்களும்தான் அவரின் அன்றைய பொழுதுபோக்காக இருக்கும். இரவு சிறிய கடையொன்றை நடத்திக்கொண்டிருக்கும் செல்வமக்கா வீட்டில் அவரின் உணவு, நூலகத்தில் நித்திரை. அங்கு நான் சில பழைய வாராந்திரிகளையும் கிழித்தெறியப்பட்ட சில ஆணுறைகளையும் சாப்பாடு பொதியப்பட்ட பழைய தாள்களையும்தான் பார்த்திருக்கிறேன். நாற்பது நபர்களோடு சேர்ந்து உறங்கி, பழையபாடு அவர் தொடர்ந்து யாரிடமாவது கடன் வாங்க அலைந்து கொண்டிருப்பார் கிழவர். முகாமிலிருந்தபோதும், அவர் எல்லோராலும் கைவிடப்பட்டிருந்தார் என்றே கேள்விப்பட்டிருந்தேன். அவர் மகள் கிளாரா தேவன் மட்டும் எப்போதாவது கதைத்துக் கொண்டிருப்பதாக தேவனே என்னிடம் கூறியிருந்தார். அவரது மனைவி இறந்துபோயிருந்தார். மகன்காரன் சுத்தமாகக் கதைப்பதேயில்லை. அவன் லண்டன் மதுவிடுதியில் கணக்காளியாக இருக்கிறான். அவ்வளவே. ஆனாலும் எந்த உதவியுமில்லாத யாரிடமும் பிடிப்புமில்லாத அந்த மனிதர் தொடர்ச்சியாகக் கடிதங்கள் மட்டும் எழுதிக்கொண்டிருந்தார்.

கடைசியாகத் தேவனைப் பொறுப்பெடுத்து; வாங்கி அவரின் பூதவுடல் புதைக்கப்பட்டபோது அவரின் கால்களின் அடியில் மஞ்சள் நிறக் கொத்துப் பூக்கள் நிறைந்திருந்தன. தேவன் பற்றி நிலைத்துப்போன இறுதி நினைவாகவும் அது என்னைப் பின்தொடர்ந்தது.

மூன்று வருசங்கள் கழித்து கிளாராவைச் சந்தித்தபோது, தேவன் குறித்து எதுவும் கூறிவிடக்கூடாது என்பதில் குறியாக இருந்தேன். கிளாரா தன் தகப்பன் 'உண்மையில் ஆச்சரியமூட்டுபவரவர்' என்றார்.

நானும் சிரித்துக்கொண்டே 'ஆம்' என்றேன். கிளாரா தேவன் தன் கண்களைத் திடீரெனக் குறுக்கினார். அதில் ஏதோவொன்று நிலைத்திருந்தது.

'உங்களுக்கு அப்பாவை நன்றாகத் தெரியும்தானே...'

நான் இதற்குப் பதிலளிப்பது பற்றி நன்கு யோசித்தேன். உண்மையில் சில நிமிடங்கள் எனக்குத் தேவையிருந்தது. தேவன் பற்றிய மர்மங்கள் இற்றைவரை எனக்கு மிகுந்த அந்தரத்தை உருவாக்குபவை.

கடிதங்கள், அவர் ஏன் முகாமில் தங்கியிருந்தார், இடையில் ஏன் காணாமல் போனார், காவற்துறைக்காரனோடு அவருக்கு என்ன உறவு? அவன் ஏன் இவரைப் பார்த்துப் பம்முகிறான்? கடிதங்களை யாருக்கு எழுதினார்? எதுவுமே எனக்கு விளக்கமில்லை.

'ம்.. கொஞ்சநாள் தெரியும்'

'இல்லை... அப்பா உங்கள நிறையத் தரம் சொல்லி-யிருக்கிறார். அண்ணா, அப்பா ஒரு ஆளுக்கு அடிக்கடி கடிதம் எழுதுறவர் தானே?'

எனக்குத் தெரியாது என்றபடி அங்கிருந்து நகர்ந்தேன். அவர் கேட்ட கேள்விக்கான பதில் எனக்கும் அருபமானதுதான். ஆனால் தேவன் இறந்து போனார். என்றென்றைக்கும் கிழிக்காத அந்த இறுதிக் கடிதமும், மெய்ல் பாக்ஸூம் என்னிடம்தான் இருந்தன.

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• சி.புஷ்பராணி □□□□

# எழுதி எழுதித் தீராப்பக்கங்கள்




**நா**ம் கடக்கும்போது நினைத்தே பார்க்கமுடியாத வலிகளையும் அதிர்ச்சிகளையும் திருப்பங்களையும் தந்த நிகழ்வுகளைத் தட்டுத் தடுமாறிக் கடந்தபின், வந்த வழியைத் திரும்பிப் பார்க்கும்போது, அவை தரும் உணர்வலைகள் எழுத்தில் வடிக்க முடியாதவையாக மனம் முழுவதும் வியாபித்துச் சுகானுபவம் கொள்ளவும் பெருமூச்சு விடவும் வைக்கின்றன.

செல்வம் அருளானந்தம் தான் இந்த அகதி வாழ்வைக் கடக்கும் போது அனுபவித்த வலிகளையும் , அவதிகளையும் எழுதி நகைச்சுவை தெறிக்க எம்மை வாய்விட்டுச் சிரிக்க வைக்கின்ற போது அவை சிறந்த பதிவுகளாகி விடுகின்றன. இவ்வாறான அனுபவக்குறிப்புகளில் செல்வம் தன் கூர்ந்த அவதானிப்புகளால் எங்கேயோ போய்விட்டார்!

இந்நினைவுக்குறிப்புகளை, ரெயிலில் பிரயாணம் செய்யும்போது தான் படிக்க ஆரம்பித்தேன். ஒருகட்டத்தில் என்னை மறந்து வாய் விட்டுச்சிரித்து விட்டேன். பக்கத்தில் அமர்ந்திருப்போர் ஏதாவது நினைக்கப் போகின்றார்கள் என்றெண்ணிச் சிரிப்பை அடக்கப் பார்த்தேன் முடியவில்லை. வாயைக் கைகளால் பொத்திக் கொண்டு அடக்க முடியாமல் சிரித்தேன். 'பிரான்ஸைப் பற்றி ஒன்றும் பெரிதாகத் தெரியாவிட்டாலும் நெப்போலியன் போனபாட் என்ற பெயர் எனக்குத் தெரிந்திருந்தது. பாரிசில் அந்த மாவீரனுக்கு எப்படியும் பெரிய நினைவுச் சின்னம் இருக்கும். அதைப் பார்ப்போம் என்றெண்ணி,பிரான்ஸ் எண்டவுடன் என் நினைவுக்கு வாறது நெப்போலியன் தான்' என்றேன் தட் சூணிடம். 'இந்த வெள்ளெனவோ இங்கினக்கை குடிக்கிறதெண்டால் சரியான காசு ஆனால் நெப்போலியன் எடுக்கமாட்டினம், வலன்டைன் தான்' என்றார். ஏதோ யோசனையில் இருந்த அருள்நாதர் திடுக்கிட்டு 'அடைக்கல முத்தற்றை வலண்டைனும் பாரிசுக்கு வந்திட்டானோ?' என்று குழம்பினார்.

இந்த வரிகளே என்னை அப்படிச் சிரிக்க வைத்தன. இப்படிப் புத்தகம் நெடுகிலும் ,தான் பட்ட இடர்களை நகைச்சுவையாக இவர் கூறிக் கொண்டே போகும் விதம் எழுதித் தீராப்பக்கங்கள் புத்தகத்தைக் கீழே வைக்கத் தடுக்கின்றது. மொழி தெரியாமல் பட்ட சிரமங்களையும் சிரிப்பினூடே தான் சொல்லிக் கொண்டு போகின்றார். நானும் வந்த புதிதில் ஃபிரெஞ் மொழியை விளங்கத் திணறியதை மீட்டுப் பார்க்கின்றேன்.

இதில்வரும் அங்கிள் செக்கூரிற்றி சோசியலுக்குப் [Securite sociale ] போன கதையும் நினைக்குந்தோறும் சிரிப்பையூட்டுகின்றது. அங்கிருந்து இவருக்கு வந்த கடிதமொன்றைக் கையில் வைத்துக் கொண்டு, அதில் குறிப்பிட்டுள்ள முகவரியை எப்படிக் கண்டுபிடிப்பது என்று விழிபிதுங்கிக் கொண்டு மற்றவர்களிடம் எப்படி விசாரிப்பது என்ற மொழி தெரியாத முலைப்போடு வழியில் தென்பட்ட ஒரு ஃபிரெஞ்சுப் பெரியவரிடம் கடிதத்தைக் காட்டி எப்படியோ கேட்க, அவரும் தன் பின்னாலே வரும்படி சைகையால் காட்டிச் சுற்றி வளைத்துக் கூட்டிப் போகின்றார். இவரும் பின்னே ஓடியோடிப் போகின்றார் கடைசியில் அவர் கூட்டி வந்து நிறுத்தியது அங்கிளின் வீட்டுக்கு முன்னால். கடிதத்தின் ஒரு மூலையில் இருந்த அங்கிளின் வீட்டு விலாசத்துக்குத்தான் அவர் கூட்டிவந்து விட்டிருக்கின்றார். வேறு வழிகளால் போனதால் முதலில் அங்கிளுக்கு விளங்கவில்லை. இப்படி நிறைய அவல நகைச்சுவைகள் தொடர்கின்றன.

புலம்பெயர் நாட்டின் மொழி புரியாப் படலம் பல இடங்களில் சிரிக்க வைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏயார்ப்போர்ட்டுக்கு இவர் வேலைக்குப் போனபோது, போனவழி - வந்தவழி தெரியாமல் திகைத்துக் குழம்புவதும் பசியெடுத்தபோது, கீழே வைத்துவிட்டு வந்த சாண்ட்விச்சின் ஞாபகம் வந்தபோது, கீழே எப்படிப் போவது என்று விளங்காமல். 'சாண்ட் விச்சை எடுக்கப் போகவேண்டும் ?' என்று எப்படிப் ஃபிரெஞ்சில் கேட்பது என இவர் முழி பிதுங்கி நின்றது அந்தரிப்பான நிலை. ஆனால் இன்று அது சிரிப்பைத் தருகின்றது.

இன்னோர் இடத்தில் ,ஒரு நாள் ஓர் உணவுச்சாலையில் போய் வேலையிருக்கோ எனக் கேட்டபோது, 'முதலாளி போல் நின்றவர் ஏதோ சொன்னார் எனக்கு விளங்காமல் நின்றபோது அவர் கையை நீட்டினார். கை தரப் போகின்றார் என்ற சந்தோசத்தோடு கையை நீட்டிய போது கையைப் பிடித்துக் கொண்டு போய் வெளியில் விட்டுவிட்டு ஏதோ பேசிக்கொண்டும் போனார்' இந்த வரிகளினூடே தன்னைத்தானே பகிடி பண்ணினாலும் மொழி தெரியாமல் நாம் பட்ட அவதிகளும், அவமானங்களும். கண்ணீர் நினைவுகளும் பீறிட்டு வெளியே வருகின்றன.

முதன்முதலாகப் பாரிஸுக்குள் காலடி வைத்துத் தான் வசிக்கப்போகும் சிறிய அறையைப் பார்த்து செல்வம் திகைத்து நின்றபோது, 'நாங்கள் எல்லாம் அஞ்சாறு பரப்புக் காணிக்குள்ளை வீடும், வீட்டில் இருந்து ஐந்நூறு யார் தள்ளிக் கிணறும் வளவு மூலைக்கு கக்கூசும் எண்டு விட்டு வீதியாய் வாழ்ந்தவர்கள்தான் என்ன செய்யிறது, இனிப் புதுச் சூழலைச் சமாளித்துப் பழகவேண்டும்' என்றார் இவரைக் கூட்டிவந்தவர்.

ஆரம்ப காலத்தில் பிரான்ஸ் வந்தவர்கள் பட்ட சொல்லொணாத துயரங்களைக் காதாரக் கேட்டவள் நான். இருக்க இடம் தேடி, யார் வீட்டுக்குப் போனால் சாப்பாடு தருவார்கள் என்று பசியின் கொடுமையோடு போராடி, எவ்வளவோ போராட்டத்தின் பின் நித்திரை செய்யும்போது கால் நீட்டவும் முடியாத சில அறைகளில் ஒருவர் எழும்ப அடுத்தவர் உறங்குவதுமான நிலையிலாவது இருக்க இடம் கிடைத்து மொழியோடும் ,இடம் வலம் தெரியாமலும் அல்லாடி, விசா எடுப்பதற்குப் பசியோடு அலைந்து, இங்கே ஒரு அகதியாக அனுமதி பெற்றுக் காலூன்றுவதற்கு ஒவ்வொருத்தரும் பட்ட பாடுகளைத் தன் நூலில் அருமையாகக் காட்சிப் படுத்தியிருக்கின்றார் செல்வம்.

ஃபிரெஞ்சு மொழியும் தெரியாமல் வேலை தேடி அலைவதை இவர் கூறுமிடங்களில் மனம் வலிக்கின்றது. கைகளில் பணமுமின்றி ,உணவுமின்றி ஒவ்வொரு உணவு விடுதியாக வேலை கேட்டு அலைந்த காலங்கள் பறந்துவிட்ட போதிலும் அவை மனதில் ஆழப் பதிந்திருப்பதை எப்படி மறக்கமுடியும்? புலம்பெயர்ந்து வந்தோர் பட்ட துயரங்களை இந்நூல் ஒட்டு மொத்தமாகக் கொட்டுகின்றது.




**எழுதித் தீராப் பக்கங்கள்**
செல்வம் அருளாணந்தம்
ஏப்ரல் 2016
தமிழினி

இவருடைய கவித்துவம் மிகுந்த ரசனையும் பல இடங்களில்,எளிமையான எழுத்தோட்டத்தில் இரசிக்க வைக்கின்றது. ஊரில் பனையோலை கொண்டு வீடு மேய்வது பற்றிய வேலையைச் சில பக்கங்களை ஒதுக்கியிருக்கின்றார். பனையோலையை வெட்டி எடுப்பதிலிருந்து, அதைப் பதப்படுத்தி மேயும் அழகையும், அணுவணுவாகக் கிரகித்து இவர் வர்ணித்து எழுதியிருக்கும் சுவையும், வீடு வேயத் தலைமை தாங்கும் வியேந்தம்மானின் குணாதிசயங்களும் கண்முன்னே நிறுத்துகின்றன.

பிரான்ஸ் வரும்போது எல்லையில் வைத்து அதிகாரிகளிடம் இவரும் கூட வந்தவர்களும் பிரச்சினைப்பட்டபோது,இரண்டு பாலியல் தொழிலாளிப் பெண்கள் இவர்களுக்காக, அதிகாரிகளுடன் வாதாடித் தப்பிப் ஃபிரான்ஸ்க்குள் நுழைவைதற்கு உதவியது பற்றிக் குறிப்பிடும் கட்டத்தில், இவரைக் காரில் கூட்டி வந்தவர் 'அவளவை இங்கை திரியிற' எனத் தொடங்க 'இல்லை அண்ணை அதுகள் தெய்வங்கள்' என்று சொல்லுமிடத்தில் செல்வம் வானோங்கி நிற்கின்றார்.

பெல்ஜியத்தில் இருந்து களவாக இவரை ஃபிரான்சுக்குக் கூட்டி வந்தவரிடம் கேட்கின்றார், 'நீங்கள் வெளி நாட்டுக்கு வந்து எத்தனை வருஷமாயிற்று?'

'நாலுவருஷம்'

'நாலு வருஷமோ? இவ்வளவு காலமும் ஊருக்குத் திரும்பிப் போகேல்லையே நான் ஆச்சரியப்பட்டேன்.

'இன்னும் நாலு வருசத்துக்குப் பிறகு கூடப் போகச் சந்தர்ப்பம் கிடைக்குமோ தெரியாது' என்றார்.

'என்ரை கடவுளே'

'ஏன் இதுக்குக் கடவுளைக் கூப்பிடுகின்றீர்கள்?' எனச் சிரித்தார்.

'நாலைந்து வருசம் ஊரையும், உறவையும் விட்டுப் பிரிந்திருக்க முடியுமா? நான் இரண்டு வருசத்திலை போய்விடுவன்' என்றேன். அவர் ஒரு நக்கல் சிரிப்புச் சிரித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வீட்டை விட்டு வெளிக்கிட்டு, இண்டைக்கு முப்பத்தைந்து வருஷமாயிற்று'

இந்த வரிகளையெல்லாம் படித்தபோது, என்னையே இதில் கண்டேன். ஃபிரான்சுக்கு வந்த புதிதில் வீட்டை நினைத்து அழுது செத்துப்போன அம்மாவை நினைத்து அழுது இங்குள்ள சூழல் கட்டிடங்களும் வீதிகளுமாக இருப்பதைப் பார்த்து, சாப்பாடு எதுவுமே பிடிக்காமல் அழுது 'ஒரு வருசத்துக்குள்ளை நான் வந்துவிடுவேன்' என்று தம்பி, தங்கைகளுக்கு அழுதுகொண்டே நான் கடிதம் எழுதியது நினைவு வருகின்றது. நானும் வந்து முப்பது வருடங்கள் ஆகப்போகின்றது. இன்னும் ஊர்ப் பக்கம் எட்டியும் பார்க்கவில்லை.

தங்கள் அறையில் இருப்பவர்கள் சமறி பிரிப்பது பற்றி அங்கிள் கூறுவதும் வித்தியாசமாயிருந்தது. 'ஒருவர் எவ்வளவு சாப்பிடுவார் என்பது பார்த்துதான் காசு தீர்மானிக்கப்படும்' இதில் உண்மை இருந்தாலும் மனசு வலித்தது. செல்வம் இன்னோர் பக்கத்தில் எழுதிய, 'எவ்வளவு சாப்பிட்டாலும் அரை வயிறுதான் சாப்பிடுகின்றான்' எனச் சொல்லும் அம்மாவின் அன்பு நினைவில் வந்தது' என்ற வரிகள் இங்கு முன்னே வந்து நின்றன. தன் பிள்ளை சாப்பிடுவதை எந்தவொரு தாயும் அளவுகோல் கொண்டு பார்ப்பதில்லை. இயக்கங்களிடமிருந்தும்,இராணுவத்திடமிருந்தும் காப்பாற்றித் தம் பிள்ளைகள் எங்காவது போய் உயிரோடாவது இருக்கட்டும் எனக் காணிபூமி, நகைநட்டை விற்று வளரிளம் பருவத்தில் பிள்ளைகளைக் கண் காணாத நாடுகளுக்கு அனுப்பும்போதே, ஊண் நினைந்தூட்டும் பாசமும் அந்தப் பிள்ளைகளுக்குக் கிடைக்காமல் போய்விடுகின்றது.

அகதிகளாகப் புலம் பெயர்ந்து வந்த பல இளைஞர்கள் அகதி அந்தஸ்து வழங்கப்படாமல், வேலையில்லாமல், இருக்க நிரந்தர முகவரியோ இடமோ இல்லாமல், திருமணம் நிறைவேறாத விரக்தியால் இப்படிப் பல காரணங்களால் ,மனச் சிதைவுக்காளாகித் தீராத குடிகாரர்களாக அல்லது மனநிலை பிறழ்ந்தவர்களாக அலைகின்றார்கள் என்ற அதிர்ச்சியூட்டும் துயரத்தை நம் நாட்டில் இருந்துகொண்டு வெளிநாடு பற்றிக் கனவு காண்போரும் , எந்த நேரமும் பணம் அனுப்பும்படி தொந்தரவு செய்யும் பெற்றோரும் ,உறவுகளும் அறிவார்களா?

புலம்பெயர்ந்த நாடுகளில் நம்மவர்களால் தெருத்தெருவாக இழுக்கப்படும் தேர்கள்- சாமத்தியச் சடங்குகள் - பிறந்த நாள்- இறந்த நாள் கொண்டாட்டங்கள் போன்று வீண் ஆடம்பரங்களையும் பிரமிப்புகளையும் செய்யும் ஆட்களும் இங்கு இதே போன்ற பல துன்பங்களைப் பசி பட்டினிகளை அனுபவித்தவர்களே தான். வருந்தியுழைத்து வரட்டுக் கௌரவத்தை நிலைநாட்டுபவர்கள் தான். 'கண்டறியாதவன் பெண்டிலைக் கட்டினால் காடு நாடெல்லாம் கொண்டு திரிவானாம்' என்று ஊரில் சொல்லும் பழமொழியை இப்போதெல்லாம் அடிக்கடி நினைக்க வேண்டியிருக்கின்றது.நம்மவர்கள் வேடிக்கையான கூட்டம்.

நாம் வந்த இடத்தில் இனத் துவேஷத்தையும் விட்டு வைக்கவில்லை நம்மவர்கள் என்பதையும் மறக்காமல் எழுதியிருக்கின்றார் நூலாசிரியர். இதற்கும் சில பக்கங்களை ஒதுக்கியிருக்கின்றார். *83* இனக்கலவரமும், வெலிக்கடைச் சிறையில் தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்டகொடூரமும் பாரிசில் எப்படி எதிரொலித்தது என்பதைக் கனமாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.உண்மையான செய்திகளைவிட வதந்திகள் தான் எல்லாப் பிரச்சினைகளையும் ஊதிப் பெரிதாக்கி விடுகின்றன என்பதற்குப் பாரிஸ் வாழ் தமிழ்-சிங்கள மக்களும் ஒருவருக்கொருவர் வன்முறைகளில் ஈடுபடுவதற்குப் பெரும் காரணங்களாய் இருந்திருக்கின்றன. 'யாழ்ப்பாணம் முழுக்கப் பிரேதங்களால் நிறைந்து கிடக்கின்றது என்றும், கொழும்பில் தமிழர்களின் கடைகள், வீடுகள் எல்லாம் கொளுத்துகின்றார்கள் என்றும் வதந்திகளும், செய்திகளும் தலையை வலிக்கப் பண்ணியது' என்ற வரிகள் போதும் இதற்கு.

'சிங்கள இராணுவ வீரர்களின் பிரேதங்கள் யாழ் வீதியெங்கும் நிறைந்து கிடக்கின்றன' என்ற வதந்தியே **1983** கலவரத்துக்கு மூலகாரணம் என்பதும் நாம் அறிந்ததே.

அடுத்த பொங்கல் ஈழத்தில் தான் என்ற அதீத நம்பிக்கையாகட்டும். அதைவிட மேலோங்கிய நம்பிக்கையாய், இந்திரா தலையிட்டு எமது பிரச்சனையை விரைவில் முடித்து வைப்பார். நாமெல்லாம் எமது நாட்டுக்குத் திரும்பிவிடுவோம் என்று புகலிடத்தில் வசிப்போரும் பகல் கனவில் அமிழ்ந்து மிதப்பதிலாகட்டும். எதையும் குறை வைக்காமல் குறிப்பிட்டிருக்கின்றார் செல்வம். அட. இன்னும் கூட இந்தியா தலையிடும் தமிழ் நாடும் மக்களும் எமக்காகக் குதிப்பர் என்று இல்லாத ஒன்றைத் தமக்குள்ளேயே வளர்த்து உக்கிப் போகும் எம்மவரை யாராலும் திருத்தவே முடியாது! அகதிகளாக வந்த ஈழத்தவர் பலர் பெரும் குடிகாரர்களாக மாறிப் போனதை செல்வம் விபரிக்கும் விதம் சுவையானது. அந்த வரிகளை அப்படியே தருகின்றேன்.

'புது நாட்டிலிருந்த மதுபானக் கடைகளைப் பார்த்துப் பிரமித்துப் போனான் ஈழத்தமிழன். இதென்னடா இது வைன் எண்டால் ஆயிரம் வகை பியர் எண்டால் நூற்றுக்கணக்கில் வர்ண வர்ணப் பெட்டிகளில் மயக்கும் விஸ்கி, பிரண்டி, வொட்கா எல்லாம் ஆயிரக்கணக்கில் ஆண்ட பரம்பரைத் தமிழன்,மீண்டும் பலமுறை புரண்டு எழுதற்கு எதைக் குடிப்பது எதைத் தவிர்ப்பது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாமல் குழம்பிப் போனான்.

விலைவாசியில் மற்றப் பொருட்களோடு ஒப்பிடுகையில் போத்தல்கள் பெரிய விலையாகத் தெரியவில்லை' ஏன் குடித்துத் திரியிறாய்? என்று கேட்க ஆளில்லை ஊரை உறவைப் பிரிந்து அகதியாய் அலையும் சோகம் எனப் பல மன உளைவுகளால் பெரும்பாலானவர்கள் குடியில் மூழ்கிப் போனார்கள். இப்படி மதுவருந்துவதைப் பற்றி நிறைய எழுதிக்கொண்டே போகின்றார்.

இங்குள்ள புல் வெளிகள் பற்றி ஓரிடத்தில், நம்மூர் பசு இந்தப் புல்லைப் பார்த்தால் நெஞ் சடைத்தே சாகும், என்று செல்வம் ஓரிடத்தில் எழுதியிருப்பதைப் படித்ததும் ஒரு ஞாபகம் சட்டென்று வந்தது. பிரான்சுக்கு வந்த புதிதில் இங்குள்ள அடர்ந்த பச்சைப் பசேலென்ற புல்வெளிகளை நான் இரசித்துக் கொண்டிருந்தபோது, அப்போது என்னோடு கூட வந்த என் சகோதரன் புஷ்பராஜா, 'இந்தப் புல்லுகளைக் கண்டால் எங்கடை ஊர் ஆடு-மாடுகள் எதைக் கடிப்பது என்று தெரியாமல் அங்கலாய்ப்பில் ஓடித்திரியும்' என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

செல்வம் அருளானந்தம் ஃபிரான்சுக்கு வந்தபோது இருந்த நிலைமைகள் இன்றில்லா விட்டாலும், இன்னும் பல ஈழத்து அகதிகள் வருடங்கள் பல கடந்தும் அகதியாக அங்கீகரிக்கப்பட்டு நிரந்தர விசா கிடைக்காமல் இதனால் அரசின் எவ்வித உதவியுமின்றி செய்யும் வேலைக்குத் தகுந்த ஊதியமின்றி நாள் முழுவதும் முதலாளிகளால் [இதில் தமிழ் முதலாளிகளும் அடக்கம்] சுரண்டப்பட்டும். குடியிருக்க நல்ல வசிப்பிடமின்றிக் கூட்டு அறைவா-சிகளாக நெருக்கியடித்துக் கொண்டும் வேறு பலர் கார் விடும் இடங்களை வீடு போல் கொஞ்சம் மாற்றிக் கொடிய வாடகைக்கு விடுவோரின் குறுகிய காற்றோட்டமில்லாத இடங்களில் உழல்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

புத்தகத்தைக் கீழே வைக்கவிடாமல் சுவைபட இயல்பாக எளிமையாக எழுதியிருப்பவர், -எழுதித் தீராப் பக்கங்கள்- என்ற அழகிய தலைப்பையும் தந்தவர், உள்ளே அத்தியாயங்களின் தலைப்புக்களிலும் கொஞ்சம் கவனம் செலுத்தியிருக்கலாம். -சிங்காரி வந்தாள் சிரிப்பை மூட்டினாள் -மாயக். கிழவியும், மந்திரக் கண்ணாடியும்-போன்று சித்திரக்கதைப் புத்தகங்களின் தலைப்புகள் போலச் சிறுபிள்ளைத் தனமாக இவை இருக்கின்றன.

உதாரணமாக.
-பெண்ணொருத்தி என்னருகே வந்தாள்-
-மாஸ்ரரும் நரகலோக நங்கையும்-எனத் தலைப்பிட்டிருப்பதைக் குறிப்பிடலாம். இந்தத் தலைப்புகளில் கொஞ்சம் கனதியைக் கொண்டு வந்திருக்கலாம். ஓவியங்களும் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காகவே வரையப்பட்டன போல தேவையில்லாத கவர்ச்சியுடன் மிகைப்பட்டுத் தோன்றுகின்றன. இவ்விதமாகத் தலைப்புகளும் இளம் பெண்களின் ஒயிலான படங்களும் எனக் கவர்ச்சி மூலம் தான் வாசகர்கள் இவற்றைப் படிக்க வேண்டுமென இதைத் தொடராக வெளி-யிட்ட பத்திரிகையும் செல்வமும் தொகுப்பாக்கிய பதிப்பகமுமாக நினைத்தனரோ?

தனியே ஆண்களாகச் சேர்ந்து சமையல் செய்யும்போது, அதில் பலர் கைதேர்ந்த சமையல்காரர்களாக இருப்பதும், இங்கு மிகச் சர்வ சாதாரணம். ஓரிடத்தில் நண்பர் ஒருவர் -குஸ்குஸ்- செய்யும் வித்தியாசமான முறைபற்றி இவர் எழுதியிருப்பது வேடிக்கையாயிருக்கின்றது. சாதாரணமாகக் குஸ்குஸ் செய்யும் முறையையே இது புரட்டிப் போடுகின்றது' நெத்தலிக் கருவாட்டைப் பொரித்துக் குஸ்குஸ் உடன் கலந்து. மாட்டிறைச்சிக் கறியுடன் அவர் சமைப்பது அப்படி ருசியாய் இருக்கும். அந்த ருசி இன்றும் நாவில் தங்கியிருக்கு' என்பது போல் இவர் எழுதியிருப்பது கண்டு இப்படி ஒருக்காச் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆவலைத் தந்திருக்கின்றது செய்து பார்க்கவேண்டும்.

30 வருட காலம் ஈழத்தில் நடந்த யுத்தம் எப்படியெல்லாம் மக்களைப் பல தேசங்களுக்கும் விரட்டியது என்பதையும் எத்தனை இடையூறான வழிகளை நாடுகளைக் கடந்து தாம் போக நினைத்த நினைக்காத நாடுகளுக்குள் வந்து சேர்ந்தார்கள் என்பதைக் கலகலப்புத் தொனிக்க எழுதியிருந்தாலும் அவற்றினூடே தெரியும் வலிகளும், அவை தந்த மறக்க முடியாத பேரனுபவங்களும், அவலங்களும் புலம் பெயர்ந்து வாழ்வோரால் மட்டுமே உணர முடியும்.

ஈழத்தில் இருந்து கொண்டு தனிப்பட்ட ரீதியான அரசியல் நெருக்கடிகள் ஏதுமற்றவர்களாக நல்ல படிப்பு,வேலை,இயற்கை எழில் மிகுந்த சூழல் என வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் கூட அங்கிருப்பதை விட்டுவிட்டு ,வெளி நாடுகளுக்குப் போயே தீரவேண்டும் என்று முனைகின்றனர். இக்கனவுகளில் உழல்வோருக்கு எப்படிச் சொன்னாலும் விளங்கித் தீராது. இங்கு வந்து மொழியறிவற்ற அகதிகளாக வாழ்வைக் கொண்டு சென்று ஒரு நிம்மதியான நிலையை அடைவதென்பது பெரும் போராட்டங்கள் நிறைந்த சவால். அதை எதிர் கொள்ள முடியாமல் மனநோயாளிகளாகவும் கொலைகாரர்களாகவும் சமூகவிரோதிகளாகவும் மாறிவிட்ட இளைஞர்களைப் பார்க்கிறோம். எதிர்பார்த்து வந்த வெளிநாட்டுப் பளபள வாழ்வு உண்மையில்லை என்ற பெண்களின் ஏமாற்றங்களும் தற்கொலைகளும் பற்றி அறிந்துகொண்டு தானிருக்கிறோம்.

இவையெல்லாம் இன்னுமின்னும் எழுதப்படவேண்டிய தீராப்பக்கங்களாய் நம்மிடையே மறைத்தும் மறைந்தும் கிடக்கின்றன.

□□□□




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• தர்மினி

கட்டுரை

# பெண்ணுடல் அவமானத்திற்குரியதா?



பெண்களின் உடலைக் காட்சிப்படுத்துவது ஒரு வியாபாரமாகவே நடைபெறுகிறது. இன்னொரு விதமாக, பெண்ணுடலைக் கொண்டாடுவோம்! என்ற கோஷமும் முன் வைக்கப்படுகின்றது. ஆனால் எவ்விதமாக அவை வியாபாரமாகவோ போராட்டமாகவோ பெருமிதமாகவோ முன் வைக்கப்படுகின்றது என்பது கவனிக்கவேண்டியது. மணிப்பூரில் ஆயுதப்படையினர் மனோரமா என்ற பெண்ணைப் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கிய பின், அவளது உடல் வீதியில் வீசி எறியப்பட்டது. இதற்கு எதிரான போராட்டமாக 'இந்திய இராணுவமே எங்களையும் பலாத்காரப்படுத்து' என்ற பதாகையோடு ஆயுதப்படையினரின் அலுவலகத்தின் முன் பெண்கள் நிர்வாணமாக நின்று நியாயம் கேட்டனர். தங்கள் நிர்வாணத்தையே ஆயுதமாக்கிய போராட்டமது. எதிர்ப்பைக் காட்டுவதற்கு பெண்கள் செய்த இப்போராட்ட வடிவம் பெண்களது எதிர்ப்பின் இன்னொரு வகைப்பட்டது.

நவீனமும் நாகரிகமும் பெருகி வரும் இக்காலம் தவறான வழிகளுக்காக தொழிநுட்பசாதனங்களைப் பயன்படுத்துவதற்குமாகி விட்டது. கணினி-கைபேசிப் பாவனைகளின் தொழிநுட்ப வளர்ச்சிகள் மேலும் மேலும் பெண்களது உடல்கள் மேலான வன்முறைகளைச் செய்வதற்காகத் தவறாக உபயோகிக்கப்படுவதைக் காண்கிறோம். என்னென்ன குற்றச்செயல்களை இவற்றை வைத்துச் செய்ய முடியுமோ அவையெல்லாம் அதிவிரைவாக இளைஞர்களால் கற்றுக்கொள்ளப்படுகின்றன. எவ்விதமெல்லாம் காட்சிப்படுத்தவும் பகிரங்கப்படுத்தவும் முடியுமோ அவ்விதமெல்லாம் பெண்ணுடல் மீதான அத்துமீறல் நடைபெறுகிறது. இதன் பொருட்டுக் குற்றவுணர்வற்றவர்களாக இவர்கள் செய்பவை பெண்களது தற்கொலைகள் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுவிட்டது. இது பெண்களது உளவியலில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பெண்கள் தம்மையிட்டு வெட்கப்படுவதற்கும் குற்றவுணர்வு கொள்வதற்கும் காரணங்கள் உண்டா?

இச்சமூகத்தில் அவளை அவமானப்படுத்துவதற்கு ஒரு வழியாகவே ஒட்டி-வெட்டி படங்களை உலவவிடும் ஒரு குற்றம் நடக்கின்றது. நடிகை, எழுத்தாளர், பேஸ்புக் பதிவுகளை இடுபவர்... என்று எவரை முன் வைத்தும் இந்நிர்வாணப் படங்களைப் பரப்புவது அவர்களை மிரட்டுவதற்கு இலகுவான வழியாகிவிட்டது. பரவலாக நடைபெறும் பெண்களது உடல் மீதான இணைய அத்துமீறல்கள் காரணமாக மனவுளைச்சல் அடையும் பெண்களின் நிலைகள் வெளியே தெரிய வருவது குறைவு. அவர்கள் சட்டத்தை நாடுவதும் கூட குறைவு. பெண்களது தற்கொலைகள் தான் இவை போன்ற குற்றங்களை வெளிப்படுத்துகின்றன. இவை தெரிய வருவதற்காகவும் அப்பெண்கள் தங்களை நிரூபிப்பதற்காகவும் உயிரைவிட வேண்டுமா?

கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக இருக்கலாம் பிரபல எழுத்தாளரான பெண் ஒருவரது முகத்தை வேறொரு பெண்ணின் நீச்சலுடை அணிந்த உடலோடு இணைத்து இணையத்தில் உலவவிட்டிருந்தனர். இதன் மூலம் மனஞ் சோர்வடையச் செய்தல் தான் அதைச் செய்தவர்களின் குறிக்கோள். இதன் மூலமாக அவரது சுதந்திரமான எழுத்தை அச்சுறுத்திவிட்டதாக அவர்கள் கற்பனை செய்தது மடமைத்தனம். சில மாதங்களின் முன் சேலத்தைச் சேர்ந்த வினுப்ரியா என்ற பெண்ணுடைய தற்கொலைக்குக் காரணமே மாஃபிங் செய்யப்பட்ட அவரது நிழற்படம் தான் என அறிவோம். புகார் கொடுக்கப்பட்ட போதும் பொலிஸார் அதற்கான நடவடிக்கை எடுக்காததும் லஞ்சம் கேட்டதும் மாபெரும் குற்றங்களென்றால்... தன் பெற்றோர் தன்னை நம்பவில்லை என்பதும் கூட அவரது தற்கொலையைத் தூண்டியது. இவை போலத் தொடர்ச்சியாக தமது விருப்பங்களுக்கு இணங்க வைக்கவென ஆண்களால் மிரட்டப்பட்டு அமைதியாகிவிடும் செயல்களும் நடந்தபடியிருக்கின்றன. நாம் உதாரணங்களைச் சொல்லிவிட்டுப் போவது இலகுவானது. ஆனால் அவற்றைக் கணக்கில் கொள்ளாமல் புறக்கணித்துவிட்டுப் போகுமளவு பெண்கள் இதை எதிர்கொள்ளவும் வேண்டும். ஆண்கள் வன்புணர்வு செய்வதை அப்பெண்ணை வெற்றி கொண்டதாக அவளை அவமானப் படுத்திவிட்டதாக நினைத்துக் கொள் வதைப் போன்றதே இந்நிழற்பட-ஒளிப்பட வன்முறையும்.

நண்பர்களது வட்டமான பேஸ்புக்கில் பகிரும் நிழற்படங்களில் பெண்கள் தங்கள் முகங்களைக் காட்டவும் அச்சப்படும் நிலை தான் உண்டு. பெண்ணின் முகம் கூட நிழற்படமாக இருப்பது ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்ற மனநிலையை ஏற்படுத்தியது எது ? இன்று பலரது கைகளில் அந்த முகத்திற்குப் பொருத்தமாக இன்னொரு உடலைப் பொருத்திவிடும் நுட்பம் விளையாடுகிறது. இதையெல்லாம் அறிந்திருந்தாலும் பொதுவெளிக்கு வருவதும் படங்களை வெளியிடுவதும் பெண்கள் மேலான பிழையாகவே இன்னுமின்னும் சொல்லப்படுகின்றது. பெண்கள் வீட்டுக்கு வெளியே போனால் பாதுகாப்பில்லை என்று சொல்லி வந்தவர்கள், இப்போது முகத்தைக்காட்டாதே... முகப்புத்தகம் வைத்திருக்காதே என்கிறார்கள். பெண்கள் தங்கள் சொந்த முகங்களைக் காட்டவே யோசிக்கவேண்டும் என்ற அறிவுரை தான் வழங்கப்படுகின்றது. மீண்டும் மீண்டும் பெண்கள் மீதே தவறுகளைச் சுமத்தி விடுகின்றனர். இவர்கள் எம்மை எப்படி அவமானப்படுத்திவிட முடியும் என ஒவ்வொரு பெண்ணும் உறுதியோடு இருப்பது தான் இவ்விணையக்குற்றங்களை எதிர்கொள்ளத் துணிச்சலைத் தரும்.

இங்கு ஆண்கள் எந்த விதத்திலும்

□□□□

**உண்மையாகவே ஒரு பெண் குளிப்பதையோ அல்லது தனக்கு விருப்பமான ஒருவரோடு சுதந்திரமாக இருப்பதையோ பார்ப்பதும் பதிவுசெய்வதும் பகிரங்கப் படுத்துவதும் பற்றி அந்த ஆண்கள் தான் வெட்கப்பட வேண்டும்**

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தங்களைத் திருத்திக் கொள்ள மாட்டார்களா? அவர்களது தவறான எண்ணங்கள் பற்றிச் சிந்தனை தேவையில்லையா? ‘எப்போதும் அவர்கள் அப்படித்தான். பெண்கள் தான் ஒதுங்கிப்போக வேண்டும்’ என்ற சமூகத்தின் மனநிலை காலத்துக்குக் காலம் வெவ்வேறு விதமாக வெளிப்படுகிறது. பெற்றவர்கள் சகபெண்ணை மதிப்பதைக் கற்பிக்க வேண்டுமென்பதைப் போலவே கல்வி நிலையங்களும் சிறுவயதிலிருந்தே இருபாலாரும் சமம் என்ற மனநிலையைப் புகுத்த வேண்டும். பெண்ணின் உடல் மிரட்டுவதற்கும் துன்புறுத்துவதற்குமானதல்ல என்பது சிறுவயதிலிருந்தே மனதில் பதியவேண்டிய கருத்தாயிருக்க வேண்டும்.

இணையத்தளங்களிலோ பேஸ்புக்கிலோ ஒரு பெண்ணின் நிர்வாண உடலைக் காட்சிப்படுத்துவது அவளை எங்ஙனம் அவமதிப்பதாகும்? அதற்கு அவள் ஏன் வெட்கப்படவேண்டும்? எதற்காகத் தற்கொலை செய்ய வேண்டும் ?அவளது குடும்ப உறுப்பினர்கள் அவமானமாக அதை ஏன் கருதவேண்டும்? அதை ஆபாசம் என்று எதற்காக மற்றவர்கள் பேசவும் எழுதவும் செய்கின்றனர்?

இப்படிப் பழிவாங்கவும் பழிக்கவுமாக ஓர் உடலை உலவ விடுபவர்கள் தான் அதையிட்டு வெட்கப்படவேண்டும். மார்ஃபிங் செய்வது ஒரு குற்றம்.அதைவிட்டு உண்மையாகவே ஒரு பெண் குளிப்பதையோ அல்லது தனக்கு விருப்பமான ஒருவரோடு சுதந்திரமாக இருப்பதையோ பார்ப்பதும் பதிவுசெய்வதும் பகிரங்கப்படுத்துவதும் பற்றி அந்த ஆண்கள் தான் வெட்கப்படவேண்டும். தனது உடலை எதற்காக ஒரு பெண் அவமானமாக உணர வேண்டும் ?பிறரது அந்தரங்கத்தில் தலையிடுவதை, அதை மற்றவர்களிடம் பகிர்வதைப்பற்றி நாண வேண்டியவர்கள் அதைச் செய்பவர்கள் தான். தன்னுடலைக் காட்சிப்படுத்திவிட்டார்கள் என ஒரு பெண் மனம் உடைந்து போவது உயிரை இழக்கவும் துணிவது இதெல்லாம் அந்தக் குற்றவாளிகளை இன்னுமின்னும் வளர்க்கின்றது. மனிதர்கள் நிர்வாணிகள் என்பதும் காமம் இயல்பானதென்றும் எல்லோரும் அறிவர். மார்ஃபிங் செய்யாத ஒரு படத்தைக் கூட இணைய வன்முறை பரவ விட்டால் அதை அப்பெண்ணும் குடும்பமும் அலட்சியம் செய்வது தான் சரியானது.அவளது உடலைப் பகிரங்கப்படுத்துவதன் காரணம் அவமானப்படுத்துதல் தானென்றால் அது என்னை அவமானப்படுத்தவில்லை எனப் பொருட்படுத்தாமல் கடந்துவிடுதல் ஒவ்வொரு பெண்ணும் உறுதியாயிருக்கச் செய்யும். அதே நேரத்தில் இம்மீறல்களைச் செய்பவர்களைத் தண்டனைக்குட்படுத்துவதில் முனைப்பாகச் செயற்படுதல் வேண்டும். அவர்கள் குற்றவாளிகளாக ஒருவரது அந்தரங்கத்தில் நுழைந்தவர்களாக தம்மை உணர்ந்து வெட்கப்படவேண்டும்.

ஒரு நிழற்படங்காரணமாகவோ ஒளிப்பதிவு காரணமாகவோ வெட்கித்துப்போய் சாக வேண்டுமெனப் பெண்கள் நினைப்பதை அடியோடு நிறுத்தவேண்டும். இவ்வாறான காட்சிப்படுத்தல்களைக் கொண்டு பெண்களை விமர்சிப்பவர்களும் இதையெல்லாம் செய்து பெண்களை அவமானமுறச் செய்யலாமென்று நினைப்பவர்களும் அவரவர் நிர்வாணங்களைக் குளியலறைகளில் - தம் படுக்கையறைகளில் தரிசிக்கின்றனர். மருத்துவமனைகளில் தம் உடலின் பெறுமதியை உணர்ந்தவர்களாகின்றனர். தங்கள் குழந்தைகளின் நிர்வாணங்களை உச்சிமுகர்கின்றனர்.

எனது நிர்வாண உடல் எனதே! அதைப் புனைந்து இரசிப்பதும் பொதுவெளியில் வைப்பதும் பிறரது அந்தரங்கத்தில் தலையிடும் உனக்கே அவமானம்!! உனது அநாகரிகம்!!! எனப் பாதிக்கப்படும் ஒவ்வொரு பெண்ணும் தெளிவாகச் சிந்தித்து இது போன்ற செயல்களை அலட்சியப்படுத்தவேண்டும். ஒரு பெண்ணின் உடல் ஏன் ஆபாசம் எனச் சொல்லப்படுகிறது? அவ்வாறான ஒரு நிழற்படமோ ஒளித்தொகுப்போ வெளியாகும் போது அதை ஆபாசப்படம் என்றோ ஆபாச வீடியோ என்றோ எழுதுவதைப் பத்திரிகைகளும் இணையங்களும் பேஸ்புக் பதிவர்களும் தவிர்க்கவேண்டும். ஆபாசப்படம் எனப் பேசுவதை நாம் நிறுத்தவேண்டும்.

பெண்களும் பெற்றவர்களும் காட்சிப்படுத்தப்பட்ட உடலையிட்டு அவமானங்கொள்ளாது சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொண்டு தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதைத் தான் செய்ய வேண்டும். தற்கொலை செய்து ஒருத்தி இறந்து விடுவது தான் இதற்குத் தீர்வென்ற மனப்பான்மையைப் பெண்கள் மறக்கவேண்டும். எமது உடல் பற்றிய பெருமிதங்களோடு இவர்களை எதிர்கொள்வது தான் இப்போது நாம் செய்ய வேண்டியது.

□□□□




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை

• தர்மு பிரசாத்

# பித்தளைத் தீர்வுகள்



© van gogh

அதுவொரு வெள்ளிக்கிழமையின் உலர்ந்த மதியம். தார்வீதியெங்கும் மகிழ்ச்சி மிதக்கும் முகங்களுடன் மக்கள் அலைந்து திரிந்தனர். வீதியைக் குறுக்கறுத்துக் கிடந்த மதகுக்கட்டில் சாரத்தை ஒதுக்கிக் குந்தியிருந்த சுடலையின் கண்களில் எஞ்சிய போதை மெல்லிய சிவப்புத் தணலாய் ஒளிர்ந்தது. நூற்றாண்டின் புழுதி படிந்த முச்சந்தி ஆலமரத்தின் இளம் கொப்புகள் வெட்டப்பட்டு இறைந்து கிடந்த பச்சைக்குழைகளின் மேல் வாகனங்களின் கரிய தடங்கள் நீண்டு கிடந்தன. பின்னொருநாளில் எண்திசைகளிலும் சுழன்றடித்த சூறைக்காற்றில் பாறி விழுந்த முதிய மரத்திற்தான் இரண்டு பனை உயரமான தலைவரின் 'கட்-அவுட்' நிமிர்த்திக் கட்டப்பட்டிருந்தது. விளக்கிலிருந்து விரிந்து செல்லும் பூதம் போலிருந்த கட்-அவுட் உருவம் மழமழப்பான கன்னங்களும், அடர்ந்த மீசையுமான உறுதியான கோடுகளால் வரையப்படிருந்தது. இடுப்பிற் தொங்கிய குட்டித் துப்பாக்கியில் உலர்ந்த சில குண்டுகளும், பித்தளை நிறத்தீர்வுகளும் அடைக்கப்பட்டிருந்தன. தென்கோடியில் தனித்திருந்த புராதன நகரங்கள் வரையும் தலைவரின் தலைக் கறுப்புத் தெரிந்தது. பவுண் சட்டமிட்ட கண்ணாடி அணிந்த தீர்க்கமான கண்களால் எல்லோரையும் அவர் கருணையோடு பார்த்துக் கொண்டிருந்தார். அவரின் கருணைமிகுந்த கண்களிலிருந்து எந்த இண்டு-இடுக்குகளும் தப்பிவிடமுடியாது என ஊரார் பெருமித்தனர்.

அதுவரை காலமும் மேற்கூரையில்லாக் கக்கூஸ்களே ஊரிலிருந்தன. அவை சுற்றித் தென்னோலைகளால் அடைக்கப்பட்டிருந்தன. அவற்றின் உள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோண்டிய குழியின் மேல் தென்னங்குத்தி அடுக்கப்பட்டிருந்தது. குந்தியிருப்பதற்கு வாகுவாய் தென்னங்குற்றியில் காற்பாதமளவு உட்குழிவுகள் தேர்ந்த தச்சர்களால் செதுக்கப்பட்டிருந்தன. தேங்கி நொதிக்கும் மலத்தின் துர்வாடை வீசும் கக்கூஸ் மறைப்பினுள் செல்லும் அச்சத்தில் பலர் நெடுநாட்கள் மலங்கழிக்காமலிருக்கும் நுட்பம் கைவரப் பெற்றிருந்தனர். இண்டு-இடுக்கும் கண்ணுள்ளவரான தலைவரின் தீர்க்கமான கண்கள் குறித்த அச்சம் துர்க்கனவாய் ஊரைச்சூழ்ந்த நாட்களில்தான் கூரையில்லாக் கக்கூஸிற்கு மேற்கூரையிடும் அவசியம் ஊராரிற்கு வந்தது.

அழுகியபழங்களை நொதிக்க வைத்துக் காய்ச்சி வடிக்கப்படும் ஒரு விதப் பழுப்பு நிறத்திரவம் பிரபல்யமான ஊர். அதனைக் காய்ச்சும் கைப்பக்குவம் மிகுந்தவரான பாண்டியன் ஊரில் இரண்டு உருவங்களில் அறியப்பட்டிருக்கிறார். ஒன்று லெபனானில் ஆயுதப்பயிற்சி எடுத்திருப்பதாக அவரே சொல்லித்திரிந்தார். எந்த வருடம் யாருடைய அணியிலிருந்தீர்கள் எனச் சுடலை கேட்ட போது, அப்போது எந்த 'பச்' என்ற குறியீடுகள் ஏதும் இடப்பட்டிருக்கவில்லை எனவும் இவ்வழக்கம் பின்னால் வந்தது எனவும் அப்போது எல்லோரும் எல்லோருடைய அணியிலும் இருந்ததாகவும் சொன்னார். வேண்டுமானால் லெபனான் பெண்கள் குறித்த இரகசியம் ஒன்றைச் சொல்வதாகவும் முடிந்தால் சரிபார்த்துக் கொள்ளவும் எனக்கூறிச் சுடலையின் காதில் ரகசியமாய் ஏதோ சொன்னார். லெபனானில் அழுகிய பழங்களை நைச்சியமாகக் நொதிக்கவைக்கும் நுட்பத்தைத்தான் அறிந்து வந்தார் என்பதனையே பலரும் நம்பினர். அதற்கு ஆதாரமாக வலுவான இரு காரணங்களையும் முன்வைத்தனர். குழந்தை இல்லாத அவர் பெண்வாசனை குறித்துப் பேசுவதற்கு அருகதை அற்றவர் என்றும் சைக்கிள் வால்ரியூப் கட்டையில் நெருக்கி அடைக்கப்பட்ட நெருப்புக்குச்சிகளின் துகள்களைக் கூட வெடிக்கத் தெரியாதவர் ஆயுதங்களைத் தொட்டிருக்கவே மாட்டார் எனவும் நம்பப்பட்டது. சந்தை கலையும் பின் மதியங்களில் பாண்டியன் அழுகிய பழங்களை மாத்திரம் தவத்தி எடுப்பதைப் பலர் வினோதமாகப் பார்த்திருக்கிறார்கள். அழுகிய பழங்களைத் தவத்துவதில் நிபுணத்துவமுடைய அவரின் விரல் நுனிகளின் மேல் தடித்த ஓடு போலான நகங்களில் உணர்ச்சியின் ரேகைகள் மிகுந்திருந்தன. அவர் நகங்களை வெட்டுவதில்லை அது விரலின் நீட்சியாகக் கிளைத்திருந்தது. பாண்டியன் காய்ச்சும் பழுப்பு நிறத்திரவத்தின் ரகசியம் மர்மமாக நீடித்த நாட்களில் அதன் சுவை பல்கிப் பெருகியதாகச் சுடலை அடித்துச் சத்தியம் செய்தான்.

அன்று மெல்லிய பீங்கான் தட்டுகளில் வைத்துப் பாண்டியன் விநியோகித்த மஞ்சளும், சிவப்புமான தோடம்பழ இனிப்பின் சுவை அலாதியானதாக இருந்தது. அதன் மணம் அழுகிய பழங்களை ஒத்ததாகவும், சுவை மெல்லிதான புளிப்பிலும் இருந்தது. பாண்டியன் வெய்யிலில் பூஞ்சிய கண்களுடனும் உதடு நிறைந்த சிரிப்புடன் ஓடி...ஓடி இனிப்புகளைக் கொடுத்தார். இனிப்புகளைத் தம் இரண்டு கைகளாலும் வாங்கும் குழந்தைகள் அவரை அரைவட்டத்தில் சூழ்ந்திருந்தனர். தோடம்பழ இனிப்பிலிருந்த பொடியாக்கப்பட்ட சீனியின் மென்படலம் அவரைச் சூழ்ந்திருந்தது. தார் வீதியின் இருபுறமும் வரிசையில் காத்திருந்த மக்களின் நாக்குகள் பண்டியனின் தோடம்பழ இனிப்பினால் சிவப்பும் மஞ்சளும், செம்மஞ்சளுமாகப் பழுப்பேறிக்கிடந்தன. சிவப்பும் மஞ்சளுமான நாக்குகளால் உதடுகளை ஈரப்படுத்தியபோது வெளிவந்த குளிர்ந்த சொற்களால் விசாரணையாளனின் வருகையைக் கருணையோடு நினைவுகூர்ந்தனர். விசாரணையாளர்கள் நீண்ட தூரத்தை நடந்து கடந்திருப்பது உதட்டு வெடிப்புகளில் தெரிந்தது. அடிக்கடி குளிர்ந்த நீரைப்பருகியபடி மக்களை நோக்கிக் கையசைத்தனர். அவர்களில் ஒருவன் பிரதான வீதியிலிருந்து பிரிந்து செல்லும் கிரவல் வீதில் இறங்கிப் புழுதிபடிந்த ஊரின் மையத்திலிருந்த பருமனான கல்லில் ஏறிநின்றான். அவனின் உருவம் மிகத்துல்லியமாகத் தெரிந்தது. மரபார்ந்த போராளிகளின் வற்றி உலர்ந்த உடல்வாகு இல்லாமல் சதைப்பற்றான கன்னங்களும், நேர்த்தியான ஆடைகளும்

□□□□

**பின்னொரு மழைநாளில் அய்ந்து நிர்வாண உடலங்கள் சிதறிக்கிடந்த அந்த வீட்டுச் சுவர்களின் புதிய சுண்ணாம்பு வீச்சம் காற்றின் திசைகளில் எல்லாம் அலைந்த படியிருந்தது. அதற்கு முன்னர் அது பேய்கள் வாழ்ந்த வீடு என அறியப் பட்டிருந்தது**

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்திருந்தான். தன்னை இவ்வூரின் புதிய விசாரணையாளன் என அறிமுகப்படுத்திக் கொண்டே அகன்ற உள்ளங்கையை உயர்த்திக் காட்டினான்.அவை வெளிறிக்கிடந்தன. தன் உள்ளங்கையில் அத்தனை பிரச்சினைகளின் தீர்வுகளும் இருப்பதாகச் சொன்னான். கோடுகளற்ற மழுமழுப்பான உள்ளங்கையில் ஆயுள்ரேகையின் தடங்கள் ஆழமாகவும் நீண்டும் கிளைத்திருந்தன. அவனது உள்ளங்கையை நீர் ததும்பும் கண்களால் உற்றுப்பார்த்த ஆச்சி அவனை ஊரின் விசாரணையாளனாக ஏற்றுக் கொள்வதாக மடிந்த உதடுகளுள் முணுமுணுத்தார்.

பின்னொரு மழைநாளில் அய்ந்து நிர்வாண உடலங்கள் சிதறிக்கிடந்த அந்த வீட்டுச் சுவர்களின் புதிய சுண்ணாம்பு வீச்சம் காற்றின் திசைகளில் எல்லாம் அலைந்தபடியிருந்தது. அதற்கு முன்னர் அது பேய்கள் வாழ்ந்த வீடு என அறியப்பட்டிருந்தது. பேய்களுக்கு அஞ்சிச் சுற்று ஒழுங்கைகளிலும் பொட்டுகளிலும் வரப்புகளிலும் தடம் மாறி நடந்த பொடிகளெல்லாம் விசாரணையாளனின் புதிய வீட்டை நம்பிக்கையுடன் எதிர்கொண்டனர். பசுக்களின் ஓலமும், நாய்களின் குரைப்பொலியும் அடர்ந்து, கேட்கும் வீட்டின் அறைகளில் குருதிவாடை மிதந்தலைந்தது. முன்னொரு நாளின் கோடையில் அவ்வீட்டு முற்றத்து மாமரக்கிளையில் ஆச்சியின் மகனின் உடல் சில நாட்கள் செம்மஞ்சள் நைலோன் கயிற்றில் தொங்கியபடியிருந்தது. செம்மஞ்சள் நைலோன் கயிற்றில் உலர்ந்த குருதித்துளி சொரசொரப்பாய் தேங்கியிருந்தது. அழுகிய உடலின் துர்வாடை ஊர் முழுவதும் சூழ்ந்திருந்தது. உடலின் தசைகள் திரவமாய் உருகிவழியத் தொடங்கிய நாளின் வெம்மையில் அவ்வுடல் தீப்பற்றிக் கொண்டது. கருகிய உடலின் தீய்ந்த வாசனை மாமரக்கிளைகளைக் கருமையாய் சூழ்ந்து கொண்டது. அத்தீயின் நாக்குகள் ஊரின் இருள் மறைவுகளில் பதுங்கியிருந்த போராளிகளின் குருதிகளில் குளிரின் கூர்மையில் ஊடுருவிக்கிடந்தன.

தடதடக்கும் முரட்டு மோட்டார் சைக்கிள் கிரவல் வீதியில் நுழைந்த போது ஊரார் வயல்களிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அதனை ஓட்டிவந்த கருந்தாடி அடர்ந்த, வெண்ணை உருகும் முகத்தில் குறும்புன்னகை அடர்ந்திருப்பது துர்ச்சகுனமாய் தெரிந்தது. மோட்டார் சைக்கிளின் முன்னால் ஆடுகள் பட்டியாகக் குறுக்கும் நெடுக்குமாக மிரட்சியுடன் ஓடி வந்தன. ஆடுகளின் மணம் ஊராரின் நாசிகளில் அச்சத்தின் மணமாய் நெடுங்காலம் தங்கியிருந்தது. அம்பது ஆடுகளின் கத்தலையும் கிழித்துக் கேட்டது,மோட்டாரின் தடதடக்கும் சத்தம். அந்த மோட்டார் சைக்கிள் கரியலின் இரும்புக் கிராதியில் செம்மஞ்சள் கயிற்றினால் பலமாகக் கட்டப்படிருந்தது ஆச்சியின் மகனின் உடல். தசைகள் பாளம் பாளமாய் வாய் பிளந்து



© van gogh

கிடந்தன. கற்களும் முட்களும் உடலைச் சல்லடை போட்டு முழுவதுமாகக் கிழித்திருந்தன. குருதியில் ஊறிய உடலை மாமரக்கொப்பில் தலைகீழாகத் தொங்கவிட்டபோது நேரம் இரவாகியிருந்தது. மோட்டார்சைக்கிளைத் தொடர்ந்து அணிவகுத்து வந்த சிறிய இராணுவ அணியினர் பேய்கள் வாழ்ந்த வீட்டைத் தம் தங்குமிடமாக அறிவித்த போது இருள் இன்னும் கருமையாய் ஊரைச்சூழ்ந்து படிந்து போயிருந்தது.

தலைகீழாகத் தொங்கிய உடலின் கடைசித் துடிப்பும் அடங்கியபோது, சுற்று வேலிகள் தாறுமாறாக வெட்டப்பட்டு மொட்டையாக நின்றிருந்தது பேய்கள் வாழ்ந்த வீடு. அச்சிறிய இராணுவ அணி சிலநாட்கள் பேய்களின் வீட்டில் தங்கியிருந்தது. அவர்கள் சாய்த்து வந்த செம்மறி ஆடுகள் சுற்றுமுற்றும் அடர்ந்திருந்த பச்சை மிளகாய், மரவள்ளிச் செடிகளை மென்று தீர்த்தன. செம்பழுப்புத் தீற்றலாய் அடர்ந்து கிடந்த மிளகாய்ச் செடிகளைத் தேடிவந்த கிளிகளின் கீச்சுக்கள் ஊரின் தென்மூலையிலிருந்த ஆலமரத்தில் நெடுநாட்களிற்குத் தங்கியிருந்தன. வீடுகளின் வேலிகள், குளியற் கிணறுகளின் வேலிறைப்புகள் எல்லாம் இராணுவத்தினரால் வெட்டி வெளியாக்கப்ப்ட்டன. முற்றத்தில் கட்டியிருந்த முரட்டுப் பழுப்புநிறத் தறப்பாள் வயற்காற்றில் படபடவென அடித்தது. அதன் படபடக்கும் ஓசை அவர்களின் இருப்பை அடிக்கடி நினைவூட்டியது. இரண்டு நாட்களிலும் ஊரின் மூலை முடுக்குகள் எல்லாம் நீண்ட இரும்புக் குச்சிகளாலும், துவக்கு நுனிகளாலும் சல்லடைபோட்டுத் தேடினர். ஆச்சியின் மகனைத் தவிர ஒரு போராளியின் சாரத்தலைப்பைக் கூட அவர்களால் கண்டடைய முடியாத வன்மம் இன்னும்...இன்னும் மூர்க்கமாய் தேடச் செய்தது. நெற்சாக்குகள், கக்கூஸ் மறைப்புகள் எனத் தேடலின் நுணுக்கம் குறுகிச் சென்று வயற் கிணறுகளில் நஞ்சு கலந்ததோடு முடிவிற்கு வந்தது. வயற்கிணறுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பான் மீன்கள் பழுப்புதுண்டங்களாய் மிதக்கத் தொடங்கிய காலையில் மிச்சமிருந்த ஆடுகளைச் சாய்த்தபடி அவர்கள் வெள்ளவாய்க்கால் கடந்து தரவை வெளிக்குள் இறங்கினர். தரவைவெளி நீண்டு பசுமையடர்ந்து கிடந்தது. மீன்களற்ற கிணறுகள், பாசிபடர்ந்து துர்நாற்றம் வீசும் மலக்கிடங்குகள் போல பலநாட்கள் தேங்கி நொதித்தது. பாசியின் துர்நாற்றம் நீரினூடு மரவள்ளிச் செடிகளிலும், மிளகாய்ச் செடிகளிலும் திரண்டு ஊரின் நாசியை நிறைத்தது. அந்த மணமே அயலவர்களின் நினைவுகளில் இவ்வூரின் இருப்பாய் பன்நெடுங்காலம் எஞ் சியிருந்தது.

ஊரின் புதிய விசாரணையாளன் பேய்கள் வாழ்ந்த வீட்டை இருப்பிடமாக்கிய போது துர்ச்சகுனத்தின் குறியீடாக, தீமைகளின் பிறப்பிடமாய், இருளடர்ந்து கிடந்த வீடு விடுதலையின் குறியாய் ஊராரின் நினைவுகளில் படிந்தது. மூளையின் மென்திசுக்களில் படிந்த விடுதலையின் குறிப்பை மூடித் தடித்த தோல் வளர்ந்த போதும் அவர்களால் அதை ஒருபோதும் மறக்க முடியவில்லை. விசாரணையாளனின் வருகையோடு ஊரின் இருள் மடிப்புகளிலிருந்து எழுந்து வந்த வன்முறையின் வீச்சம் குற்றங்களாய் கனத்த பேரேடுகளில் பதிவாகின. குற்றங்களின் பதிவுகளை எழுதி எழுதிக் கை சலித்த போது அவர்கள் ஒரு சிறிய பழைய மாதிரிக் கணினியை வாங்கியிருந்தனர். அதை இயக்குவது குறித்த சிக்கல்கள் வந்த போது விசாரணையாளன் என்னைத் தன் உதவியாளனாக்கிக் கொண்டிருந்தான். நீர் நிரப்பிய வெளிர் நீல நிறத் துப்பாக்கியை மட்டுமே பார்த்திருந்த எனக்கு விசாரணையாளனின் இருளடர்ந்த துப்பாக்கி, அதன் முனை வெளிறிய ரவுண்ஸ் பாயும் குழல், பழுப்புநிறக் கைப்பிடி குறித்த அச்சம் கிளர்ச்சியூட்டுவதாய் இருந்தது. பேய்கள் வாழ்ந்த வீட்டின் விசாலமான முற்றத்தில், கருகிய இலைகளை உதிர்க்கும் வெம்மைமிகு மாமரநிழலின் கீழ் தேக்குமர மேசையில் விசாரணையாளன் அமர்ந்திருக்கும் தோரணையும், விசாரணை செய்யும் தினுசும் அச்சமூட்டுவதாய் இருக்கும். விசாரணையின் உச்சத்திற்கும் சில நொடிகள் முன்னர் அவன் தேக்குமர மேசையின் நடுவில் வைத்துச் சுழலவிடும் துவக்கின் குழல் எப்போதும் அவனை நோக்கியே தன் சுழற்சியை நிறுத்திக் கொள்ளும். அதுவே பெரும்பாலும் விசாரணையின் முடிவாகவும் இருக்கும்.

கட்டுப்பாடுகளும், இறுக்கங்களும் விடுதலை குறித்த கனவை இன்னும்... இன்னும் ஈரலிப்புடன் ஊராரின் நினைவுகளில் வைத்திருப்பதாக நம்பப்பட்ட ஒரு பின்னிரவில் தீமையின், அசுத்தத்தின் இருப்பிடமாக நீலப்படத் தட்டுகளை விசாரணையாளன் அறிவித்தான். அறிவித்த பின்னிர விலிருந்து ஊரார் ஆவேசத்தோடு அதனைத் தேடித் தேடி அழிக்க முனைந்தனர். ஆனால் அவற்றின் இருப்பு அச்சமூட்டுவதாகவும், அழிக்க, அழிக்க எண்ணிக்கை பெருகியபடியும் இருந்தன. அவற்றின் இருப்பு விடுதலை குறித்த கனவை, வேட்கையை நீர்த்துவிடச் செய்வதாகவும் பின்னர் நம்பப்பட்டது. வெண்நிறத் தொடைகள், மயிரடர்ந்த யோனிகள், காலணிகள் நீக்கப்படாத நீண்ட கால்களின் சலனங்களைத் தேடித் தேடி ஊராரின் புத்தக அடுக்குகளினுள் பிரிக்கப்படாதிருந்த புத்தகங்கள், முதிரைக் கட்டில்களின் இருள் மூலைகளுள் கண்ணைக் கூசும் ஒளியைப் பீய்ச்சிய போது தீமையின், விடுதலை வேட்கையை நீர்க்கச்செய்யும் நீலப்படங்களின் சலனங்கள் பெரும் ஓலத்தோடு பொலபொலத்து உதிர்ந்தன. முடிவாக நீண்ட நாட்களாக நகர்த்தப்படாதிருந்த அம்மிக்கற்களை நீண்ட அலவாங் குகளினால் புரட்டியபோது அதன் கீழ் நூற்றாண்டுகளின் பழைமை ஊதா நிறப்பூச்சிகளாக ஊர்ந்தன. அதன் அடியில் பலித்தீன் பைகளில் மிகக்கவனமாக பொதி செய்யப்பட்ட ஏராளம் நீலப்படப்பிரதிகள் இருந்தன. அவை மிக நுட்பமாகவும் காற்றுப்புகமுடியாததாகவும் தடித்த பொலித்தீன் பைகளில் பொதி செய்யப்பட்டிருந்தன. அந்த நுட்பம் முன்னர் தலைநகரிற்கு ஆயுதங்கள் மறைவாக அனுப்பிய பேருந்துகளின் இருக்கைகளின் தடித்த தோல்களைக் கிழித்துப் பொதி செய்யப்பட்டதைப்

□□□□

**முள்ளுக்கரப்புகள் இராணுவ முகாம் களிலிருந்து வெட்டியெடுத்த முள்ளுக் கம்பிகளை வளைத்தும், நெரித்து தேர்ந்த வெல்டேர்ஸைக் கொண்டு செய்யப் பட்டிருந்தன.**

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலிருந்ததை ஆச்சரியத்துடன் நினைவு கூர்ந்தான் விசாரணையாளன். பின்னொரு நாளில் விலங்குக் கொழுப்புகளில் தோய்ந்த ஆயுதங்களை பொலித்தீன் பைகளில் கவனமாகப் பொதிசெய்து கடற்கரை மணலில் அவசர அவசரமாகப் புதைத்தபோதும் அதே நுட்பத்தையே பலர் கைக்கொண்டனர். சிலர் அவை எதிர்காலச் சந்ததியினரின் பொருட்டுப் புதைக்கப்பட்டதாகவும், அதனைத் தோண்டுவது வரலாறைச் சிதைக்கும் செயலென்றும் கலகம் செய்தனர். நீலப்படங்களுக்கு எதிரான அந்தக் கலகக் குரல்கள், கலகக் குரல்களை மெல்லிய கீச்சிடல்களாகவும், மரநாய்களின் ஓலத்தினைப் பிரதிசெய்யும் ஒலிகளாகவும், துரோகிகளின் பாடல்களாகவும் மாற்றிவிடும் தந்திரம் தெரிந்த விசாரணையாளனின் முன்னால் வெற்று ஓசைகளாகப் பொருளடங்கிப் போயின.

குற்றங்கள் வழி தண்டனைகள் பெருகிய போது விசாரணையாளன் இன்னும்... இன்னும் மிக நூதனமான வழிகளைத் தீவிரமாக முயன்று பார்க்கத் தொடங்கினான். கோழிகள் அடைக்கும் பிரப்பம் நார்க்கரப்புகள் பேய்கள் வாழ்ந்த வீட்டின் முற்றத்தில் நிறைத்து வைக்கப்பட்டன. முள்ளுக்கரப்புகள் இராணுவ முகாம்களிலிருந்து வெட்டியெடுத்த முள்ளுக்கம்பிகளை வளைத்தும், நெரித்து தேர்ந்த வெல்டேர்ஸைக் கொண்டு செய்யப்பட்டிருந்தன. கவிழ்த்துப் போட்டால் ஆறுமாதக் குழந்தை கைகால்களை நீட்டித் உறங்குவதற்குப் போதுமாயிருந்தது. குற்றங்களின் தன்மைகள் துல்லியமாக அளந்து தண்டனை வழங்கப்பட்டபோது, பிரப்பங்கரப்புகளினுள் கால்களை மடக்கி முதுகை வளைத்து நீண்ட நாள் குந்தியிருப்பது, அப்படியே மலங்கழிப்பது ஊராரின் வீர விளையாட்டானது. சுடலை பலமுறை முயன்றும் கூடைக்கும் மடங்கிக் குந்தியிருக்கும் இரகசியம் வசப்படவில்லை. பழுப்புநிறத்திரவம் அருந்தும் வேட்கையில் அவன் அதை வெறித்தனமாக முயற்சித்தும் அதன் நெளிவு சுளிவுகளில் முதுகு வளைந்து கொடுக்கவில்லை.

எச்சரிக்கைக் கடிதங்களையும், தண்டனையை உறுதிசெய்யும் இறுதி எச்சரிக்கைக் கடிதங்களையும் பழைய மாதிரிக்கணினியில் எழுதும்போது எச்சரிக்கை என்ற சொல் அல்லது தண்டனை என்ற சொல்லைத் தடித்த சிவப்பு எழுத்துகளில் பெரிதாகவும் அழகாகவும் எழுதினேன், கடிதங்களின் ஓரங்களில் தங்க விளிம்புகளில் கோடுகளும் கட்டங்களும் வரைந்தேன். குற்றம் சாட்டப்பட்டவரின் பெயரைத் தடித்த எழுத்திலும் எழுதினேன். ஆரம்பத்தில் ஒவ்வொருவருக்கும் தனித் தனிக்கடிதங்கள் எழுதவேண்டியிருந்தது. ஓரிரு நாட்களில் தொழிநுட்பம் கைவரப்பெற்றதும் பெயர்களையும், குற்றங்களையும் மாத்திரம் மாற்றினால் போதுமாயிருந்தது. தண்டனை பெரும்பாலும் ஒன்றாகவே இருந்தது. கடிதங்களை அச்சடிக்கும் போது கருப்பு வெள்ளையாகவே அச்சடித்தது. ஓரத்தின் தங்க விளிம்புகள் மிகவும் மங்கலாக வெளிறிக்கிடந்தன. தடித்த எழுத்திலிருந்த பெயர்கள் நிறம் குறைந்தும், சிதைந்துமிருந்தன. தண்டனைகள் துல்லியமாகவும், கச்சிதமாகவும் தடிப்பாக அச்சாகியிருந்ததை ஊரார் பெருமையுடன் நினைவு கூர்ந்தனர்.


எச்சரிக்கைக் கடிதங்களின் வழி கோதைநாயகிக்கு மூன்றவது கடிதத்தையும் கருப்பு - வெள்ளையில் அச்சடித்து அனுப்பிய சில மணிகளில் பின் வேலிக்கதியால்களை விலக்கிக் கோதைநாயகி பேய்கள் வாழ்ந்த வீட்டிற்கு வந்திருந்தார். அரக்கு நிறச்சாயம்போன சாக்குத் துணியில் தைத்த பையும் ஓரிரு அலுமினியப்பாத்திரங்களுமாக வந்திருந்தார். உலர்ந்த தேகமும் பிசிறல்கள் இன்றிப் பின்னிக்கட்டப்பட்டிருந்த கருங்கூந்தலும் ஆண்வாடை நிறைந்திருந்த வீட்டினுள் பின்வாசல் வழியாக நுழைந்தது. ஊர்ச் சந்திகளில், படுக்கை அறைகளில் பகிரப்படும் ரகசியக்கதைகளின் சுவடுகளற்ற சிரிப்பும், ஆயுதங்களைப் பொதிசெய்யும் வலிய நுட்பமும் விசாரணையாளனுக்குத் தேவையாயிருந்தது. அவள் மூன்றாவது எச்சரிக்கைக் கடிதத்தையும் சுக்குநூறாகக் கிழித்து மலக்குழியில் வீசியதை அறிந்து கொள்ள விசாரணையாளனுக்குச் சில வாரங்களானது. மூன்று நாட்கள் கரித்துண்டால் வரைந்த சதுரத்தினுள் குந்தியிருந்து பழங்கதைகள் பல சொன்னாள். தொலைந்து போன கணவன் குறித்து ஒரு வார்த்தையும் மறந்தும் பேசாதிருந்ததை அடிக்கடி நினைவு கூர்ந்தான் விசாரணையாளன். தண்டனை வழங்க, அவள் புதைத்து வைத்த, மறந்து போன கணவனின் சொல் ஒன்றே போதுமாயிருந்தது தண்டணைக்கு முந்திய இரவில் குதிக்காலில் இருந்து படர்ந்த மெல்லிய வலியை நாடி பிடித்துப் பார்த்த ஆச்சி கோதைநாயகியின் குழந்தைப்பேறின் நாளை விரல்களை எண்ணித் துல்லியமாகச் சொன்னாள்.

நான், சுடலை, பாண்டியன், விசாரணையாளன், ஆச்சியின் மகன் எனச் சந்தேகத்தின் ரேகைகள் எல்லோரது முகங்களிலும் சிவந்த கோடுகளாய் படர்ந்திருந்தன. சந்தேகத்தின் ரேகைகள் ஊராரின் ரசியங்களில் பல கதைகளாய் பெருகிய மழைநாளின் பகற் பொழுதில் கோதைநாயகி அழகிய மகவைப் பெற்றெடுத்தாள். தன் தொப்பிழ் கொடியைப் பெருவிரல் நகத்தினால் கிழித்து முடிந்து கொண்ட போது குழந்தையின் அழுகை , மழை ஈரத்தினையும் கிழித்து எல்லோருடைய காதுகளிலும் அச்சத்தின் ஒலியாய் கேட்டது. ஓடிச் சென்று குழந்தையின் முகம் பார்த்த நான் புதிய எச்சரிக்கைக் கடிதத்தை நடுங்கும் விரல்களால் கணினியில் எழுதத் தொடங்கினேன்.

□□□□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வெளிச்சம் என் மரணகாலம்

நெற்கொழுதாசன்
மே 2016
கருப்புப் பிரதிகள்

பலாத்காரமாய் விரட்டியடிக்கப்பட்டதொரு அகதியின் அலைவை வீதியெங்கும் அழுகையோடும் ஆத்திரத்தோடும் இறைத்துப் போகும் ஒரு குழந்தையைப் போல் வெளிப்படுத்திச் செல்கின்றன நெற்கொழுதாசனின் இக்கவிதைகள்.

நாடு பிரிந்த ஏக்கத்தின் நடவுச் செடிகளைப் போலுள்ள இக்கவிதைகள், தேசியக் கதையாடல்களாய் மட்டுமே சுருக்கவியலாத பண்பாட்டு இருப்பின் சுமைபொதிகளாய் இருக்கின்றன. 'வல்வை வெளி' யின் நினைவில் பனிபடர்ந்த தேசங்களில் பாதம் பதிக்கவியலாத மன அவதியைக் கொண்டிருக்கும் இக்கவிதைகள், இன்னுமின்னும் நாம் புரிந்து கொள்ள வேண்டிய அகதி இருப்பின்கவிகளாகத் தோன்றுகிறது...


-நீலகண்டன்-

## இருள் மிதக்கும் பொய்கை

தர்மினி
மே 2016
கருப்புப்பிரதிகள்

உண்மையின் பக்கத்திலிருக்கும் நல்லதொரு புனைவைப் போல இருளுடனான நீளக்கவியாடலை நிகழ்த்திப் பார்க்கின்றன தர்மினியின் கவிதைகள். வெளிச்சத்தை எதிர்வாய் கொண்டு போர் புரிவதைத் தவிர்த்து இருளைப் பிரிய மனம் ஒவ்வாத தோழியாய், குழந்தையாய், மற்றுமொரு காதலாய், படிமங்களாய், ஆற்றலாய், புதிய கட்டுமானங்களின் பொறியமைவாய் இயல்பில் எழும் இக்கவிதைகளில், அகம் சார்ந்த முன்னெடுப்புகள் இதுவரையிலான தடத்தில் தம் பாதம் பதியாமல் தனக்கான மொழியின் அலகில் பயணத்தை மேற்கொள்கின்றன.

-நீலகண்டன்-










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org